To

R. LITTLEHAILES Esq., M.A.,

The Director of Public Instruction

THIS BOOK

Is by kind permission most respectfully

DEDICATE

BY THE AUTHOR

As a humble tribute of the Tamilians' gratitude.

உ

வேலுமயிலுந் துணை

கிராம வாழ்க்கை.

சதாவதானம்

தெ. கிருஷ்ணசாமிப் பாவலர்

எழுதியது.

இரண்டாம் பதிப்பு.

திருவல்லிக்கேணி

ஆர். வெங்கடாசலம் கம்பெனியார்

வெளியிட்டது.

ஆல்ரைட்ஸ் ரிஸர்வ்ட்] [விலை ரூ. 1-4-0

முன்னுரை.

இந்தக் கிராம வாழ்க்கை என்னும் நூல், சென்னை சர்வ கலா சங்கத்தின் திராவிடசங்க அக்ராசனாதிபதியாகும் ஸ்ரீமான் ராவ்சாஹிப் தோட்டக்காடு ராமகிருஷ்ணபிள்ளை அவர்கள், B. A. F. M. U. F. R. H. S. ஆங்கிலத்தில் இயற்றிய Life in an Indian village என்னும் நூலின் தமிழ் அமைப்பாகும். ஸ்ரீமான் பிள்ளை அவர்கள் அந்த நூலை ஆங்கில தேசத் தறிஞர்பொருட்டு எழுதினராதலின், அதன் கண், நம் நாட்டினர் சாதாரணமாக அறிந்துள்ள பலவிஷயங்களும் பல்கி உள்ளன. எனினும், அதனை இருந்தவாறே மொழி பெயர்த்துத் தமிழில் வெளியிடின், அது தமிழருக்கு ஊக்கத்தை உண்டுபண்ணு மென்பதை உணர்ந்து, இன்றியமையா விஷயங்களை மாத்திரம் எடுத்து மொழி பெயர்க்கலானேன். இதில் நமது கிராமங்களில் இப்போதும் நடந்துவரும் நமது முன்னோரின் பழக்கவழக்கங்களும், நமது தொன்று தொட்டு வந்த முறைகளும் முறையே விளக்கப்பட்டுள்ளன. ஆகவே, இந்தநூல், நகரவாசமே நல்லதாம் என எண்ணியிருக்கும் நமது பள்ளிக்கூடத்துப் பிள்ளைகட்குக் கிராமவாழ்க்கையின் பெருமையையும் இனிதுபுகட்டி, அவர்களுக்கு உரை நடைப் பழக்கத்தையும் உண்டுபண்ணுமாதலால், இதனையும் பள்ளிக் கூடத்து உபத்தியாயர்களும் மற்றவரும் முன் எனது புஸ்தகங்களைத்தமது பள்ளிக்கூடங்களில் உபபாட புஸ்தகங்களாக வைத்து உதவியதுபோல், உதவவேண்டி அவர்களைக் கேட்டுக்கொள்வதுடன், முன் அவர்கள்செய்த நன்றியைப் பாராட்டக் கடமைப்பட் டிருக்கின்றேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

5, உலகப்பமேஸ்திரி வீதி
சிந்தாதிரிப்பேட்டை
சென்னை.

தெ. கிருஷ்ணசாமிப்
பாவலன்.

கிராம வாழ்க்கை.

அத்தியாயம்—1.

முன்னுரை—கிராமாதிகாரி (முன்சீப்பு)—கிராமக் கணக்கன்—தலையாரி.

நாம் என்றும் பட்டணமே கதியாய் இருக்கிறோம்; பட்டணத்தையே பார்க்கிறோம்; பட்டணத்திலேயே வாழ்கிறோம்; பட்டணத்தையே புகழ்கிறோம், அதை விட்டு, நம்மைச் சூழ்ந்துள்ள கிராமத்தைப்பற்றியேனும், கிராம வாழ்க்கையைப் பற்றியேனும் நாம் எண்ணுவதே கிடையாது. அங்ஙனம் நாம் இருப்பதன் காரணம், அக்கிராம வாழ்க்கையின் அருமையை நாம் அறியாமையே ஆகும். நமது முன்னோர்களின் பழைய ஒழுக்கங்களைப் பார்க்கவேண்டும் என்று நாம் நமது பட்டணம் முழுவதும் சுற்றினும் ஒன்றும் காண இயலாது. நம்மிந்தியரின் திறமையை அறிய வேண்டின் நாம் கிராமத்தை அடைந்தே அறியவேண்டும். அவருடைய பழக்க வழக்கங்களைத் தெரிந்து கொள்ள வேண்டின், அக்கிராமத்தையே தான் நாம் நாடவேண்டும். தென்னிந்தியாவின் கண்ணுள்ள கிராமங்களிற்றான் நமது முன்னோர்களின் புதை பொருள்கள் அகப்படுகின்றன. அவருடைய ஒழுக்கங்கள் ஆசரிக்கப்பட்டு வருகின்றன. அவருடைய சரித்திரங்கள் கிடைக்கின்றன. அவர்களுடைய திறமைப்பாடமைந்த பல வேலைகளும் விளங்குகின்றன. ஆதலால், இந்தியராகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும், கிராமத்தைப்பற்றி

யும் கிராம வாழ்க்கையைப் பற்றியும் அறிய வேண்டியது இன்றியமையாத் காரியமாகும். அது பற்றியே, யான் இந்த நூலில் தென்னிந்தியாவின் கண்ணுள்ள ஓர் கிராமத்தில் வாழும் இந்தியரின் வாழ்க்கையை நேரிற்கண்டபடி எழுத லானேன்.

இந்திய சமுகம் பலவாயுள்ளது. பிராமண க்ஷத்திரிய வைசியசூத்திரர்கள் என்னும் நான்கு பெரும்பிரிவையே நூல் கள் சொல்லியுள்ளன எனினும், வழக்கில் ஒவ்வொன்றும் பல வாய் விரிந்திருப்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். அப் பிரிவுகள் எல்லாம் மதத்தையே ஆதரவாகக் கொண்டு, மத சம்பந்தமாகவே உள்ளன. இந்தியருக்கு மதமே மோக்ஷம், மதமே உணவு, மதமே நடை, மதமே எல்லாம். உதாரண மாகச் சில பாருங்கள். அதிகாலையில் நித்திரை விட்டெழுந் தால் ஆயுள்விருத்தி உண்டு என்று நவீன நூல்கள் கூறுகின் றன. அதையே, இந்தியர் அதிகாலையில் எழாதான், பாவம் உடையன் ஆவான் எனத் தம் மதக்கொள்கையாகக் கொண்ட னர். நோய் அண்டாதிருக்கத் தினந்தோறும் நீராடவேண் டும்; அழுக்கற்ற ஆடையை உடுக்கவேண்டும் என்பன சுகா தாரக் கொள்கை. அவற்றையே, இந்துக்கள் தமது மதக் கொள்கை எனக்கொண்டு, ஒருவன் அங்ஙனம் செய்யாதவன் முகத்தைப் பார்ப்பதும், அவனைத் தொடுவதும் பாவம் எனக் கூறுகின்றனர். இவற்றை எல்லாம் நாம் எண்ணுமிடத்து, இந்தியர் மதக்கோட்பாட்டையே எல்லாவற்றினும் சிறந்தது எனக்கொண்டவர் என்பது, நமக்கு நன்றாய் விளங்கும்.

மதக்கொள்கை ஒன்றுடன் இந்தியர்கள் நிற்கவில்லை. அதனுடன், மற்றோர் கொள்கையையும் உடன் கொண்டிருந் தனர். அஃதாவது, தங்கள் முன்னோர்கள் நடந்தபடி நடக்க வேண்டும் என்பதே. தங்கள் முன்னோர் வழக்கமாகச் சில

காரியங்களைச் செய்து வந்தனர் என வைத்துக்கொள்வோம். அவற்றைப் பின் வந்தவர்கள் தவறென அறிந்தாலும், அவர்களும் அப்படியே செய்வர். எவரேனும், அவர்களை "என்ன ஐயா, நாம் எல்லாம் அறிந்தும் இப்படிச் செய்கிறீரே?" என்றால், "அது எங்கள் பெரியோர் வழக்கம். நாம் அதை நிறுத்தலாகாது" என்று அவர்கள் பதில் கூறுவர். பெரியோர்கள் தவறான காரியங்களைச் செய்யமாட்டார்கள்; தவறான வழியில் நடக்க மாட்டார்கள் என்பன அவர்கள் எண்ணம். அன்றியும், "எப்படி அவர்களுக்கு நன்று எனப் பட்டது, நமக்குத் தீதெனப்பட்டதோ, அப்படியே நமக்குத் தீதெனப்பட்டது நாளை நமது புதல்வருக்கு நன்றெனவும் படும்" என்று எண்ணி, முன்னவர் வழக்கத்தைப் பின்னவர் ஒரு சிறிதும் விடுவதில்லை.

இங்ஙனம் ஒழுகிவந்த இந்தியர்கள், மகமதியர் வந்து சேர்ந்த ஏழெட்டு நூற்றாண்டுகளாக, தங்கள் வழக்கத்தில் சிறிது மாறிடவும் தலைப்பட்டனர். அது அவர்களுக்குச் செயற்கையால் வந்த குணமாகும். பெரும்பாலும் மகமதியருடைய அட்டகாசம் எல்லாம் வட இந்தியாவிலேயே நடந்தன. அவ்விடத்திலேயே அம்மகம்மதியர் பொருந்தி ஆட்சி செய்து வந்தனர். அதனால், அவர்களுடைய பழக்க வழக்கங்களிற் சில, அவ்விடத்திய இந்தியரால் மேற்கொள்ளப்பட்டன. தென்னிந்தியாவிலோ, அங்ஙனம் அவர்கள் வரவில்லை. கொள்ளை அடிக்கும் நோக்கம் ஒன்றை மாத்திரம் உடையவராய் அவர்கள் இப்பாகத்திற் குறுகினர். வட இந்தியாவைப் போல், தென்னிந்தியாவிலும் அவர்கள் அடிவைத்திருப்பாராஞல், இப்போதும் நாம் கண்கூடாகப் பார்த்துவரும், நமது முன்னோர்கள் கட்டி வைத்த பெரிய கோயில்கள் முதலியன உருத்தெரியாமலே போய் இருக்கும். அவர்கள் அருமைப்

பாடமைந்த கைத்தொழில்கள் எல்லாம் இறந்துபட்டே நிற்கும். மதபோதனை செய்யும் ஆதீனங்கள் பல அழிந்தே நிற்கும். வட இந்தியாவின் பாஷை மாறுபாடடைந்ததே போல் நமது திராவிடமும் சிர்கெட்டிருக்கும். அவர்கள் அங்ஙனம் நமது தென்னிந்தியாவிற்புகாதது நமது அதிருஷ்ட வசம் என்றே சொல்லலாம். வட இந்தியாவின் கண்ணுள்ள இந்தியர் ஒருவாறு தங்கள் பழக்க வழக்கத்தின் மாறியது போலவே, அம்மகமதியருடன் உறவாடிய பட்டண வாசிகளாகிய தென்னிந்தியரும், ஒருவாறு தம் மொழுக்கத்தில் மாறுபாடடைந்தனர். அதனுடன் ஆங்கில நாகரீகமும் உடன் கலந்து விட்டது. அதனால், தென்னிந்தியாவின் கண்ணுள்ள பட்டண வாசிகள் பலரும், பெரும்பாலும் தங்கள் முற்பழக்கத்தினை விட்டுவிட்டனர்; தங்கள் முன்னோர்நடந்தபடி நடக்க வேண்டும் என்ற கொள்கையின் அற நீங்கினர். நவீன நாகரீகம் இடையே கலந்ததால், சில புராதன நம்பிக்கைகள் முற்றும் ஒழிந்தன என்றே சொல்லலாம். ஒழியவே, ஒருவாறான திருத்தமும் உண்டாயது. இதனால், மாறுபாடெல்லாம் பட்டணங்களிலேயே நடந்துவந்தன என்பது எவர்க்கும் விளங்கும். கிராமங்களில் அம்மாறுபாடுகள் தலைகாட்ட யாதோர் காரணமும் இல்லை. ஆங்கில நாகரீகம் பட்டணங்களிற்றான் குருபீடம் வகித்தது. மகம்மதியர் உறவும் அப்படியே. ஆதலால், கிராமங்களில் வாழ்பவர் பண்டைய நாகரீகமும் பண்டைய ஒழுக்கமும் உடையராய் உள்ளனர். அவர்களிடம் நாம் பழைய நாகரீகத்தையும். பழைய ஒழுக்கத்தையும் பரக்கக் காணலாம். அவர்கள் வாழும் கிராமங்களே, நாம் நம் முன்னோரின் திறத்தை எல்லாம் நன்கறிதற்கு ஏற்ற இடங்களாய் உள்ளன. பல உண்மைப் பழஞ்சரிதங்கள், அவ்விடத்திலிருந்தே நாளைக்கும் வந்து கொண்டுள்ளன.

சென்னை இராஜதானியில், ஏறக்குறைய 55,000 கிராமங்கள் இருக்கின்றன. கிராமங்களிலும், பட்டணங்களிலும் வசிப்பவர்கள் தொகையை நோக்கின் அது ஏறக்குறைய மூன்று கோடியே பத்து லக்ஷமாகும். கிராமங்களில் மாத்திரம், ஏறக்குறைய இரண்டு கோடியே எண்பது லக்ஷம் ஜனங்கள் வாசஞ் செய்கின்றனர். அஃதாவது, இராஜதானியின் மொத்த ஜனத்தொகையில் ஏறக்குறைய நூற்றுக்குத் தொண்ணூறுபேர் கிராம வாசிகளாகவே இருக்கின்றனர். மிகுதியான பத்துப்பேரே பட்டண வாசிகளாவர். தொகையில் மேம்பட்ட தென்னிந்தியாவின் கிராம வாசிகளின் பழக்க வழக்கங்களை எடுத்துக் காட்டுவான், யான் இப்போது பழைய லக்ஷணங்கள் ஒருங்கு அமையப்பெற்ற ஒரு கிராமத்தைப்பற்றியும், அதன்கண் வாழும் பலவகை ஜனங்களைப் பற்றியும், அவர்கள் ஒவ்வொருவரும் செய்யும் தொழிலைப் பற்றியும் எடுத்துக் கூறுகின்றேன்.

தென்னிந்தியாவில் உள்ள செங்கற்பட்டு ஜில்லாவில் கேளம்பாக்கம் என்னும் பெயருடைய அழகிய சிறு கிராமம் ஒன்று உளது. அது தென்னை, மா, பலா, வாழை முதலிய கனிதரு மரச்சோலைகள் பல அணி அணியாகச்சூழ விளங்கி இருந்தன. அதன் மத்தியில் ஜனங்கள் பலரும் வாசம் செய்யும், சில கூரை வீடுகளும், சில கல்வீடுகளும், ஒரு சிறிய கோயிலும் உண்டு. அக் கிராமத்தைச் சுமார் ஐந்நூறு ஏக்கர் நன்செய் நிலம் சூழ்ந்திருந்தது. அந்த நிலத்திற்கும் கிராமத்திற்கும் இடையில் ஒரு பெரிய குளம் ஒன்று உண்டு. அந்தக் குளத்தில் உள்ள நீர், அந்த ஐந்நூறு ஏக்கர் நிலத்திற்கும் ஆறு ஏழு மாதம் வரையிலும் பாயும். அத்தகைய அழகிய கிராமமானது, தென்னிந்தியாவின் பழைய சரித்திரத்தில் மிகவும் சிறப்பாய்க் குறிக்கப்பட்ட காஞ்சீபுரம், மஹாபலிபுரம் என்னும் இரண்டு பெருஞ் சிறப்பமைந்த நக

ரங்களுக்கு மத்தியில் விளங்கி உள்ளது. அவ்விரண்டு நகரங்களுக்கு மத்தியில் உள்ள தேயத்திற்ருன், கிறிஸ்து பிறந்த ஐந்தாவது நூற்ருண்டில் மிகவும் வன்மையுற்ரோங்கிய பல்லவ மன்னர்கள் சாளுக்யருடன் அடிக்கடி போர் செய்து வந்தனர். பல்லவர்கள் தங்கள் பகைவர்களுடன் அடிக்கடி போர்செய்து இளைத்தோடிய விஷயமும், அவ்விளைத்ததன் பயனாய், ஓர் முறை காஞ்சியையும், மற்ரோர் முறை மஹாபலி புரத்தையும் அவர்கள் தங்கள் அரசிடமெனக்கொண்டு அவற்றில் தங்கிய விஷயமும், அடிக்கடி நடந்த போரில் அவ்விரு நகரங்களின் மத்தியபாகம் வளமழிந்த விஷயமும், பகைவர் வசப்பட்ட அப்பாகம் அவர்களால் பதங்குலைந்த விஷயமும் பழைய சிலாசாசனங்களால் நமக்குத் தெரிய வருகின்றன. அடிக்கடி ஓரிடத்தில் சண்டைகள் நடக்குமாயின், அந்த இடம் எப்படிக் குடிவளம் எதிர்நோக்கும் நீர்வள நிலங்களில் சிறப்புற்று இருக்கும்? விடாப்போரின் முடிவாக அம்மத்தியதேயம்முற்றும் அழிந்தே போயது. வளத்திலோ அவ்விடம் குறைந்தது அல்ல. பல வளங்களையும் தரும் பாலாற்றின் பாய்ச்சல் உடைய நிலம் எதுதான் வளமற்று நிற்கும்? ஆனால், அதனைத் திருத்துவாரில்லாததால், பதினோராவது நூற்ருண்டு வரையில், அது பதம்பெறவில்லை. அது அழிந்தகதியே தனது கதியென்று இருந்தது. அதன் பின்னர், அஃதாவது, பதினோராவது நூற்ருண்டின் மத்திய காலத்தில், அவ்வழிந்த இடங்களையவற்றின் பழைய நிலைமைக்குக் கொண்டு வர ஓர் விமோசன புருடன் தோன்றினன். அவனே ஆதொண்டை என்னும் பெயருடையவன்; குலோத்துங்க சோழனின் மகன். அவன் அங்குத்தோன்றி, பல்லவர்களையும் சாளுக்யரையும் அடக்கினன்; காஞ்சியைத் தனது அரசிருக்கைப் பட்டணமாகக் கொண்டான். அப்போதுதான் அவ்விடத்திற் சமாதானம் என்பது ஏற்பட்டது.

நாம் எடுத்துக் கூறவந்த அந்தக் கேளம்பாக்கமும் அவ்வவதிக்குள்ளானதே. அதுவும், அந்தப் பதினோராவது நூற்றுண்டின் இறுதியிற்றுன் தன் பழைய நிலைமைக்கு வந்தது. அந்தக் கிராமத்தில் ஐம்பது அறுபது வீடுகள் உண்டு. ஜனத்தொகையோ அறு நூறுக்கு ஏறக்குறைய இருக்கும். அதில் மிகவும் செல்வாக்கு உடையவர்கள் துளுவ வேளாளர்களே. அவ்வினத்தைச் சேர்ந்தவரென, அதில் பத்து வீட்டுக்காரர்கள் இருந்தனர். ஆதொண்டை சக்கிரவர்த்தி அத்தேயத்தைக் கைக்கொண்ட பின், துளுவ நாட்டில் இருந்து சிலரைக் கொண்டுவந்து குடியேற்றியதாகவும், அங்ஙனம் குடியேறியவர்களே துளுவ வேளாண்குலத்தவர் என்றும் ஓர் கதை உண்டு. ஆகவே, துளுவ வேளாளர்கள் என்பார் அங்ஙனம் தொண்டைமானுல் கொண்டுவரப்பட்டவர் எனத் தெரியவருகிறது. இப்போதும், தொண்டைமண்டலம் முழுவதிலும் துளுவ வேளாளர் மிகவும் கௌரவம் உடையவராய் வாழ்ந்துவர நாம் காண்கிறேம். அத்தகைய மேன்மை அமைந்த வேளாண்குலத்தில் உதித்த கோதண்டராம முதலியார் என்பவர் ஒருவர் அந்தக் கேளம்பாக்கத்தின் கிராமாதிகாரியாய் விளங்கி யிருந்தனர். அவருடைய தந்தை மிகவும் சாந்த குணம் உடையவர்; நல்லொழுக்கம் நிறைந்தவர். அவர் இறந்தபோது, தமது அருமைக் குமாரருக்கு அளவற்ற ஆஸ்தியை வைத்துப்போயினர். கோதண்டராம முதலியாருடைய முன்னோர் அனைவரும் சைவமதத்தினர். இடையில், அஃதாவது பன்னிரண்டு அல்லது பதின்மூன்றுவது நூற்றுண்டில், இராமானுஜர் என்னும் வைணவ மதஸ்தாபகர் ஊரூராய்ச் சென்று வைணவ மதத்தைப் போதித்து வரும்போது, அக்குடும்பத்தார் வைணவராக மாறிவிட்டனர் இந்தக் காலத்திற்றுன் நமது கோதண்டராம முதலியாரின் முன்னோர்கள் தாம் புதிய மதத்தி லீடுபட்டதற்கு அறிகுறி

யாக, முற்கூறிய கோயிலைக் கோதண்டராம சுவாமிக்காகக் கட்டி விட்டனர். அந்தக் கிராமத்தில் உள்ள குடிகள் அனைவரும் நமது முன்சீப்பின்மீது வைத்த உயர் மதிப்பிற்கு அளவே இல்லை. அவர்கள், அவர்மேற் கொண்டுள்ள உத்யோகத்தின்பொருட்டல்ல, அவ்வளவு மதிப்புவைத்தது. அவர் தங்களுக்கு உயிரினுமினிய துணைவராய்த்தங்களைமிக்க அன்புடன் பாராட்டுவதுடன் உயரொழுக்க முடையவராய் இருந்ததனுலேயாம்.

கோதண்டராம முதலியார் கிராமாதிகார வேலையை மேற்கொண்டதால், அந்தக் கிராமத்தின் சகல நடவடிக்கைகளையும் நடத்தும் பொறுப்பு அவருடையதாகவே இருந்தது. கொடுக்கல் வாங்கல் விஷயமாக வரும் சிறு வியாஜ்யங்களை விசாரித்துத் தீர்ப்புச்செய்தலும், சிறு குற்றங்கள் செய்தாரை விசாரித்து அவர்களுக்கு ஏற்ற தண்டனை விதித்தலுமாகிய அதிகாரம் அவருக்குண்டு. அவர் தம்மிஷ்டப்படி சிறு அபராதமும், சிலமணி நேரச் சிறைத்தண்டனையும் குற்றவாளிகளுக்கு விதிக்கலாம். கிராமங்களில் சிறைத் தண்டனை என்பது அவ்வளவு கொடிதானதல்ல. அவ்விடங்களில், சிறைத்தண்டனை என்பது பேர் மாத்திரமேயாகும். சூத்திரன் ஒருவன் ஏதாவதொரு குற்றத்தைச் செய்யின், அவனைக் கிராமச் சேவகனுகிய தலையாரியினிடம் கிராமாதிகாரி ஒப்புவிப்பது வழக்கம். அந்தத் தலையாரி குற்றவாளியைக் குறித்தநேரம் வரையில் ஓடிவிடாதபடி காவல் காத்துப் பின் விட்டுவிடுவான். பறையர்கள் ஏதேனும் குற்றம் செய்தாலோ அவர்களுக்குத் தொழுமரத்தில் கட்டிவைக்கும் கொடுந் தண்டனையுண்டு. ஆனுல் நமது கோதண்டராம முதலியாரோ அத்தகைய தண்டனையை மனம் வந்து செய்வதே கிடையாது அவருக்கு மேற்கூறிய அதிகாரம் எல்லாம் இருப்பினும், அந்த அதிகாரத்தை அவர் ஒருவரிடத்தும் காட்டுவதில்லை.

தமது கிராமக் குடிகளினிடத்தில் நிலத்தீர்வை முதலியன வசூல்செய்யவும், வசூலித்த பணத்திற்காக அவரவர்களுக்கு ரசீது கொடுக்கவுமான அதிகாரமும் அவருக்கு உண்டு. அவர் தாம் வசூலித்த பணத்தை அவ்வப்போது தாலூகா கஜானாவில் செலுத்திவிடுவர். அவர் தமது கிராமத்தில் நேர்ந்த களவு, தற்செயலாய் நடந்த மரண முதலானவற்றின் விபரங்களையும், ஜனன மரணங்களின் கணக்கையும், மழையின் அளவையும் அடிக்கடி தமது தாலூகா அதிகாரிக்குத் தெரியப்படுத்த வேண்டும். அவற்றுடன், தீர்வை உத்யோகஸ்தர்கட்கும், மற்றவர்கட்கும் அவ்வப்போது தம்மாலான உதவியையும் செய்யவேண்டும். அவர்கள், மேற் பார்வை செய்யவாவது கிராம வாழ்க்கையின் சுகத்தைக் கோரியாவது தமது கிராமத்தில் வந்துவிட்டால் அவர்களுக்கு உணவு முதலியன சேகரித்தளிப்பதும் அவர் வேலையாகவே இருந்தது. இவ் வேலைகளுடன் தமது ஐம்பது ஏக்ரா நிலங்களைச் சாகுபடி செய்யும் சொந்த வேலையும் அவருக்கு உண்டு. அவர் தமது சொந்த வேலையைக் கவனித்தலிலேயே தமது நீண்ட நேரத்தைப் போக்குவர்.

கேளம்பாக்கம், காஞ்சீபுரத்திற்கும் திருக்கழுக் குன்றத்துக்கும் மத்தியில் உள்ள ரஸ்தாவில் அமைந்துள்ளதால், அது பேர்பெற்ற அவ்விரண்டு ஊர்களிலுமுள்ள சிவாலயங்களைத் தரிசிக்கப்போகும் யாத்திரைக் காரருக்கு, இடையில் தங்குமிடமாக உள்ளது. அதனால், யாத்திரைசெய்வோர் பலரும் அடிக்கடி அங்கு வந்து தங்குவர். அவர்களுக்கு நமது கோதண்டராம முதலியார் தினந்தோறும் அரிசி, பருப்பு, நெய் முதலியன அளிப்பதுடன், அவர்களை இரவில் தமது வீட்டிற்கு அழைத்துக் கொண்டுபோய்த் தம்முடன் அவர்களும் உண்ண அமுதளித்துப் பெரு மகிழ்ச்சி அடைவர். அவருக்குக் கிராமத்தில் ஆயிரக்கணக்கான வேலைகள்

உண்டு. அவர் அங்கு ஏற்படும் குட்டிக்கலகங்கள் முதலான வற்றை அடக்கி, குடிகளைச் சமாதானப்படுத்தவேண்டும்; உற்சவாதிகளிலும் விவாக முதலிய சடங்குகளிலும் தலைமை ஸ்தானம் வகிக்க வேண்டும்; சுருங்கச் சொல்லுமிடத்து, அவரில்லாது அவ்வூரில் எத்தகைய காரியமும் நடைபெறாது என்னலாம்.

முன்சீப் கோதண்டராம முதலியாருக்கு அடுத்த படியாய் அந்தக் கிராமத்தில் பிரசித்திபெற்றவர், கிராமக் கணக்குப் பார்க்கும் கர்ணம் ராமசாமிப்பிள்ளை யாவர். அவர் அக்கிராமத்தின் வரவு செலவு கணக்கைப் பதிபவர். அவருக்கு அந்தக் கிராமத்தில் உள்ள ஒவ்வொரு நிலத்தின் பெயரும், அந்தந்த நிலத்திற்கு அவரவர்கள் கட்டவேண்டிய வரியும் மனப் பாடமாகத் தெரியும். முன்சீப் அவர்கள் தாலுகா அதிகாரிகளுக்குத் தமது கணக்கை அனுப்பும்போது, நமது ராமசாமிப்பிள்ளையே அவருக்கு வேண்டிய உதவியைச் செய்யவேண்டியவராவர். கிராமங்களில் உள்ளவர் தங்கள் உறவின் முறையார்களுக்குக் கடிதம் எழுத வேண்டு மென்றாலும், கடன் முதலிய பத்திரங்கள் எழுதவேண்டுமென்றாலும், வட்டிமுதலிய கணக்குப் போடவேண்டு மென்றாலும், நமது கணக்கப்பிள்ளையின் உதவியையே நாடுவர். அவர், கணக்கில் மிகவும் திறமை அமைந்தவர்; அவருடைய கையெழுத்து நன்றாய் முத்திணைத்தது போலிருக்கும். அவர், கிராமத்தில் நில முதலிய விஷயமாக அடிக்கடி உண்டாகும் சச்சரவுகளைத் தந்திரமாகத் தீர்த்துவிடுவதில் மிக்கத் திறம் வாய்ந்தவர். அவருக்குத் தெரிந்துள்ள தந்திரமும் வாக்சாதுர்யமும் அவ்வூரில் எவருக்கும் இல்லையென்று சொல்லலாம். ஒரு இமைப்பொழுதில் குறுணியைக் கலமாக்குவர், கலத்தைக் குறுணியாக்கிவிடுவர். ஒருவரைக் கெடுக்க வேண்டுமென்று மனது

வைத்தாரோ, அவர் அவர்களை எவ்வழியானும் அப்படியே செய்து தீருவர். "காக்கைக் குஞ்சை நம்பினாலும் நம்பலாம்; கணக்கன் குஞ்சை நம்பலாகாது" என்பது பழமொழியன்றோ? ஆதலால், கிராமத்தில் உள்ளவர்கள் அனைவரும் அவரென்றால் சிறிது பயந்தே இருப்பர். அவர்களுள் ஒருவருக்காவது நமது ராமசாமிப்பிள்ளையை எதிர்த்துப் பேசவாவது, அவருக்கு மனத்தாங்கல் உண்டாகும் விஷயங்களைச் செய்யவாவது மனோதிட மில்லை.

அடிக்கடி அக்கிராம வாசிகள் நமது கணக்கப் பிள்ளையினிடத்திலேயே தங்கள் வியவகாரங்களைத் தீர்த்துக்கொள்ளப் போவர். அவரைப்போல் வியவகாரங்களின் நன்மை தீமைகளை யறிந்து சொல்லும் திறமமைந்தவர் அவ்வூரில் ஒருவரும் இல்லை. அதனால் அக்குடிகள் அனைவரும் அவரிடத்தில் அத்யந்த விஸ்வாசமும், பெரும் பயமும் உடையவராய் அவருடைய மனம் கோணாதபடி நடந்து கொள்ளும் பழக்கத்தையே தமது வழக்கமாகக் கொண்டிருந்தனர். ராமசாமிப்பிள்ளை வட்டி ராசி முதலிய கணக்கில் மிகவும் திறமமைந்தவர்; எவ்வளவு தொகையானாலும் பல வருஷங்களுக்கு வட்டி யிவ்வளவென்பதை மனக்கணக்காகவே சொல்லிவிடுவர்; பெரிய தொகையிலும் இம்மிவிடாதவர்; கிராமவாசிகள் தங்கள் நில விஷயமாக அவரை ஏதாவது வந்து கேட்டால், அவர் அந்தந்த நில ஜாபிதாப்பட்டியைப் பாராமலே, மனப்பாடமாக அவர்களது சந்தேகத்தை நிவர்த்தி செய்வர். அவ்வூரும், அவ்வூரில் உள்ள நன்செய் புன்செய் நிலப்பிரிவுகளும் அவருடைய மனதில் அப்படியே படம்போல் பதிந்திருக்கும். அத்தகைய திறம் அவரிடம் குடிகொண்டிருந்ததனால், அவரைக் கேளம்பாக் கத்தாரனைவரும், "இவர் என்ன ராக்ஷஸப் பிண்டமோ?" என்று தமக்குள் புகழ்ந்து பேசுவர்.

நமது கணக்கப்பிள்ளைக்கு அடுத்தபடியாய், அவ்வூரில் முக்ய ஆளெனக்குறிப்பிடத்தக்கவன் முத்து நாய்க்கன் என்பவனாகும். அவன் அவ்வூரில் காவற் சேவகம் வகிப்பவன். நாட்டுப்புறங்களில் காவற்சேவகனுக்குத் தலையாரி என்பது பட்டப்பெயர். பட்டணங்களில் போலீஸ் சேவகர்கள் என்ன என்ன வேலை செய்கிறார்களோ, அவ்வேலைகளை எல்லாம் முத்து நாய்க்கன் என்னும் தலையாரி தனது கிராமத்தில் செய்யக் கடமைப்பட்டவன். அவன் ஏறக்குறைய ஆறடி உயரமுள்ளவன்; பரந்தகன்ற மார்பும், செந்நிறமும், திடகாத்திர தேகமும் உடையவன். அவன் எப்போதும் தன்னுடைய கையில் நீண்ட ஒரு மூங்கிற்றடியைத் தாங்கியே செல்வன். அங்ஙனம் செல்வதே நாடுகளில் தலையாரிகளுக்கு ஒரு அடையாளமாக இன்றும் இருந்து வருகிறது. கோதண்டராம முதலியார், சிவில் கிரிமினல் வியவகாரங்களை விசாரிக்கும்போது முத்து நாய்க்கன் அவருக்கு உதவியாக இருந்து அவர் குறிக்கும் குற்றவாளிகளை அவருடைய உத்தரவின்படி சிறையில் அடைத்து, அவர்களை ஓடிப்போகாதபடி காவல் செய்வன்; ஊரில்களவு முதலியன உண்டாகா வண்ணம், இரவில் விழிப்புடனிருந்து அக்கிராமத்தைச் சுற்றிச் சுற்றிவருவன்; குடிகளது விளை நிலங்களைக் காவல்காப்பன்; அவ்வப்போது கிராமத்தில் வசூலாகும் இறைப் பணத்தை முன்சீப் அவர்கள் கொடுக்கப்பெற்று, அதனைத்தாலுகா கஜானாவில் கொண்டுபோய்ச் செலுத்திவருவன்.

எனவே கிராம முன்சீப், கணக்கன், தலையாரி என்பார் செய்யும் வேலைகள் இன்னவை என்பன இதுவரை யாம் கூறியதால் நன்குவிளங்கும்.

அத்தியாயம்-2.

இந்தியரது ஜாதிக்கட்டுப்பாடு-புரோஹிதர் அல்லது ஜோதிடர்—கோயில் அர்ச்சகர்-உபாத்தியாயர்.

இந்தியர் அனைவரும் ஜாதிக்கட்டுப்பாட்டில் அழுந்தியுள்ளவர் என்பது எவரும் அறிந்த விஷயமாகும். அந்தக்கட்டுப்பாடு, இன்று நேற்று வந்ததல்ல. அது உலகந்தோன்றிய நாள் முதலாகத் தொன்று தொட்டு வந்ததாகும். இந்தியர் ஜாதிக்கட்டுப்பாட்டில் மிகவும் அழுத்த முள்ளவர்கள் என்பது இந்திய சரித்திரத்திலும் பிரதானமாகக் குறிக்கப்பட்ட விஷயமாகும். அவ்வழுத்தம் இன்றும் நமது மனதை விட்டு அகலவில்லை. அது என்றும் நம்மிடத்தும் நமது சந்ததியாரிடத்தும் நிலைத்திருக்கும் என்பதற்கும் பெரிய ஆதாரங்கள் பல உண்டு. பிராமண க்ஷத்ரிய வைசிய சூத்திரர் என்னும் நான்கு ஜாதியாரும் முறையே பிரமதேவனது முகம், புயம், வயிறு, கால் என்னும் இவ்வவயவங்களினின்றும் உற்பத்தியானதாகப் புராணங்கள் கூறுகின்றன. அங்ஙனம் தோன்றிய அந்த நான்கு வருணத்தவரும் தலைமுறை தலைமுறையாகத் தத்தமக்கு வேதங்களில் விதிக்கப்பட்ட கருமங்களையே தவறாதுசெய்துவந்தனர். க்ஷத்திரியர்கள், தங்கள் தோள்வலி படைவலி முதலான வலிமையுடன், புது ராஜ்யங்களை வெற்றிகொண்டும், தமது நாட்டில் சமாதானம் நிலைபெறும்படித் தங்கள் ரத்தத்தைச் சிந்திப் பகையரசர்களை வென்றும் அந்நாட்டைக்காத்து வந்தனர். வைசியர்கள் உழவுத்தொழில், வியாபாரம் முதலியவற்றை மேற்கொண்டதோடு, ஆடு மாடுகளைமேய்த்தும் வந்தனர். சூத்ரர்கள் முற்கூறிய மூன்றுசாதியாருக்கும் துணையாய் இருந்து அவர்களுக்கான குற்றேவல்களைச் செய்திருந்தனர். பிராமணர்களோ, மற்றைய மூன்று சாதியாருக்கும் தலைமை வகித்து, வேதம் ஓதல் ஓதுவித்தல்,

வேட்டல் வேட்பித்தல், இடுதல் ஏற்றல் என்னும் ஆறு தொழிலையும் மேற்கொண்டிருந்தனர். அவர்கள் வேதங்களைக்கற்று, கற்றபடி தன்னிலையில் அமைந்திருந்ததோடு, மற்றைய மூன்று ஜாதியாரையும் நன்னெறியில் நிறுத்த, அவர்களுக்கு ஹிதோபதேசம் செய்தும் வந்தனர்.

அப்படியே நமது கேளம்பாக்கத்திலும், ராமாநுஜாசாரியார் என்னும் பிராமணர் ஒருவர் புரோஹிதராய் அக்கிராமவாசிகளுக்கு உற்ற சிநேகிதரா யிருந்து அவர்களை நல்வழிப்படுத்தி வந்தனர். அவருக்கு அந்தக் கிராமத்தில் ஏற்பட்ட உயர்மதிப்புக்கு அளவேயில்லை. அவரைக் குடிகள் அனைவரும் தெய்வத்தன்மை உடையவர் எனப்பாராட்டி வந்தனர். அவருக்கு வயது சுமார் எழுபது இருக்கும். அவர் இந்து சாஸ்திரங்களில் மிகவும் தேர்ச்சியடைந்திருந்ததோடு, ஜோதிஷத்திலும் வல்லுநராக விளங்கி யிருந்தனர். அவருக்குச் சிறிதளவு வடமொழிப்பயிற்சியும்உண்டு. அவர் வைணவரானதால், தமிழ்வேதம் என்று சொல்லப்படும் அரிய பிரபந்தத்தில் உள்ள நாலாயிரம் பாசுரங்களையும் மனப்பாடம் செய்து வைத்திருந்தனர். அக்கிராமத்துக்குடிகள் அனைவரும் தாம் எந்தக் காரியம் செய்வதாய் இருந்தாலும், அவருடைய ஆலோசனையையே முதலில் நாடுவர்; அவர் சொல்லியபடியே ஒவ்வொன்றையும் செய்து முடிப்பர்.

ராமாநுஜாசாரியாருக்கு, கோதண்டராம சுவாமிகோயிலுக்கு அருகில் சொந்தமானவீடு ஒன்று உண்டு. அது பார்வைக்கு மிகவும் அழகாயுள்ளது. அந்த வீட்டுவாசலில், அரிசிமாவால் பலவித கோலங்கள் தீட்டப்பெற்றிருக்கும். வீதியை நோக்கி நிற்கும் தெருத்திண்ணைச் சுவர்களில், ஸ்ரீராமபிரானது பட்டாபிஷேக சித்திரமும், பசுக்களை மேய்க்கும்

கண்ணபிரான் புல்லாங்குழலிற்பாடும் சித்திரமும், இரணியனைக்கொல்லும் நரசிம்ம மூர்த்தியினது அழகிய சித்திரமும் விளங்கக் கண்டார் மனதைக் களிப்பூட்டுவதுடன், அவர்களுக்கு அவ்வீடுடையார் பெரியவைணவபக்தர் என்பதையும் அறிவித்து நிற்கும்.

வயது தளர்ந்த ஆசாரியார் அவர்கள் அதிகாலையில் நித்திரை தெளிந்தெழுந்து, ஸ்நானத்திற்காகக் குளத்திற்குச் செல்வர். கடும்பனியும் குளிரும் கலந்து அவரைமருட்டினும், அவற்றிற்கு அவர் அஞ்சாராய்த் தமது தேகம் நடுக்கம்கொள்ள ஸ்நானத்தை முடித்துத்திருமண்ணும் ஸ்ரீசூரணமும் தமது தேகத்தின் எல்லா அவயவங்களினு மணிந்து ஜபதபங்களை முடித்துக்கொண்டு வீட்டிற்கு வருவர்.

வீட்டை அடைந்ததும் அவர், காலை உணவுண்டு கையில் பஞ்சாங்கம் எழுதப்பெற்ற ஏட்டுச்சுவடியைத் தமது கட்கத்தில் வைத்துக்கொண்டு வெளிவருவர். வந்து, முதன் முதலாக அக்கிராமத்து முன்சீப் அவர்களது வீட்டில் நுழைவர். முன்சீப் அவர்கள், பிராமணரைக்கண்டதும் எழுந்து, அவருக்கு வந்தனோபசாரங்கள் செய்து, ஆசனமளித்து, அதில் அவரை வீற்றிருக்கும்படியாக வேண்டுவர். புரோஹிதர், முன்சீப் அவர்கள் குறித்த ஆசனத்தில் அமர்ந்து, முன்சீப்பை ஆசீர்வதித்துத் தமது ஓலைச் சுவடியை அவிழ்த்து, அவ்வருஷத்திய பலனை முதலிற் படித்துப் பிறகு மாதம், வாரம், நாள், நக்ஷத்திரம் ஆகிய இவற்றின் பலாபலன்களையும் உரத்தகுரலுடன் படித்துமுடிப்பர். அவர் அங்ஙனம் படித்து வரும்போது, அவ்விஷயத்திலேயே நமது முன்சீப் அவர்கள் தமது சிந்தையைச் செலுத்திக் கருத்துடனிருப்பர். புரோஹிதர், பஞ்சாங்கம் படித்தானதும், உடனே முதலியாரவர்களின் தாயார் தமது கிழங்கையுடன் அவ்விடம் வந்து,

"சுவாமிகளே, அமாவாசை எப்போது? எப்போது, எங்கள் வீட்டுக்காரருக்குத் திவசம்" என்ற பல கேள்விகளைக் கேட்பார். முன்சீப் அவர்களும், "சுவாமி இன்றைய தினத்தில் விதைவிதைக்கலாமா? இவ்வருஷத்தில் எனக்கு நல்லபலன் உண்டாகுமா? விளை நிலங்கள் எல்லாம் செழிக்குமா?" என்று இன்னொரன்ன கேள்விகளைக்கேட்பர். அக்கேள்விகளுக் கெல்லாம், புரோஹிதர் சாவதானமாகப் பதில் அளித்து, அப்படியே அக்கிராமத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் போய்ப் பஞ்சாங்கம்படிப்பர். ஆங்காங்கு அவரைப் பலரும் பலகேள்விகளைக்கேட்பர்: ஒருவன், தனது நிலத்தை உழுதற்கேற்ற மாடுகள் வாங்க, நற்றினத்தைக் குறித்துக் கொடுக்கும்படி அவரைக்கேட்பன்; ஒருவன் வீடு கட்டுவதற்கு நாம் எந்த நேரத்தில் ஆரம்பம் செய்யலாம் என்பன். ஒருவன் எந்தநேரம் கிரஹப் பிரவேசத்திற்கு நல்லது என்பன்; ஒருவன் தனது மகளுடைய கலியாணத்திற்கு நாள் குறித்துக்கொடுக்கும்படியாக, அவரை வேண்டுவன்; மற்றொருவன் தான் தன் பெண்ணைக் கொள்வதற்கு உரித்தான மருமகனது ஜாதகத்தைப் பார்க்கச்சொல்லி, விவாகப் பொருத்தம் உண்டா என்பதைப் பார்த்துச் சொல்லுங்கள் என்று வேண்டுவன். இங்ஙனம், குடிகள் கேட்கும் பலவாய கேள்விகட்கும், புரோஹிதர் தமது ஜோதிடநூலை ஆராய்ந்து ஆராய்ந்து தக்க பதிலளித்து, அந்தப்பதில் சரி என்று அவர்கள் மனதிற்படும்படியாய், சமஸ்கிருத சுலோகங்களை அவர்களுக்கு ஆதாரமாகவும் எடுத்துச் சொல்வர். கிராமத்தில் கலியாணம் என்று ஏற்பட்டால், அதனை நமது ஆசாரியாரவர்களே புரோஹிதராயிருந்து நடத்த வேண்டியவர். இறந்தவர்க்கு அந்தியேஷ்டி முதலிய கிரியைகளைச் செய்து வைப்பவரும் நமது புரோஹிதரே யாவர். உலகில், "வைத்தியர்கள், நோயாளி இறக்கும் வரையில் பணம்

பிடுங்குவர் ; பிராமணர் இறந்த பின்னும் பணம் பறிப்பர்" என்னும் பழமொழி யொன்று உண்டு. நோயாளி பாயும் படுக்கையுமாய்ப் பரமன் பதத்தை நாடும் நிலைமையில்கூட வைத்தியர்கள், "இப்போது தாங்கள் எனக்கு நூறு ரூபாய் கொடுக்கும் பக்ஷத்தில், யான் இந்நோயை நிவர்த்திசெய்து விடுவேன். இதோ இந்த மருந்து மிருத்திஞ்ஜயன் என்னும் பெயருடையது. இதனை எனது முன்னோர்கள் எவ்வளவோ சிரமம் எடுத்துக்கொண்டு பலநாள் உபவாச மிருந்து முடித்தனர். இது ஆயிரம்புடம் அறத்தீர்ந்தது" என்று நோயாளியின் உறவின் முறையாரிடம் கூறி அவர்களிடம் பணத்தைப் பெறுவர். ஆனால், பிராமணர்களுடைய உறவோ, நோயாளி இறந்தபின்னும் தொடர்கிறது. அவர்கள் நோயாளி இறந்தானயின், அவனுக்கு ஈமக்கடன் முதலானவற்றைச் செய்யும் அவனது புதல்வர் முதலானவருடன் இருந்து அக்கிரியைகளை வரன்முறையாகச் செய்விப்பதுடன், மாதந்தோறும் வருடா வருடமும் அவ்விறந்தானைக் குறித்துச் செய்யும் திவசம் முதலான கார்யங்களையும் நடத்திவைத்துப் பணம் பெறுகின்றனர்.

அங்ஙனமே நமது கேளம்பாக்கத்துப் புரோஹிதரும், தமது கிராமத்தில் நடக்கும் எல்லாக்கார்யங்களையும் தாமே செய்வித்து, அதனால் வரும் பெரும் ஊதியத்தால் சிறப்புடன் வாழ்ந்து வந்தனர். அக்கம்பக்கத்தில் உள்ள கிராமத்தவரும், நமது புரோஹிதருடைய பேருதவியை நாடி அடிக்கடி வருவர். புரோஹிதர் அவர்களுக்கானவற்றையும், அவர்கள் மகிழுமாறு செய்வர். அதனால், அயல் கிராமத்தவரும் கூட அவரை மிகவும் உயர்மதிப்பில் வைத்து மரியாதை செய்து வந்தனர்.

அந்தக் கிராமத்தில், நமது புரோஹிதர் வீடேயன்றி, மற்றும் இரண்டு வீடுகள் பிராமணருக்கு உரியனவாய் இருந்தன. அவற்றுள் ஒன்றில் வரதையங்கார் என்பவரும், மற்றொன்றில் அவருடைய சகோதரர் அப்பளாச்சாரிஎன்பவரும் வாசம் செய்திருந்தனர். அவ்விருவரும் கோயிலில் அர்ச்சக வேலையை முறைகொண்டு மாறிமாறிப் பார்த்து வந்தனர். அவர்களுக்குத் தமது அர்ச்சக வேலையாம் சிரம மற்ற தொழிலாற் கிடைக்கும் ஊதியமே, பேருதியமாக இருந்து வந்தது. கோயிலுக்கு வருபவர், சுவாமிக்கு நிவேதனம் செய்யக் கையில் பழம், தேங்காய், புஷ்பம் வெற்றிலைப் பாக்கு, தக்ஷிணை முதலானவற்றைக் கொண்டுவருவர். அவர்கள் கொண்டுவரும் அப்பொருள்கள் சுவாமிக்கு நிவேதனமான பின்னர், மேற்கூறிய இரண்டு அர்ச்சகர்களுக்கும் உரியனவாய்விடும். கிராமத்தில், கோதண்டராம சுவாமிக்கென ஏழு ஏக்கர் நன்செய் நிலம் யஜாராவிடப்பட்டிருந்தது. அந்த நிலத்தினின்றும்வரும் வருவாய் சுவாமிகோயிலில் விளக்கிடுவதற்கும், பூஜை செய்வதற்கும், அபிஷேக ஆராதனை, பிரசாத நிவேதன முதலானவற்றிற்கும், கோயில் சிப்பந்திகள் சம்பளத்திற்குமே செலவழிக்கப்பட வேண்டும். ஆனால், நமது இரண்டு அர்ச்சகர்களும், தாமே அக்கோயிலுக்குத் தலைமையான சிப்பந்திகளாக இருந்ததால் அதனை அங்ஙனம் உபயோகப்படுத்தாமல் தாமே தமது சொந்தச் செலவிற்காகப் பகிர்ந்து கொண்டு வந்தனர். இவையே யன்றி, அவர்களுக்கு உற்சவாதி விசேஷ தினங்களில் சுவாமி திருவீதிப் புறப்பாடு நடக்கும்போது, வேறு விசேஷ வரும்படியும் உண்டு. அவ்விருவருள், அப்பளாச்சாரி என்பவர் பொறாமையும் துர்க்குணமும் மிக்கவர். அடிக்கடி, கோயில்வரும்படியின் பாக விஷயமாகத்தமது சகோதரருடன் சண்டையிட்டுக்

கொள்வர். அதனால், அந்தக்கோயில் தர்மகர்த்தராய் விளங்கிய முன்சீப் அவர்களுக்கு அவ்விருவரையும் சமாதானப்படுத்தும்வேலையே பெரிய வேலையாக இருந்துவந்தது. கடைசியில், முதலியாரவர்களே, அவ்விருவருக்கும் அடிக்கடி உண்டாகும் அந்தக்கலகத்தை ஒருவாறு ஒழிக்க, அவ்விருவருக்கும் முறை ஏற்பாடு செய்து, அவரவர்கள் முறையில் அவரவர்களுக்குக் கிடைக்கும் வரும்படி அவரவர்களுக்கு உரியனவாம் என்னும் அந்த ஏற்பாட்டைச் செய்துவிட்டார். அப்பளாச்சாரி, தமது சகோதரரிடம் சண்டையிடுதல் போதாதென, அடிக்கடி தமது ஓய்வு நேரங்களில், குடிகளையும் சண்டைக்கிழுப்பர். அந்தக் கிராமத்தைச் சமாதான நிலைமையிற் கொண்டுவரும் முன்சீப்பும், சாந்தகுணமமைந்த குடிகளும் அவ்வூரில் இல்லையாயின், அப்பளாச்சாரியின் கலகத்தால் அக்கிராமம் எவ்வளவோ சீர்குலைந்திருக்கும். கிராமவாசிகள் தமக்கு, அப்பாளாச்சாரி செய்யும் கொடுமைகளைக் கவனியாது இருக்க இருக்க, அந்த மதிகெட்ட பிராமணன் மேலும் அவர்களிடத்தில் தமது துடுக்குத் தனத்தைக் காட்டியே வந்தனன்.

அர்ச்சகருக்கு அடுத்தபடியாய், அவ்வூரில் பெருமதிப்பிற்கு இலக்கானவர் நல்லாப்பிள்ளை என்னும் உபாத்தியாயர் ஆவர். கிராமங்களில், திண்ணைப் பள்ளிக்கூட உபாத்தியாயருக்கு உண்டாயுள்ள பெரு மரியாதையும் உயர்மதிப்பும், வேறு ஒருவருக்கும் இல்லையென்றேசொல்லலாம். நமது நல்லாப்பிள்ளை என்பவர், மஹாபாரதத்தைத் தமிழிற்பாடியருளிய அந்தநல்லாப்பிள்ளை என்னும் கவிச்சிரேஷ்டரின் வம்சத்தில் உதித்தவர். அவர் தமது மூதாதையின் பெயரைத் தம் பெயராகக்கொண்ட அதிருஷ்டத்தின் பலனாக, தமது பாட்டனார் பாடிய அந்த மஹாபாரதத்தின் பதினாலாயிரம் விருத்தங்

களையும் மனப்பாடமாகச் சொல்லும் திறமை வாய்ந்திருந் தனர்.

நல்லாப்பிள்ளையின் பள்ளிக்கூடம் அவருடைய வீட்டின் திண்ணையில் அமைந்திருந்தது. அந்தப் பள்ளிக்கூடத்தில், அந்தக் கிராமத்துப் பிள்ளைகளே யன்றிச் சுற்றுக்கிராமத்தில் உள்ள பிள்ளைகள் சிலரும் மாணுக்கராய் இருந்தனர். மொத்தமாக அம்மாணுக்கரின் தொகையை நோக்கின், அது இருபது அல்லது முப்பதுக்கு மேற்பட்டிராது. அந்த இருபது அல்லது முப்பது பிள்ளைகளும், வீட்டின் இருபக்கத்திலும் உள்ள இரண்டு திண்ணைகளின் மேல் இருவரிசையாக உட்காருவர். உபாத்தியாயர் ஒரு திண்ணையின் முனையில் உட்கார்ந்து, முதுகின் பக்கமாகத் தலையணையிட்டு, அதன் மீது சாய்ந்து கொண்டிருப்பர். இந்தக் காலத்தில், ஆங்கில நாகரீகப்படி நடக்கும் பாடசாலையார் மேற் கொண்டுள்ள போதனு முறைக்கும், திண்ணைப் பள்ளிக்கூடத்தாரது போதனுமுறைக்கும், எவ்வளவோ வித்தியாசம் உண்டு. ஆங்கிலப்பாடசாலைகளில், பொழுது வீணுகாதபடி பிள்ளைகளை வகுப்பு வாரியாகப்பிரித்து, அவரவர்களுக்கு ஏற்பட்டபாடத்தை, ஒரேமுறையில் அந்த அந்த வகுப்பு உபாத்தியாயர் போதித்து வருவர். திண்ணைப்பள்ளிக்கூடங்களிலோ அப்படியல்ல. ஒவ்வொரு பிள்ளைக்கும் அவ்வுபாத்தியாயர், தனித்தனியாகப்பாடம் சொல்லுவர். நாம் இப்போது வியவகரிக்கவந்த பிள்ளையவர்களின் பள்ளிக்கூடத்தில், ஏறக்குறைய ஏழு வயதுக்கு உட்பட்ட நாலைந்து சிறுவர்கள் ஒருவரிசையாக உட்கார்ந்து அரிச்சுவடியில் உயிரெழுத்துகளை உரத்த சப்தத்துடன் சொல்லிக் கொண்டே அவற்றை மணலில் எழுதிக்கொண்டிருந்தனர். இரண்டொருவர், பனையோலையில் எழுத்தாணி கொண்டு

சட்டம் எழுதிக்கொண்டும், சிலர் கணக்குப்போட்டுக் கொண்டும் இருந்தனர். ஒரு பக்கத்தில் சில பிள்ளைகள் எழுத்துக்கூட்டிப் பதங்களைப் படிக்க, அவர்களுக்கு அருகில் வேறு சிலபிள்ளைகள் சிறுவாக்கியங்களை உரத்த தொனியுடன், தாங்கள் உபாத்தியாயரைப் பார்த்த வண்ணமாகப் படித்துக்கொண்டு மிருந்தனர். வயது வந்த சில பிள்ளைகள் ஒருவரிசையாக இருந்து, சதகம், கிருஷ்ணன் தூது, புராணம் முதலியவற்றில் உள்ள பாடல்களைத் தங்கள் உபாத்தியாயர் கேட்கும் விதமாகப்படித்து, அவற்றை மனப் பாடம் செய்திருந்தனர். உபாத்தியாயர் அவர்களுள் ஒரு பிள்ளையை அழைத்து, அவனுக்கு அன்று முன்தினம் தாம் நல்லாப்பிள்ளை பாரதத்தில் கொடுத்த பாடத்தை அவன் மனப்பாடமாகக் கூறக்கேட்டு, அவன் கூறிய பாடல்களுக்கு உரைகூறி, மறுநாள் அவன் மனப்பாடமாகச் சொல்ல மேலும் சில செய்யுட்களை நீட்டிய இசையுடன் சொல்லிக் கொடுத்திருந்தனர். திண்ணைப்பள்ளிக் கூடங்களில், ஒரு பையன் நன்ருய்ப் படிக்கவும், பனையோலையில் நன்ருய் எழுதவும், எண்சுவடி கற்று எவ்வகைக் கணக்கையும் திறமையுடன் போடவும் தெரிந்தவனுயின், அப்போது தான் அவன் படிப்பு முற்றப்பெற்றவன் என்று கிராமத்தவரால் கருதப்பட்டவனுவன். அத்தகைய திறமைவர ஒவ்வொரு பிள்ளையும், அப்பள்ளிக்கூடத்தில் ஏறக்குறைய ஐந்து வருடம் வரையிலாவது படிக்கவேண்டும்.

பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள், காலை ஆறுமணிக்குத் தங்கள் கரத்திற்ருங்கிய சுவடிகளுடனும், முழங்கையில் தொங்கவிட்ட தடுக்குகளுடனும், பள்ளிக் கூடத்திற்குச் செல்வர். அவர்கள் அங்குச்சென்று படித்திருந்து, ஒன்பது மணியானதும் தங்கள் வீடுசேர்ந்து, பழைய அமுது உண்டு

மீட்டும் பத்து மணிக்கெல்லாம் பாடசாலைக்குச் செல்வர். சென்று, சட்டம் எழுதுவோர் சட்டமும், கணக்குப்போடுவோர் கணக்கும் போடுவர். அங்ஙனம் அவர்கள் இருக்கையில் மணியும் இரண்டாகும். உடனே அவர்களை உபாத்தியாயர் மத்தியான போஜனத்திற்காக வீட்டிற்கனுப்புவர். பிள்ளைகள் தங்கள் வீடுசென்று, சுடுசோறு உண்டு மீண்டும் மூன்றுமணிக்குப் பள்ளிக்குவருவர். அப்போது தான் உபாத்தியாயர் ஒவ்வொருவருக்கும் புதிய பாடங்களைச் சொல்லிக் கொடுப்பர். அவர் எல்லாப்பிள்ளைகளுக்கும் பாடத்தைத் தனித்தனியாகச்சொல்லி முடிப்பதற்குள் பொழுதும் சாய மணி ஆறாய்விடும். உடனே அவர் பிள்ளைகள் அனைவரையும்விட்டு ஓய்வடைவர். அவருக்கு இப்படியே தினந்தோறும் காலை ஆறுமணியிலிருந்து மாலை ஆறுமணி வரையிலும் வேலையிருந்துகொண்டே யிருக்கும். ஆனால், மாதந்தோறும், பருவமும் அதனை அடுத்த தினமும், அமாவாசையும் அதனை அடுத்த நாளும் ஆகிய நான்கு நாள்களில் பள்ளிக்கூடம் மூடப்படும். அந்த நாட்களிற்றான் உபாத்தியாயரும் பிள்ளைகளும் ஓய்வடைந்து வீட்டிலிருப்பர். மேலும், பொங்கல், தீபாவளிபோன்ற விசேஷ தினங்களிலும் பிள்ளைகளுக்கு விடுமுறை உண்டு. அவர்கள் அத்தினங்களில் வீட்டில் உல்லாசமாக இருந்து, காலத்தைக் கழிப்பர்.

உபாத்தியாயர், பிள்ளைகளின் பெற்றோரிடமிருந்து மாதந்தோறும் பெறும் சம்பளத்துடன், விசேஷ நாட்களில் அவர்களிடமிருந்து, புதுவஸ்திரம், தானியம், பண முதலியவற்றையும் அடிக்கடி பெற்றுவருவர். புதிதாகத் தமது பள்ளியில் யாராவது ஒருபிள்ளை படிக்கவந்தால், இன்னும் அவருக்கு வரும்படி அதிகம் உண்டு. திண்ணைப்பள்ளிக்கூடங்களில், வித்தியாப்யாசம் செய்வதாக இருந்தால்,

பிள்ளைகளின்பெற்ரோர் உபாத்தியாயருக்கு ஆபரணம், அங்க வஸ்திரம், தானியம் முதலியவற்றை மரியாதைப்பொருளாகக் கொடுப்பர். அதுபோல், நமது நல்லாப்பிள்ளையும் தமக்குப் பல வழியாலும் கிடைக்கும் பொருளுடன் திருப்தியுடைய வராய், தம்முடைய பார்வையில் விடப்பட்ட பிள்ளைகளைக் கண்ணுங்கருத்துமாய்ப் பார்த்து, அவர்களுக்கு விரைவில் படிப்பேறும் வழியையே என்றும்நாடி இருப்பர். அவர்பிள்ளை களுக்குப்பாடம் சொல்லும் நேரம்போக மற்றை நேரங்க ளில் அப்பிள்ளைகள் தங்களுடைய வீட்டில் நன்னடக்கை யுடன் நடந்துகொள்ளவும் பார்த்துவருவர். தம்மிடத்திற் படிக்கும் பிள்ளைகளில் ஒருவன் வியாதியாக இருந்து, வைத்தியர் கொடுக்கும் மருந்தை உட்கொள்ள மறுத்தா னாயின், உடனே அவ்விஷயத்தினை அப்பிள்ளையின் பெற் ரோர் உபாத்தியாயரிடம் வந்து தெரிவிப்பர். உபாத்தியாயர் அதைக் கேட்டதும் அப்பெற்ரோர்களுடன் அப்பிள்ளை யிடம் சென்று, அவனைப்பயமுறுத்தி, மருந்தை உட்கொள் ளுமாறு செய்து தமது வீட்டிற்கு வருவர். வீட்டில் சில பிள்ளைகள் துடுக்கான காரியங்களைச் செய்தாலும், சாப் பிடாவிட்டாலும், அவர்களது பெற்ரோர், உடனே பிள்ளைய வர்களிடம் வந்து முறையிடுவர். பிள்ளையவர்கள், அத்தகைய குறையுள்ள பிள்ளைகளைத் தண்டித்து, அவர்களை நல்வழிப் படுத்தி, அவர்கள் பெற்ரோர்களை மகிழ்ச்சி செய்விப்பர்.

அவர் இத்தகைய காரியங்களில் கவலை எடுத்துக் கொள் வதுடன், பிள்ளைகளுக்கு மதப்பற்று உண்டாகுமாறு மத போதனை, நல்லொழுக்க போதனை முதலானவற்றை யும் உடன் செய்து வந்தனர். காலையில் பள்ளிக்கூடம் தொடங்குவதற்கு முன், பிள்ளைகள் அனைவரும் முதலில் விநாயகரைத் துதிசெய்ய வேண்டும்; பிறகு வித்யா தெய்வ

மாகிய சரஸ்வதியைப் பாடவேண்டும். புதிதாகவந்து சேர்ந்த பிள்ளைகளும்கூட மேற்கூறிய தெய்வங்களின் பாடல்களை மனப்பாடம் செய்து விடுவர். பிள்ளைகள் தங்கள் விடுமுறை நாட்களில் மனப் பாடம் செய்யும்படி, பிள்ளையவர்கள் நீதி நூற்களினின்றும் சிலபாடல்களை அவர்களுக்கு ஓலைச்சுவடி யில்எழுதிக்கொடுப்பர். ஒவ்வொரு சுவடியின் ஆரம்பத்திலும் அவர் பிள்ளையார்சுழியிட்டு, சிவமயம் அல்து ஸ்ரீராமஜயம் என்றுஎழுதியிருப்பர். அங்ஙனம்செய்வது, இளம்பிள்ளைகளுக் குத் தொடக்கத்திலிருந்தே கடவுளுண்மையை நினைப்பூட்டி நிற்கும் பெருங் கருவியாகும். அவர் அடிக்கடி பிள்ளைகளை அருகழைத்து வைத்துக்கொண்டு, "பிள்ளைகளே, நம்மைப் படைத்தவர் கடவுள். அவரே நமக்குப் பெரிய தாயும் தந்தை யும் ஆனவர். அவருக்கு நாம் பயந்து நடந்து கொள்ள வேண் டும். இல்லாவிடின் கடவுள் உங்கள்மீது கோபம் கொள்வர்." என்றன் முதலிய நீதிகளைப் போதிப்பர். இதனால், திண்ணைப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் அனைவரும் தெய்வபக்தியும் நன்னடக்கையும் உடையவராகவே விளங்கினர்.

நல்லாப்பிள்ளையவர்கள், தமது மாணாக்கர்கள் ஏதாவது தவறு செய்தால், அவர்களைக் கொடுமையாகத் தண்டிப்ப தில்லை. சாதாரணமாக, திண்ணைப் பள்ளிக்கூடத்து உபாத்தி யாயர்கள், தமது பிள்ளைகளுக்கு மிகவும் கொடுமையான தண் டனையையே விதிப்பர். சிலர், பிள்ளைகளினது முழங்கால்களுக் கிடையில் பெருங்கற்களைவைத்து, அவர்களை நாற்காலிபோல் உட்காரும்படி செய்வர். சிலர் கோதண்டமிட்டு, அடியில் எழுத்தாணியைப் புதைக்கவைத்து, அப்படியே பிள்ளைகளை அதில் ஊசலாடும்படிச்செய்வர். பிள்ளையவர்களோ, அவ்விதத் தண்டனைகளைத் தமது கனவிலும் எண்ணாது, பிரம்பொன்றை

மாத்திரம் தமது துணையாகக்கொண்டு பிள்ளைகளை அடக்கி வந்தனர்.

நல்லாப்பிள்ளை, தமது பள்ளிக்கூடத்து நேரம்போக மற்றைய காலங்களில், கிராமவாசிகள் மகிழும்படி மஹாபாரதப் பிரசங்கமும் செய்வர். குடிகள் அடிக்கடி தம்மைவந்து கேட்கும் மற்றைய புராணக்கதைகளை அவர்களுக்கு விளக்கமாக எடுத்துரைப்பர். அதனால் அக்கிராமத்தார் அனைவரும் அவரிடத்தில் அத்தியந்த விஸ்வாசமும் ஆரு அன்பும் உடையவராய் இருந்தனர். சில சமயங்களில் அவர்கள் தமக்கு வெளியூரிலிருந்துவரும் தபாற் கடிதங்களை அவரிடம் எடுத்துக்கொண்டுபோய், அவற்றைப் படிக்குமாறு அவரை வேண்டுவர். சிலர் தமது உற்றூர்க்குக் கடிதம் எழுதுமாறு கேட்டுக்கொள்ளுவர். அப்போதெல்லாம் பிள்ளையவர்கள் தம் மனங்கோணுதலின்றி, அவரவர்களைக் திருப்தி செய்விப்பர். அவர் எந்த வீட்டிலும், ஒரு தடையுமின்றி நுழைந்து வருவர். கிராமத்தவரது வீட்டில் நடக்கும் விசேஷங்களில், குடிகள் மற்றவருக்கு வெகுமதி செய்ய மறந்தாலும், நமது உபாத்தியாயருக்கு வெகுமதிசெய்யும் விஷயத்தில் மாத்திரம் மறப்பதே கிடையாது.

அத்தியாயம்-3.

தமிழ்நூல் - வைத்தியன் - தச்சன் - கருமான் - இடையன் -மதியற்ற இடையன் கதை.

தமிழர்களுடைய எல்லா நூலும் பாட்டின் வடிவமாகவே யுள்ளன. தமிழ்மக்கள் தங்கள் அரிய கருத்துக்கள் பலவற்றையும் செய்யுளிலேயே அமைத்துப் போயினர். அச்செய்யுட்கள் முழுதும், உயிருக்கு உற்சாகத்தினை விளைவிக்

கும் தகுதியுடையனவாகும். பழைய காலத்துப் புலவர்கள் எழுதிய பாக்கள் எல்லாம், உருவகம், தற்குறிப்பேற்றம் முதலிய அணிகளைப் பெரும்பாலுங் கொண்டிரா. அவை உண்மையை உள்ளவாறு உரைக்கும் பெருமை வாய்ந்தவை. பழந்தமிழ்ப் புலவர்கள், தாம் கண்டவற்றைக் கண்டபடியே பாடுவர்; ஒன்றிலும் தமது நூதன சிருஷ்டியை ஏற்படுத்தார்கள். அவர்கள் இயற்கைப் பொருள்களின் வளன்களை உள்ளவாறு எடுத்துரைத்துப் படிப்பார் மனதைப் பரவசப் படுத்துவதில் மிகவும் தேர்ந்தவர்கள்; ஒருவனது உள்ளத்தில் உள்ள ரகசியக் கருத்தையும் அவனறிவிக்காமலே தாம் அறிந்து, அவற்றை இனிய செய்யுளாகப்பாடி முடிக்கும் ஆற்றலமையப் பெற்றவர். இக்காலத்திலோ சில புலவர்கள், எதுகைமோனை நயத்தையே பெரிதாக எண்ணுகின்றனர். அந்தக் காலத்துப் புலவர்கள், இவ்வாறான எழுத்திணைக்கும் வேலையை மேற்கொண்டதில்லை. அவர்கள் அனைவரும் இயற்கையைக் காட்டும் ஆடியே, அன்ன அருஞ் செய்யுட்களைப் பாடி, செய்யுள் செய்வதில் மற்றைய நாடுகள் தமது நாட்டிற்குப் பிற்பட்டனவேயாகும் என்னும் உண்மையினை நிலைநாட்டிப்போயினர். அவர்கள் நம்பொருட்டுச்செய்து வைத்துச் சென்ற, பூகோள சாஸ்திரம், ககோள சாஸ்திரம், கணித சாஸ்திரம், வைத்ய சாஸ்திரம் முதலியனவெல்லாம் செய்யுள் வடிவமாகவே யுள்ளன. பூகோளம், ககோள முதலியனவற்றை வசனவடிவமாக அவர்கள் எழுதியிருப்பின், அவை படிப்போர்க்குச் சுலபமாக விளங்கக் கூடியனவாயிருக்கும். ஆனல், அக்காலத்திய அறிஞர் அங்ஙனம் செய்யாது, எல்லாவற்றையும் செய்யுள் வடிவமாகவே செய்து வைத்துப் போயினர். ஊன்றி யோசிக்குமிடத்து, அவர்கள் அங்ஙனம் செய்ததும் பெரும்பயனைக் கருதியேயாகும் என்பது விளங்கும்.

அவர்கள் அங்ஙனம் செய்யாராயின், அந்த சாஸ்திரங்கள் எல்லாம் இப்போது நமது பார்வைக்கே வந்திரா. அந்தக் காலத்தில், புஸ்தகங்களை ஆயிரம் பதினாயிரமாக அச்சிட்டு வெளிப்படுத்தும் சௌகர்யமில்லாமல் இருந்தது. எல்லாவற்றையும் அக்காலத்தினர் பனை ஏட்டிலேயே எழுதி வந்தனர். அத்தகைய காலத்தில், முற்கூறிய பலவாய விஷயங்களை வசனவடிவமாக எழுதியிருப்பின், அவை பலருக்கும் பயன் பட்டிரா, செய்யுளாக இருந்ததால், அவற்றை எல்லோரும் தலைமுறை தலைமுறையாக மனப்பாடம் செய்து வந்தனர். அங்ஙனம் அவர்களது மனப்பாடமாக வந்த செய்யுட்களே, இப்போது அச்சுவாகனமேறி நம்மெல்லோருக்கும் அவ்வவ் விஷயங்களில் விளக்கத்தை உண்டுபண்ணுகின்றன.

யாம் இவ்வளவும் தமிழ் நூலைப்பற்றி விரிவாகக் கூற வந்தது நமது கேளம்பாக்கத்தில் நம் பார்வையைவிட்டு அகலக்கூடாதவராகிய அப்பாசாமி வைத்தியரது திறமையைக் கூறுதற்பொருட்டேயாகும். அவர் தம்மிடத்தில்வரும் நோயாளிகளிடத்தில், அக்காலத்திய தமிழறிஞர்கள் இயற்றிய வாகடமென்று சொல்லப்படும் வைத்திய சாஸ்திரத்திலிருந்து அடிக்கடி சில பாடல்களை எடுத்துச் சொல்லுவர். ஒரு வியாதியை விவரித்துச் சொல்லவேண்டுமாயின், அவர் வாகடத்துப் பாட்டையே வரிசையாக ஒப்புவிப்பர்; மருந்துகள் கொடுக்கும்போதும், பத்தியம் குறிக்கும்போதும் அந்த வாகடப் பாட்டே அவர் வாயில் நிறைந்திருக்கும். அவரை அக்கிராமத்துள்ளார் அனைவரும், தங்கள் உயிரைக் காத்துவரும் மஹானுபாவர் என மதித்து, அவருக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்து வந்தனர். அக்கம் பக்கத்துக் கிராமத்தவர் கூட அப்பாசாமி வைத்தியர் கைவைத்தால் நோயாளி பிழைத்துவிடுவான் என்னும் நம்பிக்கையுடையவராய், அவரை

யோர் தெய்வமாகப் பாராட்டி யிருந்தனர். நம்முன்னோர்கள் மருத்துவவித்தையில் மிகவும் தேர்ந்திருந்த விஷயம், அவர்கள் எழுதிவைத்துள்ள நூல்களே நமக்குச்சான்ருக நிற்கும். எனினும், அந்நூல்களின் உண்மைப் பொருளை உள்ளவாறறியாத சில நாடோடிக் கற்றுக்குட்டிகள் தமிழ்வைத்தியரென இக்காலத்துத் தோன்றி, தமிழரது மருத்துவ வித்தையின் பெருமையையும், மருத்துநூலின் அருமையையும் கெடுத்துவருகின்றனர். இக்காலத்தில், ஆங்கிலேயர்கள் மிகவும் தேர்ச்சிப்பெற்றுத் தாங்களே கண்டுபிடித்தது எனப் புகழ்ந்து கொள்ளும் ரணவைத்தியமும் பல்லாயிர வருடங்களுக்கு முன்னரே நமது நாட்டில் சர்வ சாதாரணமாக இருந்தது. அதனை நம்மவர் பாராட்டாதகுறையே, நமது மருத்துவ நூலுக்கு ஓர் குறையாக ஏற்பட்டு விட்டது. ஒருவன் உள்ளவாறு நமது மருத்துவநூலின் பொருளை அறிந்து, அதிற் கூறியபடி நோய், நோய்க்குக் காரணம், மருந்து, அம்மருந்தை முடிக்கும் வழி முதலானவற்றில் தேர்ந்தவனுயின், அவன் எவரும் மதிக்கும் பெரிய வைத்தியனெனப் புகழப்படுவான் என்பதற்கு ஓர் ஆக்ஷேபமுமில்லை. ஆனல் நம்மவரோ அங்ஙனம் செய்யாது, மருத்துநூலின் பெருமையைக் கெடுக்க அவற்றை அரைகுறையாகப் படித்துவிட்டு, வைத்தியரென வெளிவந்து விடுகின்றனர். அதனல் அவர்கள் நீங்காவசைக்கும் ராஜதண்டனைக்குமே ஆளாகின்றனர். நமது அப்பாசாமி வைத்தியரோ, அத்தகைய அரைகுறை வைத்தியர்களைப் போலல்லாது, தமிழில் வெளிவந்துள்ள எல்லா வைத்திய நூல்களையும் ஐயமறக்கற்று, அங்ஙனம் தாம் கற்றதற்கேற்ப, அந்நூல்களிற் சொல்லியபடி மருந்துகளை முடிப்பதிலும், நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்வதிலும் தேர்ச்சிபெற்றிருந்தனர். எனினும், அவருக்கு, சாஸ்

திரங்களைக்கொண்டு சிகிச்சை செய்யும் ரணவைத்தியத்தில் சிறிதும் பயிற்சி கிடையாது.

அப்பாசாமி வைத்தியர் வீரசைவ மதத்தைச் சேர்ந்தவர். அவருக்கு ஏறக்குறைய ஐம்பது வயதிருக்கும். அவர், அத்தளர்ந்த வயதிலும்கூட அளவற்ற நோயாளிகளைக் கவனித்து, அவர்களாற் கிடைக்கும் பொருள்கொண்டு பெரிய பணக்காரராக விளங்கியிருந்தனர். அந்தக் கிழவைத்தியர் வைத்திய வித்தையிற்றேர்ந்திருந்ததுடன் சிறிதளவு ஜோதிஷ சாஸ்திரத்திலும் பயிற்சியுடையவராக இருந்தார். ஆனாலும் அவர் அந்த சாஸ்திரத்தில், ராமாநுஜாசாரியாருக்குப் பிற்பட்ட திறமுடையவராகவே விளங்கினர். அவர் நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்வதற்காக வெளியே போகும்போது மாத்திரை, பஸ்பம், செந்தூரம், சூரணம் முதலான வடிவமைந்த மருந்துகளை உடன்கொண்டே செல்வர். அவர் ஒரு மனிதனது நாடியைப் பரீக்ஷித்த அளவிலேயே அவனுக்கு ஏற்பட்டுள்ள வியாதிகளை எல்லாம் சொல்லும் பழக்கமுடையவராக இருந்தனர். அவர் மருந்தொன்றினாலேயே பிணியாளனது நோய் நிவர்த்தியாகாது; அதனுடன் தெய்வ பலமும் இருத்தல் வேண்டும் என்னும் நம்பிக்கையுடையவர். அந்த நம்பிக்கையுடன் அவர், முதன் முதலாகத்தாம் ஒரு நோயாளியின் உறவின்முறையார்களுக்குத் தெய்வத்தின் திறமையை எடுத்துரைத்து, அவர்களைக் கோயிலுக்கு விளக்கேற்றும்படியும், பிராமணர்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னதான முதலிய தானங்களைச் செய்யும்படியும் வற்புறுத்துவர். அவர்கள் அங்ஙனம் செய்வதாக ஒப்புக்கொண்ட பின்னரே, அவர் தமது மருந்துப் பெட்டியில் கைவைப்பவர். அவர் அங்ஙனமெல்லாம் செய்து வந்ததற்கேற்ப, அவர் எந்த எந்த இடத்தில் நோயைத் தீர்த்து விடுகிறதாகக் கைவைக்

கிருரோ அந்த அந்த இடத்தில் எல்லாம் அவருக்கு நல்ல பெயரே கிடைத்து வந்தது. அதனுல், கிராமவாசிகள் அனை வரும் அவரிடத்தில் தமது முழு நம்பிக்கையையும் வைத்து விட்டனர். எப்போதாவது நமது வைத்தியர் பார்வையில் வந்த நோயாளிகளுள் ஒருவன் இறந்துவிட்டானுயின் அப் போது அக்குடிகள் அங்ஙனம் அவன் இறந்தது அவன் விதி வசமே யல்லாது வைத்தியர்மீது நாம் குறை கூறுவதற்கு இடமேயில்லை என்று கூறுவாரேயன்றி, அவரை எள்ளள வேனும் இழிவாகப் பேச மனந்துணியார்கள். ஒரு காலத் தில் நமது வைத்தியரவர்கள் தமது சொந்தக் கிராமத்தை விட்டு அயலூருக்குச் சென்றிருந்தார். அவர் சென்று அனேக நாளாகத் திரும்பிவரவில்லை. அப்போது, முன்சீப் கோதண்டராம முதலியாருக்குக் குளிர்சுரம் கண்டுவிட்டது. அந்தச் சுரம் நாளுக்குநாள் அதிகமாய், முதலியாரவர்களைப் பெரிதும் வருத்தவே, அதனுல் அவர் பாயும்படுக்கையுமாய்த் தமது மரணத்தை க்ஷணந்தோறும் எதிர்நோக்கும் நிலைமை யில் இழிந்து விட்டனர். அந்த விஷயம் உடனே அடுத்த கிராமத்தில் உள்ள நமது வைத்தியருக்குத் தெரிய வந்தது. அவர் அதை அறிந்ததும் உடனே அவ்வூரை விட்டுப்புறப் பட்டு, மறுநாள் அதிகாலையில், முன்சீப் அவர்களின் வீட்டுள் நுழைந்தார். அப்போது, அவ்வீட்டுக் கூடத்தில் முன்சீப் அவர்களின் தாயார் தமது மடியின்மீது தமது ஏகபுத்திர னைப் படுக்க வைத்துத் தொங்கவிட்ட தலையுடன் கண்ணீர் விட்டிருந்தனர். உறவின் முறையாரும் கிராமத்தவரும் நோயாளியைச் சூழ்ந்து, வாடிய முகத்துடன் வருந்தி நின்ற னர். புரோஹிதர் ராமானுஜாசாரியார், நோயாளியின் கிரக நிலைமையை ஆராய்ந்து, பலவாய கணக்குகளைப் போட்டுக் கொண்டும், தமக்குத்தாமே பரிதாபப்பட்டுக் கொண்டு மிருந்

தனர். அங்ஙனமிருக்கு நிலைமையில், அவ்விடத்தில் அப்பா சாமி வைத்தியர் வந்து சேர்ந்தனர். உடனே அங்கிருந்தா ரது மாறுதலை நாம் என்னென்று சொல்வது! எல்லோரும் தமது வாட்டம் அறப்பெற்றவராய், இனி முன்சீப் பிழைத்து விடுவார் என்னும் துணிவுடன் நிச்சப்தமாக, வைத்தியரது வாயினின்று வரப்போகும் சொல்லைக் கேட்க ஆவலுள்ளவ ராக இருந்தனர். முன்சீப் அவர்களின் தாயும், தமது கண் ணீரைத் துடைத்துக்கொண்டு, தெளிவடைந்த முகத்துடன் வைத்தியரை அருகில் அழைத்து, அவரை உட்காருமாறு செய்தனர். வைத்தியர் உட்கார்ந்து, நோயாளியின் கரத்தைப் பிடித்து, நாடியைச் சிறிதுநேரம் சாவதானமாகப்பரீக்ஷித்துப் பிறகு நோயாளிக்கு அந்தக்ஷணத்திற்குமுன் ஏற்பட்ட நோயின் வேறுபாடுகளை எல்லாம் தமது வாகடப்பாட்டால் அங்குள்ளோர்க்குச் சொல்லலாயினர். அவர் சொல்லும் மாறுபாடுகள் எல்லாம், நோயாளிக்கு முன்னரே ஏற்பட்டி ருந்தன என, நோயாளியின் தாயாரும் ஒப்புக்கொண்டனர். பின்னர், வைத்தியர் அவர்கள் முன்சீப்பின் தாயாரையும், அங்கிருந்த மற்றவர்களையும் பார்த்து, "இப்போது ரோக மோ மிகவும் அசாத்யமாக இருக்கிறது. ஆகையால் இதற் குச் சாதாரண மருந்துகள் ஒரு பயனையும் தரமாட்டா. இதோ இருக்கும் இந்த மிருத்திஞ்ஜயன் என்னும் பெயரு டைய மாத்திரையே, இந்த அசாத்ய ரோகத்தைக் கண்டிக் கக் கூடியது. இதனை எனது பாட்டனார் ஒரு ஜமீன்தார ரது உதவிகொண்டு செய்து முடித்தார். இந்த மாத்திரையை மூன்றுநாள் உட்கொண்டபின், நோயாளி ஜீவரக்ஷாமிர்தம் என்னும் மற்றொரு மாத்திரையை உட்கொள்ள வேண்டும்" என்று சொல்லி முடித்து, தமது மருந்துப்பெட்டியைத் திற ந்து சில மாத்திரைகளை எடுத்து, "இதோ இம்மாத்திரை

களே ஜீவரக்ஷாமிருதம் என்னும் பெயருடையன. இவற்றை யான் பல சாஸ்திரங்களையும் ஆராய்ந்து, பின் நாற்பது நாள் உபவாசமிருந்து, 5 கட்டை வண்டி விறகு கொண்டு புடமிட்டுச்செய்து முடித்துள்ளேன். இது விசேஷ பணம் செலவிட்டுச் செய்த மருந்தாகும். இதனையும் நோயாளி இரண்டொரு நாள் தேனில் கலந்துட்கொண்டால், வியாதி நாளுக்கு நாள் குணப்பட்டுக் கொண்டே வரும். இடையில் மற்றொரு விஷயம் யான் சொல்ல மறந்தேன். நீங்கள் தினந்தோறும் நமது முதலியார் சுகமடையும் பொருட்டாகக்கோதண்டராம சுவாமி கோயிலுக்குத் தினம் பத்துத் திருவிளக்கு ஏற்ற வெண்டும். அன்றியும், தினந்தோறும் ஆறு பிராமணர்களுக்கு அன்னமளிக்க வேண்டும்'' என்று சொல்லி மிருத்திஞ்ஜயன் என்னும் மாத்திரையைத் தேனில் குழைத்து, நோயாளியின் நாக்கிற்றடவித் தமது கையை நீர்கொண்டு சுத்தம் செய்து கொண்டனர். பிறகு நோயாளியின் தாயாரிடத்தில் பத்திய மின்னது, இன்னது செய்யவேண்டுமென்பதைக்கூறித் தாம் மீட்டும் அன்று சாயுங்காலம் வருவதாகத் தெரிவித்து வெளி வந்தனர். அங்ஙனமே, அவர் அன்று சாயுங்காலமும் வந்து முன்போல் மருந்தளித்துச் சென்றார். பிறகு பத்து நாளைக்குள் முன்சீப் அவர்கள் வியாதி நீங்கப்பெற்றுச் சுகமடைந்தார். அவ்விஷயம் அக்கிராமம் முழுவதும் பரவிவிட்டது. அதனால், அந்தக் கேளம்பாக்கத்தில் நமது வைத்தியரவர்களுக்கு முன்னிருந்ததைவிட ஆயிரமடங்கு அதிகமான மதிப்பு ஏற்பட்டது. இனி யாம் நமது கிராம வைத்தியரது பெருமையை இவ்வளவெனக் கூறிவிட்டு, அவருக்கு அடுத்தபடியாய் அவ்வூரில் முக்கிய ஆளெனக்குறிப்பிடத்தக்க தச்சனது வேலையைப்பற்றிச் சிறிது சொல்வோம்.

அந்தக் கிராமத்தில் சுப்பராய ஆசாரி என்னும் பெயரு

டைய ஒருவன் தச்சுவேலை செய்து வந்தனன். பயிரிடுவதற்கான கலப்பை முதலான ஆயுதங்களை அந்தக் கிராமக் குடிகளுக்குச் செய்து கொடுக்கும் வேலையே அவனுக்குப் பெரிய வேலையாக இருந்து வந்தது. கிராமத்தில் வீடு முதலியன கட்டும்போது அவற்றிற்கு வேண்டிய மரச்சாமான்களை யவனே செய்துகொடுத்துவந்தனன். அன்றியும், அவன் சில சமயங்களில், விற்பனைக்காக வண்டி, பெட்டி முதலானவற்றைத் தன் சொந்தச் செலவில் செய்து, அவற்றை நல்லவிலை வரும்போது விற்றுவிடுவான். கிராமங்களில், தச்சருடைய வேலை அவ்வளவு மதிப்பிற்குறித்தானதல்ல. கிராமத்தச்சர்கள், தங்கள் வேலையைப் பெரும்படியாகச் செய்வார்களேயல்லாது, பட்டணப்புறங்களில் உள்ளவர் செய்தல் போலத் திருத்தமாகச் செய்ய அறியார்கள். அங்ஙனமே நமது சுப்பராய ஆசாரியும், அன்றன்று குடிகளுக்கு வேண்டிய சாமான்களைச் செய்து, அவற்றாற் கிடைக்கும் சிறுவருவாய் கொண்டு தன்வயிற்றை வளர்த்து வந்தனன்.

சுப்பராயாசாரிக்கு அடுத்தபடியாய்ச்சண்முகம் என்னும் பெயருடைய ஒருவன், அக்கிராமத்தில் குறிப்பிடத்தக்கவனாய் இருந்தான். அவன் கருமான் வேலைசெய்து ஜீவிப்பவன். பயிர்த்தொழிலுக்கு வேண்டிய இரும்பு சாமான்களையும் வீடுகட்டுவதற்கான இரும்பு சாமான்களையும் அவனே செய்து கொடுப்பவன். மரங்களைப்பிளக்கும் கோடாரி, அரிவாள், மண்வெட்டி முதலிய பலவாய இரும்புசாமான்களை அவன் வேலை யில்லாதபோது மொத்தமாகச் செய்து, அவற்றை விற்றும் வந்தனன். நிற்க:

அந்தக் கிராமத்தில், மற்றொரு முக்கியமான மனிதனைப் பற்றி யாம் இப்போது கவனிப்போம். அங்குக் கோபால பிள்ளை என்னும் பெயருடைய இடையன் ஒருவன் இருந்

தான். அவனுக்குப் பல பசுக்களும், எருமைகளும் சொந்த மாக இருந்தன. அவன் அவற்றினின்றும் கிடைக்கும் பால், தயிர், நெய் முதலானவற்றைக் குடிகளுக்கு விற்றுவருவான். கிராமத்தவருடைய மாடுகளை மேய்த்து அவற்றைக் காத்து வருவதும் அவனுடைய வேலையாகவே இருந்தது. கோபால பிள்ளையினிடத்தில், சோம்பல் என்பது சிறிதும் கிடையாது. அவன் மிகவும் சுறுசுறுப்புள்ளவன். அதிகாலையில் அவன் நித்திரைவிட்டெழுந்து, ஊராருடைய பசுக்களைக் கறக்கச் செல்வன். சென்று, ஒன்பதுமணியாகும் வரையில் அந்த வேலை அவனுக்கு ஓயாமல் இருக்கும். அதன்பிறகு அவன் வீடுவந்து சேர்வான். அதற்கிடையில், அவனது மனைவி யாகிய சீதை என்பவள், அதிகாலையிலேயே தனது மாட்டுத் தொழுவத்தைச் சுத்தம்செய்து வீட்டையெல்லாம் பெருக்கி நீர் தெளித்துக்கோலமிட்டுப் பின் நீராடி முகத்திலிட்ட குங் குமத்துடன், தனது பசுக்களையும் எருமைகளையும் பால் கறப் பள். அன்று முன்தினம் இரவு தான் தோய்த்துவைத்த தயிரை மத்துகொண்டு கடைந்து, வெண்ணெய் வேறு, மோர் வேருகப் பிரிப்பள். பிறகு பால், தயிர், வெண்ணெய், நெய் முதலானவற்றைக் கிராமத்தில் எடுத்துக்கொண்டுபோய் அவற்றைவிற்று வருவள். அவள் தன்னுடைய வேலைகளை எல்லாம் முடித்துக்கொண்டு, பால் தயிர் முதலானவற்றை விற்று வீடுவந்து சேர்வதற்குள், கோபால பிள்ளையும் அவ் விடம் வந்திருப்பன். வந்ததும், அவன் தன் மனைவி யூற்றும் நொய்க்கஞ்சியைக் குடித்து, உடனே ஊராருடைய மாடுகளை மேய்ப்பதற்காக அவற்றை மந்தையாக மடக்கிச் செல்வன். கேளம்பாக்கத்துக்குக்கு இரண்டு மைல் தூரத்தில், பசும் புல் நிறைந்த காடு ஒன்று உண்டு. அந்தக் காட்டில், அக்கம் பக்கத்தில் உள்ள இடையர்களும் தங்கள் தங்கள் கிராமத்த வரது பசுக்களை மந்தையாக மடக்கிக்கொண்டு வந்திருப்பர்.

அவ்விடத்தில், நமது கோபாலபிள்ளையும் தனது பசுமந்தை யுடன் வந்து பசுக்களை மேயவிட்டு, அவ்விடையர்களுடன் கலந்து, உல்லாசமாகப் பாடிக்கொண்டும் பேசிக்கொண்டு மிருப்பன். பொழுது சாய்ந்ததும், அவன் தன் பசுக்களை மடக்கிக்கொண்டு மீட்டும் தன் கிராமத்தை யடைந்து, காலை போல், ஒவ்வொரு வீடாகச் சென்று பால்கறந்து கொடுத்துத் தன் வீட்டிற்கு மீள்வன். அவன் கிராமத்தாரது பசுக்களை எல்லாம் கறந்து முடிய இரவில் எட்டொன்பது மணியாகும். அந்த நேரத்தில் அவன் தன் வீடுசேர்ந்து உணவுண்டு நித்திரைபோவன். இடையர்களைப் பொதுவில் மடையர்கள் என உலகினர் சொல்வதுண்டு. அவர்களை மடையர்கள் என ரூபிக்க, ஆதரவான கதைகள் எத்துணையோ வழக்கில் உள்ளன. ஆனாலும், அக்கொள்கை எம்மட்டும் உண்மை என்பதை யாம் அறியோம். எனினும் அக்கொள்கையினை வலுப்படுத்த எழுந்த கதைகளுள் ஒன்றை, யாம் இவ்விடத்தில் குறிப்பிடுகிறோம்:—

மதியற்ற இடையன்.

இந்தியர் தம்முள் நல்ல இடையர்கள் புத்தி வன்மை
மந்தம தாக வுள்ள மனிதர்க ளாவ ரென்று
சிந்தனை செய்த சில்லோர் செப்புவ ரிடையன் புத்தி
அந்தநற் பிடரி தன்னிலாமென உலகி லன்றே. 1

அவ்வுரை மெய்ய தாக அருநக ரொன்றி லிந்த
செவ்விய குலத்து தித்த சிதடனுமொருவன்றிய
வவ்விய குணங்க ளற்ற மனைவியை மணந்து வாழ்ந்தான்
திவ்விய குணங்க டம்மிற் சிறிதுமே இல்லா னாகி. 2

இடையனைக் கண்டார் யாரும் இவன்றனைப் போல இந்தத்
தடையறு முலகந் தன்னில் தடியனு முளனோ என்று

கடையுறப் பேசும் வார்த்தை காதினுல் கேட்ட அன்னுன்
கடையுறு மனைவி வெட்கி நாதனைத் திருத்த லானுள். 3

காலையே யெழுதல் கண்ணைக் கடுகவே துடைத்துக் கொள்
சாலையே ஒத்த தன்னேர் சரிவயி ரூர உண்ணல் [ளல்
காலையே நீட்டிக் கும்ப கன்னனைப் போலு றங்கல்
வேலையே யிவைதா மன்றி வேறென்று மறியா னன்றே. 4

அடித்தனள் இடித்துப் பேசி யாவன பலவும் செய்தாள்
மடித்தன முடையான் யாவு மனதினிற்கொள்ளான் முன்போ
அடுத்தன செய்தே யார அருங்குண மங்கை தானும் [ல்
துடித்தனள் வருந்தி நாளும் சோர்ந்தன ளிருந்தா ளன்றே. 5

அங்ஙன மிருக்குங் காலை யப்பதி தன்னில் ராமன்,
பொங்கெழிற் சரிதம் கூறும் புராணிக ரொருவர் வந்து
தங்கிநற் காதை சொல்லத் தகுங்குடி பலருங்கூடி
அங்கதைக் கேட்கச் சென்று ரத்திர மிடைச்சி கேட்டு. 6

தன்னுயர் கணவன் ராம சரித்திரம் தன்னைக்கேட்டால்,
முன்னுறு குணங்கள் மாறி மூதறி வுள்ளானு வன், என்றுமே
மனத்தி லெண்ணி இனியநன் மொழியால்நாதன், தன்னையே
போக வைத்தாள் தந்திரமாகத் தானே. 7

சரித்திரம் கேட்கப் போனுன் தன்குல வழக்கம் போலப்
பெருத்தகைத் தடியின் மேலே பேசுதன் தலையை வைத்துக்
கருத்துட னிற்க வன்னுன் கனத்திடு முதுகின் மீது, பொரு
த்தமாய் அமர்ந்தா னுங்குப் போக்கிரி யாமோர் காளை. 8

கனத்திட முதுகின்மீது காளையுட்கார்ந்த தோரா, மனத்
தினன் வருந்தி பாரம் வளர்ந்திட அழுது நைந்து, நினைத்த
னன் விதியைய நொந்து நின்றனன் கதையு மாங்கே, தினப்படி
முடிய மேலார் தீயனு மிறங்கிச் சென்றுன். 9

யாவரும் செல்ல அந்த யாதவன் தானு மில்லம்
ஆவலாய்ச் சென்றா னங்கே யவன்மனை யருகில் வந்து
மேவிநீர் கேட்ட ராமன் விஷயமெவ் வாறே யென்னத் தாவிய
ஓராள் பாரந் தையலே யதுதா னென்றான்.

இந்தக் கதையைப்போல், இன்னும் இடையர்களுடைய மடத்தனத்தைக் காட்ட எத்துணையோ கதைகள் உண்டு. எனினும், அவற்றை எல்லாம் நாம் மெய் யென்று எண்ணி, இந்தக்காலத்தில், இடையர்களை மடையர்கள் எனக்கூறுதல் அறிவீனமாகும். தற்காலத்தில், எத்துணையோ அறிஞர்கள் அந்த உயர்குலத்தில் உதித்து, எவரும் புகழும் அறிஞராய் விளங்கியுள்ளனர். இந்த நூலின் முதனூலை ஆங்கிலத்தில் இயற்றிய அறிவுடைச் சிரேஷ்டராகிய ஸ்ரீமான் பிள்ளையவர்களும் இந்த உயர்குலத்தில் உதித்தவரேயாவர். ஆகவே, யாம் இவ்விஷயத்தினை இவ்வளவோடு விட்டு, வேறு விஷயத்தினைத் தொடுவோம்.

அத்தியாயம்-4

வண்ணான் - துயவன் - அம்பட்டனும் அவன் மனைவியாகிய மருத்துவச்சியும் - கிராமதேவிக்குப் பூஜைசெய்யும் பூசாரி.

கிராமங்களில், வண்ணாருக்குத் தங்கள் சொந்தக் காரியங்களைக் கவனிக்கச்சிறிதும் ஒய்விராது என்பது எவரும் சொல்லும் விஷயமாகும். அது, நமது கேளம்பாக்கத்தில் இருந்த முனியன் என்னும் வண்ணானிடத்தில் உண்மையாகவே விளங்கியது. முனியன் மிகவும் கஷ்டப்பிராணி. அவன் அதிகாலையில் நித்திரை விட்டெழுந்து கையில் ஒரு பட்குட

த்துடன், அந்தக் கிராமத்தின் ஒரு பக்கத்தில் உள்ள வீடு கள் தோறும் செல்வான். மற்றொரு பக்கமாக, அவனுடைய மனைவி, அவனைப்போல் வேறொரு மட்குடத்தைக் கையிலேந் திச் செல்வள். அவர்கள் ஒவ்வொரு வீட்டிலும் சென்று தங்கள் வரவை அவ்வீட்டில் உள்ளவர்க்குத் தெரிவிக்க "வண்ணான் அம்மா" என்றும் வண்ணாத்தி "அம்மா" என் றும் முறையே உரத்தகுரலுடன் சொல்வர். அதனைக்கேட் டதும் அந்த அந்த வீட்டினுள்ளிருந்து, பெண்ணொருத்தி கையில் அழுக்காடைகளுடன் வந்து, அவற்றை வண்ணானிட மாவது வண்ணாத்தியிடமாவது தந்து, இந்த இந்த ஆடைகளை இன்ன இன்னவிதமாகச்சலவை செய்யவேண்டுமென அவர்க ளுக்கு உத்தரவிட்டுத் தனது மற்றொருகையில் செப்புப் பாத் திரத்தில் கொண்டு வந்த கூழை அவர்கள் கொண்டு வந்த மட்குடத்தில் ஊற்றிச்செல்வள். அப்படியே முனியன் ஒவ் வொரு வீட்டிலும் சென்று அழுக்கெடுத்துக் கொண்டு தன் வீடு வந்துசேர, மணி ஒன்பதாய்விடும். அப்போது அவனு டையமனைவியும் அவளுடைய வேலைகளை முடித்துக்கொண்டு, அவ்விடம் வந்துசேர்வள். பிறகு அவ்விருவரும் தங்கள் பிள்ளைகளுடன் வயிறார உண்டு, துணிதுவைக்கப் பாலாற்ற ங்கரையை அடைவர். அங்கு அவர்கள்வெயிற்கொடுமையை யும் பாராட்டாது மாலை வரையில் துணிகளைத் துவைத்துலர் த்திக் கஞ்சியிட்டுக் காற்றுப்பிடிப்பர். பிறகு, சலவையான துணிகளை மடித்துத் தமது வீட்டிற்குக்கொண்டுபோய், ஞாபகமாக அந்த அந்த வீட்டாரது துணிகளை மூட்டை மூட் டையாகக்கட்டுவர். அங்ஙனம் அந்த அந்த வீட்டாரது துணி களை ஒரு அடையாளமுமின்றி அவர்கள் ஞாபகத்திற் கொள் ளும் விஷயம் பெரிதும் வியக்கத்தக்கதாகும். அவர்கள், விள க்குவைத்ததும். தாம்கட்டிய மூட்டைகளை வீடுகள் தோறும் கொடுக்கச்செல்வர். அப்போது, காலைபோல் அவர்கள் மட்

குடத்தை எடுத்துச்செல்லாது, கூடை யொன்றை உடன் கொண்டுபோவர். அந்தக் கூடையில் இப்போது கிராமத்தவர் தங்கள் தங்கள் சலவைத் துணிகளைப்பெற்றுச் சூடுசோறிடுவர். முனியனுமவன் மனைவியும், கிராமத்தில் உள்ள வீடுகள் தோறும் சென்று சோறுபெற்றுவர, இரவில் மணி பத்தாகிவிடும். அதற்குமேல் அவர்கள் தாம் கொண்டு வந்த உணவினைத் தமது மக்களுடன் உண்டு, காலையிலிருந்து அந்நேரம் வரையிலும் தாம் பட்ட கஷ்டத்திற்குப் பரிகாரமாக அயர்ந்து உறங்குவர். ஆனால், கிராமத்தில் தெருக்கூத்து நடக்கும் காலத்தில், நமது முனியனுக்கு அந்த ஓய்வும் இராது. அவன் கூத்தாடும்போது எல்லோருக்கும் வெளிச்சமுண்டாகத் தீபப்பந்தம் பிடித்து நிற்கவேண்டும். கிராமத்தவர், தாம் தமது கிராமத்தில் கூத்து நடத்துவதாக இருந்தால், முதலில் அவ்விஷயத்தினை முனியனுக்குச் சொல்லிவிடுவர். அவன் அதனைக் கேட்டுத்தனது தினப்படி வேலையுடன், கந்தைகளைப் பொறுக்கி அவற்றைப் பந்தமாகக்கட்டி வைக்கும் வேலையையும் உடன் பார்ப்பான். இரவில் அவன் உணவுண்டதும் எல்லோருக்கும் முன்னதாக அந்தக் கூத்தாடுமிடத்தை அடைந்து, தான் செய்து வைத்த பந்தத்தைக் கொளுத்தி நிற்பன். அதன் பிறகு தான், கூத்தாடுவோர் தமது மேள சப்தத்தை முழக்குவர். இப்படியே முனியன், அந்தக் கிராமத்தில், தனது மனைவி லக்ஷ்மி என்பவளுடன் அரும்பாடுபட்டு, அவ்வளவு வேலையையும் சிறிதும் மனம் கோணுதலன்றிச் செய்து கிராமத்தவரது நற்கருணையைப் பெற்றிருந்தான்.

இனி அந்தக் கிராமத்தில் உள்ள குயவனைப் பற்றிச் சிறிது சொல்வோம். அங்குக் குப்புசாமி என்னும் பெயருடைய குயவன் ஒருவன் முனியனைப்போல் இரவும், பகலும்

கஷ்டப்பட்டுக் கிராமத்தவருக்கு வேண்டிய உதவியைச் செய்பவனாக இருந்தான். அவன் அந்தக் கிராமத்தில் உள்ளவர்களுக்குத் தேவையான மட்பாண்டங்களை எல்லாம் செய்து கொடுத்துவந்தனன். வீட்டில் விளக்கேற்றுவதற்கான தீபகலசம், சமையலுக்கு வேண்டிய பாண்டங்கள், நீர் நிறைத்து வைக்கப் பெரிய குடங்கள், மொடாக்கள், தானியங்களை நிரப்பி வைக்கப்பெரிய ஜாடிகள், வீட்டிற்குச் செங்கல், ஓடு முதலான சாமான்களைச் செய்தலே அவனுக்கு தினந்தோறும் ஏற்பட்ட வேலையாகும். அவன் அதிகாலையிலிருந்து இரவு வரையில், தனது தண்ட சக்கிரத்துடன் வேலையாக இருப்பான். அவனுக்குத் தன் சொந்த காரியங்களைப்பார்க்க அரைவிநாடியேனும் ஓய்விராது. கிராம தேவிக்காகச் சமர்ப்பிக்கும் குதிரை, பன்றி முதலான ஜந்துக்களினுருவங்களமைந்த பொம்மைகளையும் குடிகள் வேண்டும்போது, குப்புசாமி மிகவும் திறமையாகச் செய்து கொடுப்பான். பொங்கல், நோன்பு முதலான விசேஷகாலங்களில் அவனுக்கு வேலை அதிகமாக இருக்கும். அந்தக் காலங்களில் அவன் கிராமத்தில் இருக்கும் எல்லா வீட்டுக்கும் புதுப்பானை புதுச்சட்டிகள் செய்து கொடுத்து, அவற்றின் விலையைப் பெறுவான். அன்றியும், கலியாண காலங்களில் அவன் வர்ணந்தீட்டிய பெரிய பெரிய சால்களைச் செய்து கொடுப்பன்; அந்தக் காலத்தில் நவக்கிரக பூஜைக்காக நவதானியங்கள் கொட்டி வைக்கவேண்டிய சிறுசிறு கல்சங்களையும் செய்து கொடுப்பான். அவனுக்கு இவ்வேலைகளேயன்றி, கிராமத்தவர்க்கு எப்போதாவது தற்செயலாகக் கைகால் எலும்புகள் இடம்விட்டு இடம் பெயர்ந்துவிட்டாலும், முறிந்துவிட்டாலும், அவற்றைச் சரிப்படுத்தி அவர்களைக் குணப்படுத்தும் வேலையும் அவனுக்கு உடனிருந்து வந்தது. கிராமத்தில், குயவர்களுக்கு அத்தகைய நோய்களைக் குணப்படுத்

தும் ஆற்றல் எப்படி உண்டாயதோ யாம் அறியோம்! பெரும்படியான வேலைகளைச் செய்யும் அவர்கள், சூக்ஷ்ம புத்தியுடன் செய்யவேண்டிய அவ்வேலையைத் திறமையுடன் செய்வது ஆச்சர்யமே யன்றோ? அவ்வினத்தினர் அத்தகைய நோய்களை நிவர்த்தி செய்வதற்கு, நமது கிழப்பாட்டிகள் ஓர் காரணத்தைக் கற்பிக்கின்றனர். அஃதாவது, "மனிதரைப் பிரமதேவன் மண்கொண்டு சிருஷ்டி செய்கிறான். அவனைப்போல், குயவர்களும் மண் கொண்டு பலப்பல உருவங்களை உண்டு பண்ணுவதால், அவர்களும் பிரமனுக்கு ஒப்பானவராய், மனிதரவயவங்களுள் உள்ள எலும்புக்கூடுகளின் அமைப்பை நன்றாய் அறிந்துள்ளனர்." என்பதேயாகும். நமது குப்புசாமி என்னும் குயவன், இத்தகைய நோய்களை எளிதில் நிவர்த்திசெய்யும் ஆற்றல் உடையவனாய் இருந்ததால், அவனுக்கு அதனாலும் அதிக வரும்படி உண்டாய் இருந்தது, அயல் கிராமத்தவர்கூட, அவனுக்கு இருக்கும் திறமையைக்கண்டு, அத்தகைய நோய் தமக்கு உண்டான விடத்து, அவனுடைய உதவியை நாடிக் கேளம்பாக்கத்தில் வந்து தங்குவர். குப்புசாமி கிராமத்தவருக்கு உபயோகமான இத்தகைய வேலைகளைச்செய்து, அவர்கள் தன் விஷயத்தில் நல்லபிப்பிராயம்கொள்ளும்படி நடந்து கொண்டனன்.

குப்புசாமிக்கு அடுத்தபடியாய், அவ்வூராருக்கு மிகவும் உதவியாக விருந்தவன், கைலாசம் என்னும் பெயருடைய அம்பட்டனாகும். அவனே அவ்வூரில் உள்ளவர்களுக்கு க்ஷவரம் செய்பவன். அன்றியும் விசேஷ காலங்களில், அவன்றான் மேளம் வாசிப்பன். மேள வாத்தியமின்றி, கலியாண முதலிய விசேஷங்களும் கோயிலில் உற்சவாதிகளும் நடைபெறுவன்றோ? ஆகவே, அத்தகைய விசேஷ நாட்களில் கைலாசம் தன் கூட்டத்தாருடன்வந்து, வாத்தியம் வாசித்துப்போவான்.

அவனுக்கு மேற்கூறிய வேலைகளுடன், ரணவைத்தியம் செய்யும் வேலை பெரிய வேலையாக இருந்து வந்தது. கைலாசம் ரண வைத்தியத்தில் மிகவும் தேர்ந்தவன். எத்தகைய கட்டிகளையும், க்ஷண நேரத்தில் கத்திகொண்டு அறுத்து, அவற்றை மூலிகைகளின் உதவியால் ஆற்றி விடுவான். அம்பட்டனாகிய அவனுக்கு ரணவைத்தியத்தில் அவ்வளவு திறமை உண்டானது, மிகவும் அதிசயிக்கத் தக்கதேயாகும். நாடுகளில் அனேகமாக அம்பட்டர்களே ரண வைத்தியர்களாக இருக்கின்றனர். அவர்கள் எந்த நேரத்திலும் கத்தியை உபயோகப்படுத்தி வருவதாற்போலும். அவர்கள் கைகூசுதலின்றிக் கட்டிகளை அறுத்தல் முதலியனவற்றைத் திறமையுடன் செய்கின்றனர். நமது கைலாசத்திற்கு, தாயம்மாள் என்னும் பெயருடைய மனைவி ஒருத்தி இருந்தாள். அவள் அந்தக் கிராமத்தில் பிரசவ முதலிய நோய்களைக் கவனித்து வரும் மருத்துவச்சியாக இருந்தனள். அவள் பிள்ளை பிறந்த வீடுகளுக்குச் சென்று, அப்பிள்ளைகளுக்கு நீராட்டுவதுடன், அவற்றிற்கு அவ்வப்போது உண்டாகும் நோய்களை நீக்குவதற்கேற்ற மருந்துகளைக்கொடுத்தும் வருவள். இங்ஙனமாக, கைலாசமும், அவன் மனைவி தாயம்மாளும், அந்தக் கிராமத்தவர்க்குப் பேருதவியாக இருந்து, அவர்கள் தரும் தானியங்களையும், பொருளையும், பழந்துணிகளையும் பெற்றுத் திருப்தியாக வாழ்ந்து வந்தனர்.

ஒவ்வொரு கிராமத்திலும், கிராமதேவிக்கு ஒவ்வொரு கோயில் உண்டு. அந்தக் கிராமதேவிகள், தாம் தாம் இருக்கும் கிரமத்தை வாந்திபேதி, வைசூரி முதலிய கொடிய நோய்களின் வயப்படாதபடி காத்து வருகின்றனரென்பது கிராமவாசிகள் அபிப்பிராயமாக இருந்து வருகிறது. அப்படியே, நமது கேளம்பாக்கத்திலும், கிராமதேவி கோயில் ஒன்று உளது. அந்தக் கிராமத்தில் உள்ள தேவிக்கு அங்காளம்

மாள் என்பது பெயராகும். அந்த அங்காளம்மன் கோயில், கேளம்பாக்கத்திற்கு அப்பால் ஒரு பர்லாங் தூரத்தில் அமைந்திருக்கிறது. அந்த அம்மையின் பூஜை செலவுக்காக, அந்தக் கிராமத்தினர் சில நிலங்களை யஜராவிட்டிருந்தனர். ஆனால், அந்த நிலங்களில் உண்டாகும் வரும்படி அந்த அம்மையின் பூஜைக்கு முற்றும் செலவழிக்கப்படுவதில்லை. அந்தக் கோயிலில் அங்கமுத்துப் பூஜாரி யென்பவன் இருந்தான். அவன் தான் அந்தக் கோயிலில் பூஜை செய்பவன். அவன், அந்த நிலவரும்படி முழுவதையும் தன் சொந்தச் செலவிற்காகவே உபயோகித்து, எல்லோரையும் ஏமாற்றும் கிராமதேவியைத் தானே ஏமாற்றி வந்தனன். அவன், கிராமங்களில் வைசூரி முதலிய கொடிய நோய்கள் உண்டானால், அப்போது, கிராமதேவிக்குக் கோபம் உண்டாய்விட்டது. அவளுடைய கோபத்தைச் சாந்தப்படுத்தினுற்றான், நமது கிராமத்திற்கு வந்துள்ள துஷ்ட நோய் நீங்கிப்போகும்.'' என்று ஏழைக்குடியானவர்களிடம் கூறி, அவர்களிடமிருந்து பணம், தானியம், பூஜாதிரவியம் முதலானவற்றைக்கொண்டு செல்வன். சில மதியற்ற ஜனங்கள், அவனுடைய வார்த்தையை மெய்யென்று நம்பி, அவனிடத்தில் தேவிக்குச் சூட்டி விடும்படி விலையுயர்ந்த ஆபரணங்களையும் கொடுத்து விடுவர். வேறு சிலர் ஆடு, கோழி முதலியவற்றைக் கிராமதேவிக்குச் சுற்றி விடுவர். அவற்றையெல்லாம், அந்த அங்கமுத்துப் பூஜாரி கொள்ளை கொள்ளையாகக் கொண்டு, தன் வயிற்றை நிரப்பிக் கொள்வன்.

அனேகமாகத் தாழ்ந்த வகுப்பினரே கிராம தேவதைக்குப் பூஜை முதலானவற்றை அடிக்கடி நடத்துவது. அவர்கள் மற்றைய கடவுளிடத்தில் வைத்திருக்கும் அன்பைவிட, அக்கிராமதேவதைகளினிடம் வைக்கும் அன்பிற்கு அளவே இல்லை. கிராமதேவிக்குப் பூஜையிடுவதென்றால், கோழி,

ஆடு முதலிய ஜந்துக்களை அந்தத் தேவிக்கு முதலில் பலி யிட வேண்டும். அத்தகைய கொடிய காரியங்களை அறிவு டைய மக்கள் மனம்வந்து செய்ய முற்படார்கள் 'நாகரீகமும், அறிவுமற்ற சில வகுப்பினர் மாத்திரம் அக்காரியங்களை மனங்கூசுதலின்றிச்செய்து, அவற்றால் கிராமதேவி மகிழ்ச்சி கொண்டதாக எண்ணித் தாமும் மகிழ்வார்கள். அத்தகைய அற்ப அறிஞர், தந்திர நிபுணனாகிய அங்கமுத்துப் பூஜாரி யின் சொல்லால் ஏமாந்து போகின்றனர் என யாம் சொல்ல வும் வேண்டுமோ? அவன் அவ்வறிவற்ற ஜனங்களைத் தன் இஷ்டம்போல் ஆட்டிவந்தனன். அவன், தன்மீது அங்கா ளம்மை ஆவிர்ப்பவித்திருப்பதாக, அவர்களுக்கு வெளிவே ஷம் காட்டி, அவர்களது பொருளைப் பல வழியாலும் பறிப் பான். அவன் அந்தக் கிராமத்தில், பிரதி வியாழக்கிழமை தோறும் குறி சொல்லும் பழக்கத்தை வைத்திருந்தான். அவன் சொல்லும் குறியைக்கேட்க, அயல் கிராமங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான ஜனங்கள், அந்த நாளில் அங் காளம்மை கோயிலில் வந்து கூடுவார்கள். அங்காளம்மையே அந்த அங்கமுத்துப் பூஜாரியின்மீது ஆவிர்ப்பவித்து, வருங் கால செய்திகள் அனைத்தையும் வெளியிடுகிறாள் என்பது அவர்களுடைய எண்ணம். அவ்விஷயத்தை மெய்யென்று, அந்த அறிவற்ற ஜனங்களுக்கு மெய்ப்பிக்க, அந்த அங்க முத்து பூஜாரி காட்டும்திறமை அவ்வளவிவ்வளவல்ல. அவன் அந்த ஜனங்களிடத்தில், தானே அங்காளம்மைஎன வேஷங் காட்டி, அந்த நேரத்தில் அவர்களை எல்லாம் நடுநடுங்கச் செய்வான். உண்மையில், கிராமதேவதை அவன்மீது ஆவிர்ப் பவித்தல் இல்லை என்பதை அறிவுடையோர் நன்றாய் அறி வர். என்றாலும், அவன் அந்த அறிஞர்களும் நம்பும்வித மாக, அந்தக்குறி சொல்லும் நேரத்தில், திறமையாக நடிப் பன். குறி சொல்வதென்றால், வந்திருக்கும் ஜனங்களின்

மனதில் உள்ள குறைகளை அறிந்து, அவ்வவற்றிற்கேற்ற படி, அவரவருக்குத் தக்க பதிலைப் பட்டும் படாததுமாகச் சொல்வதாகும். அங்ஙனம் சொல்வதில் நமது அங்கமுத்துப் பூஜாரி மிகவும் கெட்டிக்காரன். அவன் சொல்லும் பதில்கள் அனைத்தும் பல அருத்தங்கள் படக்கூடியனவாகவும், பொதுவாகவும் இருக்கும். சாதாரணமாகக் குறி சொல்லுவோர்க்கு, லோகானுபவம் அதிகம் வேண்டும். அங்கமுத்துப் பூசாரியோ லோகானுபவத்தில் எல்லாம்தேறி, மேலுலகானுபவமும் உடையவனாய் இருந்தான் என நாம் சொல்லலாம். அவன், அப்பெருந்திறமையுடன் ஓர் நாள் குறி சொல்லும்போது இந்நூலின் மூதனூலாசிரியர் தாம் நேரிற் கண்டதாக எழுதும், அவன் திறமையை யாம் ஈண்டு வரைகின்றோம்.

"நான் எனது நண்பர் சிலருடன், அந்த அங்கமுத்துப் பூஜாரியின் குறிமேடைக்குச் சென்றிருந்தேன். அந்தக் குறிமேடை, அங்காளம்மைகோயிலின் உட்புறத்தில் அமைக்கப்பட்டிருந்தது. அன்று வியாழக்கிழமை யானதால், பல கிராமங்களிலிருந்தும் திரளான ஜனங்கள் வந்திருந்தனர். சில தாய்மார்கள், நோயுடன் வாடும் தங்கள் சிசுக்களுடன் சேர்ந்திருந்தனர். நோயாளிகளின் நெருங்கிய உறவின் முறையார் சிலர், அங்காளம்மையின் அனுக்கிரஹத்தை அந்தப் பூஜாரியின் மூலமாகப்பெற்று. அந்த நோயாளிகளின் பிணியை நிவர்த்திக்க வழிநாடினர். புத்திரப் பேற்றை விரும்பிப் பிள்ளைப்பேறற்ற சில மாதரும், அழகுள்ள பெண்களை மணந்து கொள்ள அவாவுள்ள சில பிரமசாரிகளும், மற்றும்பலப் பலவாய மனோரதங்களுடைய மாதரும் ஆடவரும் அவ்விடம் நெருங்கி யிருந்தனர். அவர்களுக்கிடையில், அங்காளம்மை விக்கிரஹம் புஷ்ப முதலான அலங்காரத்துடன் வைக்கப்பட்டிருந்தது அந்தவிக்கிரஹத்தின் பக்கமாக, வெள்ளித் தகட்டால்

சுற்றப்பெற்ற ஒரு கருப்புப் பிரப்பந்தடியொன்று மிருந்தது. அந்தப்பிரம்பு, அங்கு வந்திருக்கும் பேய் பிசாசுகள் பிடித்தவரினின்றும், அப்பேய் பிசாசுகளை யோட்டுவதற்காக ஏற்பட்டதெனப் பிறகு தெரியவந்தது. அங்காளம்மைக்கு எதிராகப் பழவகைகளும், புஷ்பமாலைகளும், மற்றும் பல வரிசைகளும், குவியல் குவியலாகக் குவிந்திருந்தன. மற்றொரு பக்கமாக, சாராய புட்டிகளும், குடுவைகள் நிறைந்த கள்ளும் இருந்தன. பூஜாரி ஸ்நானம்செய்து, ஈர ஆடையுடன் மெய் முழுவதும் விபூதி அணிந்து, அவ்விடம் வந்து, அந்த அங்காளம்மையின் எதிராக உட்கார்ந்தனன். அவ்விடத்திலிருந்த ஜனங்கள் அனைவரும் அவனை அதிக ஆவலுடன் பார்க்கத் தலைப்பட்டனர். பூஜாரியின் உடனிருப்போர், தங்கள் தங்கள் சிலம்பு, உடுக்கை, பம்பை முதலிய வாத்தியங்களை முழக்கினர். அப்போது பூஜாரி மனதை ஒரு முகப்படுத்துபவன்போல் போலி சமாதியில் இருந்தான். உடனே, சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் மயக்கம்கொண்டு கீழே வீழ்ந்து எழுந்து, ஆவேசம் வந்து விட்டவன்போல பாவனை காட்டி, எதிராக இருந்த சாராயத்தையும் கள்ளையும்குடித்து குதித்துக் குதித்துக் கூத்தாடினன்; பலவிதமாகப் பேசினன்; அருவருக்கத்தக்கபடி பாடினன். உடனே, அவனுடனிருந்தவர், கற்பூரம் கொளுத்தினர். பின்னர் பூஜாரி ஒரு பெரிய கத்தியைக் கையிலெடுத்துத் தன் தேகத்தின் பலவிடங்களில் காயங்களை உண்டுபண்ணிக் கொண்டான். அங்ஙனம் எல்லாம் அவன் செய்தது, ஜனங்களுக்குத் தன்மீது அங்காளம்மை ஆவிர்ப்பவித்தாள் என்பதைக் காட்டிக் கொள்வதற்கேயாகும். அவனை அந்தக் காலத்தில்கண்ட ஜனங்கள் அங்காளம்மையே தங்கள் முன்னிலையில் பூஜாரி வடிவமாக வந்து விட்டாள் எனப்பயந்து நடுங்கி, கைகூப்பி வணங்கியும், கன்னத்தில் அறைந்து கொண்டு தாங்கள் செய்த பிழைகளை

மன்னிக்கும்படி கேட்டும், பூஜாரியின் வாயில் வரப்போகும் வார்த்தையை ஆவலுடன் எதிர்பார்த்து மிருந்தனர். அப்போது பூஜாரி மெல்லிய குரலுடன், "இவ்விடத்தில் ஒரு ஆண்பிள்ளை தன் பந்துவாகிய ஒருபெண் பிள்ளையின் சௌக்யத்தைப்பற்றிக் கேட்க வந்துள்ளான். அவன் என் எதிராக வரக்கடவன்" என்று கூறினன். அவன் அங்ஙனம் சொல்லியதும், அந்தக் கூட்டத்தார் அனைவரும் நிச்சப்தமாக இருந்தனர். ஒருவனும் முன்வரவில்லை. மறுபடியும் பூஜாரி அதிகாரக் குரலுடன், "எனக்கு அந்த மனுஷ்யனைத் தெரியும். அவன் இவ்விடத்தில் வந்திருக்கிறான். அவன் சிறிதும் தாமதம் இன்றி என்முன்வந்து முழங்காலிட்டு என்னை வணங்கினுலாயிற்று; இல்லாவிடின் அவனை நான் தண்டித்துவிடுவேன்" என்றான். அவன் தண்டிப்பதாகச் சொல்லி முடிப்பதற்குள், 40-வயதும் நிரம்பப்பெறாத ஒரு மனிதன் அந்தக்கூட்டத்தினின்றும் வெளிவந்து "அம்மணி, குழந்தை என்மேல் தாம் கோபித்தலாகாது. யான் நோயுற்றுவாடும் என் மனைவியைப்பற்றித் தம்மை விசாரித்துப்போக இப்போது இவ்விடம்வந்தது உண்மைதான் என்றனன். அதைக் கேட்ட அப்பூஜாரி, 'அடே, நீ என்னை மறந்து, என் வெறுப்பைத் தேடிக்கொண்டாய். அதனாற்றான் உன் மனைவி இன்னும் பாயும் படுக்கையுமாக இருக்கிறாள். இல்லாவிடின், அவள் எப்போதே தனது நோய் நீங்கப்பெற்றுச் சுகமடைந்திருப்பள். இப்போதாவது நீ எனக்குத் திருப்தியுண்டாக ஒரு ஆட்டை எனக்குப் பலியிடு; உன் மனைவி தேறிவிடுவாள்" என்று சொல்லி, அவனிடத்தில் சிறிதளவு விபூதியைத்தந்து, "நீ இதனை உன் மனைவியின் முகத்தில் இடு" என்றனன். வந்த மனிதன், அவன் தந்த விபூதியைப் பயத்துடன்பெற்று, அவ்விடத்தை விட்டு அகன்றான். அதன் பின்னர் பூஜாரி, "பிள்ளை வரங்கேட்க இவ்விடத்தில் பெண்

ணொருத்தி வந்துள்ளாள். அவள் எங்கே?'' என்றான். உடனே அந்தக் கூட்டத்திலிருந்து ஒரு பெண் வெளி வந்து, பூஜாரியினருகடைந்தாள். அவளை அப்பூஜாரி கண்டு, "நீ இன்று முதல் நாற்பதுநாள் வரையில், காலையில் எழுந்து ஸ்நானத்தை முடித்துக்கொண்டு, என் கோயிலை வலம்வந்து, ஒரேவேளை உணவுடன் இருந்து, கடைசிநாளில் எனக்கு ஒரு புதுப்புடவை படைப் பாயானால் உனக்குப் பிள்ளைப்பேறுண்டாகும்'' என்று சொல்லி, முன்போல் அவளுக்கும் விபூதி அளித்தான். மறுபடியும் அவன், "இவ்விடத்தில் ஒரு பெண் தன் நோயுள்ள குழந்தையுடன் வந்திருக்கிறாள். அவள் என் எதிராக வரட்டும்'' என்ன, மிகவும் வருத்தத்துடன் கூடிய முகமுடையவளான பெண்ணொருத்தி, தன் குழந்தையுடன் அவனெதிராகவந்து நின்றாள். அவள் வந்ததும், அவன் அந்தக்குழந்தையின்மீது விபூதியைத்தடவி, அப்பெண்ணை நோக்கி, "உன்குழந்தை நோயற்றுச் சுகமடையும். அது சுகமடைந்ததும், நீ எனக்கு ஒரு கோழியைப்பலியாகக் கொடுக்கமறவாதே'' என்று கூறினான். அந்தப்பெண்ணும் அதைக்கேட்டு, "அம்மா! தாயே நீ கேட்டபடியே நான் செய்கிறேன்'' என்று வணக்கத்துடன் சொல்லிப் போயினள். இப்படியே அங்கமுத்துப் பூஜாரி, பொதுவாக ஒவ்வொருவரை அழைத்து, அவர்களுக்குத் தக்கபடி பதிலளித்ததோடு, அவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான கட்டளையை ஏற்படுத்திவந்தான். இங்ஙனம் அவன் செய்துவரும்போது, கடைசியாக இரண்டு விஷயங்கள் நடந்தன. அவற்றையான் கண்டபோது மிகவும் அதிசயித்து அவனைத் தெய்வத்தன்மை யுடையவனெனவே மதித்தேன். அவ்விரண்டு சம்பவமும் பின்வருமாறு:—பூஜாரி சிறிதுநேரம் யோசனையிலிருப்பவன் போலிருந்து, பிறகு, "இவ்விடத்தில் ஒரு சிறு வாலிபன் தன் கையில் ஒரு எலிமிச்சங்கனியை மறைத்துக்

கொண்டு என்னைப் பரிசோதிப்பதற்காக வந்துள்ளான். அவன் இப்போதே என்னிடத்தில் தான் மறைத்து வைத்துள்ள அந்தக்கனியைக் கொடுத்துவிடவேண்டும்'' என்றனன். அவன் அங்ஙனம் சொல்லிமுடிக்குமுன் ஒரு வாலிபன் திடீரெனப் பயத்துடன் அவ்விடம்வந்து, அந்தக்கனியைப் பூஜாரியிடம் கொடுத்தான். மறுபடியும் பூஜாரி "சென்ற வியாழக்கிழமை என்னிடம்வந்து, தனது பிள்ளை சூன்யத்தால் நோய் கொண்டு வாடுகிறுன் என்று சொல்லிச்சென்ற ஒருகிழவன், இன்றும் வந்திருக்கிறுன். அவன் இவ்விடம் வரட்டும்'' என்று கூற, உடனே ஒருகிழவன் அவன் முன்பாக வந்தான். அவனை அப்பூஜாரி நோக்கி, "அடே, உனது மகனுடைய பகையாளி, சென்றமாதம் ஒரு நடுராத்திரியில் உனது வீட்டினுள் மந்திரசாமான்களை ஒரு மட்குடுவையில் இட்டுப்புதைத்து விட்டான். அந்த மட்குடுவை இருக்கும் வரையில், உன் புதல்வன் சுகமடையான். ஆதலால் நீ இப்போதே இங்கிருக்கும் சிலரை அழைத்துக்கொண்டு உன் இல்லம்சேர்ந்து, அங்கிருக்கும் மாட்டுத்தொழுவத்தின் வடகிழக்குமூலையில் புதைக்கப்பட்டுள்ள அந்த மட்குடுவையினுள் ளிருக்கும் சாமான்களுடன் இவ்விடம் கொண்டுவந்து என்முன் வைப்பாயானுல், உன்மகன் சொஸ்தமடைவான்; போ'' என்றனன். அம்மொழியைக்கேட்ட அக்கிழவனும், அங்கிருந்த பலரும் மாட்டுத்தொழுவத்தண்டை அடைந்து, பூஜாரி சொல்லியபடி மட்குடுவை யிருக்கக்கண்டு, அதனை அப்படியே எடுத்துக்கொண்டு வந்து, அவன் முன்னம் வைத்தனர். பூஜாரி, "மகன் பிழைத்து விட்டான்.'' என்று அந்தக்கிழவனை நோக்கிக் கூறி, அந்தக் குடுவையைப் பூமியின்மேல் வலிவுடன் மோதினுன்; உடனே சில மந்திரங்களையும் உச்சரித்தான்.

யான் அவன் கடைசியாகச் செய்து காட்டிய இரண்டு அற்புதச் செய்கைகளைப்பற்றி விசாரித்து வந்தபோது, சில நாட்களுக்குப்பின், முதலாவதாக அவன் எலுமிச்சம்பழத் தைப்பற்றிக் கூறிய குறியின் உண்மை எனக்கு வெளியாயது. அந்தச்சிறு வாலிபன் தான் மறைத்து வைத்திருந்த அந்தக் கனியைப்பற்றி, தன் அருகில் இருந்த அப்பளாச்சாரிக்குக் கூறினன். அந்த அப்பளாச்சாரி, பூஜாரிக்கு ரகசியத்தூதன். அவன், அப்படியே அங்கு வந்திருக்கும் ஜனங்களின் வரவை யறிந்து, அவ்வரவின் காரணத்தைப் பூஜாரிக்கு முன்னதாக வே சொல்லி, அவனிடம் பொருள் பெற்றுவரும் வழக்க முடையவனய் இருந்தான். அவன் தன் வழக்கத்தின்படி அந்த வாலிபனது ரகசியத்தை அறிந்து பூஜாரியிடம் வெளி யிட்டதால், பூஜாரி உண்மைக் குறி சொல்பவன்போல், உண் மை உரைத்தனன். இவ்வளவே அந்தக்கனியைப்பற்றி நட ந்த விருத்தாந்தம். மற்றைய ஒன்ருே, பூஜாரியும் அவனைச் சேர்ந்தவர்களும் செய்தவேலையே ஆகும். தானே தன்னு டைய தோழர்களுடன் அந்த மட்குடுவையைப் புதைத்துப் பின், தன்குறி வன்மையைப் பலரும் அறிய அப்பூஜாரி காட் டினன்.

இங்ஙனமாக அங்கமுத்துப் பூஜாரி செய்யும் மோசங்க ளுக்கு அளவே இல்லை. அவனைப்போல எல்லா இடங்களி லும் இந்தப் பூஜாரிகள் ஏழை ஜனங்களைப் பெரிதும் மோசஞ் செய்து வருகின்றனர். ஆதலால், ஆங்கில நாகரீகம் பரவி ஆங்கில ஆட்சி வேரூன்றி இருக்கும் இந்த நாளில், அத்த கைய மோசக்காரருடைய திறமை எல்லாம் மங்கிய விளக்கே போல் குன்றி வருகின்றன.

அத்தியாயம்-5.

பணிச்சவன்—பணிச்சவனுக்கும் குயவனுக்கும் ஏற்பட்ட கலகத்தில் அப்பளாச்சாரி அவ்விரு வரையும் தூண்டிப் பணம் பறித்தது— வியாபாரி-தேவதாசிகள்-இடையனும் அவன் மனைவியும்.

இந்தியாவில் உள்ள கிராமங்களின் நிர்வாகமானது முற்காலத்தில் மிகவும் சீர்திருத்தத்திற்குள்ளான விஷயமாக இருந்தது. என்றாலும், ஒருவர் கருத்தைத் தூரதேசங்களில் உள்ள மற்றொருவருக்கு அறிவிக்கவேண்டுமாயின், அந்தக்காலத்தில் கடித முதலான போக்குவரத்திற்குப் போதுமான சௌகர்யங்கள் ஏற்பட்டிருந்ததாகத் தெரியவில்லை. அதற்கென அக்காலத்தினர் பணிச்சவர்கள் என்று சொல்லப்படும் ஒருவகைச் சாதியாரைத் தங்களுக்கு உதவியாக வைத்திருந்தனர். அதுபோலவே, இந்தக்காலத்திலும் நமது தென்னிந்தியாவில் உள்ள கிராமங்களில் அந்தப்பணிச்சவர் என்னும் சாதியார் அத்தொழிலைச்செய்து வருகின்றனர். அவர்கள், கிராமங்களில் நடக்கும் விவாகத்தைக் குறித்த மணவோலை, உத்தரக்கிரியைப் பத்திரிகை, மற்றும்பல விசேஷங்களைக் குறித்த கடிதங்கள் முதலானவற்றை, அக்கிராமத்தவரின் உறவின் முறையார், சிநேகிதர் முதலானவர்களுக்குக் கொடுப்பதில் பெரிதும் உதவியாய் இருக்கின்றனர். பணிச்சவன் என்ற பதத்திற்கு, வேலைசெய்வோன் என்பது பொருளாகும். அந்தப் பணிச்சவ சாதியைச் சேர்ந்த கந்தன் என்னும் பெயருடைய ஒருவன், நமது கேளம்பாக்கத்தில் வாழ்ந்து வந்தான். அவன் அந்தக் கிராமத்தவரிடம் எவ்விதமான கடின வேலையையும் மனம் கோணுதலின்றித் திருப்திகரமா

கச்செய்து முடிப்பவன். அதனால் அவனிடத்தில் அந்தக் கிராமத்தவர் பெரிதும் நம்பிக்கையுடையவராக இருந்தனர். அவன், அந்தக்கிராமத்தில் எவரேனும் இறந்து விட்டால், அவர்களது பிணத்தின் முன்னதாகச் சங்கு என்னும் வாத்தியத்தை ஊதிச்செல்வான். அப்பிணங்களைச் சுடுகாடுகொண்டு செல்லும் அன்று, அவன் சங்கினை முழக்கிச் செல்வதுடன், அன்றைய மறுதினத்தில் நடக்கும் பாலுக்கும், அதன்பின் நடக்கும் அந்தியேஷ்டிக் கிரியைக்கும் அவன் உடனிருந்து சங்கினை ஊதி, இறந்தவரின் உறவின்முறையார் முதலானோருக்கு முன்னதாக, மேற்கூறிய கிரியைகளைச்செய்யும் இடத்திற்கு வழிகாட்டி அழைத்தேகுவன். முற்கூறிய விசேஷகாலங்களில், கிராமத்தில் உள்ளவர்களுக்கும், அயல் கிராமங்களில் உள்ளவர்களுக்கும் பிரயோஜனவீட்டுக்காரரிடம் சிறிது ஊதியம் பெற்றுத்தாம்பூலம்வைத்து, அவ்விசேஷதினங்களில் அவர்களை வரச் செய்பவனும் அவனேயாகும். மற்றும் அவ்விசேஷங்களில், வந்த ஜனங்களுக்குக் குற்றேவலையும் செய்து, அவை முடிவுபெறும் வரையில் காத்திருக்க வேண்டியது அவனுடைய வேலையாகும். அவன் இத்தகைய வேலைகளை அக்கிராமத்தவர்க்குச் செய்து, அவர்கள் சந்தோஷத்துடன் தரும் சிறு பொருள்கொண்டு பெருந்திருப்தியுடன் வாழ்ந்து, சிறிது பொருளுடையவனுயிருந்தனன். அவனிடத்தில் சேர்ந்திருக்கும் சிறிதளவு பொருளைக் கொள்ளைகொள்ளவேண்டும் என்ற எண்ணமுடைய, அப்பளாச்சாரி என்று முன்னர் யாம் கூறிய வஞ்சகன், அவனுக்கும், அவனுக்கு அடுத்த வீட்டில் குடியிருக்கும் குப்புசாமி என்னும் குயவனுக்கும் குட்டிக்கலகத்தை உண்டுபண்ணி விட்டான். அதனல், ஏழையாகிய அவ்விருவரும், அடிக்கடி நியாயஸ்தலத்தில் கட்சிக்காரராக இருந்து, பெரும்பொருளை இழந்து, பின் புத்திசாலிகளாயினர்.

அப்பளாச்சாரி, அவ்விருவரையும் எங்ஙனம் வஞ்சித்தான் என்பதை எவரும் அறிய விரும்புவர். ஆதலால், யாம் அதனை ஈண்டு எழுதுகின்றோம்:—ஒருநாள் அந்த வஞ்சகப்பேயன், பணமின்றித் தவித்துக் கடைசியாக அக்குப்புசாமியிடம் சென்றான். அப்போது குப்புசாமி தன்னுடைய தண்டசக்கரங்களுடன் வேலைசெய்து கொண்டிருந்தனன். அவன் அந்த வஞ்சகப்பேயைக் கண்டதும் தன் வேலையை நிறுத்தி, வணங்கினன். அப்பளாச்சாரி அவனுடன் வேறு சில விஷயங்களைச் சிறிதுநேரம் பேசியிருந்து, பின்னர் "என்னடா, குப்புசாமி! உன்வீட்டுப் புழைக்கடையில் இரண்டு பனைமரங்கள் இருக்கின்றனவே; அவற்றைப்பற்றி நீ ஏன் சிறிதும் கவலை எடுத்துக்கொள்வதில்லை? அவை, உன் வீட்டிற்கும் கந்தன் வீட்டிற்கும் மத்தியில் உள்ளன. அங்ஙனமாக நீ அவற்றின் பலனை ஏன் அனுபவிக்காது, கந்தனுக்கு விட்டு விட்டாய்? கந்தன், அவ்விரண்டு மரங்களும் தனக்கே உரியவையென்று சொல்லி, அவற்றின் பலனை அனுபவித்து வருகிறானே. நீ இப்படியும் அவனை விட்டு விடலாமா? நீ ஏன் அவற்றை அனுபவித்தலாகாது? சுத்த பைத்தியக்காரனாக இருக்கிறாயே நீ; அந்த இரண்டு மரங்களும் உங்களிருவருக்கும் பொதுவான நிலத்தில் வளர்ந்துள்ளன; எனக்குத் தெரிந்தவரையில், நான் அம்மரங்களிரண்டும் நியாயமாக உனக்குச் சொந்தமானவை யென்றே திடமாகச்சொல்லுவேன்." என்றனன். அதனைக் கேட்டிருந்த குப்புசாமி, சிறிது பேராசையுடையவனாய் இருந்ததால் "ஆமாம் சுவாமி! எனக்கும் அந்தப் பனைமரத்தில் பங்குண்டு; நான் என்ன செய்வேன்! தாங்கள் மாத்திரம் எனக்கு உதவியாக இருக்கும்பக்ஷத்தில், நான் அவற்றை எப்படியும் ஸ்வாதீனமாக்கிக் கொள்வேன்" என்று சொல்லி

னன். அப்போது அப்பளாச்சாரி தன் எண்ணம் பலிதமா யது என்று தன் மனதில் எண்ணி, "குப்புசாமி, நீ பயப் படாதே. நான் உனக்குத் துணைசெய்கிறேன். என்னடா, நியாயமான இந்த விஷயத்தில் நான் உனக்குத் துணை செய் யாமல், வேறு யாருக்குத் துணை செய்யப்போகிறேன். இனி அப் பனைமரங்களும் அவையிருக்கும் இடமும் உன்னுடைய னவே என எண்ணிக்கொள்." என்று தன் ஆரவார வார்த் தைகளால், அந்தக் குயவனை மயக்கித் தனக்குவேண்டிய பொருளை யவனிடமிருந்து பெற்றுப் போயினன்.

மறுநாள் அந்த அப்பளாச்சாரி, கந்தனை வரவழைத்து, "அடே கந்தா, என்ன குப்புசாமி உன்னைப்பற்றி என்னி டம் குறை கூறுகிறானே? உன் வீட்டுப் புழைக்கடையில் இருக்கும் பனைமரங்கள் இரண்டும் அவனுடையனவாம். இது என்ன அதிசயம்! அவ்விரண்டு மரங்களையும் உன் தகப்பன் வைத்துப் பாதுகாத்து வந்ததை நான் நன்றாய் அறிந்திருக் கிறேன். கிராமமுனிசீப் கோதண்டராம முதலியாருக்கும் அது விஷயம் தெரியாததல்ல. இன்னும், இந்தக் கிராமத் தார் அனைவருமே, அம்மரங்கள் இரண்டும் உனக்கே உரியன எனச்சொல்ல இருக்கிறார்கள். அங்ஙனமாக, திடீரென இந்தக் குப்பன் உன்னை மோசம்செய்ய எண்ணிவிட்டானே. இது என்ன அநியாயம்! கந்தா, நான் உன் விஷயத்தில் மிக வும் சிரத்தை கொண்டுள்ளவனாதலால், இப்போது சில வார்த் தைகள் சொல்லப்போகிறேன். நீ அவற்றின்படி நடந்து கொள்; சுகப்படுவாய். அவன் அம்மரங்கள் விஷயமாக, வீண்வழக்குத் தொடுப்பான் போல இருக்கிறது. அவன் அங்ஙனம் செய்வதற்கு முன்னரே, நீ அம்மரங்களைச்சுற்றி முட்செடிகொண்டு வேலியிட்டுவிடு. அதைக்கண்டு அவன் அங்குவர அஞ்சுவான். ஒருவேளை அவன் மீறிவரும்பக்ஷத்

தில், உடனே நீ அது விஷயத்தினைத் தாமதமின்றி ஓடிவந்து என்னிடம் சொல். பிறகு நான் அவனைப்பார்த்துக் கொள்கிறேன்'' என்று சொல்லினன். கந்தன், வஞ்சகனுடைய சொல்லை மெய்யென எண்ணி, "சுவாமி, எனக்குத் தங்களைத் தவிர வேறு கதியில்லை. தாங்களே என்னைக் காக்கவேண்டும்'' என்று சொல்லி அவன் காலில் வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்தான். அப்போது அந்தப் பேராசைப்பேயன் கந்தனுக்கு உதவிசெய்வதாக உறுதியளித்து, அவனிடத்திலும் சிறிது பொருள் பெற்றுப் பின், அவனை அனுப்பிவிட்டான்.

மூன்றும்நாள், குப்புசாமி அப்பளாச்சாரியிடம் ஓடோடியும் வந்து, "சுவாமி, அன்றையதினம் தாங்கள் எனதுபுழைக்கடையில் இருக்கும் பனைமரங்கள் எனக்குரியவை என்றும் அவற்றின் பலனை நான்தான் அனுபவித்தற்குரியவன் என்றும் சொல்லவில்லையா? ஐயோ! நேற்றுமாலை, கந்தன் அம்மரங்கள் தனக்குச் சொந்தமானவையென்று அவற்றைச் சுற்றி வேலியிட்டுவிட்டான்; சுவாமி! தாங்கள் அன்று அம்மரங்களை எனக்கே உரியனவாகச்செய்து வைப்பதாக வாக்களித்தீரே! தயவுசெய்து அப்படியே செய்துவிடுங்கள். இதோ தங்களுக்குப்போதுமான பணம் தருகிறேன். நான் இனிச்செய்யவேண்டிய தின்னதென்பதைத் தயைசெய்து சொல்லுங்கள்.'' என்று தான் கொண்டுவந்த பெருந்தொகையை அந்த வஞ்சகனிடம் கொடுத்தான். அதனை அப்பளாச்சாரி, பொருள்விருப்பம் இல்லாதவன்போல அபிநயித்துப் பின் பெற்றுக்கொண்டு "குப்பா, அப்படியா அந்தக்கந்தன் செய்தான்? நீ இப்போதேபோய் அந்த வேலியை அறுத்துவிடு. நான் இருக்கிறேன்; உனக்கு உதவியாக.'' என்றனன். குயவன், பிராமணனுடைய வார்த்தையைக்கேட்டு, அப்படியே அந்த வேலியை அறுத்துத்தள்ளினன். அத

னைக்கண்ட கந்தன், தானும் பெரும் பொருளுடன் அப்பளாச் சாரியிடம் ஓடிவந்து, "சுவாமி, சுவாமி, இதைப் பெற்றுக் கொள்ளுங்கள். பார்த்தீர்களா குப்பன் செய்கையை? ஐயோ! சுவாமி, நான் இத்தனைநாளாகச் சொந்தமானவையெனக் கருதியிருந்த அம்மரங்களைச்சுற்றி யான் தங்கள் கட்டளை யின்படி கட்டியவேலியை அறுத்துத்தள்ளினனே! சுவாமி, நான் என்ன செய்யப்போகிறேன்! உங்கள் பாதமே கதி! தாங்கள்தான் என்னைக் காத்தருளல் வேண்டும்" என்று அழுதான். அப்பளாச்சாரி அவன் குழந்தையைப்போல் அழுவதையறிந்து, சிறிது கோபத்துடன், "என்னடா மடையா, குழந்தையைப்போல் அழுகிறாயே; அவன் வேலியை அறுத்துத் தள்ளியபோதே, அவனை ஓர் அறைகொடுக்காமல் இப்போது என்னிடம் வந்து அழுகிறாயே. இதோ யான் ஒருமனு எழுதிக்கொடுக்கிறேன். அதை நீ மாஜிஸ்ட்ரேட் டிடம் கொண்டுபோய்க்கொடு" என்று அவனிடத்தில் ஓர் மனு எழுதிக்கொடுத்தான். அதனைக் கந்தன் எடுத்துக் கொண்டுபோய், ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டிடம் தந்து, தன் குறையை விண்ணப்பித்துக் கொண்டான். மாஜிஸ்ட்ரேட்டோ அவன் மனுவைப் படித்துப் பார்த்து, "இது கிரிமினல் வழக்காகாது. போய் சிவில் வியாஜ்யம் செய்துகொள்." என அவனை நோக்கிக் கூறினர். அதன் பிறகு பணிச்சவன், விசேஷபணம் செலவழித்து நியாயஸ்தலத்தில் சிவில் வழக் குத் தொடுத்தான். அதனால், குப்புசாமிக்கும் அதிகச் செலவு ஏற்பட்டது. இடையே அவ்விருவரிடத்தும் அப்பளாச்சாரி, அவ்வப்போது பொருளைக் கொள்ளை கொள்ளையாகக் கொண் டான். வழக்கு, இரண்டு வருஷம் வரையிலும் முடிவாக வில்லை. அவ்விரண்டு வருஷத்திற்குள் அவ்விரு கக்ஷிக்காரர் களுக்கும் ஏற்பட்ட செலவின் அளவிற்கு அளவேயில்லை. கடைசியாக, இரண்டு வருஷங்களுக்குப் பின், பணிச்சவன்

சார்பாய்த் தீர்மானம் ஏற்பட்டது. இருவரும், ஏழைகள் ஆயி னர். ஏழையாயின பின், அவ்விருவரும் அப்பளாச்சாரியின் வஞ்சகத்தை யறிந்தனர்; புத்திசாலிகளாயினர்.

அந்தக் கிராமத்தில் மற்றொரு முக்கிய மனிதன் எனக் குறிப்பிடத்தகுந்தவன், முத்துசாமி செட்டி என்னும் பெய ருடைய வர்த்தகனாகும். அவன் பெரும் பொருளுடைய வனாய், அந்தக் கிராமத்தில் உள்ளவர்கட்கு வட்டிக்குப்பணம் கொடுத்தும் வந்தனன். அவன் பேரி செட்டிகள் வகுப்பைச் சேர்ந்தவன்; நன்றாய்ப் பலமாகக் கட்டப்பட்ட பெரிய வீட் டில் வாசம் செய்திருந்தான். அவனுடைய வீட்டின் ஒரு பக் கத்தில் தானியங்களைக் கொட்டிவைக்க, ஒரு பெரிய நெற் கூடும் கல்லினால் கட்டப்பட்டிருந்தது. அந்தக் கிராமத்தில், இந்தச் செட்டியினுடைய ஒரே கடைதான், எல்லோருக்கும் எல்லாச் சாமான்களையும் விற்க யோக்ய முடையதாக இருந் தது. அந்தக்கடை, செட்டியின் வீட்டுத் திண்ணையில் அமைந் திருந்தது. அவன் அடிக்கடி அக்கம் பக்கங்களில் உள்ள கிராமங்களுக்குச் சென்று, ஆங்காங்குக் கிடைக்கும்பொருள் களை நயமாகப் பிடித்துவந்து, தன் கடையில் சேமித்துக் கொள்வான். அவற்றைத் தன் கிராமத்தவர்க்கு அதிக லாபத் துடன், பணத்திற்காவது தானியங்களுக்காவது மாற்றி விடு வான். கிராமத்தவர்கள், தங்கள் நிலத்திற்காகத் துரைத் தனத்தாருக்குத் தீர்வை கட்டவேண்டிய காலம் டிசம்பர் மாதத்திலிருந்து மே மாதம் வரையிலும் நீடிக்கும். அந்தக் காலத்தில், அக்கிராமத்தவரிடம் பணம் இராததலால், அவர் கள் நமது முத்துசாமி செட்டியிடம் வந்து பணத்தை வட்டிக் குப் பெற்றுச்செல்வர். அந்தக் காலங்களில், செட்டியாருக்கு வரும்படியோ சொல்லி முடியாது. ஏழைக் குடியானவன் ஒருவன் நூறுரூபாய் தீர்வை செலுத்தவேண்டும் என்று நாம்

வைத்துக்கொள்வோம். அவனிடத்தில் பணமோ இல்லை. அப்போது அவன் நேராகச் செட்டியிடம் சென்று வாய்ப் பேச்சாகக் கடன்கேட்க வேண்டியதுதான் தாமதம். உடனே செட்டி, பத்திர முதலியன இன்றியே அவனுக்குப் பணத்தை எண்ணிவிடுவான். ஆனால், அவன் பணத்தைக் கொடுக்கும்போது மாத்திரம், கடன் கொண்டவனிடம், தனக்கு அப்பணத்தை வருகிற அறுவடை காலத்தில் தானியமாக அளந்து விடவேண்டுமென்று வாயொப்பந்தம் செய்து கொள்வான். அது தவிர அவன் குடிகளிடத்தில், வட்டி வாங்குவது கிடையாது. இப்படி அவன் செய்வதால் செட்டிக்கு என்ன லாபம் உண்டெனச் சிலர் எண்ணுவர். அங்ஙனம் அவன் தான் கொடுத்த தொகைக்குத் தானியமாக வாங்குவதில், அவனுக்கு விசேஷ வருமானம் உண்டென்பதை அவர்கள் இப்போது காண்பாராக:—

அவன் பணம் கொடுக்கும்போது தானிய விலை ரூபாய்க்குப் பத்தொன்பது படியாகும். ஆனால், கடன் பெற்றோன், தான் கொடுக்க வேண்டிய தொகைக்குப் பதிலாகத் தானியமாகக் கொடுக்கும் அறுவடை காலத்திலோ சராசரி ரூபாய்க்கு இருபத்தேழு படி நெல் விற்கும். ஆகவே அந்த அறுவடை காலத்தில், நூறு ரூபாய் கடன் பெற்றவன் அளக்க வேண்டிய நெல் மொத்தமாக 2,700 படி யாகும். செட்டி, ஜனவரி முதல் மார்ச்சு மாதம் வரையிலும் நீடித்துள்ள அறுவடை காலத்தில், தான் வாங்கிய நெல்லைத் தானியக் கூட்டில் சேமித்துவைத்துப் பின் அதனை ஜூன் ஆகஸ்டு மாதங்களில், ரூபாய்க்குப் பத்தொன்பது படியாக விற்றுவிடுவன். அதனால், அவன் கொடுத்த நூறு ரூபாயானது ஆறுமாத காலத்தில் ஏறக்குறைய நூற்றைம்பது ரூபாயாகிவிடும்.

இங்ஙனமாக, கிராமத்தில் உள்ள குடிகள் பலரும் தானியவட்டி கொடுத்தே கெட்டுப் போகின்றனர். அவர்கள்,

தாம் அங்ஙனம் செய்வதால் தங்கள் குடியே மூழ்கிப் போவதை யறிந்தும், வேறுகதி யில்லாதவராய் மீட்டும் மீட்டும் தானிய வட்டிக்கே பணம் பெறுகின்றனர். மேலும் பட்டணப் புறங்களைப்போல, பணத்திற்குப் பணம் வட்டி பெறுபவர், கிராமங்களில் இல்லை. ஆதலால் ஏழைக் குடிகள், தங்களுக்கு உழவுமாடு வாங்கப் பணம் வேண்டுமென்றாலும், கலியாணம் நடக்கவேண்டி யிருந்தாலும், அந்தத் தானிய வட்டிக்காரரிடமே செல்வர். இந்த ஏழை ஜனங்களின் பரிதாப நிலைமையைப் பணக்காரராகவுள்ள அறிஞர் கவனிப்பதே கிடையாது. அவர்கள் ஒன்றுசேர்ந்து ஏழை உழவரின் நன்மையைக் கோரித் தங்கள் தங்கள் கிராமங்களில் ஒவ்வொரு வியவசாயச் சங்கம் ஏற்பாடு செய்து, அதில் பயிர்செய்யுங் குடிகளுக்குத் தேவையான தொகையைக் குறைந்த வட்டிக்குக் கொடுப்பார்களாயின், அது அவர்களுக்கு மறுமையில் பெரும்பயனை அளிப்பதுடன் இம்மையிலும் பெரும் வருவாயினைத் தருவதாகும். பாவம், காலை முதல் மாலைவரையிலும் மண்ணைக்கொத்தி வருந்திப் பயிரிடும் குடியானவர், தாங்கள் சம்பாதிக்கும் பொருளைத் தாமே அனுபவித்தலின்றிப் பிறரிடத்துக் கொடுத்துப் பேதுறும்படி பார்ப்பது நல்லதாகுமோ!

இனி நாம், நமது முத்துசாமிச் செட்டியைப் பற்றிக் கவனிப்போம். அவன் வியாபாரத்தில் மிகவும் திறமை வாய்ந்தவன். வியாபார உளவை அவனறிந்ததுபோல் வேறெவரும் அறியார்கள். தனக்கு உதவியாக ஒரு கணக்கனை வைத்துக் கொண்டால், எங்கே அவன் தன் உளவுகளை யறிந்து கொள்வதுடன் வீண்செலவு வைத்து விடுகிறானோ என்று, அவன் தனது கணக்கைத் தானே எழுதிக்கொள்வான். அவன் ஒருவருக்காவது கெட்டவனென நடந்துகொள்வதில்லை; தீயவரைக் கண்டால் ஒரடி தூரமாகவே நிற்பான். அவன் அந்தக்

கிராமத்தில் உள்ள நல்லோர் தீயோர் அனைவருக்கும் நல்லவனாக நடந்துகொண்டது அவனுடைய தந்திர புத்தியின் வன்மையே யாகும். உலகில் "எல்லோர்க்கும் நல்லவன் எவ்வுலகத்தும் இல்லை" என்று சொல்லும் பெருவழக்கு உண்டு. ஆனால், நமது செட்டியினிடத்தோ அந்த வழக்கிற்கு ஓர் இழுக்கு ஏற்பட்டிருந்தது. அவன் ஒரு நாள் தன் கடையில் உட்கார்ந்திருந்தபோது, அந்தக் கடை எதிராக இருவர் சண்டையிட்டுக் கொண்டனர். கடைசியாகச் சண்டை பலமாகவே, அவ்விருவரும் மாஜிஸ்டிரேட்டினிடம் முறையிட்டுக்கொண்டு, செட்டியை சாக்ஷியாகக் கோரினர். மாஜிஸ்டிரேட் செட்டியை வரவழைத்து விசாரிக்கையில், செட்டி, "துரையே, என்னை அனுவசியமாக நியாய ஸ்தலத்திற்கு அவ்விருவரும் வரவழைத்தார்கள். இந்த வழக்கினைப்பற்றி யான் ஒன்றும் அறியேன். ஆனால் இவ்விருவரும் ஒருநாள் என் கடை எதிராக வந்து ஒருவர்க்கொருவர் இழிவாகப் பேசிக்கொண்டு கைகலக்கப் பார்த்தனர். அதனை யான் கண்டதும் பயந்து நடுங்கிக் கண்களை மூடிக்கொண்டேன். பிறகு அடி சப்தம் கேட்டது. இவ்வளவுதான் எனக்குத் தெரியும்" என்றனன்.

தமிழர் கோயில்களில் நடக்கும் விசேஷங்களைக் கண்ணுங் கருத்துமாகப் பார்ப்போர், ஒவ்வொரு கோயிலிலும் தேவதாசிகள் வேலைசெய்வதைக் காணுமலிரார். இந்தத் தேவதாசிகள் என்னும் சாதியார், கடவுளுக்குத் திருத்தொண்டு செய்பவர் என இருந்தாலும், அவர்கள் கேவலம் மிருகங்களுக்கு ஒப்பானவராய் உலகத்துள்ள ஆடவரனைவரையும் பொருள் நிமித்தம் மயக்கிவரும் இயற்கைக்குணம் உடையவராக விருக்கின்றனர். அவர்கள், திருக்கோயிலைச் சுத்தம் செய்து மெழுகிக் கோலமிடவும், திபாராதனைக் காலங்களில் கும்பாரத்தி என்னும் கலச விளக்கைத் தாங்கி நிற்ப

தற்கும், சுவாமிக்குச் சாமரம் போடுவதற்குமே ஏற்படுத்தப் பட்டவர்கள். ஆனால், அவர்கள் அவ்வரிய திருத்தொண்டை உள்ளன்புடன் செய்வதே கிடையாது.

நமது கேளம்பாக்கத்திலும் அவ்வகுப்பினைச் சேர்ந்தவராய, கனகாம்புஜம், மீனாக்ஷி என்னும் பெயருடைய இரண்டு தாசிகள் வாழ்ந்துவந்தனர். அவர்கள் இருவரும் அந்தக் கிராமத்தில் உள்ள கோதண்டராம சுவாமி கோயில் வேலையை ஒருவர் மாறி யொருவராக முறை போட்டுச் செய்து வந்தனர். அவர்கள் அங்ஙனம் செய்துவரும் வேலைக்காக அக் கோயில் வரும்படியில் அவர்களுக்குக் கட்டளையும் ஏற்பட்டிருந்தது. அவர்கள், தமக்குக் கோயிலில் கிடைக்கும் கட்டளைப் பொருளோடு திருப்தியடையவில்லை. மேலும் பொருள் சம்பாதிக்க வேண்டுமென்ற ஆசையுடன் அவர்களுள், கனகாம்புஜம் என்பவள், அந்தக் கிராமத்தின் அயல் கிராமத்து ஜமீன்தாரராகிய ராஜரத்தின முதலியாரது வைப்பாட்டியாக இருந்தனள். மீனாக்ஷியோ, அந்தக் கோயில் அர்ச்சகருள் ஒருவனாகிய வஞ்சகப் பேயனும் அப்பளாச்சாரியின் ஆசைமனைவியா யிருந்தனள். அப்பளாச்சாரி, தன் ஆசை மனைவியாகிய அந்த மீனாக்ஷிக்காவது தனக்காவது பொருள் வேண்டியிருந்தால், அப்போது அவன் பிறஆடவரிடம் தூது சென்று மீனாக்ஷியின் அழகை வருணித்து, அவர்களை மயக்கி யவளை யவர்களுக்கு விற்றும் வந்தனன். சில சமயங்களில் அவ்விரண்டு தாசிகளுக்கும் பொறாமை மிகுதியால் கலகம் நேரிடுவதும் உண்டு. அந்தக் காலங்களில், அவ்விருவரின் ஆசை நாயகர் தங்கள் தங்கள் வைப்பாட்டிகளுக்காகப் பரிந்து பேச வருவர். அப்போது, அப்பளாச்சாரி மானமற்றவனானதால், ராஜரத்தின முதலியை வாயில் வந்தபடி யெல்லாம் பேசுவான். இவ்விஷயமாக அவ்விரண்டு ஆசை நாயகர்

களுக்கும் அனேக முறையில் கைகலந்த சண்டையும் ஏற்பட்டது. ஓர் முறை ராஜரத்தின முதலி அப்பளாச்சாரியின் அக்ரமத்தைச் சகியாது, மாஜிஸ்ட்ரேட்டினிடம் சென்று அவன்மீது குற்றங்கூறி வழக்கெடுத்தனன். அப்போது அப்பளாச்சாரி, தன் எதிரி பணக்காரன் என்பதையும், தனக்கு ஊரில் சாதகமான சாக்ஷிகள் இல்லையென்பதையும் அறிந்து, அந்த வழக்கைத் தந்திரமாக முடித்துவிட, அந்த ஜமீன்தாரரின் கிழமனைவியையும், மங்கைப் பருவம் வாய்ந்த இளம் பெண்ணையும் தன் சாக்ஷிகளாகக் கோரினன். ஜமீன்தார் மனைவியும் மகளும் நியாயஸ்தலத்திற்கு வருவரோ! ஆயினும், அந்த வஞ்சகன் கருத்து இன்னதென்பதை மாஜிஸ்ட்ரேட்டும் அறிவார். அறிந்து என்ன பயன்! பிரதிவாதிகள் கோரிய சாக்ஷிகள் வந்தாலன்றோ அவர் வழக்கை விசாரிப்பர்! பிரதிவாதியோ, தனக்கு அவ்விரண்டு சாக்ஷிகளைவிட வேறு ஒருவரும் இல்லையென்று சொல்லினன். ஆகவே, அந்தக் கஷ்டத்தினை அறிந்த ஜமீன்தாரர், வேறு வழியின்றித் தன் வழக்கை மீட்டுக்கொண்டனர்.

தென்னாட்டில் நடக்கும் விவாகங்களில் அவ்விவாகோற்சவத்தைக் காண ஜனங்கள் எல்லோரும் வந்து சூழ்ந்திருப்பார்கள். ஆதலால், பெண்கள் அவர்கள் மத்தியில் வருவதே கிடையாது. அந்த நிலைமையில், புதிய மணவாளன் பக்கத்தில் நாணமும் பயமும் ஒருசேர இருத்தற்கிடமான மணமங்கைத் தனியாக எங்ஙனம் இருப்பள்! ஆகவே, அவளுக்கு உதவியாய் அவள் பக்கத்தில் தோழிப்பெண்ணென இருக்க இத்தேவதாசிகளே கோரப்படுவர். அக்காலத்தில், மணமங்கைக்குப் பூ முடிப்பதும் ஆபரணங்களைப் பூட்டுவதும் அவர்களுடைய வேலையே யாகும். மாங்கல்ய தாரணமானதும், தம்பதிகளை யெழுப்பும்போது இத்தாசிகளே யவர்களுக்கு

ஆலம் சுற்றித் திருஷ்டி கழிப்பர். மற்றும் கிராமங்களில் நடக்கும் மங்களகரமான பிரயோஜனங்களில், இந்தத் தாசிகளே ஆட்டக் கச்சேரி, பாட்டுக்கச்சேரி முதலானவற்றைச் செய்பவராய் விளங்கி யுள்ளனர்.

அந்தக் கிராமத்தில் நாராயணபிள்ளை யென்னும் ஒருவனும் குறிப்பிடத்தக்கவனுக இருந்தான். அவன் இடையர் சாதியைச் சேர்ந்தவன்; பெரும்பாலும் தன் காலத்தை ஆட்டு மந்தைகளுடன் அயல் கிராமங்களில் உள்ள காடுகளிலேயே கழிப்பவன். எப்போதாவது அத்திப் பூத்ததுபோல் அவன் தனது மனைவி மக்களைப் பார்ப்பதற்காக, இக்கிராமத்தில் உள்ள தன் வீட்டை யடைந்து, இரண்டொரு நாள் தங்கி யிருப்பான்.

அதிகாரம்—6.

ஆள் அடிமை - பறையர் – பறைச்சேரியில் தலைவனுன மாயாண்டி - வள்ளுவன் - சக்கிலி - வில்லி- துறத்திப் பாட்டு.

அடிமைத் தொழில், நாகரீகமுள்ள அறிஞர்களால் மிகவும் தாழ்ந்ததும் கொடியதுமானது எனக் கருதப்படுகின்றது. அத்தொழிலோ தேசங்கள்தோறும் வேறு வேறு விதமாக உள்ளது. சில இடங்களில், அடி-மைகள் மிகவும் கொடூரமாக நடத்தப்படுகின்றனர்; சில இடங்களில் கொடுமையென்பது சிறிது மில்லாதவாறு, அடிமைகொண்டவரால் தங்கள் பிள்ளைகளைப்போல் பாராட்டப்படுகின்றனர். இந்தியா ஒழிந்த மற்றைய நாடுகள் அனைத்தும் அனேகமாக அடிமைகொள்ளும் தொழிலையே அறவிட்டு விளங்குகின்றன. ஆனல் இந்தி

யாவிலோ, அது சர்வ சாதாரணமானதும், சுலபமான தொழி லுமாகக் கருதப்படுவதால், எங்கும் பரவியுள்ளது. மதப் பற்றே பெரிதும் உடையவராய், ஜீவகாருண்யமே உருக் கொண்டு விளங்கும் இந்தியர், எந்தக்காரணத்தால் மனிதரை அடிமைகளெனக் கொள்கின்றனரோ என ஐயுறுவர் சிலர். அவர் அது விஷயமாக ஐயுறவேண்டிய நிமித்தமே யில்லை யென்பதைப் பற்றி இனிக் கூறப்போகும் விஷயத்தால் நன்கு உணரலாம். இந்தியர் அற்ப வறிவுள்ள புற்பூண்டுகளிடத் தும் இரக்கம் பாராட்டுவர் என்பது எவரும் அறிந்த உண்மை யாகும். ஆகவே அத்தகைய குணம் படைத்தவர், அறி வுள்ள மாந்தரை வருத்தவும் கனவில் நாடார் அன்றே? இந் தியாவில் இப்போது வழங்கி வரும் அடிமைத் தொழில், மற் றைய நாடுகள் கருதும் அடிமைத் தொழிலினும் வேறான தாகும். அது, கேவலம் ஒப்பந்தத்துடன் கூலிபெற்று வேலை செய்வோரது தொழிலையே பெரும்பாலும் ஒத்திருப்பதால், எவ்வகையும் கஷ்டத்திற்கு உள்ளாகமாட்டாது.

தென்னிந்தியாவில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ் வொரு பறைச்சேரி உண்டு. அந்தச் சேரிகளிற்றான், நாம் முன்னர்க் கூறிய அடிமைகளாகும் பறையர் வாசம் செய்து வருகின்றனர்.

யாம் இதுவரை கூறிவந்தது, கேளம்பாக்கத்தின் உட் புறத்தில் வாழ்ந்து வந்த குடிகளைப் பற்றியே யாகும். அந்தக் கிராமத்தின் புறம்பாக—அதாவது, இரண்டு மூன்று பர்லாங்கு தூரத்தில்- வாழும் குடிகளைப் பற்றி யாம் இப்போது சொல் லப் போகிறோம். அந்தப் புறம்பாக உள்ள இடத்தில், ஏறக் குறைய முப்பது குடிசை வீடுகள் இருந்தன. அவ்வீடுகளில் பறையர்கள் வாசம் செய்திருந்தனர். ஆதலால், அவ்வீடு கள் நிறைந்த அந்த இடத்திற்குப் பறைச்சேரி என்பது

பெயராயிற்று. அவ்வீடுகள் அனைத்தும் பனை, தென்னை ஓலைகளால் வேயப்பட்டு, ஒழுங்காக இல்லாமல், இங்குமங்குமாகப் பரவி யிருந்தன. அவற்றின் பின் பக்கத்தில், பனைமரங்களும், தென்னை மரங்களும், மற்றும் பலவிதமான செடிகளும் ஓங்கி வளர்ந்திருந்தன. ஒவ்வொரு வீட்டின் கூரையின் மேலும், சுரைக்கொடி, அவரைக்கொடி, பூசுணிக்கொடி முதலான கொடிகளுள் ஒன்றுவது படராமல் இராது. இங்ஙனமாய் வீடுகளில் வசித்து வந்த பறையர்கள், இந்தியரால், தாழ்ந்த ஜாதியார் என்று கருதப்பட்டவராவர். அவர்கள், அந்த ஊரில் வாழும் குடிகளுக்குக் குற்றேவல் செய்து, அதனுல் மாதந்தோறும் தமக்குக் கிடைக்கும் ஆறுமரக்கால் அஃதாவது நாற்பத்தெட்டுபடி நெல் பெற்று ஜீவித்து வந்தனர். அந்த ஆறுமரக்கால் நெல்லின்விலை சற்றேறக்குறைய இரண்டரை ரூபாயாகும். அந்த இரண்டரை ரூபாய் சம்பளத்திற்கு அந்த ஏழை ஜனங்கள் ஒருநாள் எல்லாம் தம்மை அடிமைகொண்ட ஆண்டைக்கு உழைக்க வேண்டும். அவர்கள் தங்கள் ஆண்டைமாரது விளை நிலங்களை யதிகாலையிற் சென்று உழவேண்டும்; சேருட வேண்டும்; விதை விதைக்க வேண்டும்; ஏற்றமிறைத்து நீர்ப்பாய்ச்ச வேண்டும்; தானியங்கள் முற்றிவிட்டால், அறுவடை செய்து ஒப்படை செய்து, அவற்றை ஆண்டைவீட்டில் கொண்டுவந்து சேர்க்க வேண்டும்; மற்றும் தங்கள் ஆண்டைகளிடம் குற்றேவல்களையும் செய்தல்வேண்டும்.

அந்தப் பறைச்சேரியில் மாயாண்டி என்னும் பெயருடைய ஒருவன் ஆங்குள்ள பறையர்கள் அனைவருக்கும் தலைவனுக இருந்தான். அவனுக்குச் சுமார் எண்பது வயதிருக்கும். அவன், கோதண்டராம முதலியாரின் தந்தையாரிடத்தும், பாட்டனரிடத்தும் அடிமைப்பணி செய்திருந்தவன்.

அவனுக்கு வயது வந்த ஐந்து புதல்வர்கள் இருந்தனர். அவர்கள் ஐவரும் நமது கோதண்டராம முதலியாரிடத்தில் வேலை செய்திருந்தனர். பறையர்கள், தங்களுக்குள் எப்போதாவது சச்சரவு ஏற்பட்டால், அப்போது நியாயந் தீர்த்துக்கொள்ள அம்மாயாண்டி யிடத்திலேயே வருவர். அந்த மாயாண்டி சிறுவனாக விருந்தபோது, அவனது ஆண்டை வீட்டைச்சில கள்வர்கள் களவாட வந்தனர். அவர்களைக்கண்ட மாயாண்டி தன்னுயிரைத் துரும்பெனமதித்து,தன் எஜமானன் பொருளைக்காக்கவேண்டித் தைர்யமாக எதிர்த்தான். அப்போது அவனுக்கும் கள்வர்கட்கும் பெரிய சண்டையுண்டாயது. அதில் மாயாண்டி தன்முழுத்திறமையையும் காட்டியதால்,கள்வர்கள்ஓடிப் போயினர். ஆனால், மாயாண்டியின் தேகத்தில் பலமானகாயங்கள் ஏற்பட்டன. அவன் அந்தச் சம்பவத்தைத் தன்னுடைய கிழவயதில், எல்லாப் பறையர்களுக்கும் சொல்லி, தன் காயத்தையும் அவர்களுக்கு அடிக்கடிகாட்டி, அவர்களைத் தங்கள் ஆண்டைமாரிடத்து நன்றியறிதல் உள்ளவர்களாய் விளங்கப் புத்தி புகட்டுவான். அவன் சில சமயங்களில், தன் இனத்தவரை அருகிலழைத்து வைத்துக்கொண்டு தன் இளமைப் பருவத்தில், அரிசி ரூபாய்க்கு இருபத்துநாலுபடி விற்றதென்றும், மாதமும்மாரிபொழிந்ததென்றும்,அக்கிராமத்தின் நிலங்களெல்லாம் முப்போகம் விளைந்தன என்றும், அக்காலத்தைப் புகழ்ந்து கூறுவான்.

கிராமத்தில், வாந்திபேதி, வைசூரி முதலிய தொத்து வியாதி யுண்டானால் அவற்றைப் போக்கடிக்கும் உபாயத்தையும், அவ்வியாதிகள் வந்தால், அவன் காலத்தில் என்ன என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டன என்பதையும் முனிசீப் கோதண்டராம முதலியார் அம்மாயாண்டியையே கேட்பர்.

பறையர்கள் தலைமுறை தலைமுறையாக, ஒரே ஆண்டையின் குடும்பத்தில் பணிசெய்து வருகின்றனர். அவர்கள், இன்று ஒருவரிடத்தும் நாளையொருவரிடத்துமாக வேலைசெய்வதேயில்லை. தங்கள் ஆண்டைமார் வீட்டில் விவாகம் நடக்கும்போது தான், அவர்களும் தங்கள் வீட்டில் விவாகம் வைத்துக்கொள்வர். அதற்குதாரணமாக, அந்தக் கிராமத்தில் நடந்த சம்பவம் ஒன்றைப் பாருங்கள். நமது கிராம முனிசீப் கொதண்டராம முதலியார் மணம்செய்துகொண்ட அன்றுதான், மாயாண்டியின் இரண்டு புதல்வர் மணம்செய்துகொண்டனர். மற்றும் அப்பறையர் தங்கள் ஆண்டைமாரிடத்துத் தங்களுக்குள்ள ஒற்றுமையைப் பல வழியாலுங் காட்டிவந்தனர். தங்கள் ஆண்டைமார் வீட்டில் எவரேனும் இறந்துவிட்டால், அவர்கள் தங்கள் வீட்டிலேயே அந்த இறப்பு உண்டானதாக எண்ணித் தங்கள் வீட்டில் துக்கம் கொண்டாடுவார்கள். அந்த இறந்த வீட்டார் அந்தியேஷ்டிக் கிரியை செய்து, குளத்தில் ஸ்நானம் செய்யும்போது, பறையர்களும் மீசையை யடித்துக்கொண்டு, அந்தக்குளத்தின் மற்றொரு கரையில் ஸ்நானம் செய்வார்கள். அவர்கள் தங்கள் வீட்டில் கலியாணம் வைத்துக்கொண்டால், முதன் முதலாகத் தங்கள் ஆண்டைமார் வீட்டில், புஷ்பம், பழம், வெற்றிலைபாக்கு முதலான வரிசைகளுடன் சென்று, தங்கள் ஆண்டைமாரைக் கண்டு அவர்கள் உத்தரவு பெறுவார்கள். தங்களுக்குள் ஏதாவது கலகம் உண்டானால், அதை அவர்கள் ஆண்டைமாரே நிவர்த்திசெய்ய வேண்டும். இங்ஙனம் அவர்கள் நடந்துவருவதுதான் தென்னிந்திய கிராமங்களில் அடிமைத் தொழிலெனக்கருதப்படுகின்றது. அத்தொழிலும் இப்போது சில இடங்களில் வர வரக்குறைந்து வருகிறது. ஆகவே, இவ்வடிமைத் தொழில் மற்றைய தேசத்தினர் கருதுதல்போல்

கொடிய தானதல்ல என்பது, யாம் இதுவரை கூறியவற்ருல் நன்கு விளங்கும்.

பறையர்கள், மிகவும் நன்றியறிதல் உள்ளவரும், கஷ்டமான வேலைகளைச் சிரமமின்றிச் செய்பவருமாவர். அவர்கள், வயல்களுக்கு நீர்ப்பாய்ச்சுதல் முதலான வேலைகளைச் செய்வதுடன், நிலங்கள் விளைந்துள்ளகாலங்களில், தானியங்களைக் கள்வர் களவாடாதபடி அந்நிலங்களிற் சென்று, இரவில் கண் விழித்துக் காவலும் இருப்பர். அவர்கள் தங்கள் ஆண்டைமாரது உத்தரவின்றி ஒரு மணியரிசியையாவது தங்கள் வீட்டிற்குக் கொண்டுபோகார்கள். அம்மட்டோ அவர்கள் உயர்குணம்? அவர்கள் தாழ்ந்த ஜாதியினர் எனக்கருதப்படினும், அவர்களிடத்தில் மருந்திற்காவது ஒரு பொய்வராது. அவ்வுண்மையினை வற்புறுத்த யாம் கேளம்பாக்கத்தில் நடந்த ஓர் சம்பவத்தைச் சொல்கிருேம்; கேளுங்கள். அப்பளாச்சாரி யென்பவனைப்பற்றி நீங்கள் அனைவரும் அறிந்துள்ளீர் அன்ருே? அவன் தனது அயல் நிலத்துக் குரியவனுன ஒரு குடியானவனுடன் அடிக்கடி வம்புசெய்து வந்தனன். குடியானவன் தன்னுலான வரையிலும், அப்பளாச்சாரியின் கொடுமையைச் சகித்து வந்தான். கடைசியாக ஒரு நாள் அவனுக்குக் கோபம் அதிகரிக்க அவன் அந்த வஞ்சகனை இழிவாகப் பேசினன். அப்போது அந்தக் குடியானவனுடைய பண்ணையாட்கள் அவ்விடம் இருந்தனர். அவர்கள் உண்மையையே என்றும் பேசுவர் என்பதை யறிந்த அந்தப் பிராமணன், நியாயஸ்தலத்தில் வழக்கெடுத்து, அவ்விரண்டு பறையரையும் சாக்ஷியாகக்கோரினன். பறையர்கள், தங்கள் வேலை போய் விடுவதையும் எண்ணுது, நியாயஸ்தலத்தில், நடந்தவற்றை உண்மையாக உரைத்தனர். அதனுல், ஏழைக் குடியானவன் அபராதம் விதிக்கப்பட்டான். பாவம்! அவ்விரண்டு

பறையரும் தங்கள் எஜமானனுக்கு விரோதமாகச் சாக்ஷி சொல்லியதால், வேலையினின்றும் தள்ளப்பட்டனர்.

பறையர்களுக்குப் பிராமணரைப்போ லிருந்து, அவர்க ளது விவாக முதலிய சடங்குகளை நடத்துபவருக்கு வள்ளுவர் என்பது பெயராகும். இந்த வள்ளுவச் சாதியர் பூர்வத்தில் தமிழ் அரசர்களால் பெரிதும் பாராட்டப்பட் டிருந்தனர். அவர்கள் அக்காலத்தில் யானை மீதிவர்ந்து அரசராணையைப் பறைசாற்றி வரும்வேலையை உடைத்தானவராய் விளங்கினர். தமிழ்வேதம் என்று எல்லாஉலகமும் கொண்டாடும் அரு ம்பெரு நூலாகிய திருக்குறளை யியற்றிய தெய்வப் புலமைத் திருவள்ளுவரும் இந்த அரிய குலத்தில் அவதரித்தவராவர். நமது கேளம்பாக்கத்தின் அயலாகக்கிருஷ்ணன் என்னும் பெயருடைய வள்ளுவன் ஒருவன் இருந்தான். அவன் கேளம் பாக்கத்தில் இருக்கும் பறையர்களுக்குக் குருவாய் விளங்கி, அவர்களுடைய சடங்குகளை எல்லாம் நடத்திவந்தனன். அவ னுக்குச் சிறிதளவு ஜோதிஷ சாஸ்திர ஞானமும், முரட்டுத் தனமாக வைத்தியம் செய்வதில் திறமையும் உண்டாயிருந் தது. அவன் ஓர் துஷ்டப் பெண்ணிற்கு, அவள் கருவை யழிக்க மருந்து தந்த குற்றத்திற்காக ஓர் முறை தண்டனைக் குழுள்ளானன்.

அவனுக்கு அடுத்தபடியாய், நாம் கவனிக்கத் தகுந்த வன் லக்ஷ்மணன் என்னும் பெயருடைய சக்கிலியாவன். அவன், கிராமங்களில் இறந்துபோகும் ஆடுமாடுகளின் தோல் களை யெடுத்துக்கொண்டுபோய்ப் பதம் செய்து, அவற்றைக் கொண்டு செருப்பு, மேளம் முதலியவற்றைச் செய்து, அந் தக் கிராமத்தவர்களுக்கு விற்று வந்தான். அவனுக்கு அந்தக் கிராமத்தில் ஒரு ஏக்கர் நிலம் சொந்தமாக இருந்தது. முற்

கூறிய வழியால் அவனுக்கு உண்டாயிருந்த வருமபடியுடன், அவன் தனது நிலத்தை உழுது பயிர்செய்வதால் ஏற்படும் வருவாய்கொண்டு, திருப்தியாக வாழ்ந்துவந்தனன்.

அந்தக் கிராமத்தில், பாலன் என்னும் வில்லி ஒருவன் இருந்தான். அவன் அநேகமாகக் காட்டிலேயே தன் வாழ்நாளை எல்லாம் கழித்தவன். வில்லியர் எப்போதும் காட்டிலேயே வாசஞ் செய்யும் ஒருவகைச் சாதியரர்வர். அவர்களுக்கு மிருகங்களைக் கொல்லவும் அவற்றை உண்ணவுமன்றி வேறொன்றும் தெரியாது. அந்தச் சாதியில் வந்த பாலன் என்பவன் அவர்களினும் சிறிது நாகரீகம் வாய்ந்தவனாய் அந்தக்கிராமத்தில் உள்ளவர்களுக்குக் காட்டிலிருந்து தான் கொண்டுவரும் மூலிகைகளையும், தேன் முதலான பொருள்களையும் தானியத்திற்காக விற்று வந்தனன். எத்தகைய பாம்பு கடியையும் நீக்கவல்ல நல்ல மருந்து அவனிடத்தில் இருந்ததால், அவன் அம் மருந்தினைக் கொண்டு பாம்பு வைத்யத்தில் பிரசித்தி பெற்றவனாய் விளங்கினன்.

வில்லியர்கள் விவாகம் செய்துகொள்ளும் விதம் மிகவும் விநோதமானதாகும். அவர்கள், கலியாணத்தை நடுக்காட்டிலேயே வைத்துக்கொள்வர். தம்பதிகள் இருவரும், தரைமட்டமாக இடப்பட்ட ஒரு மரப்பலகையின் மீது அமரவேண்டும். அப்போது, அவர்கள் சாதியார் அனைவரும் அந்தத் தம்பதிகளைச் சூழ்ந்திருப்பர். அவர்களுள் மிகவும் வயது வந்த ஒருவன் அந்தத் தம்பதிகளுக்குக் கோடி வஸ்திரத்தைக் கொடுப்பன். அதனைத் தம்பதிகள் அணிந்துவந்து மீட்டும் அந்த மரக்கட்டையின் மீது உட்கார்ந்ததும், முகூர்த்தம் குறித்த நேரத்தில், மணமகன் கருநிற மமைந்த தாலியை மணமகளுக்குக் கட்டுவன். பிறகு தம்பதிகளிருவரும் பலமுறை அந்த மரச்கட்டையைச் சுற்றி வருவார்கள்.

அதனுடன், அவர்கள் விவாக முடிவடைந்ததாகும். பிறகு வந்த ஜனங்கள் எல்லோரும் உண்டும் குடித்தும் உவகையுடன் இருப்பர். அந்த வில்லியர், தங்கள் தெய்வமெனக் கொண்டாடுவது, சிவசுப்ரமண்யக் கடவுளின் பத்தினியாராகிய வள்ளியம்மையையே யாகும். அவர்களுடைய பாஷை, கேட்பவருக்கு மிகவும் அதிசயத்தை விளைவிக்கக் கூடியது. அவர்கள் அனேகமாகக் கிழங்கு, தழை முதலியன உண்டே தங்கள் காலத்தைக் கழிக்கின்றனர்.

அந்தக் கிராமத்தில், கூடை, முறம் முதலியன விற்கப் பொன்னி என்னும் குறத்தி அடிக்கடி வருவாள். அவளுக்குப் பச்சை குத்துவதிலும் பயிற்சி அதிகமுண்டு. அதனால் அந்தக் கிராமத்தில் உள்ளவர், தங்கள் அவயவங்களைப் பச்சைகுத்தி அழகு படுத்திக்கொள்ள, அப்பொன்னியின் வருகையை அதிக ஆவலுடன் எதிர்பார்ப்பர். பொன்னி எவருக்கேனும் பச்சை குத்துவதாக இருந்தால், அவள் முதலில் தான் குத்தப்போகும் தேள், பாம்பு, புஷ்பக்கொடி முதலியவற்றின் உருவத்தை, முன்னதாகத்தான் அங்ஙனம் குத்தப்போகும் தேகத்தின் பாகத்தில் எழுதிப்பின் அனேக ஊசிகள் ஒன்ருகக் கட்டப்பட்ட ஒரு கருவியை, தான் தயார்செய்துகொண்டு வந்திருக்கும் திரவவடிவமான பச்சை மருந்திற்றுவைத்துச் சிறுதும் இரக்கமென்பதின்றிக் குத்துவாள். அவள் அங்ஙனம் குத்திச் சென்ற சில நாளைக்குள், அவள் குத்திய உரு பச்சைப் பசேரெனச்சரீரத்தில் விளங்கி அழகுசெய்து நிற்கும். பச்சை குத்தும்போது, ஊசியின் குத்திற்கு ஆற்ருதுபலரும் கதறுவர்; ஆதலால், அங்ஙனம் அவர்கள் கதருது இருக்கவும், அவர்களுக்குத் தாம் குத்துவதால் உண்டாகும் நோய் தெரியா திருக்கவும், அப்பச்சைக் குத்திக் கொள்வோரது மனதைக் குறத்தியர் தமது பாடலினல்

வசப்படுத்தி விடுகின்றனர். அந்தப்பாட்டுகளுள் ஒன்றை நமது வாசகர் அறிய ஈண்டு நாம் எழுதுகிறோம்.

குறத்தி தன் மலையின் பெருமையைக்கூறல்.

சிங்கமும் களிறுமுடன் விளையாடு மொருபால்
சினப்புலியு மடப்பிணையும் திளைத்திமெங்கொருபால்
வெங்கரடி மரையினொடும் விளையாடு மொருபால்
விடவரவு மடமயிலும் விருந்தயருமொருப்பால்
அங்கண்மா நிலங்கவிக்கும் வெங்கவிகை நிழற்கீழ்
அம்பொன்முடி ஆடுமெங்க ளபிடேகவ வல்லி
செங்கமலப் பதம்பரவுங் கும்பமுனி பயிலுந்
தென்பொதிய மலைகாண்மற் றெங்கண்மலை யம்மே.

அத்தியாயம் 7.

கிராம நிர்வாகம்—இந்திய ஸ்திரீகள்—கேளம்பாக்கத்துப் பெண்களுக்குள் நடந்த ஒரு சம்பாஷணை—சுபத்திரையின் மீது துர்யோதனன் கொண்ட காதலும் அதன் முடிவும்.

யாம் இது வரையில் கேளம்பாக்கத்தில் வாசம்செய்து வந்த பல ஜாதி மனிதரின் தன்மையை வியவகரித்து வந்தோம். இதனால், எல்லோருக்கும் அந்தக் கிராமத்தில் உள்ளவர்கள் எங்ஙனம் நடந்து வந்தனர் என்பது நன்றாய்ப் புலனாகும். அந்தச் சிறு கிராமமானது, யோசிக்குமிடத்து ஒரு சிறிய உலகமேபோல் தன்னுடைய சொந்தராஜீய நிர்வாகத்துடன் விளங்கியது. அதன் ஒவ்வொரு அங்கத்தினரும் தத்தமக்கு ஏற்பட்ட வேலையைக் குறைவின்றி ஒரேமாதிரியாகச் செய்துவந்தனர். அந்தக்கிராமத்தின் சௌகர்யத்தை நாடி அதனைப் பாராட்டிவந்தஉத்யோகஸ்தர்கள், தங்கள்வேலையின் பொருட்டுத் தானியச்சம்பளம் பெற்றிருந்தனர். சிலர், தீர்வை

யின்றித் தாமே யனுபவித்துக்கொள்ள விளை நிலங்களை யஜாரா பெற்றிருந்தனர். தானியச் சம்பளம் பெறுவோர், அறுவடையான தானியத்தைக் குடிகள் ஒப்படை செய்தபோது, அவ்விளை நிலத்தே சென்று தங்குவர். அப்போது ஒவ்வொரு குடியானவனும், தனக்கு விதித்துள்ள தானியத்தை அந்த உத்யோகஸ்தருக்கு அளந்துவிடுவான். அந்தக் குடியானவர், தமக்கென் உத்யோகஸ்கர் அந்த வருஷ முழுவதும் கஷ்டப்பட்ட விதத்தை ஒருபோதும் மறப்பதில்லை. அவர்கள் அப்படியே வருஷந்தோறும், மண்ணைக் குத்தி வருந்திக்கொண்ட பலனை தானியத்தைக் கொண்டு, இடுவாருக்கு இட்டு மகிழ்வுடன் காலத்தைக்கழித்து வந்தனர். அவர்கள் தங்கள் கிராமத்தை விட்டு உலகம் என்பது வேறொன்றுண்டென்பதே அறியார்கள். அந்தக் கிராமத்தையும் மற்றையவற்றையும் ஆள்பவர் இன்னாரென்பதும், ஆளும் முறைமை இங்ஙனமென்பதும், அவர்கள் கனவிலும் நினையா விஷயமாகும். அவர்களுக்கு அத்தகைய காரியங்களில், எள்ளளவும் சிந்தை கிடையாது. நன்றாய்க் காலமழை பெய்ய வேண்டும்; விளைவு செழிக்கவேண்டும் என்பனவே அவர்களுடைய நோக்கம். இத்தகையஏழை ஜனங்கள் பலரும் பூர்வகாலத்திருந்து வந்ததனாலேயேஇத்தமிழுலகத்தில், "ராமன் ஆண்டாலென்ன? ராவணன்ஆண்டால் என்ன?" என்னும் பழமொழி வெளிவந்துள்ளது.

ஐம்பது அறுபது வீடுகளோடு கூடிய அந்தக் கேளம்பாக்கத்தவரது வாழ்க்கை,நமக்குக் கேட்பதற்கும் பார்ப்பதற்கும் மிகவும் அதிசயத்தையும் ஆனந்தத்தையும் விளைவிப்பதாகும். அந்தக் கிராமத்தவர் அறுவடை முடிந்து ஒய்வடைந்திருக்குங் காலத்தில், பலவிதமான வேடிக்கை விநோதங்களில் தமது காலத்தைப் போக்குவர். நாகரீக மிக்க பட்டணப் புறங்க

ளில், வேடிக்கைகளைப் பார்க்க வேண்டுமாயின், அதிகப் பணச்செலவுண்டு. ஆனால், கிராமங்களிலோ அதற்கென அதிக பணச்செலவே இராது. என்றாலும், பட்டணத்தவர் அவ் வேடிக்கைகளால் எவ்வளவு ஆனந்தம் அடைகிறார்களோ, அதைவிட அதிகமாக நமது கிராமத்தவர் அடைந்து வருகின்றனர். யாம் இப்போது அவர்கள் பொழுது போக்காக வைத்துக்கொள்ளும் வேடிக்கைகளை விவரித்துச் சொல்வதன் முன்னம், அந்தக் கிராமத்துப் பெண்களைப் பற்றிச் சிறிது சொல்கிறோம்.

இந்தியர் தமது மனைவிமாரை, ஆங்கிலர் பாராட்டுவது போல் அவ்வளவு அருமையாகப் பாராட்டுவதில்லை யென்றும், அவர்கள் தங்கள் மனைவியரை அடிமைகளைப்போல் எண்ணுகின்றனர் என்றும் சிலர் சொல்வர். ஒருவன், இந்தியர் தம்மனைவிமாரை நடத்தும் விதத்தை உள்ளவாறு ஆராய்வானாயின், அவன் மற்றைய ஜாதியாரைவிட இந்தியர் தம் மனைவிமாரை மிகவும் அன்பும் ஆதரவுடன் பாராட்டுகின்றனர் என்ற உண்மையினை அறியாமற்போகான். ஆங்கில நாகரீகத்திற்கும், இந்திய நாகரீகத்திற்கும் எத்துணை பேதம் உண்டோ, அத்துணை பேதம், அவ்விரு வகையினரும் மனைவிமாரைப் பாராட்டும் விஷயத்திலும் உண்டென்பதை எவரும் மறுக்கார். ஆங்கிலப் பெண்கள் கண்ட இடங்களில், தன்னந் தனியாகச் செல்வர். இந்தியப் பெண்களோ அங்ஙனம் செய்யவே செய்யார். ஆயினும் அவர்கள், தனித்துப்போகும் நேரமும், கிராமங்களில் உண்டு. அங்ஙனம் அவர்கள் செல்வதும், தம்முடைய வீட்டின் நிர்வாகத்திற்குச் சம்பந்தப்பட்ட காரியங்களைக் கவனிப்பதற்கே யாகும். அனேகமாகக் கிராமங்களில் உள்ள பெண்கள், தங்கள் வீட்டிற்கு நீர்கொண்டுவரக் குளத்திற்குச் செல்லுநேரம் தான்,

அவர்கள் தங்கள் வீட்டைவிட்டு வெளியே செல்லும் நேரமாகும். அப்படியே கேளம்பாக்கத்துப் பெண்களும், அதிகாலையில் எழுந்து, தந்த சுத்தி செய்து, முகத்தை நீர்கொண்டு சுத்தம் செய்துகொண்டு குங்குமப் பொட்டணிந்து, வீட்டை எல்லாம் சீவிச் சாணந் தெளித்துக் கோலமிட்டுக் குடங்கொண்டு கோயில் குளத்திற்குத் தண்ணீர் கொண்டுவரும் பொருட்டுச் செல்வர். அந்தக் கோயில் குளம் மிகவும் பெரியதானதால், அதில் ஆடவரும் மாதரும் தனியாக ஸ்நானம் செய்யப் பிரத்யேகமாக இடம் ஏற்பட்டிருந்தது. தூர இடங்களில் உள்ள பெண்களும் ஒருவர் பின் ஒருவராக அவ்விடம் வந்து, ஸ்நானத்தை முடித்துக்கொண்டு குடம் நிறைய நீர் நிரப்பிக்கொண்டு தம் வீட்டை நோக்கிச் செல்வர். அவர்கள் அங்ஙனம் குளத்திற்கு வரும்போது, தம்மையொத்த வயதுடைய பெண்களுடன் பலப் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொள்வது முண்டு. அங்ஙனம் அவர்கள் பேசுவது, நாம் கேட்டு ஆனந்தித்தற்குரிய விஷயமாக இருக்குமாதலால், அந்தக் கிராமத்தில் ஒருநாள் அப்பெண்களுக்குள் நடந்த சம்பாஷணை யொன்றை யாம் இவ்விடத்தில் எழுதுகின்றோம்.

மே மாதத்தில் ஒருநாள் காலைப்போதில், முன்சீப் கோதண்டராம முதலியாரின் மனைவியாகிய லக்ஷ்மி என்பவள், அந்தக் குளக்கரையை அடைந்தாள். அவள் பல பிள்ளைகளைப் பெற்றும், சிறிதேனும் குறையாத அழகுடன் நிறைந்த மங்கைப்பருவ முடையாள் போலவே காணப்பட்டனள். அவள் வந்த சிறிது நேரத்திற்குள், கிராமக் கணக்கப்பிள்ளையினது மனைவியாகிய சுந்தரம் என்பவளும் வந்து சேர்ந்தனள். அவ்விருவரும் வந்த சில நிமிஷங்களுள், புரோஹிதரது மனைவியாகிய தளர்ந்த வயது வாய்ந்த சேஷம்மாள் என்

பவளும், நல்லாப்பிள்ளையின் மனைவியாகிய அமிர்தம் என்பவளும், அர்ச்சகர் வரதையங்காருடைய மனைவியாகிய ஆண்டாளென்பவளும், அப்பாசாமி வைத்தியருடைய மனைவி தாயம்மாள் என்பவளும், மற்றும் சில பெண்களும் அவ்விடம் வந்து கூடினர். ஆனால் அப்பளாச்சாரியின் மனைவியாகிய நற்குணம் வாய்ந்த பெருந்தேவி யென்னும் பெண் மாத்திரம் வழக்கம்போல் அன்று வரவில்லை. அதனால், அங்கிருந்த பெண்கள் அனைவரும் பின் வருமாறு சம்பாஷித்துக்கொண்டனர்.

லக்ஷ்மி :—எங்கே, பாவம் அந்தப் பெருந்தேவி வரவில்லையே?

தாயம்மாள்:—நேற்றிரவு அக்கிராமத்தில் பெரிய சண்டை நடந்தது. நான் அதைப்பற்றி வாத்தியாரைக் கேட்டபோது, அவர் அப்பளாச்சாரி வீட்டில் ஒருவர்க்கொருவர் சண்டையிட்டுக் கொள்கின்றனர் என்று சொல்லினர்.

ஆண்டாள்:—ஆமாம் ஆமாம்; எனக்கு அதைப்பற்றித் தெரியும். ஆனால், அன்றையதினம் அது விஷயமாக யான் சொல்லியபோது, நீங்கள் அனைவரும் என்னை எள்ளனம் செய்தீர்களே.

சேஷம்மாள்:—ஆண்டாளுக்கு எல்லா விஷயமும் தெரியும். அப்பளாச்சாரி வீட்டில் கலகமுண்டானதும், அது கடைசியில் அடிபிடி சண்டையாக மாறியதும் உண்மைதான். ஆனால், அது கடைசியாக எப்படி முடிந்ததோ அதுதான் எனக்குத் தெரியாது. அப்போது நான் விரைவாகச் சமையல் செய்துகொண்டிருந்தேன்.

ஆண்டாள்:—லக்ஷ்மி, போன திங்கட்கிழமை அப்பளாச்சாரி பெருந்தேவியைப் புடைத்தான் என்று சொல்லவில்லையா நான்? அவன் அன்றையதினமே அவள்

காதில் அணிந்திருந்த கம்மல்களைக் கழற்றிக் கொண்டு போய்த் தன் வைப்பாட்டி மீனாக்ஷிக்குக் கொடுத்து விட்டான். அந்த விஷயம் காஞ்சீபுரத்தில் இருந்த பெருந்தேவியின் பெற்றோருக்கு எட்டிவிடவே, அவர்கள் தங்கள் இரண்டு புதல்வர்களுடனும், உதவிக்காகப் பல மனிதருடனும், நேற்றிரவு வந்து சேர்ந்து, அதைப்பற்றி அப்பளாச்சாரியைக் கேட்டனர்.

அமிர்தம்:—அந்த நகை யாருடையது ?

ஆண்டாள்:—பெருந்தேவி தகப்பனார் அதனைச் செய்து போட்டார். அவள், அவர் குடும்பத்தில் செல்வமாக வளர்ந்ததால், அவர் அந்த நகையுடன் மற்றும் பல நகைகளைச் செய்து கொடுத்தாராம். அந்த நகைகளை எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக அப்பளாச்சாரி, மீனாக்ஷிக்குக் கொடுத்துவிட்டான். அந்தக் கம்மலைப் பற்றி, வந்த பெருந்தேவியின் சகோதரர் இருவரும் அப்பளாச்சாரியைக் கேட்டதுடன், மீனாக்ஷியையும் இகழ்ச்சியாகப் பேசினர். அதனால் வஞ்சகன் கோபங்கொண்டு, மீனாக்ஷிக்காகப் பரிந்துபோய், தன் மைத்துனர்களை அடித்தான். அதனால், உதவிக்காக வந்த மனிதர் அவனை அடித்தனர். பிறகு பெருந்தேவியை அவள் பெற்றோர் தமது வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். அவர்கள் போகும்போது, தமது பெண்ணை இனி அச்சண்டாளனிடம் அனுப்புவதில்லை என்றும் சொல்லினர்.

சேஷம்மாள்:—பாவம், அவள் தனியாகத்தானே தன்காலத்தைக் கழிக்க வேண்டும்!

லக்ஷ்மி:—ஐயோ பாவம்!—இனி நாம் பெருந்தேவியைப் பார்க்கவே போகிறதில்லை!—ஏனோ அந்தப்பாவி அழ

கான மனைவியைவிட்டுக் குரங்கைப் போன்ற கொடிய லக்ஷணமமைந்த அந்த வேசியின்மேல் ஆசைகொண்டான்?

தாயம்மாள்:—மீனாக்ஷி ஏதோ வசிய மருந்தால் அவனை மயக்கிவிட்டாளென என் வீட்டுக்காரர் சொல்கிறார். வாத்தியார்கூட அவனை அதற்காக மருந்து சாப்பிடும்படி சொல்லினராம். அவன் அதை ஏற்றுக்கொள்ளவேயில்லை.

லக்ஷ்மி:—நிறுத்துங்கள் ! அதோ அந்தப்பாவி வருகிறான். இனிமேல் நாம் அதைப்பற்றிப் பேசுதலாகாது.

சுந்தரம்:—லக்ஷ்மி ! நீ நேற்றிரவு என்ன பதார்த்தம் செய்தாய்?

லக்ஷ்மி:—செங்கற்பட்டில், எங்கள் வீட்டுக்காரருக்குச் சினேகிதர் ஒருவர் இருக்கிறார். அவர் சில நாட்களுக்கு முன் கத்தரிக்காய்வற்றல் கொடுத்தனுப்பினார். அவற்றில் நான் சில எடுத்துப் பருப்புடன் சேர்த்துக் குழம்பு செய்தேன். எங்கள் வீட்டுக்காரர் "நன்றாய் இருக்கிறது! நன்றாய் இருக்கிறது!" என்று சொல்லிக்கொண்டே சாப்பிட்டார். நான் அதுதான் நல்ல சமயம் என்று, அவர் எனக்கு வாங்கித் தருவதாக வாக்களித்த பொற் றாழம்பூவைக் கேட்டேன். அவர், நாளையே செய்து தருகிறேன் என்று சொல்லினர். அந்த நகை செய்யக் காஞ்சீபுறத்திற்றான் நல்ல தட்டான் இருக்கிறானாம்.

சுந்தரம்:—அப்படியா! ஆனால் அந்தவற்றலில் கொஞ்சம் எனக்குக் கொடு. நானும் அப்படியே செய்து என் வீட்டுக்காரரைத் திருப்திசெய்கிறேன்.

லக்ஷ்மி :—அப்படியே ஆகட்டும். நீ இன்று மத்தியானம் ஒரு மணிக்கு என் வீட்டண்டை வா. அங்கு ஒருவர் இன்றையதினம் ஏணி ஏற்றம் படிக்கப் போகிறாராத லால், நீங்கள் எல்லோரும் வாருங்கள்—சுந்தரம்; நீயும் வா. நான் கதை முடிந்ததும் உனக்கு வற்றல் கொடுத் தனுப்புகிறேன்.

ஆண்டாள் :—அது என்ன கதை?

லக்ஷ்மி :—அதுதான், துரியோதனன் பாண்டவரைக் காட் டிற் கனுப்பியதோடு திருப்தியடையாமல், அருச்சுனன் மனைவியாகிய சுபத்திரையின் மீது ஆசைகொண்டு, அவளை அடைய அவள் இருக்கும் மதுரையை அடைந் து, அந்தத் தேசத்தையாளும் அல்லிராணியால் அவ மான மடைந்த கதை.

அந்தப்பெண்கள் அங்ஙனம் வார்த்தை யாடிக்கொண் டே, ஸ்நான முதலானவற்றை முடித்துக் கொண்டு தங் கள் தங்கள் வீடுபோய்ச் சேர்ந்து அன்றுபகல் ஒருமணிக்கு லக்ஷ்மியின் வேண்டுகோளின்படி அவ்விடம் வந்துசேர்ந்தனர். புகழேந்திப்புலவர் இயற்றியதாகக் கூறப்படும் * ஏணி யேற்றம் என்னும் கதை அப்போது படிக்கப்பட்டது. அது படிக்கப்பட்டு முடிந்ததும், லக்ஷ்மி, தான் சுந்தரத்திற்கு வாக்களித்ததுபோல், அவளுக்குக் கத்திரிக்காய் வற்றலிற் சிறிது கொடுத்தனள். மற்றைய பெண்கள், தாங்கள் போ கும்போது, லக்ஷ்மியிடம் விடைபெற்று மீண்டும் குளக் கரையிற் சந்திப்பதாய்ச் சொல்லிச் சென்றனர்.

ஏணி ஏற்றம்

* அஸ்தினபுரியென்னு மானகெடிஸ்தலமாம்
அஸ்தினபுரமாளும் அரவக்கொடியோனும்

வணங்காமுடிதரித்த மன்னன் துரியோதனனும்
சர்ப்பக்கொடிபடைத்த சமர்த்தன் துரியோதனனும்
புத்திரனிலக்குணர்க்கு பூணூல்கலியாணமென்று
பஞ்சவரைவரவழைத்துப் பகடைகள் சூதாடிப்
பஞ்சவர்கள்தேவியாம பாஞ்சாலியைத்துகிலுரிந்து
பன்னிரண்டுவருடங்கள் பாரவனமோட்டிவிட்டு
தனக்குநிகரில்லையென்று தரணியாளும்நாளையிலே
ஒருவரெதிரில்லையென் றுலகத்தையாண்டிருந்தான்

அர்ச்சுனன் தேவிகள் அல்லியிடம் சேர்ந்திருந்தது.

ஐவரில்லாவேளையிலே அர்ச்சுனன்பாரியர்கள்
கொடிமதுரைபட்டணத்தில் கொம்பனையாளல்லியண்டை
அடைக்கலமாய்ச்சேர்ந்தார்க ளர்ச்சுனன்பாரியர்கள்
சோரவளநங்கை சுபத்திரைமின்னொளியும்
நாகராஜன்பெற்றெடுத்த நாகக்கன்னிபெண்மயிலும்
பங்கயச்சீர்கண்ணாள் பவளக்கொடிநாயகமும்
போகராஜன்பெற்றெடுத்த போகவதிநாயகமும்
இத்யாதிப்பெண்களும் யாவரும்போய்ச்சேர்ந்தார்.

துரியோதனன் சுபத்திரையை இச்சித்தது.

அந்தவொருவேளையிலே அரசன்துரியோதனனும்
சோரவளநங்கை சுபத்திரையைத்தானினைந்து
காமவிகாரத்தால் கண்ணிரண்டும்பஞ்சடைந்து
கச்சேரிகொலுமுகத்தில் கனமுடன்வீற்றிருந்தான்
ஒருவருடன்பேசாமல் உறக்கமாய்த்தானிருந்தான்
அன்றுதினங்கச்சேரி அனைவருங்கலைந்தார்கள்

கொலுகலைந்துபோனபின் கொடிநாகன் வீற்றிருந்தான்
தனியேயிருக்கையிலே சர்ப்பக்கொடிவேந்தன்
காசிவளநாடாளும் கர்னரவர்கையமர்த்தி
இருவருமாய்க்கூடி யேகாந்த மண்டபத்தில்
தனியாகக்கூடி தனித்திருக்கும்வேளையிலே
துரியனைத்தான்பார்த்து சொல்லுவார்கர்னரவர்
வணங்காமுடிதரித்த மன்னர்பெருமாளே
ஏதுவிசனமென்றனக்குச் சொல்லுமென்றார்
அவ்வார்த்தைகேட்டு அரசனவனேதுரைப்பான்
கேளுமையா கர்னரே கெடியானவார்த்தையொன்று
நாட்டில்விசனமில்லை நகரில்விசனமில்லை
சீமைவிசனமில்லை செங்கோல்விசனமில்லை
அலைகடல்சூழுகின்ற அவனியெல்லாமாளுகிறேன்
ஐவரையுமோட்டிவிட்டேன் சனியனன்றேதொலைந்தது
நாடுநகர்சீமையெல்லாம் நானாள ஆயிற்று
அதனால்விசனமில்லை அண்ணாபெருமாளே
இப்போதொருவிசன மென்றனக்குமெத்தவுண்டு
உன்னுடன்சொல்லாமல் ஒருவருடன் சொல்வதுண்டோ
ஆனாலுஞ்சொல்லுகிறே னதிகாரவீரியனே
மாயனிடதங்கை மாதுசுபத்திரையைச்
சோதிமணிவிளக்குச் சுபத்திரைநாயகியை
என்றனக்குக்கொடுக்க விசைந்தார் பலராமர்
நானுமவள்பேரில் நல்லமனதாயிருந்தேன்
நாளிட்டிருந்தாரே நல்லமணஞ்செய்வதற்கு
எனக்கென்றிருந்த விலக்குமணிசுபத்திரையை
குண்டுணிகிருஷ்ணன் கோபாலன்தான்பார்த்து
பலராமனறியாமல் பார்த்திபனர்ச்சுனற்கு
ஆருமறியாமல் அர்ச்சுனவீரியற்கு

சந்நியாசிவேடம் சதுராகப்போட்டுமெள்ள
திருக்கலியாணம் செய்து முடித்தானே
அன்றுமுதலென்மனது அலையுதே அண்ணாவே
வாடுதேயென்மனது மனக்கவலைவேறாச்சு
அவளைநினைக்கும்போது அவனங்கம்பதறுதே
நினைத்துப்படுத்தால் நினைவுறக்கம்வாரதில்லை
உண்டாலுஞ்சாதம் உடலிற்றரிப்பதில்லை
தின்றாலுமமிர்தம் திகட்டுதேயென்றனக்குப்
பலவாறாகவெண்ணம் பதைப்புடன்வருகிறதே
என்னேரமவளாசை யிதுவேபெரிதாச்சு
ஐவரில்லாவேளை தனிலவளுந்தனித்திருப்பாள்
போனோமேயானால் பொருந்துமேயவளாசை
இதுதான் தருணம் எழுந்திருங்கர்ணரென்றான்
அவ்வசனங்கேட்டு கர்ணர்மனங்கலங்கி
மனதுகலங்கி மன்னவனுக்குரைப்பான்
அடுக்குமோ இவ்வசனம் அரசாளுமன்னவர்க்கு
துடுக்குத்தனபாபமோ தொல்லுலகையாள்வோர்க்கு
சத்தியவான்களாகும் கைபலந்தபெண்களெல்லாம்
அண்ணன்தம்பிதங்களை அழும்புசெய்யநினைப்பாரோ
இந்தநினைப்பு ஏற்குமோமன்னவரே
கெடுவதுநினைந்தக்கால் விடுவதுகருமமென்பார்
இப்புத்தியேனோ யிப்போது முன்றனக்கு
மறந்திடுவாயவளாசை மனதிலேயெண்ணாதே
கண்டவர்களென்னசொல்வார் கலியுகத்தாரேசிடுவார்
தேவர்களும்நகைப்பாரா தரிமேலோகமேசாதா
தகாதிதுமன்னவனே தரணியாளும்ராசருக்கு
என்வார்த்தைதள்ளி இனியவிடம்போனீரானால்
மதுரைதுரைச்சியண்டை மயிலனைமார் சேர்ந்திருப்பார்

அல்லியடைக்கலமா யனைவருஞ்சேர்ந்திருப்பார்
போனுயேயாமாகில் பிழைத்துவரப்போவதில்லை
அடங்காதநீலி அல்லியந்தநாயகியாள்
ஒருவருக்குமஞ்சாளே உலகாண்டகன்னியவள்
இந்தக்கலவரம் ஏந்திழையாள் தானறிந்தால்
சூரத்துஉள்ளவள் தோரணக்கழுவிடுவாள்
மட்டுமெருங்கு மரியாதைதாழ்வாகும்
அவ்வார்த்தைநினையாதே அரசனேயென்றுரைத்தார்
அவ்வசனங்கேட்டு அரசன் துரியோதனனும்
கர்னனிடசொல்லைக் கனமுடனேயெண்ணுமல்
இவ்வளவோகர்ணு இதற்கோவுனையழைத்தேன்
போதும்போதும்கர்ணு புத்திமதிசொன்னது
உன்வார்த்தைகேட்டு உலகத்தையாள்கிறதோ
தானுய்விழவேண்டும் தன்னுயிரைக்காக்கவேணும்
ஒருவரிடவார்த்தை யுறைக்குமோயென்றனக்கு
உனக்குப்பஞ்சவர்மேல் பட்சமாய்தோணுது
என்றுவெறுத்து இயல்நாமக்குடைவேந்தன்
கர்னரைத்தூஷித்துக் கடுகனவேதானடைந்தான்
போட்டிருந்தபூணுரம் பொடிப்பொடியாயற்றுவிழ
தங்கமிதியடிமேல் தானடந்துமன்னவனும்
தன்னுடையமனையாள் தங்குமரண்மனையில்
பெருந்திருவாளரண்மனையில் பேரரசன்வந்துநின்றுன்
வந்துநின்றமன்னவனை மாதேவிதான்கண்டு
திடுக்கிட்டெழுந்திருந்து தேன்மொழியாளோடிவந்து
சிரமேற்கரங்குவித்து தீர்க்கதெண்டனிட்டுமவள்
வந்தனங்கள்செய்து மன்னன்முகம்பார்த்து
கைலாகுதான்கொடுத்து கணவனைக்கூட்டிவந்து
சிங்காதனத்திலே சிறப்பாகவிருக்கவைத்து

கைகட்டிவாய்புதைத்துக் கனமுகந்தானோக்கி
திருவாய்மலர்ந்தருளி தேன்மொழியாளேதுரைப்பாள்
என்ன அவசரமாய் இவ்விடத்திலோடிவந்தீர்
வியர்வைபொழியவே மேனியெல்லாந்தான்கருக
திருமுகங்கள்தான்வாட திருவடிகள்கொப்பளிக்க
வந்த அவசரமேன் மன்னவனேசொல்லுமென்றாள்
மனைவியவள்கேட்க மாநாகக்கொடிவேந்தன்
சந்தோஷமாகியே தையலேகேளென்றான்
உன்னையொருமனுகேட்க உத்தமியே யோடிவந்தேன்
என்னவென்றகேட்பாயோ என்னுடையதேவியே
மாதுசுபத்திரைமேல் மையல்பெரிதாயிற்று
எண்ணுவிசனம் ஏக்கம்பெரிதாயிற்று
ஊணுறக்கமில்லையந்த உத்தமியாள்தன்னுசை
பூசைநிஷ்டைநானறியேன் பொற்கொடியாள் தன்னுசை
ஆசைபெரிதாச்சு ஆயனிடதங்கையின்மேல்
என்றனக்கவளாசை யிருக்கமனங்கூடவில்லை
அல்லும்பகலுமவ ளாசைபெரிதாயிற்றுப்
போகவிடைகொடுத்தால் போய்வருவேன்பெண்மயிலே
அனுப்பிவைப்பாயென்றன்னை அவள்வாழுங்கோயிலுக்கு
என்றேயவன்கேட்க யேந்திழையாளுடல்பதறிப்
பதைத்துப்பதைத்துப் பாரமனங்கலங்கி
வெதும்பிவெதும்பி மேனியெல்லாந்துடிதுடித்துக்
கண்ணீர்வடியக் கலத்தண்ணீர்தானுகுத்து
முத்துமுத்தாய்க்கண்ணீரை முன்மடியிற்சோரவிட்டு
மனமுந்துணிந்ததோ மாநாகக்கொடிவேந்தா
குணமுந்துணிந்ததோ கோபாலன்தங்கையின்மேல்
அடுக்குமோ இவ்வார்த்தை அரசாளும்வீரியர்க்கு
பொறுக்குமோயிவ்வார்த்தை பூமியாளும்வேந்தருக்குக்

கெடுவார்த்தைசொன்னாலுன் கீர்த்தியழிந்திடுமே
பத்தினிப்பெண்களைப் பரியாசஞ்செய்கிறது
உத்தமிப்பெண்களை யுதாசினஞ்சொல்கிறது
அரிதானபெண்களை அழும்புநினைக்கிறது
கற்புடையமாதர்களை காதல்கொண்டுதிரிகிறது
வீணாகப்போமோ வேந்தர்பெருமாளே
அவளை நினையாதே அனர்த்தம் வந்துநேர்ந்திடும்
பெரும்பழிக்காளாகிப் போகவேணுமன்னவனே
அடாதகாரியஞ்செய்தால் படாதபழிவந்துவிடும்
நாடாளுமன்னரெலாம் நகைத்திடுவாருன்றனைத்தான்
சீமையாளுமன்னவர்க்குச் சின்னங்கள்வந்துவிடும்
சிவசிவாயிவ்வார்த்தை யென்செவியில்கேட்கணுமா
அரிகரியிவ்வார்த்தை அரிவைசெவிகேட்கணுமா
தமயனின்தேவியல்லோ தாயார்மரியாதை
தம்பியின்தேவிகள் தான்பெற்றபெண்ணல்லவா
சாஸ்திரங்கள்கல்வி சகலமறிந்திருந்தும்
அறியாதவர்போல அழும்புசொல்லவந்தீரே
தெரியாதவர்போல சொல்லவும்வந்தீரே
மட்டடங்காப்பெண்கள் வாள்விஜயன்தேவியர்கள்
அவ்வளவுபெண்களிலே அதிகாரப்பெண்ணொருத்தி
அவளுடையபேரோ அல்லிமலர்நாயகியாள்
அவள்கண்டால்விடுவாளோ கனமதுரைபெண்கொடியும்
சின்னங்கள்செய்திடுவாள் சேரவொட்டபோறதில்லை
ஐவரிடகோபத்தை அல்லியும்காட்டிடுவாள்
போனாற்றெரியுங்காண் பொன்னார்முடிவேந்தா
போவதுநல்லதல்ல பொன்விளைந்ததென்மதுரை
வீண்பழிதேடாதே வேந்தனேநில்லென்றாள்
அவ்வார்த்தைகேட்டு அரசன்துரியோதனனும்

கதித்துக்குதித்தெழும்பிக் கண்கள்பொறிபறக்க
ஆரடிபெண்மயிலே அடுப்பூதிமங்கையரே
அடுப்பூதிசொல்கேட்டு ஆள்கிறதோசீமைதன்னை
பொங்கல்சட்டிக்கழுவப் பெண்களுக்குத்தெரியுமல்லால்
மற்றொன்றுந்தெரியாது மன்னர்நெறிமுறைமை
தலைவிரிச்சான்சொல்லை தரணிபதிகேட்பதுண்டோ
கலைந்தமயிர்முடிக்கக் காரியந்தெரியாது
அடிக்கடியுன்குரலை அழுதகண்ணீர்துடைத்து
விருதாவாய்க்கண்ணீரை மேலேபுரளவிட்டாய்
தெரிந்தவர்பெண்பேச்சுத் தேன்மொழியேகேளார்கள்
இவ்வளவோவுன்புத்தி இதற்கோநானிங்குவந்தேன்
என்றுமனம்வெறுத்தே யேந்திழையைத்தூஷித்து
அந்தவிடம்விட்டு அப்பால்நடந்துவிட்டான்.

துரியோதனன் மதுரைக்குவந்தது.

சோரவளநங்கை சுபத்திரைநாயகியைத்
தனக்குள்ளேதானே தன்மனதிலிச்சைகொண்டு
மதுரைக்குப்போக மனதிலேயோசித்து
ஆருமறியாமல் அங்கொருவர்காணாமல்
எவருமறியாமல் இனியொருவர்காணாமல்
பெரியோர்களறியாமல் பிறஜனங்களறியாமல்
ஒருஅக்ரோணிசேனை அத்தனைபேர்மன்னருடன்
வேட்டைக்குப்போறேனென விடுபட்டமன்னவனும்
ஆடையலங்கரித்து ஆபரணந்தான்பூண்டு
மார்பில்பதக்கம் வச்சிரச்சோடணிந்து
தோளிரண்டும்புஜகீர்த்தி துலங்கவேதான்தரித்து
கையிலேசெங்கோலும் கணையாழிதானணிந்து

களபகஸ்தூரி கலந்துமிகப்பூசி
சந்தனகதம்பஞ் சவ்வாதுபரிமளிக்க
சோரவளநங்கை சுபத்திரைமேல் சோபமதாய்
ஏறினன்யானையின்மே லெடுத்தான்நெடுங்குடையை
அவுதாவலங்கரித்து ஆனையின்மேலேறினன்
பட்டுக்குடைகவிய பாவலர்களெச்சரிக்க
சாமரங்கள்போட சந்தனம்வீசிவர
ஆலவட்டம்போட அரிவைமார்தான்பாட
கட்டியங்கூறிவரக் கவிவாணர்பாடிவர
மத்தளங்கள்கொட்ட மகாசின்னமூதிவர
தவுண்டுமல்லாரிகொட்ட தரிவீணைமுழங்கிவர
புல்லாங்குழலூத புகழ்ச்சின்னமூதிவர
நாகசுரமூதிவர ராஜர்கொடிமுழங்க
அதிருதேபேரிகை அண்டஞ்செவிடுபட
பூமிகிடுகிடென்ன பூலோகம்நெக்குவிட
முழங்குதேவாத்திய மூவுலகந்தான்கேட்க
பூமிநடுநடுங்க போர்மன்னரெச்சரிக்க
கருந்தூளெழும்பவே கதிரோனைக்கண்மறைக்க
பல்லயம்பரிசை பாங்குமுனைவீரர்
ஈட்டியெழுபாலா விருபுறமுஞ்சூழ்ந்துவர
கத்திகட்டாரி கர்ணடர்சூழ்ந்துவர
வளைதடிசக்கரங்கள் மன்னர்பிடித்துவர
பொற்பிரம்புக்காரர் புகழ்மன்னரெச்சரிக்க
சந்தடிக்கூட்டமதாய்த் தரணியனுந்தான்வாரான்
அத்தினபுரம்விட்டு அவசரமாய்த்தான்வாரான்
கோட்டைகடந்து கொத்தளந்தான்தாண்டி
நாட்டைக்கடந்து நடந்தானேசேனையுடன்
துருசாகவாரான் சுபத்திரைமேல்நாட்டமதாய்க்

காடுகடந்து கரிமலைதான்கடந்து
சில்லிலென்றகாடுவிட்டு செடியும்வனங்கடந்து
மலைகள்குகைகடந்து வாரானேசீக்கிரமாய்க்
காரைபடர்ந்தவனம் கருங்காளாபூத்தவனம்
சூரைபடர்ந்தவனம் சொத்தகளாபூத்தவனம்
கரடியுறங்கும்வனம் காட்டானைதூங்கும்வனம்
சிங்கமுறங்கும்வனம் சிறுபுலிதூங்கும்வனம்
வனமாய்வனங்கடந்து வாரானேயவசரமாய்
சீக்கிரமாய்த்தேடி வாரானுந்தென்மதுரை
தென்காஞ்சிமுத்திலங்கும் தென்மதுரைவாரானும்
வடகாஞ்சிமுத்திலங்கும் வடமதுரைவாரானே
கிட்டநெருங்கினான் கெடியானதென்மதுரை
சீரேநெருங்கினான் தேர்வேந்தன்தென்மதுரை
ஒருநாழிவழிதூரம் உத்தமனுந்தேரிறங்கி
கூடாரம்போட்டார்கள் கொற்றவனார்பாளையத்தை
பாளையத்தின்பேரிகை பரிவாய்முழங்குது
புல்லாங்குழலும் புகழ்ச்சின்னசத்தங்கள்
அதிருதேபேரிகை அண்டங்கிடுகிடென்ன
முழங்குதேவாத்தியங்கள் மூவுலகமுந்தானதிர
வையகத்துச்சத்தமென்று வானவர்க்குத்தான்தெரிய
அடித்தார்கள்பேரிகை அண்டஞ்செவிடுபட
மதுரைநகராளுகின்ற வாழ்பாண்டி நாட்டாளும்
காதுருகக்கேட்டாளே கனமதுரையல்லியரும்.
பேரிகைசத்தமதை பெண்ணரசிகேட்டுவிட்டாள்
அருகிலிருந்த அதிகாரமந்திரியை
மந்திரிபவளசேனை மயிலணையைத்தானழைத்து
ஏதடிசத்த மிரைச்சலுடன்கேட்கிறது
ஒருநாளுமிலாம லுச்சிதமாய் கேட்குதடி

ஆரோ எவரோ ஆராய்ந்து பாரென்றாள்
அப்படியே நல்லதென்று ஆசார வாசல்விட்டுக்
கோட்டை வாசலண்டை கொம்பனையாள் வந்துநின்று
காதுற்றுக்கேட்டாளே கனபேரி வாத்தியத்தை
துரியோதனனென்று ஜெயபேரி முழங்குது
கேட்டாள் பவளசேனை கிளிமொழியாளோடிவந்து
அல்லிமலர் நாயகிமுன் அன்பாக வேதுசொல்வாள்
துரியோதனன்பேரி ஜெயபேரி முழங்குது
ஐவரையுங்காட்டில்விட்ட அனியாய பேரியென்றாள்
அனியாயக்கார னடித்தானே கூடாரம்
அவனுடைய பேரிகை யடைவாகக்கேட்டது
அவ்வார்த்தைதான் கேட்டு அல்லிமலர் நாயகியாள்
கோபம்பிறந்தது கொடிமதுரை நாயகிக்குப்
பாவியந்தச் சண்டாளன் படுபாவி வந்தானோ
துஷ்டனந்த சண்டாளன் துரோகியவன் வந்தானோ
பஞ்சவர்களைவரையும் பாரவனமோட்டிவிட்டு
ஐவரையுமோட்டி அரசாளும் படுபாவி
அந்தவொரு பாவிவந்தா லாருமெதிர்கொள்ளாமல்
மரியாதை செய்யாமல் வணங்கி முடிசாயாமல்
பேசாமலிருங்களடி பேடைமயில் தாதிகளே
அப்படியே நல்லதென்று அசதியாய்த்தானிருந்தார்
மாணுகக்கொடிவேந்தன் மன்னன் துரியோதனன்
ஆலோசனைசெய்து ஆரடா காவலரே
பேரிகையடித்தோமே பெண்கள்வந்து காணலையே
கர்ணர்வந்தாரென்று கனபேரி முழங்குமென்றான்.

கர்னர் வந்ததாப் பேரிகையறைந்தது.

அப்படியே நல்லதென்று அடித்தார்கள் பேரிகை
கர்னர் வந்தாரென்று கனபேரி முழங்குது
அதிருதே பேரிகை அணிமதுரை தான்கேட்க
பூவிலவதரித்த பெண்பெருமாளல்லியவள்
காதிலேகேட்டாள் கனமதுரையல்லியரும்
ஆரடிதாதிகளே அழகான பவளசேனே
இப்போதொருசத்த மிடிபோலக் கேட்கிறதே
அந்த சத்தத்தாலே யாரென்று கேளுமென்ருள்
ஓடினுள்பவளசேனே உண்மையாயப்போது
கேட்டொருசத்தம் கிளிமொழியாளங்நேரம்
அடிபடுதேபேரிகை அன்பாகக்கேட்கிறதே
கர்னர்வந்தாரென்று கனபேரி முழங்குது
சத்தத்தைக்கேட்டு சதுராகத் தோழியவள்
அல்லிமலரி லவதரித்த பெண்பெருமாள்
சொல்லும்விபரமதை செவிகொடுத்துக்கேளுமம்மா
ஆரோஎவரோவென் ருராய்ந்து பார்த்தோமம்மா
காசிவளநாடாளுங் கர்னர் வந்தாரென்று சொல்லி
அடிபடுதே பேரிகை ஆச்சியரே யென்றுரைத்தாள்
தாதியவள் சொல்லேயிலே தரணிபதி கேட்டாளே
சந்தோஷமானுளே தரணிபதி நாட்டாளும்
அங்கதேச நாடாளும் அதிகர்னர் வாராரோ
என்னஅலுவல் கொண்டு இவ்விடத்தில் வந்தாரோ
வந்ததொரு காரியத்தின் வகைகள் தெரியவேணும்
வரச்சொல்லிப்பேரிகை மயிலே யடியுமென்ருள்
அப்படியே மந்திரியு மணிமதுரை கோட்டையிலே
மதில்மேலே பேரிகையை வரச்சொல்லித்தானடித்தாள்

அதிருதேபேரிகை அணிமதுரை கோட்டையிலே
வரச்சொன்னபேரிகையை மன்னவன் துரியோதனன்
சத்தத்தைக்கேட்டு சதுர்மன்னன் பூரித்தான்
நான்போய் வருவேனென்று நலமுடனே மன்னவனும்
படைத்தலை வீரருக்குப் பண்பாகச்சொல்லிவிட்டு
நடந்தானேயப்போது நன்மையுள்ள மதுரைக்கு
ஓய்ந்தநடையழகும் ஓய்யாரக்கைவீச்சும்
அங்கிதலைப்பாகை யரைச்சட்டை பொன்னழகும்
காலில்மிதியடியும் கைப்பிடித்த செங்கோலும்
ஆயுதபாணியா யரசனவன் வந்துவிட்டான்
கோட்டைக்குள்ளே நுழைந்து கொத்தளந்தான் கடந்து
பட்டணத்துக்குள்ளாகப் பார்மன்னன் வந்துவிட்டான்
மதுரைச்சிறப்பழகை மன்னவன் பார்க்கையிலே
தென்னந்தெருவும் தேரோடும் வீதிகளும்
மன்னர்தெருவும் மாடோடும் வீதிகளும்
பாடகசாலைகளும் பளிங்குமாமண்டபமும்
முத்துப்படித்துறையும் முகச்சாலை மண்டபமும்
பவளத்துறையும் பதுமை சிவப்பழகும்
கண்ணாலேகண்டு கருநாகக் கொடிவேந்தன்
செம்பொன்படித்துறையுஞ் சித்திரமணி மண்டபமும்
பொன்னின்மணிமேடை பொன்னாற் சிம்மாதனமும்
கண்ணாடிக்குரிச்சிகளும் கனகரத்ன சோதிகளும்
பார்த்துப்பிரமித்துப் பார்த்து வருகையிலே
தாதிமார்கண்டு தையலர்களோடிவந்து
கேட்டீரோ மாதாவே கிளிமொழியே துரைச்சியரே
கர்னனென்று சொல்லிக் கனபேரி முழங்கினேம்
கர்னரைக்காணேமே கனமதுரை நாயகமே
அரவக்கொடியோன் அரசன் துரியோதனன்

ஒருவனும் வந்துவிட்டான் உட்கட்டரண்மனையில்
அவ்வார்த்தைகேட்டு அல்லிமலர் நாயகியாள்
கர்னரிடபேரைச்சொல்லி கபடனிங்கேவந்தானே
அஞ்சாமல் நெஞ்சுகொண்டு அரண்மனைக்கு வந்தானே
ஏதோ கபடுசெய்ய வில்லறத்தில் தூறிவந்தான்
வந்தாலவனுக்கு மரியாதை செய்கிறதோ
உள்ளே நுழைந்துவர வுத்தரவு யார்கொடுத்தார்
தெரியாதோ வென்சேதி திறமையுள்ள மன்னனுக்கு
நல்லதுமாதரசே நானறிய வேணுமிதை
மந்திரிபவளசேனை மயிலணையேயிப்போது
தந்திரமாகவே தையலரே போயிருந்து
வணக்கங்கள் செய்யாமல் வாசற்படியில் நின்று
உள்ளே வரவொட்டாமல் ஒளிபிறந்த கண்ணாளே
மூன்றும்படிதளத்தில் மொய்குழலே போயிருந்து
எங்கேவந்தாயென்று யேந்திழையே கேளடி நீ
அதற்கவன் சொன்னதெல்லா மரிவையரே நீகேட்டு
என்னிடத்தில்வந்தே யியம்படி மங்கையரே
நல்லதென்று மந்திரியாள் நலமுடனேடி வந்து
மூன்றும்படிதளத்தில் மொய்குழலும் வந்துநின்றாள்
வணங்காமுடிதரித்த மன்னன் துரியோதனன்
அவசரமாய் வாரானே அரண்மனையில் தானுழைய
வாறதோரவசரத்தில் மயிலணையாளெதிரில் நிற்க
ஆரையாமன்னவனே அவசரமாய் வாறவர்தான்
எந்தவூரெந்தசீமை யெவ்விடமிருந்து வந்தீர்
வந்தவிபரத்தை மன்னவனே யுரையுமென்றாள்
உலகாளும் ராசனென்று உத்தமியுமஞ்சி நின்றாள்
அவ்வார்த்தைகேட்ட அரசன் துரியோதனன்
வருங்காலந்தெரியாது மன்னன் கபடனுக்குத்

தனது பெருமையைத் தையலற்குச்சொல்லுகிருன்
மனதுமுருகவே மாணுகன்சொல்லுகிருன்
கேளாய்மயிலே கெடிஸ்தலபூபதிநான்
ஐம்பத்தாறுதேசமும் ஆளும்துரையடிநான்
எனக்குநிகருண்டோ ஈரேழுலோகத்தில்
தரணியெல்லாமென்றன் தலைமேற்சுமந்தாலும்
பெண்கள்மேல்நாட்டம் பொறுக்கவுங்கூடலியே
அஞ்சிப்பயந்துசொல்வேன் ஆரணங்கேயுன்றனுக்கு
ஆளனில்லாமங்கையர்கள் அரிவையர்களிங்கிருக்க
ஏன்தான்சிறையி லிருக்கிருர்மங்கையர்கள்
பத்தினிப்பெண்களிலே எம்பெருமாள்தங்கையவள்
அவளுஞ்சிறையிருக்க ஆதிசிவனெழுத்தா
பாரச்சிறையிருக்கப் பரமசிவனெழுத்தா
அழகுபெருத்திருக்க அவள்சிறையிருப்பானேன்
இனிவரப்போறதில்லை எழில்விஜயன்கோமானும்
ஐவர்பஞ்சபாண்டவர்க ளதோகதியாய்ப்போனுர்
எந்தவனத்தி லிறந்தாரோபாண்டவர்கள்
மாண்டுமடிந்தார்கள் வைகுந்தஞ்சேர்ந்தார்கள்
செத்துமடிந்தார்கள் சிவன்பதிசேர்ந்தார்கள்
அவர்பேர்மறைந்துபோய் சேர்ந்தார்சிவலோகம்
அர்ச்சுனன்மேலாசை யரிவையர்க்குமெத்தவுண்டு
இனிமேலவனுசை யிருந்தென்னசுபத்திரைக்கு
சுபத்திரைமேலாசைகொண்டு தோகையேயிங்குவந்தேன்
ஆகையினலந்த அரிவையரைத்தேடிவந்தேன்
மனதிலடக்கிநீ மர்மத்தைக்காட்டாமல்
அல்லியுடன்சொல்லி அவளையமர்த்திவைத்தால்
நாடுநகரம் நற்பதியானளிப்பேன்
கடுகெனவேயோடியந்த கன்னிகைக்குரையுமென்ருன்

இவ்வசனங்கேட்டு ஏந்திழையாள்தாதியவள்
திடுக்கிட்டவள்மனது தீயில்விழும்புழுப்போல
அஞ்சிப்பயந்தே அவளுடல்தானடுங்க
வாயுமுலர்ந்து மனதுந்தடுமாறி
சிந்தைகலங்கித் திடுக்கிட்டுத் தாதியவள்
விந்தையாயெல்லாம் விபரமாய்ச்சொல்வதற்கு
மலரிலவதரித்த மைக்குழலாளண்டையிலே
அல்லியருகில்வந்து அலறிவிழுந்தாளே
மெத்தப்பயந்து மெய்யும்நடுநடுங்கி
சொல்லிமனது துடித்துத்தடுமாறி
பயந்துநின்றமந்திரியைப் பைங்கிளியுந்தான்பார்த்து
ஏதுக்குமஞ்சாதே யிளமயிலேசேதியென்ன
ஒருவரிடசேதியை யுரைப்பதற்கஞ்சுவாரோ
ஆனாலும்பயமில்லை அறியவுரையென்றாள்
அவ்வசனங்கேட்டே அல்லிமுகம்நோக்கி
ஏதென்றுசொல்லி யெடுத்துரைப்பேன்மாதாவே
சொல்லவுமென்னாவு துடித்துப்புரளுதே
பாதகன்சொன்ன பழிப்பானவார்த்தையைச்
சூதனவன்சொன்ன துஷ்டத்தனவார்த்தை
படிமீதிலேறுகையில் கண்டேனேமன்னவனை
எங்குவந்தீரென்றுசொல்லி யேந்திழையாள்கேட்கையிலே
மாதுசுபத்திரைமேல் மையல்பெரிதாகி
ஆயனிடதங்கைமேல் ஆசைபெரிதாகினேன்
ஐவரிறந்து அதோகதியாய்ப்போனாராம்
அர்ச்சுனராசர் அன்றேதுலைந்தாராம்
நாடாளுமன்னவன் நானிருக்கமங்கையர்க்கு
என்னகுறைச்ச லெனைக்கூடிவாழ்ந்தாலென்
றரண்மனைக்குள்ளேவர யல்லியரைக்கேட்டுவந்தார்

வேண்டியவெகுமதி மெல்லியரே தாரேமினென்று
சொல்லிவாளன்றுமேனே தோகைசூடாமணியே
அவ்வார்த்தைகேட்க அரசாளும்நாயகிக்குப்
பொங்குதே கோபம் பொழியிதுவேர்வையும்
கண்கள் துடிதுடிக்கக் காந்தாளமானுளே
பக்கந்துடிக்குது பாண்டிவளநாட்டாட்கு
அங்கம்துடிக்குது அரசாளும்ல்லியற்கு
மற்றவப்பெண்களெல்லாம் வடவாக்கினிபோல
கொதித்துக்கொதித்துக் கோபாக்கினிமூண்டு
சேஷன்மகளுக்கும் ஸ்ரீராமர்தங்கையர்க்கும்
பவளக்கொடியாட்கும் பண்புடையஅல்லியர்க்கும்
பார்த்தையாபடுபாவி பாதகன்வந்தகொள்ளே
ஐவரையுங்காடுபோக அனுப்பிவைத்ததுஷ்டனவன்
பஞ்சவரையோட்டிவிட்டுப் பாராளுமாணவத்தால்
ஐவரும்போய்விட்டார் ஆதினங்கள்தம்மதென்று
அர்ச்சுனன்தேவிகளே அழும்புசெய்யவேணுமென்று
நம்மைச்சிறைபிடிக்க நாட்டுக்குள்வந்தானே
என்னவவகேடு இருக்குதோநாமறியோம்
என்றுதிகிலடைந்து ஏந்திழைமார்யாவர்களும்
அல்லியடைக்கலமாய் அண்டியிருக்கவந்தோம்
இங்கேயும்வந்தானே யிடழிவான்படுபாவி
என்றுபயந்தார்களெழில்விஜயன்தேவியர்கள்
பாண்டிவளநாட்டாள் பைங்கிளியுந்தான்கேட்டு
ஏனம்மாவுங்களுக்கே யிப்படிகிலேசமென்ன
நானிருக்கவுங்களுக் நடுக்கம்வந்தவாறேது
புலியைப்போல்நானிருக்கப் பூனைமாரஞ்சுவதோ
ஆனை தன்மத்தகத்தை ஆண்சிங்கமறுத்ததுபோல்
அவனுடைய விருதுகள் அத்தனையுமறுத்தாலும்

உதிரம்புரளவைப்பே னோட்டிவைப்பே னூரைவிட்டுக்
கண்டவர்கள் தானகைக்கக் காரியுமிழவைப்பேன்
பார்த்தவர்கள் தானகைக்கப் பங்கமழியவைப்பேன்
தியக்கங்கொண்டவுங்களைத் திரியவைப்பே னல்லிநான்,
அவனங்கந்தானழுகி ஆவிகளற்றுவிழச்
செய்கிறேன்பாருங்கள் தேர்விஜயன் மாதர்களே
உபாயத்தினாலே உயிர்வதை செய்யவேணும்
அரண்மனைபோய்விடும் அக்காளுந்தங்கை யெல்லாம்
அனைவருமரண்மனையி லந்தரங்கம் போய்ச்சேர்ந்தார்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளல்லியரும்
பார்த்து நினைத்தாளாம் பற்பலயோசனையை'
ஆலோசனைசெய்து அழும்புசெய்யவந்தவனை
உபாயத்தினாலே உயிர்வதைசெய்யவேணும்
ஆசையைக்காட்டி மோசங்கள்செய்யவென
மதுராபுரியாளு மனதிலேயோசித்துச்
சதுராகவல்லியவள் சகலமும்யோசித்துத்
தனக்கறிவுசொல்லுந் தையலவள் பவளசேனை
அருகிலேதானழைத்து அல்லியருஞ்சொல்லுகிறாள்
தாய்போல்வளர்த்த தையலரேசொல்லுகிறேன்
மாதாபோல்வளர்த்த மந்திரி பவளசேனை
சீக்கிரமாய் நீயோடித் துரியோதனனுக்குச்
சர்ப்பக்கொடியுடைய சமர்த்தன் கபடனுக்கு
வந்தனஞ்செய்து வணங்கி முடிசாய்ந்து
அவன்மனந்தான்மகிழ அரிவையேநீயுரைப்பாய்
மன்னவரேயிதற்கு வருத்தப்பட்டுவந்தீரோ
இதனால்வருத்த மேன்காணுமுத்தமனே
ஒருத்தியைநாடி யூரைவிட்டுவந்தீரோ
ஆயனிடதங்கையின்மேல் ஆசைகொண்டுவந்தீரோ

ஆசைகொண்டுவந்த அதிசயத்தைத்தான்கேட்டு
அல்லியருங்கேட்டு அர்ச்சுனன் பாரியர்கள்
மெத்தமையலானார் விஜயனிடபாரியர்கள்
எவளெவள்மேலே இஷ்டமிருக்கிறதோ
ஆறுபேர்பெண்களிலே ஆர்மீதிலிச்சையுண்டு
மின்னொளிமேலேநீர் மோகமாய்வந்தாலும்
நாகக்கன்னிமேலேநீர் நன்மனதாய்வந்தாலும்
பவளக்கொடிமேலேநீர் பாரமனதாய்வந்தாலும்
சுபத்திரைநாயகிமேல் சோபமாய்வந்தாலும்
என்மேலேமனதாக ஏக்கங்கொண்டுவந்தாலும்
ஆர்பேரிலாசை அரசர்க்கிருந்தாலும்
இதற்குத்தடைகளில்லை இஷ்டம்போலேதுரையே
கூடிவிளையாடக் கொற்றவரேகிடைத்ததென்றும்
இத்தனைப்பெண்களிலே எவளுமக்குவேண்டுமென்றுங்
கேளடிதாதிநீ கெடிநாகமன்னவனை
ஆர்மேலேயாசையென்று அரும்பாவிசொல்வானும்
அந்தவிபரமெல்லாம் அரிவையேநீகேட்டுக்
கவனமாயோலையிலே கடுகவேதானெழுதிக்
கொண்டுவாவென்றுளாங் கொடிமதுரைநாட்டாளும்
அப்படியேநல்லதென்று அன்பானதாதியர்கள்
மூன்றும்படிதளத்தில் மெல்லியரும்வந்துநின்று
வணங்காமுடிதரித்த மன்னனைத்தான்வணங்கி
நீர்சொன்னசேதி நேரிழைக்குச்சோன்னேனையா
சொன்னவுடன்மகிழ்ந்தார் தோகையர்களெல்லோரும்
ஆர்பேரிலாசையோ அர்ச்சுனனார்தேவியரில்
கேட்டுவரச்சொன்னாளே கெடியானவல்லியென்றாள்
அவ்வார்த்தைகேட்டா னியலானதுரியனுந்தான்
பூரித்தானிருதோளும் பொங்கினான்மன்னவனும்

ஆலித்துப்பூரித்தான் அங்கமதுதான்குளிர்ந்து
எண்ணிவந்தவெண்ணமது ஈடேறிப்போச்சுது
நானினைத்த வெண்ணமெல்லாம் நலமாகஆச்சுது
என்னைவிடவேறில்லை எழில்விஜயன்பெண்களுக்கு
என்னிடமனதின்படி இருந்ததே அவர்மனது
வசப்பட்டுப்போனார்கள் வாழ்விஜயன்றேவியர்கள்
துள்ளிவிழுந்தானே சூதன்கபடனவன்
சொல்லவந்ததாதிக்குத் துரியனுமேதுசொல்வான்
கண்ணேயிளமயிலே கனமானதாதியே
இத்தனைப்பெண்ணிகலே யெவர்மேலுமிச்சையில்லை
மாயனுடன்பிறந்த மங்கைசுபத்திரைமேல்
நாடுதேயென்மனது நாரணன்தங்கையின்மேல்
எதினாலென்றுலதை யெடுத்துரைப்பேன் மங்கையே

துரியோதனன் சுபத்திரைமேலிச்சித்ததைப்
பவளசேனைக்கு உரைத்தது.

ஆதியிலென்றனுக்கு அவளைக்குறித்தார்கள்
பலராமரென்றனுக்குப் பாரியாகத்தானுரைத்து
ஆசையாய்விவாகமது ஆகுந்தருணத்தில்
கிருஷ்ணனதுவறிந்து கிரீடியைக்கொண்டுவந்து
ஆணழகனர்ச்சுனனை யாருமறியாமல்
சந்நியாசிவேஷம் தனிவேஷம்தான்போட்டுத்
திருட்டுக்கலியாணம் செய்துமுடித்தானே
அன்றுமுதலின்றளவும் அவள்மேல்மனமுருகி
நின்றவிடமெல்லாம் நேரிழையாய்க்காணுது
கண்டவிடமெல்லாம் கன்னியைப்போல்காணுது
பார்த்தவிடமெல்லாம் பாவையைப்போல்காணுது

எப்போதருணம் வருமென்றுநானிருந்தேன்
இதுநல்லதருணமடி யேந்திழையாள்சுபத்திரைக்கு
அர்ச்சுனனுமில்லை அவனும் பயங்கொள்ள
அதோகதியாய்ப்போனார்கள் ஐவரந்தப்பஞ்சவர்கள்
நாடுநகரமும் ராச்சியங்களென்னதல்லோ
நாடாளும்வேந்தனுக்கு நாயகியாள்சம்மதித்தால்
பட்டத்தரசியென்று பக்கத்தில்வைத்திடுவேன்
என்னுடையதேவியவ ளேந்திழைபெருந்திருவாள்
அடப்பங்கட்டிநிற்பாளே அரியசுபத்திரைக்கு
நானுஞ்சீமையெல்லாம் நாயகமேயாண்டிருப்பாய்
சோகத்தைத்தீர்த்தால் தொழுவேன்சுபத்திரையை
ஆபத்தைத்தீர்த்தால் அடிமையாய்நானுவேன்
நானடிமையானுக்கால் நாடெல்லாமவளடிமை
நானொருவனடிமையென்றால் உலகமவளடிமை
என்னகுறைச்சல் எம்பெருமாள்தங்கையர்க்குப்
பொன்னால்குறைவோ பூஷணத்தால்தாழ்ச்சியோ
கனத்தால்குறைச்சலுண்டோ சம்பத்தால்தாழ்ச்சியுண்டோ
ஆடக்கிளிகளுண்டு அம்மானைதானுமுண்டு
பேசக்கிளிகளுண்டு பிடித்தாடவூஞ்சலுண்டு
கட்டிலுண்டுமெத்தையுண்டு கால்பிடிக்கத்தாதியுண்டு
தண்டிகைசேவையுண்டு சம்பத்துவாழ்வுமுண்டு
சகலவைபோகமுண்டு தையலிளம்பிறைக்கு
பேச்சுத்தவறுவேனு பெண்கொடிநாயகமே
என்றுமனதுருக வெடுத்துரைத்தான்மன்னவனும் [லாம்
கேட்டாள்பவளசேனைக் கெட்டொழிவான்சொன்னதெல்
ஏட்டிலெழுதிக்கொண்டாள் யீடழிவான்சொன்னதெல்லாம்
ஒன்றுங்குறையாமல் ஓலையிலேதானெழுதி
நல்லதுநில்லுமையா காமக்கொடிவேந்தா

சொன்னதொருசேதி தோகையர்க்குத்தானுரைத்து
அல்லியர்க்குத்தானுரைத்து அவள்சேதிகொண்டுவாறேன்
என்றுசொல்லித்தானடந்தாளேந்திழையாள் தாதியவள்
போறதொருதாதியைப் புகழ்வேந்தன்தான்பார்த்து
சொல்லிவசப்படுத்தித் தோகையேயுன்றனக்கு
வேண்டியஆபரணம் வெகுமதிகள் நானளிப்பேன்
என்றுமவனுரைக்க யேதுமவள்கேளாமல்

பவளசேனை துரியோதனன் வரலாற்றை ஓலையி
லெழுதி அல்லிக்குக் கொடுத்தல்.

ஓட்டம்நடையுமாக வோடிவந்தாள்பவளசேனை
கால்நடுங்கிக்கைநடுங்கிக் கனிவாயுநாவுலர்ந்து
அல்லியருகில்வந்து அடிவணங்கிதெண்டனிட்டு
வாயாலேசொல்ல மனதுநடுங்குதம்மா
நாவாலேசொல்ல நடுங்குதென்மனது
பாவியவன்சொல்லநான் பட்டோலையெழுதிவந்தேன்
துரோகியவன்சொல்லநான் சுருளோலையெழுதிவந்தேன்
பாருமம்மாயிவ்வோலை பாண்டிவளநாட்டாளே
கொண்டுவந்தஓலையைக் கொம்பனையாள்கைகொடுத்தாள்
அவ்வோலைவாங்கி அல்லிமலர்நாயகியும்
வாசித்துப்பார்த்தாள் மலரிற்பிறந்தவளும்
கண்கள்துடிக்குது காந்தாளமாகுது
சிவந்தகண்களிரண்டுஞ் செந்நிறத்தீப்போல்
கோபத்தைத்தானடக்கிக் கொடிமதுரைநாட்டாளும்
வாயால்கொழுத்தவனை மட்டடக்கவேணுமென்று

அல்லி தாதியரிடத்தில் துரியோதனனுக்கு ஆசைவார்த்தை சொல்லவுரைத்தது.

போரில்மிகுந்ததொரு பெண்பெருமாள்நாயகியும்
அழகில்மிகுந்ததொரு அன்பானதாதியேநீ
வாடிபவளசேனை மன்னவனண்டையிலே
அப்படியேசம்மதித்தா ளல்லியென்றுநீயுரைத்து
மாதுசுபத்திரையை மனதைக்கரைக்கவேணும்
எப்படியுஞ்சம்மதித்து ஏந்திழையுமுடன்படுவாள்
எவ்வளவுபொன்ருனீ ரேந்திழைக்கு நீர்கொடுப்பீர்
சொல்லுமென்று கேளுந் தோகையிளம்பிறையே
ஆசைபிறக்கு மரசன் துரியனுக்கு
இவ்வளவு பொன்னென்று எண்ணித்தொகை சொல்லி
இன்றையதினத்தில்நீ ரிங்குவரவொண்ணுது
பாளையத்தைக்கூட்டிப் பட்டணம் போய்ச்சேரும்
மூன்றுநாள் சென்று முடிந்தபின் வாருமென்றும்
வந்தீரேயாமாளுல் வருவீரொருவருமாய்
ஆருமறியாம லரசனுந்தனித்துவர
ஒண்டியொருவனும் ஒருத்தனுய் வாருமென்று
ஆசைகள்சொல்லி அனுப்பிவிடு பட்டணமே
என்று உரைத்தாளே யேந்திழைபாள் தாதிக்கு
அப்படியேநல்லதென்று அரிவையுமோடிவந்தாள்
மன்னவரேயுந்தமக்கு மனதின்படியாச்சுதது
முடிந்ததுங்கள்காரியம் மோகமானுள் சுபத்திரையும்
கொஞ்சமனதைக் கொடையல்லிதான் கரைத்தாள்
என்னகொடுப்பீரென்று ஏந்திழை தான்கேட்க
ஆனந்தங்கொண்டு அரசமன்ன வீரியனும்
எழுநூறுஒட்டைதனம் யேந்திழைக்குத்தருவேனென்றுன்
ஆனாலும்மன்னவனே அத்தினபுரமேபோய்

175

மூன்றுநாள்தான்கழித்து முனைவீராவந்துவிடு
யானைசேனை பரிவார மனைவரையுந்தானிருத்தி
ஒண்டியொருவருமா யூருக்குவாருமென்றாள்
அப்படியே நல்லதென்று அரிவையைத்தான்வாழ்த்தி
எல்லாமேவுன்னாலே யேந்திழையேயாகவேண்டும்
இந்தச்சகாய மெப்போதுநான் மறக்கேன்
என்றுசொல்லித்தானடந்தா னியலானமதுரைவிட்டு
மதுரையைத்தான்கடந்து வந்துவிட்டான் பாளையத்தில்
அவனையனுப்பிவிட்டு அல்லியுமோடிவந்தாள்
மாதுஇளம்பிறைக்கு வணங்கி நமஸ்கரித்து
தாயேநீசொன்னதெல்லாம் தப்பாமல்சொன்னேனம்மா
எழுநூறு ஒட்டைதனமேந்திழையே தருவேனென்றான்
மூன்றுநாள்கழித்து முனைவீராவாருமென்றேன்
அப்படியேநல்லதென் றுசைகொண்டு போனானே
என்று நடந்தவெலாம் ஏந்திழையாம் தோழியவள்
பவளசேனைசொல்ல பாண்டியனார்மகள்கேட்டு
ஆலோசனைசெய்து அல்லியருந்தானிருந்தாள்
இப்படியாக இருக்கின்றவேளையிலே

துரியோதனன் தன்னூருக்குப்போனது.

அரவக்கொடிவேந்த னவசரமாய்த்தானடந்து
பாளையத்தில் வந்து பார்வேந்தன் தான்பார்த்து
அடியடாபேரிகை அத்தினாபுரஞ்சேர
பட்டணஞ்சேர பாளையம்பயணமென்றான்
அடித்தார்கள்பேரிகை அண்டஞ்செவிடுபடப்
பிடித்தார்குடைகள் மறையோனைக்கண்மறைக்க
யானையின்மேல்வாறான் ராஜன்துரியோதனன்
தூரப்பயணமது தொலை தூரந்தான்கடந்து

காடுமலைகடந்து காளுறுதான்கடந்து
வனங்கள்குகைகடந்து வந்துவிட்டான் தன்னகர்க்கு
அத்தினபுரிக்கு அருகாக வருகையிலே
ஜயபேரிதானடித்தான் ஜயங்கொண்டு வந்ததுபோல்
ஜயபேரி சத்தமதைத் தேசத்தார் கேட்டுவிட்டார்
அத்தினபுரியி லனைவருங்கேட்டு விட்டார்
எல்லாருங்கேட்டே யெதிர்காண வந்தார்கள்

கர்னன் துரியோதனன் சேதியை வினவல்.

ஜயம்பெற்று வருகிறானே தென்மதுரை போனவனும்
போனவனை யெதிர்காணப் புறப்பட்டார் கர்னரவர்
வந்தெதிர்கண்டு மார்புடனே தானணைத்துக்
கட்டித்தழுவிக் காடாலிங்கனஞ்செய்து
கூட்டிக்குலாவி கொற்றவன் சந்தடியாய்ப்
பட்டணத்துக்குள்ளே பாங்குடனே வந்தார்கள்
அவரைக்கையமர்த்தி அவரவர் மாளிகைக்கு
அனுப்பிவிடைகொடுத்து அரசனுங்கர்னனுமாய்ச்
சிங்காரமேடையிலே சேரக்கொலுவிருந்தார்
தங்கள்தங்களாசனத்தில் சார்ந்தே யிருக்கையிலே
சீமைகளெல்லாம் சிறப்பாகயிருக்குதா
மன்னவர்க்கொருகுறை தானுண்டோ மன்னவனே
தாங்கள்சென்றசேதி சமர்த்தரே சொல்லுமென்றார்
போனதொருசெய்தி புகழாய் முடிந்ததோ
நடந்ததோ காரியங்கள் நலமாயிருந்ததுவோ
போனதொருசெய்தி புதுமையாய்ச் சொல்லுமென்றார்
ஆலித்துப்பூரித்து அரசன் துரியோதனனும்
பூரித்துத்தன்மனது பொங்குங்கடல்போலக்

கேட்டீரோ கர்னரே கெடியான வார்த்தைகளை
ஏன்போன காரியங்கள் நடக்காதிருக்குமோ
போனேனே தென்மதுரை பெண்களிட நாட்டுக்குப்
பட்டணத்துக்குள்ளே பாங்குடனே நானுழைந்து
வரச்சொல்லியென்னை வரவழைத்தார் பெண்களெல்லாம்
எங்கேவந்தீரென்று ஏந்திழைமார் கேட்டார்கள்
சுபத்திரைமேலாசையாய்த் தோகையே வந்தேனென்றேன்
அவ்வார்த்தை சொல்லவே அனைவருமனதானார்
எல்லாருமனதாகி யென்பேரில் நாட்டமிட்டார்.

கர்னர் துரியோதனனுக்கு அல்லியுடைய
மர்மத்தைச் சொன்னது.

அவ்வார்த்தைகேட்டா ரதிகர்னவீரியரும்
உற்றுநினைத்தா ரொருகோடி புத்திகளை
ஆண்டுநினைத்தா ரதிகர்னவீரியரும்
என்னவவகேடோ எழிலானமன்னனுக்குச்
சூதுநினைப்பாளே தென்மதுரை நாட்டாளும்
கபடுநினைப்பாளே கனமதுரை நாட்டாளும்
வசப்படுவாளென்று மனதினிலெண்ணாதே
சிக்கினாளென்று சிந்தையிலெண்ணாதே
பங்கப்படுத்திடுவாள் பலபேர் சிரிக்கவைப்பாள்
அங்கமச்சிடுவா ளெல்லோர் சிரிக்கவைப்பாள்
வாதனையும் வேதனையும் வருத்தங்கள் வந்துவிடும்
மனதில் கபடுரைப்பாள் மன்னிக்கருவறுப்பாள்
அவளுடைய சேதிகளை அறிவாயோ மன்னவனே
ஆங்காரநீலி யடங்காளொருவருக்கும்
மட்டுமெருங்கு மரியாதைவையாளே

அங்கத்திற்குள்ளோசனை யென்னமோ தெரியாது
சொன்னாலும் நீகேளாய் தோகையிட செய்திகளை
கடல்கலங்கிப்போனாலும் கலங்காதவள்மனது
இடிகளிடித்தாலும் இளகாதவள்மனது
போனாற்றெரியுமந்தப் பொன்விளைந்ததென்மதுரை
வருவது நான்சொன்னேன் வருங்காலந்தானறிந்து
அப்புறமுன்மனது அன்புமனமெப்படியோ
என்றுரைத்தார் கர்னரவ ரிவ்விஷயந்தான்கேட்டுத்
திடுக்கென்றெழுந்தானே துரியனுமப்போது
கர்னரைப்பார்த்து கடுத்துமுகங்களெல்லாம்
உள்ளத்தைச் சொன்னா லுறுதியென்றெண்ணமல்
ஏதோபயமுறுத்தி யென்னைமருட்டுகிறீர்
கள்ளங்கபடிருந்தால் காரணந்தெரியாதா
சூதுகபடிருந்தால் தோணாதாயெந்தனுக்கு
அவ்வளவுதெரியாதா அரசனார்மன்னனுக்கு
போறதொருகாரியம் பொறுக்காதாவுன்றனக்கு
நாளைதெரியவரும் நான்கொண்டகெம்பீரம்
கண்ணாலேபார்க்கப்போறீர் கர்னரே அண்ணாவே

துரியோதனன் தன்மனைவியிடஞ் சென்றது.

சொல்லிநடந்தானே தோகையரண்மனைக்குப்
பெருந்திருவாளரண்மனைக்குப்பெருமையாய்த்தான்சேந்தான்
மாதுபெருந்திருவாள் மயிலணையுந்தானெழுந்து
வந்தொருமன்னனுக்கு மயிலணையுந்தெண்டனிட்டு
எவ்விடம்போனீரெனக்கறியச்சொல்லும்
அவ்வசனங்கேட்டு அரசனவனேதுசொல்வான்
கண்ணேயென்கண்மணியே கற்புள்ளசிகாமணியே

மாதுசுபத்திரைமேல் ஆசைகொண்டுபோனேனே
போனவிடந்தனிலப் பெண்கள்வசமானூர்
அல்லியுஞ்சம்மதித்து அவள்மனந்தானுருகி
அவளைவசப்படுத்தி அல்லிமனதாகி
மூன்றுநாள்தான்கெடுவு மொய்குழலும்வைத்தாளே
மூன்றுநாள்சென்று மொய்குழலேநாஞ்போனல்
நானினைத்தவெண்ணமது நன்ருகத்தான்முடியும்
கலக்கங்களில்லையடி கன்னியிளமயிலே

பெருந்திருவாள் துரியோதனனுக்கு அர்ச்சுனன்
தேவிகள் மர்மமுரைத்தது.

என்றுரைக்கமன்னன் இளங்கொடியுந்தான்கேட்டு
என்னவவகேடோ யேந்திழையாள்சம்மதிக்க
ஏதோவபகீர்த்தி யிருக்குதுபார் மன்னவனே
மாயவலையினில் மயங்கித்திரிகிறீர்
ஆசைவலையி லலைந்துதிரிகிறீர்
பெண்களதுநெஞ்சம் புருஷர்கள்தாமறியார்
அல்லியவள்சம்மதம் அதிசயமாய்த்தோன்றுறது
சுபத்திரைசம்மதம் சூக்ஷமங்கள்மோசமுண்டு
பத்தினிகளந்தப் பார்த்திபன்தேவியர்கள்
சரஸ்வதிக்கொப்பான தையல்சுபத்திரையாள்
அநுசரித்துவருபவரை அனலாயெதிர்த்திடுவாள்
அல்லியோகடுஞ்சூலி ஆங்காரக்கொடுநீலி
மெய்யென்றுநம்பி வீணசைகொண்டீரோ
பொய்யானவாழ்வைப் பெரிதாகவெண்ணினீரோ
விஜயனிடதேவிவிட்டால் வேறொருத்தியாகாதோ
போர்மன்னன்தேவிவிட்டால் பின்னொருத்தியாகாதோ

பஞ்சவரைவரும் வனவாசம்போனரே
ஆரிழைமாரெல்லோரும் அறைக்காவலரானரே
மாதுதிரௌபதியும் வெங்கானல்போனளே
கோதைதிரௌபதியும் கூந்தல்விரித்தாளே
அரையர்சபைநடுவே அம்பலவர்தங்கள்முன்னே
சொல்லாதுஞ்சொல்லி துயிலுங்களைந்தாயே
அப்போதுசபைநடுவே அழுதுபுலம்பிநின்ருள்
வேந்தர்சபைநடுவே மெல்லிபுலம்பிநின்ருள்
ஆயனிருந்தல்லோ அபிமானங்காத்தாரே
மாயன்கிருபையினல் மங்கையரைக்காத்திருந்தார்
அன்றைக்கேயென்தாலி அற்றது என்றிருந்தேன்
இன்னமிழக்க நினைந்தீரோமன்னவனே
பூவிலுதித்த பெண்பெருமாள்நாயகந்தான்
மலரில்பிறந்ததொரு மாது அல்லிப்பெண்பெருமாள்
வயிற்றில்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை,
குடவிற்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை,
அல்லிக்கொடியி லவதரித்தபெண்பெருமாள்
ஐந்துபிராயத்தி லறியாதபெண்மயிலும்
எண்ணைத்தலையோடே யெதிர்த்துவந்தநின்முகனை
நேராகக்கொன்றல்லோ நீலிபட்டமாளுகிருள்
பெண்பட்டங்கட்டி புவனவெல்லாமாளுகிருள்
ஆணைப்பிறக்காமல் அரைநாண்தரியாமல்
மாலைமுடியாளும் மதுரையெங்குமாளுகிருள்
உன்னை-வாவென்றுசொல்லுவாள் வாசகத்துடனழைப்பாள்
அறையிலடைப்பாளே ஆக்கினைசெய்வாளே
கோயிலடைப்பாளே குத்துவாள்வெட்டுவாள்
அப்போ-மண்ணுளயார்வருவா ரென்ருளவனைநாடி
வேண்டாங்காண்மன்ன வெறுத்துவிடுமவளாசை

அங்குபோனால்தெரியுமந்த பெண்களிட திறமை
நான்சொல்லுமுறைமை நாயகனேசொன்னேனே
வீட்டாளிசொற்கடந்து வெறுத்துவிட்டுநீபோனால்
மறுவசனந்தானுரைக்க மன்னவனேகூடுமோ
என்று தன்னாலானமட்டும் எடுத்துரைத்தாள்மாதேவி
கபடமுள்ள துரியனுக்குக் காதில்நுழையாமல்
காரியத்தைச்சொன்னால் கபடாகக்கேட்பாரோ
பக்குவத்தைச்சொன்னால் பாவிகள்கேட்பாரோ
இத்தனைசொல்லுக்கு ஈவுபிரியாமல்
மாயமயக்கம் மதிமண்டைதலைக்கேறி
அவ்வார்த்தைதட்டி அவர்வீட்டில்தானுழைந்து
சப்ரகூடமஞ்சத்தின் தமூவணையில்தான்சாய்ந்து
போசனமேவிரும்பான் பூவணையேகதியென்பான்
இப்படியேமூன்றுநா ளிரவும்பகலாக

அல்லியரசாணி தச்சர்களை
அழைத்துவரச் சொன்னது.

அப்பால்நடந்த வதிசயத்தைச்சொல்லுகிறேன்
தென்காஞ்சிமுத்திறக்கும் தென்மதுரைபட்டணத்தில்
வடகாஞ்சிமுத்திறக்கும் வடமதுரைபட்டணத்தில்
வடமதுரைபட்டணத்தில் மயிலணையாளல்லியவள்
நாகக்கொடிவேந்தன் நாட்டுக்குப்போனபின்பு
ஆலோசனைசெய்து அல்லிமலர்நாயகியாள்
அர்ச்சுனன்தேவிபர்க ளல்லவருந்தானிருக்க
மதுரைத்துரைச்சி மயிலணையாளேதுசெய்தாள்
எப்படியென்னசெய்வோ மீடழிவான்வருவானே
ஆசையுடன்வருவானே அரவக்கொடிவேந்தன்
வருவதற்குமுன்னமே மயிலணையேசொல்லுகிறேன்

மந்திரிபவளசேனை வசனமொன்று கேளடிநீ
வடமதுரைப்பட்டணத்தில் வாழ்கின்றதச்சர்களாம்
அண்ணன்தம்பியேழுபேர் ஆசாரமுள்ளவர்கள்
சூத்திரமறிந்தவர்கள் துணைவருடனேழுபேர்
சிற்பநூலறிந்தவர்கள் ஜெகத்குருகண்ணளர்
காரியக்காரரேழுபேர் கப்பலொன்றுசெய்தார்கள்
எனக்குக்கப்பல்செய்தவர்க ளேழுபேர்தச்சரடி
அவர்களிடம்நாடி அவ்விடத்தில்நீயும்போய்
ஒன்றுமுரையாமல் உட்கபடுசொல்லாமல்
நானழைத்தேனென்று நாயகிநீயுரைத்து
மற்றென்றும்சொல்லாமல் மர்மத்தைக்காட்டாமல்
ஏதோவகையாக யிட்சணமேபயணமதாய்ச்
சீக்கிரத்தில்வரச்சொன்னுள் தென்மதுரைநாட்டாளும்
சடுதியில்வரச்சொன்னுள் தரணிபதிநாட்டாளும்
தங்கத்தரியாமல் தாமதஞ்செய்யாமல்
நிற்கத்தரியாமல் நிமிஷத்தில்வரவேணும்
துருசாய்வரச்சொல்லும் தோகையிளம்பிறையே
கடுகவரச்சொல்லு கன்னியிளமயிலே
சொன்னசொற்கேட்டுத் திடுக்கிட்டுத்தான்பயந்து
மனதுதிடுக்கிட்டு வருவார்கள்தென்மதுரை
வருவதற்குமுன்னேவந்து செய்திசொல்லுமென்றுள்
அப்படியேநல்லதென்று அழகானமங்கையவள்
வாலவயதுடைய மங்கைப்பருவமவள்
அழகில்மிகுந்த அருந்ததிக்குநிகரான
தோகைமடந்தை தோகையரும்வெளியானுள்
ஆசாரவாசல்விட்டு அரண்மனையுந்தான்கடந்து
கோட்டைகடந்து கொத்தளமுந்தான்தாண்டி
தென்மதுரைவிட்டுச் சீக்கிரமாய்த்தானடந்தாள்

கொடிமதுரைவிட்டுக் கொம்பனையுந்தானடந்தாள்
வடமதுரைதேடிவாராள் வழியைப்பிடித்துமெள்ள
துருசாய்நடந்தாளே தோகைமயில்போலே
காடுகடந்தாளே கானமயிலன்னம்போல்
வெயிலுக்குமுன்னே வீசிநடந்தாளே
கானலுக்குமுன்னே கடுகிநடந்தாளே
விசையுடனேதானடந்து மெல்லியருமப்போது
வடமதுரைகோட்டை வந்துவிட்டாள்மங்கையரும்
கோட்டையண்டை வருகையிலே கொம்பனையாளேதுசொல்
ஆணாய்ப்பிறந்தவர்க ளநுசரிப்பார்வடமதுரை [வாள்
பார்த்தாலவர்களைப்பக்குவ மென்றுசொல்வார்
கண்ணால்மயக்கிடுவார் கன்னியிளமையினால்
விழியால்மயக்கிடுவார் மோசம்வருமென்றுசொல்லி
போட்டாள்தலைநிறைய பொற்கொடியாள்முக்காடு
தலைநிறையமுக்காடு தையலுருந்தான்போட்டுக்
கோட்டைக்குள்நுழைந்தாள் கொடிமின்னலைப்போல
தெத்துக்கடந்தாளே தெருவும்பலகடந்தாள்
தேரோடும்வீதி தெருவில்வருகையிலே
அவ்வீதிவருகையி லவளழகைக்கண்டார்கள்
கொடிமின்னற்போலேயந்த கொம்பனையைக்கண்டார்கள்
ஆரோயிவளாரோ அதிசயமாய்த் தோணுறது
மங்கைப்பருவமிவள் வந்ததென்னயிவ்வழியில்
கோடிப்பருவமிவள் குலவிவரும்காரணமென்
வாலைப்பருவமிவள் வந்ததென்னவென்றார்கள்
இந்தப்பருவத்திலேது அதிசயமோ
காலிலிட்டதண்டை கலீரென்றுஓசையிட
பாடகத்தின்சத்தம் பண்பாய்க்கலீரென்ன
இரங்குதலைகுனிந்து யேந்திழைதானடந்தாள்

அவ்வீதிதான்கடந்து அப்பால்வருகையிலே
மாடோடும்வீதி மன்னர்த்தெருக்கடந்து
ஆனைவிலைமதிக்கு மவ்வீதிதான்கடந்து
குதிரைவிலைமதிக்குங் கொற்றவர்கள்வீதிவிட்டுத்
தச்சர்கள்வீதியிலே தையலும்வந்துநின்ருள்
சொன்னஅடையாளம் தோகைகுறிபிடித்து
அல்லியவள்சொன்ன அடையாளந்தான்பிடித்து
சிற்ப நூல்கற்ற செகசாலக்கண்ணுளர்
தச்சரிடவீட்டின் தலைவாசல்வந்துநின்று
கடுக அவசரமாய்க் கன்னியவள்தானழைத்தாள்
துருசாகவழைத்தாளே சொற்பவளசேனை
ஆரம்மாவென்று அண்ணன்தம்பி ஏழுபேரும்
கூப்பிட்டசத்தத்திலே கொப்பெனவேயோடிவந்து
ஆரென்றுபார்த்தார்க ளதிகாரபவளசேனை
அல்லியின்மந்திரியா ளதிகாரம்பெற்றவள்காண்
ஏது அவசரமோ இவ்வளவு காரியமேன்
மதுரைக்கதிகாரி மந்திரியிவளாச்சே
என்றுமனம்வாடி யெதிர்வந்து கைதொழுது
ஏதம்மா வொருக்காலு மிவ்விடத்தில் வாராது
புகழரசுமங்கை பொற்கொடியே வந்ததென்ன
முகங்கள்கருகி முத்தான வேர்வைசிந்த
எங்களா லாவதென்ன விருந்தாலும்
தாதிகள் கிடையாதா தாமரை மலரானே
வந்த அவசரமென் வகைபுரிந்து சொல்லுமென்ருர்
அவ்வார்த்தைகேட்டு அலம்பல்பட்டு வந்தவளும்
கேளுங்கள் தச்சர்களே கெடியான யல்லியவள்
ஏதோ அவசரமா யேழுபே ருங்களையும்
கடுக வவசரமாய்க் கன்னிவரச்சொன்னுளே

இராஜாத்தி பேச்சோ நாங்க ளறிகிறது
வந்தீர்களானால் வருஞ்செய்தி சொல்லுதற்குக்
கடுகவரச்சொன்னாள் கனமதுரை ராஜாத்தி
மற்றொன் றுந்தெரியாது மர்மத்தை நாமறியோம்
வருவீரோவென்றாள் மாமதுரை மந்திரியும்
தாமதஞ்செய்யாமல் சடுதியில் வாருமென்றாள்
திடுக்கிட்டுத்தச்சரெல்லாம் தெளிவில்லாமனம்போல
அஞ்சிப்பயந்து அப்படியே யாகுதென்றார்
சீக்கிரமாய் வாருங்கள் தேன்மொழி போறேனென்றாள்
உன்னுடன் பின்வருவோ மாச்சியாரே நடவுமென்றார்
அவ்வசனங்கேட் டரிவை யிளங்கொடியும்
வந்தவழிவிட்டு மறுவழிதான்பிடித்து
வடமதுரைதாண்டியல்லோ மந்திரியும் வந்துவிட்டான்
திருசாய்நடந்தாளே தென்மதுரை தாதியவள்
நிற்கத்தரியாமல் நிலத்திற்கால் பாவாமல்
பிடித்தபிடியோட்டம் பொன்மதுரை வந்துவிட்டாள்
மதுரைத்தடஞ்சேர்ந்து மயிலணையாள் தன்கொலுவில்
கொலுமுகத்தில் வந்து கொம்பனையைத் தெண்டனிட்டு
போனதொருசேதியும் புருஷர்கள் நாடினதும்
தச்சர்களைக்கண்டதும் தான்வரச்சொன்னதும்
வரச்சொல்லிச்சொன்னதுவு மற்றொன்று சொல்லாமல்
தடங்கலின்றி வருகிறதுஞ் சாங்கமாய்ச்சொன்னாளே
அல்லிமலர் நாயகியா ளதிசயத்தைத்தான்கேட்டு
சந்தோஷமாகியல்லோ தையலரைத்தான்வாழ்த்தி
அருகினிலிருக்கவைத்தா ளதிகாரியானவளை

தச்சர் கப்பலுடைந்ததுபோ லெண்ணியது.

இப்படியங்கிருக்க யேழுபேர் தச்சர்களும்
ஒருநாளுமில்லாத வுலகாண்ட கன்னியவள்
அவசரமாய்வரச்சொன்ன அதிசயத்தை நாமறியோம்
பிரமையாய்த்தோன்றுறது மனது திடுக்கிடுது
முன்னொருகப்பல் முடித்துக் கொடுத்தோமே
செய்ததொரு கப்பலிலே தீம்புவந்து நேர்ந்ததோ
கடையாணி கழன்றதோ கப்பலுடைந்ததோ
போனுற்றிரும்புவமோ பிழைமோசம் வந்திடுமோ
மர்மம் தெரிகிலேயே மனக்கட்டு நாமறியோம்
போனல்விடுவாளோ போடுவாள் பலியாகத்
தப்பிவரப்போறதில்லே தனிமதுரை போனேமானல்
வீண்ஆசை தனேயொழிந்து வெறுத்தே ஆசையெல்லாம்
தங்கள்தங்கள் மனேவிகளேத் தச்சர்கள் தாமழைத்து
இனியெங்களாசை யேந்திழையே மறந்துவிடும்
பிழைக்கும் வகையறிந்து பிழைத்திடு மனேவிகளே
பிழைத்தோமேயானல் பெருமையாய் வந்திடுவோம்
பெற்றதொரு பிள்ளேகளேப் பிரியமாய்த்தானழைத்துக்
கட்டியழுது கண்ணீர்பெருகவிட்டு
முட்டியழுது முகமெல்லாஞ்சோரவிட்டு
இவ்வளவுகண்டபல னென்றுமனங்கலங்கி
ஒருவருடனொருவ னுவமைசொல்லித்தானழுது

தச்சர்கள் மதுரைக்கு வருவது.

ஆசைகளேவெறுத்து அண்ணன்தம்பியேழுபேரும்
சிற்றுளிகொண்டு சிறுவாச்சிதோளிலிட்டு
தென்மதுரைதேடியல்லோ தியங்கிவருகிறுர்கள்

பெண்ணரசிநாட்டில் புலம்பியேவாருர்கள்
கனமதுரைநாட்டில் கால்நடுங்கிவாருர்கள்
பஞ்சபூதங்கலங்கி பயந்துமேவாருர்கள்
தத்தடியிட்டுத் தடுமாறித்தானடந்து
தென்மதுரைக்குள்ளே சிந்தைகலங்கிவந்து

தச்சர்கள் அல்லியை வந்து கண்டது.

கோட்டைநுழைந்து கொத்தளமுந்தான்தாண்டி
கொலுமேடைதேடி குலேகள்மிகநடுங்க
இவர்கள்வரும்வேளையிலே யெதிர்கண்டதாதியர்கள்
ஓடிவந்தல்லியண்டை உத்தமிக்குத்தெண்டனிட்டு
ஆச்சிப்பெருமாளே அல்லிமலர்நாயகமே
தச்சர்கள்வந்தார்கள் தங்கச்சிங்காதனத்தில்
கொலுவண்டைவந்தார்கள் கோதையரேயென்றுரைத்தார்
அவ்வசனங்கேட்டு அல்லிமலர்நாயகியும்
பெண்கள்புடைசூழப் பிரம்படித்தார்சூழ்ந்துவர
தங்கக்கொலுவில் தையலும்வந்தமர்ந்தாள்
சிங்காரக்கொலுவில் தேன்மொழியும்வந்தமர்ந்தாள்
தச்சர்களும்பயந்து சாஷ்டாங்கதெண்டனிட்டார்
மெத்தப்பயந்து மெல்லியர்க்குத்தெண்டனிட்டு
மிகவும்பயந்து மேனியெல்லாம்தானடுங்கி
பயந்துநின்றதச்சர்களே பட்டத்தரசிகண்டாள்

அல்லி தச்சர்களுக்குத் தேறுதல் சொல்லியது.

பயப்படவேண்டாம் பாண்டிவளநாட்டாரே
உங்களாலெந்தமக்கு உதவுதல்வேணுமென்று
ஆபத்தினுலே அவசரமாய்த்தானழைத்தேன்
அவ்வளவுவுபகார மன்புடனேநீங்கள்செய்தால்

வேண்டியவெகுமதி வேணபணிதாரேனென்ருள்
கேட்டார்கள்தச்சர்கள் கிளிமொழியாள்வார்த்தைதனே
இன்றுபிழைத்தோ மீடேறிப்போனேமென்ருர்
எங்களாலான ஏவல்பணிசொல்லுமென்ருர்.
அடிமைகளாயிருந்து அலுவலைச்செய்கிறேம்
சொல்லுமம்மாவென்ருர் துயரற்றதச்சர்களும்

அல்லி தச்சர்களை ஏணிசெய்யச் சொன்னது.

மதுரைதுரைச்சி மயிலனையுமேதுசொல்வாள்
ஏணிஒன்றுசெய்ய இதனுலுமையழைத்தேன்
ஆகாயஏணியது அதிசயமாய்ச்செய்யவேணும்
சுழலவேணுமேணியந்த சூரியமண்டலத்தில்
காலாலுதைத்தாக்கால் கடுகியெழும்பவேணும்
அந்தரத்தேரேணி அதிசயத்தைத்தான்பார்க்க
ஒன்பதுரத்னத்தா லொளியும்பளபளென
பத்துப்படியும் பதிக்கவேணும்ரத்தினத்தால்
முத்துப்படியும் முழுகொம்பினுல்படியும்
பவழப்படியும் பச்சைவச்சிரத்தால்படியும்
மாணிக்கப்படியும் மரகதத்தினுல்படியும்
ஆணிப்பொன்னுலே அழகானகற்படியும்
தங்கப்படியும் புஷ்பராகத்தாற்படியும்
ஒவ்வொருபடியில் ஒவ்வொருஸ்திரீகளைப்போல்
அந்தப்படியி லவர்களைப்போலெழுதி
பத்தாம்படியில் பைங்கிளிசுபத்திரைபோல்
பக்கம்பதினுறுக்கும் பழுவெலும்புதான் முறிக்க
கீலுக்குக்கீலும் கீலாணிதைக்க வேணும்
உள்ளங்கால் வசியேறி உச்சிக்குப்பாயவேணும்
கபாலம் திறந்து கண்மூளை தானுதிர

விசையேணி முடுக்கினல் மேலே எழும்பவேணும்
காற்ருடிபோலே கனத்த ஏணிதானெழும்பிப்
பறந்து வரவேணும் பாங்குள்ள ராச்சியத்தில்
கண்டவர்கள் சிரித்துக் காரியுமிழவேணும்
காலாலே தட்டினல் காற்றுப்போலெழும்பவேணும்
போவென்ருல் போகவேணும் நில்லென்ருல் நிற்கவேணும்
இப்படிக்கு சூஸ்திரமா யேணிசெய்தீராளுல்
வேணமட்டும் ஊர்பதியும் வெகுமதியுநான்தருவேன்
சீக்கிரமாகவேணும் சிற்பநூற் கண்டவரே
ஆகுமோவென்ரு ளல்லியிளமயிலாள்

தச்சர்கள் அல்லிக்கு ஏணி செய்தது.

அப்போது தச்சர்களு மாலோசனைசெய்து
சொன்ன க்ஷணத்திலே செய்தார்களேணிதன்னை
ஆச்சுதுதாயே அப்படியே செய்துவிட்டோம்
செய்தார்களேணி யொன்று சீக்கிரமாய்த் தச்சர்களும்
ஆகாயவேணி யொன்று அந்தரமாய்ச்செய்தார்கள்
ஒன்பது பதுமையும் ஒளியான ரத்தனத்தால்
ஒவ்வொருபடியி லுத்தமிமார் பெண்களைப்போல்
நாககன்னி யொருபடியில் ராசகன்னி யொருபடியில்
பவளக்கொடி யொருபடியில் பதிவாகச்செய்ததன்பின்
அந்தப்படியில் அதிசயமாய்ச் செய்துவைத்து
பாரவசி நாட்டிப் பக்கவசி நாட்டிவைத்து
காலாணி கையாணி கழற்ருணிதைக்க வைத்து
சூஸ்திரஞ்செய்தார்கள் சுழலேணி முடிந்தது
இவ்விடத்திற்ருனிருந்து ஏணிவிசை முடுக்கினல்
பறக்குமே ஆகாயம் பறக்குங்காற்ருடியைப்போல்
போகச்சொன்ன விடத்திலே போகுமோ ஏணியது

கண்டவர்கள் பார்த்தவர்கள் காலாலே தட்டினல்
காற்ருயெழும்பி கனமதுரை வந்துவிடும்
செய்துமுடிந்த ஏணி சீக்கிரமாயல்லியர்க்கு
அல்லியுந் தானுமற்ற அருச்சுனன் தேவிமார்
அனைவோரும் வந்து அதிசயத்தைப் பார்த்துமே
ஏணியதிசயமு மெழுதியுள சித்திரமும்
தங்கள் தங்களைப்போலே தான்செய்த பதுமைகளும்
கண்ணாலே கண்டார்கள் கனகரத்ன யேணிதன்னைச்
சந்தோஷங்கொண்டார்கள் தையலிளம்பிறைகள்

அல்லி தச்சர்களை ஏணியிலே உதைத்தது.

பிறவாமுடிதரித்த பெண்பெருமாள் சொல்லுகிருள்
நல்லது தச்சர்களே நலமான ஏணியின்மேல்
சோதனைபார்த்தாலல்லால் சிந்தை தெளியாது
ஏழுபேரிலொருவ ரேறுங்களேணியின்மேல்
என்னமாயெழும்புகிறதோ எவ்விடஞ்சுழல்கிறதோ
வாதனைவேதனை வருத்தங்களாகுதோ
பார்க்க வேணுமென்ருளே பாண்டிவள நாட்டாளும்
ஏழுவர்களுங்கேட்டு ஏக்கம் பிடித்தார்கள்
தமக்கேதான்வந்த நாசகாலமோதான்
என்னசெய்வோம் தாயே ஏறினேமேயானல்
தப்பிப்பிழைப்போமோ தரணியில் விழுவோமோ
விழிகள்புரண்டிடுமோ மூளைசிதறிடுமோ
பிராணனுக்கழும்பாச்சே பிள்ளைகுட்டியுடையவர்கள்
என்றுமனங்கலங்க ஏந்திழைபாளேது செய்தாள்
சோதனையான் பார்த்துச் சூக்ஷ்மத்தை யறியவேணும்
அப்படியழும்பு அதிகரித்து வந்தாலும்
காயத்தை யாற்றுகிறேன் காயமிருக்களவும்

காணியும்பூமியும் கனத்தசெம்பொன் நானளிப்பேன்
குஞ்சுகுழந்தை குடும்பத்தை யாதரிப்பேன்
ஏறுங்களேணியிலே என்றாள் துரைச்சியரும்

தச்சர்களில் மூத்தவன் ஏணியிலேறினது.

அவ்வார்த்தை தான்கேட்டு அண்ணன்தம்பி யெழுவர்களுள்
மூத்தவன் சம்மதித்து முன்னாலே வந்துநின்று
ஏணிப்படயி லேறிவருகையிலே
அந்தப்படியிலே அதிசயத்தைத் தான்பார்த்துப்
பத்தாம்படியிலே பாங்குடனே வந்துநின்றான்
அவ்விடத்திலிருக்கும் அதிசயத்தைப்பார்க்கையிலே
சூஸ்திர ஆணிகள் துருசாகப்பாய்ந்தது
கூர்வசிகளப்போ குடலைமிகக் கலக்கும்
உள்ளங்காலில் தைத்து உச்சியிலேறுகுது
கபாலந்திறந்து கண்கள் பிதுங்குது
கவிழ்ந்ததேயேணி கனமான பூமியிலே
கீழிருந்தயேணியைக் கீலாணி முடிக்கிவிட்டார்
காற்றாடிபோலே கார்மேகம் பறந்தது
நாலுபக்கஞ் சுழன்று நடுவே பறந்தது
சுழலுது ஆகாயத்தில் சூஸ்திரவேணியது
போகச்சொன்ன விடத்தில் போய்விடுது பொய்யேணி
அந்தரத்திலே சுழல அல்லியவள் பார்த்துவிட்டாள்
கண்டாளதிசயத்தைக் காரியமுடிந்ததென்றாள்
இறங்கிவிடுமென்று ளேந்திழையாளல்லியரும்
சூஸ்திரவேணி சுழன்று விழுந்தது
குத்துயிருடனே கொலைப்பட்டிருந்தவனை
மெள்ளக்கழற்றினார் மேதினியிலந்நேரம்
காயங்களாரவே காவல் வசஞ்செய்தாள்

காணியும்பூமியும் கனத்ததொரு பொன்தனமும்
சாகிறமட்டுக்கும் தனங்களுந்தான் கொடுத்தாள்
மற்றதோராறுபேரும் மறைவாயிருங்களென்ன
வணியும் நின்றது எவர்க்குமழகாக
எப்போ வருவானோ ஈடழிவான் படுபாவி
மன்னன் துரியோதனன் வரக்காணோமென்று சொல்லிப்
பெண்களெல்லாரும் போயிருந்தாரரண்மனையில்

துரியோதனன் மறுபடியும் வந்தது.

அப்படியே அங்கிருக்க அரசன் துரியோதனனும்
மூன்றுதினமும் மூவருடமாய்த் தொலைத்து
மூன்றுவது நாளையிலே முகங்கள் தெளிவாகிப்
போகலாமதுரை யென்று மோகந்தலைக்கேறி
ஒண்டியொருவனுமா யுலகாளும் ராசனவன்
எழுநூறு ஒட்டைதன மேற்றினான் யானையின்மேல்
ஆள்படையில்லாமல் யானையுமரசனுமாய்
ஆனை யோட்டிக்கொண்டு அரசனும் வாரானே
தூரப்பயணந் துரையால் வழிநடந்து.
தேனுமதுரை தென்மதுரை நாட்டில்வந்தான்
வானுமதுரை வடமதுரை தேடிவரான்
கோட்டை வாசல்காக்கும் கொம்பனையைக்கண்டானே
நான்வந்த செய்தி சொல்லும் கன்னியர்க்கு

தாதிகள் துரியோதனன் வந்ததை அல்லிக்குச்
சொல்லியது.

அவ்வாசல்காக்கும் அறிவையிளம்பிறைமார்
திடுக்கிட்டோடிவந்து தேன்மொழிக்குச் சொன்னார்கள்

அரசன் வந்தசெய்தி அல்லியருந்தான்கேட்டு
சந்தோஷங்கொண்டு தையல்மார் தான்புகழக்
கொலுமுகந்தேடிக் கொம்பனையும்வந்தாளே
மற்றையபெண்களெல்லாம் மாளிகையில்தான்புகுந்து
சன்னல்களைத்திறந்து தையல்மார்பார்த்திருந்தார்
தச்சர்களெழுவருமே தனியாகப்பார்த்திருந்தார்

அல்லி தாதியை யழைத்துத் துரியோதனனை
வரச்சொன்னது.

இப்படியாக இவர்களிருக்கையிலே
அப்போதல்லியரும் அரிவைக்கு விடைகொடுத்து
வந்த அரசனை வரச்சொல்லிபடிதளத்தில்
கொண்டுவந்ததிரவியத்தைக் கொட்டச்சொல்லும்மங்கையரே
தொம்பகூண்டுநிறையத் தோகையரேபோடச்சொல்லு
பாவிப்பணத்தைப்பார்வையிட்டுப்பாராதே
நல்லதென்றுபெண்கள் நலமுடனேவந்துநின்று
அரசன்றனைக்கண்டு அரண்மனைக்கழைத்துவந்தார்
ஐந்தாம்படிதளத்தில் அரசனும்வந்துநின்றான்
கொண்டுவந்தபணங்கள் கொட்டியிருக்கிறதைப்
பார்த்தந்தபணத்தை ஆருஞ்சட்டைசெய்யாமல்
மற்றுமந்ததாதியர்கள் பைங்கிளிமார்நிற்கையிலே
அரவக்கொடிவேந்த னரிவையரைத் தான்பார்த்து
இனிமேல்தடையென்ன என்னுசைதான்றணிக்க
வரட்டுமோஉள்ளே மயிலணையைநீகேட்டுச்
சீக்கிரமாய்வாருமென்றான் துரியனுமப்போது
அவ்வார்த்தைகேட்டு அல்லியண்டைதானுரைத்துப்
பார்த்தாளிளங்கொடியும் பாண்டியநாட்டாளும்
அல்லியரும்பெண்க ளனைவருந் தானிருக்கத்

தச்சரையழைத்துத் தயாராகவைத்தாளே
ஆரடிமாதே யரசன் துரியோதனனைக்
கொலுமுகத்துநேராகக் கொப்பெனவே கூட்டிவந்து
சாய்ந்திருக்குமேடையண்டை சமர்த்தனை நிற்கவைத்து
இந்தத்தேரேணியின்மே லேறினாலதிசயங்கள்
காணுவதிசயங்கள் கண்டு இறங்கலாம்
பாராவதிசயங்கள் பார்த்துமே வந்திடலாம்
அவ்வார்த்தைகேட்டு அரிவையும் தாளேடி
துரியோதனனிடத்தில் தேன்மொழியாளோடிவந்து
வாருங்காண் மன்னவனே மயிலணையாள் கொலுமுகத்தில்
என்று அழைத்துவந் தேணியண்டை நிற்கவைத்தாள்
இந்தப்புதுமைநீ ரெங்கினும் பார்த்ததில்லை
இந்தத்தேரேணியிலே யேறியிறங்கி வந்தால்
பத்துப்படியும் பாங்குடனேறிவந்தால்
அதிசயத்தைக்கண்டு அன்பாயிறங்கிவந்து
மாதுசுபத்திரையை மனையாகக்கொள்ளலாங்காண்
தாமதஞ்செய்யாமல் சல்தியிலேறுமென்றாள்.

துரியோதனன் ஏணிமேலேறியது.

அப்போ துரியோதனன் அதிக துரிதமுடன்
சந்தோஷங்கொண்டான் சதுர்ப்புஜம்பூரித்தான்
இருதயங்குளிர்ந்து ஏணியண்டைவந்து நின்றான்
பெண்களெல்லாம் பார்க்கப் பெருமையுடன் வந்தான்
முத்தாலலங்கரித்த முதற்படியிலேறினான்
அங்கிருக்குமதிசயமு மாதிசேடன் தன்மகளை
நாகக்கன்னிபோலவே நற்பதுமைதான் கண்டான்
இவளேது இங்கே இருக்கிறாளென்றுசொல்லி
ஆலித்துப்பூரித்து அந்தப்படியைவிட்டு

இரண்டாம்படிமேலே யெட்டியே காலைவைத்து
இரத்தனந்துலங்கும் நலமானபொற்பதுமை
போகவதிபோல பொற்கலையைக் கண்ணில்கண்டு
இஃதென்னபுதுமையென்று இன்பமிகக்குளிர்ந்து
மூன்றும்படிதளத்தில் மோகமாயேறி வந்தான்
பவளக்கொடிபோல பதுமையொன்று கண்டானே
அதிசயத்தைக்கண்டு அவசரமாயேறுகிறான்
நான்காம்படித்தளத்தில் நலமுடனே பார்க்கையிலே
மின்னொளிபோலே மின்னல் நிறங்கண்டானே
ஆள்கிறபெண்களிட வதிசயத்தை யென்னசொல்வேன்
ஐந்தாம்படிமேலே அரசனுமேறிவந்தான்
அங்கேயொருபதுமை அல்லியைப்போல்தானிருக்கக்
கொலுவிருந்த பாவனைபோல் கொம்பனையைக் கண்டானே
அவ்விடத்தில்வந்து நின்று அதிசயத்தைப்பார்த்தானே
அவளுடையதயவு எனக்கு மிருக்கையிலே
என்னகுறைச்சலென்று ஏறினான் மன்னவனும்
ஆறும்படிமேலே அங்குவந்து நின்றானே
அந்தப்படிமேலே அரிவையந்தவேலகன்னி
அவளையுங் கண்ணில்கண்டு அப்பாலேயேறினான்
ஏழாம்படிமேலே யேறிவந்து நின்றானே
அவ்விடத்துச் சித்திரமும் அதிசயந்தான் பார்த்து
எட்டாம்படி தளத்தில் லேறிவந்தானவசரமாய்
மாதுசுபத்திரையாள் மயிலனையைக்காணோமே
மேலேயிருப்பாளோ மேகவண்ணன் தங்கையவள்
ஒன்பதாம்படிதளத்தில் உயரவே காலைவைத்தான்
இங்கேயுங்காணோமே யேந்திழையாள் பதுமையென்று
பத்தாம்படிமேலே பாங்குடனே காலைவைத்தான்
பஞ்சணைசோடித்து படுத்திருக்குஞ் சுபத்திரையை

அந்தப்பதுமையை அரசனவன் கண்டுவிட்டான்
இங்கேன் படுத்தாய்நீ யேந்திழையே கண்ணாட்டி
அந்தப்பதுமையை ஆசையுடன் தழுவினான்
கட்டித்தழுவுங்கால் கழுவசியேறுது
பாரக்கழுவசியும் பக்கத்திலேறுதாம்
பக்கவெலும்பு பதினாறுந்தைக்குது
குந்தினவிடத்திலே கூர்வசியாகிறது
உள்ளங்காலில் தைத்தவசி யுச்சிலேறிடுது
கால்வைத்த விடந்தனில் கட்டாணிதைக்குதே
அவ்விடமிவ்விட மசையாமல் வசியேறக்
குலைகள்கிழியக் குடல்கள் கலங்கின
ஈரல்கலங்குது இரச்சிகள் துள்ளின
கண்கள்விழிகலங்கக் கண்டங்கள் துள்ளின
விழிகள்புறளுது மூளைகள் துள்ளின
ஐயோ அபயமென்று அலறுவான் கூக்குரலாய்
என்செய்வேனென்செய்வே னென்று புலம்புகிறான்
போடுவான் கூக்குரல் பெண்கள் நகைக்கவே
எருமைக்கிடாப்போல் இரைச்சலிடுகிறான்
வாதனைவேதனை வருத்தங்கள் படுகையிலே
ஏணியதுபுறண்டு இடிபோல் விழுந்தது
கூடவிழுந்தானே குப்புறவே மன்னவனும்

ஏணியை அனுப்பினது.

அப்போது பெண்மயிலா ளல்லியவளேதுசெய்தாள்
சீக்கிரமாயொருவோலை தேன்மொழியாளெழுதுகிறாள்
அனைவருந்தான்பார்க்க அவனையுந் தூஷிக்க
ஓலையெழுதுகிறாள் உற்றதொரு சேதியெல்லாம்
ஐவரையுமோட்டிவிட்டு அரசாளும் பாவியிவன்

அல்லியண்டைவந்து அடைக்கலமாய்ச் சேர்ந்தவரைப்
பெண்கள் சிறைபிடிக்கப் பொன்மதுரை வந்தானே
கற்புச்சுபத்திரைமேல் காதல் பெரிதாகி
ஆதியிலே யென்றனக்கு அவள்மேலே ஆசையுண்டு
அன்று முதலின்றளவும் அன்னமாகாரமில்லை
எந்நாளுமவளாசை யிதுவேபெரிதாச்சு
இப்போசமயமது என்றனக்கு நேர்ந்தது
இவருங்காட்டிலே அங்கேயே செத்தார்கள்
என்றேதான் ஏந்திழையாள் சுபத்திரைக்கு
எழுநூறு ஒட்டைபொன் ஏந்திழைக்குத்தாரேன்
பெண்கள் சிறைபிடிக்க இவ்விடமே வந்தானே
ஆளனில்லாதிப்போ தலைந்திருக்கும் பெண்களைத்தான்
கற்புடைய பெண்களைக் கற்பழிக்க வந்தானே
ஜோராவரிசெய்து தொட்டிழுக்க வந்தானே
ஆகையினாலே அரும்பாவி துஷ்டன்தனை
எல்லோரும் பார்க்க ஏணிமேலேற்றிவைத்தேன்
ஏணியுமிவனும் எங்கேவிழுந்தாலும்
ஓலையைப்பார்த்து உத்தமரே வாசித்து
காரியுமிழ்ந்து காலாலுதைத்திடுங்கள்
காலாலுதைத்தால் கதறுவானதைக்கேட்டுக்
கையாலெடுத்தால் கனமுமழிந்திடுமே
எல்லாருங்காண எழுதியந்த வோலையிலே
ஓலைச்சுருள்மடித்து உத்தமியாள் பெண்கள் கையில்
அரசன்குடுமியிலே அரிவைபரே முடியுமென்றாள்
அப்படியே முடித்தார்கள் அவனுடைய குடுமியிலே
அல்லிசவுக்கெடுத்து அடித்தாளே ஆனமட்டும்
தச்சர்களையழைத்துச் சாடையாய்க்காட்டினாள்
விசையை முடுக்கிடுங்கள் மேலே பறக்கட்டும்

என்றனைப்பெற்றெடுத்த இராசாங்க பாண்டியர்கள்
அவர்களின் நாட்டுக்கு அனுப்பிடுங்கள் பாதகனை
நல்லதென்றுவிசையை நலமாய் முடிக்கியிட்டுப்
பாண்டியர்கள் நாட்டுக்குப் பக்குவமாயனுப்பிவைத்தார்
ஆகாயமெழும்புது அந்தநல்ல ஏணியது
காற்றுடிபோலே கடுகெனவே தான்பறந்து
மேலேபறந்து மேலுலகம்போகுதாம்
காற்றுவிசையாலே கடுகெனவேதான்பறந்து
சுழன்றுபறந்துமே சுழலேணிபோகுதாம்
பாண்டியர்கள் கொலுவின்முன்னே பறந்துவிழுந்தது
குப்புறக்கவிழ்ந்தது கொற்றவர் சபைமுன்னே
சுழன்றுவிழுந்தது துரைகள் கொலுச் சபையில்
ஏணிவிழுகையிலே எல்லோருந் திடுக்கிட்டு
அனைவோருமோடிவந்து அதிசயத்தைப் பார்த்தார்கள்
பார்க்குமந்தவேளையிலே பாராளும் ராசனென்று
இதுவென்னகாரண மிப்படி விழுந்ததென்ன
பாரவசிகளேறிப் பதைத்துவிழுவதென்ன
ஆர்செய்தகோலமோ அநியாயகொள்ளையென்று
கையாலே தூக்கிவைத்தால் கனக்க அழுந்திடுது
தரையில் கவிழ்ந்துமது புரட்டுது மன்னவனை
குடுமியில் கட்டியிருக்கும் கொடிதான வோலையை
ஓலையைப்பிரித்து உத்தமர்கள் வாசித்தார்
ஐவரில்லாவேளையிலே ஆதீனப்பெண்டுகளை
சோரவளநங்கை சுபத்திரையைச் சிறைபிடிக்க
அல்லியண்டைபெண்க ளண்டியிருந்தவரை
உடன்படிக்கை செய்யவென்று ஊதாரிவந்ததுவும்
அவளாசைகொண்டு அலைந்திவன் வந்ததும்
அவளொருத்திவசமாகு லனைவரையுஞ் சிறையழிக்க

மதுரையிலே தான்வந்தான் மகத்தான பாவியவன்
ஆளனில்லாப்பெண்க ளலைந்து திரிகையிலே
ஏணியொன்றுசெய்து ஏற்றினர் பாதகனை
கண்டவர்களிவனைக் காரியுமிழுங்கள்
கையாலேதூக்கினல் கனக்க அழுந்திவிடும்
காலாலுதைத்தால் கடுகப்பறந்துவிடும்
போவென்று துஷ்டனைப் போகவனுப்பிவிடும்
இப்படியாக இருக்குமந்த வேளையிலே
பட்டோலைபார்த்து பாவியிவனென்றுசொல்லி
நம்முடைய பெண்டுகளை நலமழிக்க வந்தானே
காடாளுங்கன்னியிவள் நல்லவேலை செய்தாளே

பாண்டியர்கள் ஏணியைக் காலாலுதைத்தது.

அந்த வொருஓலையை அவன் சிரசில் தான் முடிந்து
காரியுமிழ்ந்தார்கள் காலாலுதைத்தார்கள்
மதுரைக்குப்போமென்று மன்னனுக்குரைத்தார்கள்
சுழன்று எழும்புகுது தொல்லுலகந்தான்காண
ஆகாயம்பறந்தது அந்தவொரு ஏணியது
மதுரைக்கொலுமுகத்தில் வந்து விழுந்தது
குப்புறவேதான்சுழன்று கொலுவில் விழுந்தது
அல்லியிடம் பெண்களுு மனைவரும் வந்தார்கள்
கூவினனுயிருடனே கொடும்பாவிவாய்குளறி
மந்திரியாளே மாதாவே யான்சரணம்
மற்றதொரு தாய்மாரே மாதாவே யென்றனுக்குச்
சிறிய புத்தியாலே யென்றன் சீவனும்போகுதென்று
பல்லைக்கெஞ்சிக்காட்டுகிறன் பாவியந்த துரியோதனன்
அல்லிமலர் நாயகிக்கு அடங்காப்பெருந்தணலாய்க்
கொத்துப்பிரம்பெடுத்துக் கொடுக்கிருள் பூசையுந்தான்
வேலைக்கார தச்சர்களை விசையை யடக்குமென்ருள்.

ஏணியை ஆதிசேடனிடத்திற் கனுப்பியது.

ஆதிசேடன் லோகத்திற்கு யனுப்பிவிடும்பாதகனை
காற்றூடிபோலே கடுகெனவே தான்பறந்து
சுழன்று பறந்தது சேடன்லோகம் விழுந்தது
இடிபோல்விழுந்தது ஏணியுமிவனுமாய்
இது என்னவென்று எழுந்தன சர்ப்பமெல்லாம்
ஆதிசேடன்கூட்ட மனைவருமோடிவந்து
இந்தத் தேரேணியை யெங்குமேகண்டதில்லை
கையாலெடுக்கையிலே கனக்கவிழுந்தது
குப்புறக்கிடக்குறான் குலவசியேறியவன்
ஓலையவிழ்த்து உத்தமர் படித்தார்கள்
தென்மதுரை நாட்டாள் திருக்கையினாலேயென்று
ஐவரையுமோட்டிவிட்ட ஆண்கையன் படுபாவி
தென்மதுரை பெண்களை சிறையழிக்க வந்ததுவும்
அர்ச்சுனன்தேவிகளை யழிக்கவந்தபாவியிவன்
தொட்டுப்பிடிக்கவந்தான் சுபத்திரையாள் நாயகியை
பெண்களையழிக்கவந்த பேரான துரோகியிவன்
ஆகையாலல்லி அவள் செய்தவேலையென்று
ஏணியொன்றுசெய்து யேற்றினாள்பாதகனை
காரியுமிழ்ந்திடுங்கள் காலாலுதையுங்கள்

ஆதிசேடன் ஏணியைக் காலாலுதைத்தது.

நல்லவேலைசெய்தாள் நாடாளும் கன்னியென்று
காலாலுதைத்தார்கள் காரியுமிழ்ந்தார்கள்
ஆகாயமெழும்பி அணிமதுரைபோய் விடென்றார்
எட்டிப்பறக்குதாஞ் சிட்டுக்குருவியைப்போல்
காற்றூடியைப்போல் கனக்கப்பறக்கின்றது

சுழன்றுபறந்தது தென்மதுரை கொலுச்சபையில்
வந்துவிழுந்தது மட்டற்ற ஏணியது
திடீரென்றுவிழுகையில் தென்னரசிகண்டாளாம்
கையிற்சவுக்கெடுத்துக் கன்னியரும் வந்துநின்று
முன்பின்பாராமல் மொய்குழலாள்சாடுகிருள்
பற்காட்டிக் கெஞ்சுகிருன் பாவியந்த துரியோதனன்
பரமசிவன்பதியில் சேருகிறேன் பைங்கிளியே
தத்தளித்துப்போகுதே தாயேதுரைச்சியரே
கொல்லமனதிருந்தால் கொன்றுவிடு என்றனைநீ
மடிக்கமனதிருந்தால் வாளாலே வெட்டிவிடு
குலதெய்வம்நீரென்று கும்பிடுவேனுச்சியரே
என்னுயிரைத் தப்பவைத்தா லுனக்கடிமை நானலவோ
என்றுவதைப்பட்டு இரங்கியேதானழுதும்
கண்கள்சிவக்கவே காந்தாளமாகியல்லி
ஈடழிக்கவந்தவனுக் கிரங்குமோ என்மனது
கொன்ருலும் நல்லதல்ல கொலைவதை செய்யவேண்டும்
பிறருடைய பெண்கள்மேல் பேயாய்த்திரிவானே
மடித்தால்தெரியாது வதைபட்டால் தெரியுமே

ஏணியை மேகராசனுக்கு அனுப்பியது.

ஆரடாதச்சர்களே யனுப்பிடுங்கள்விசைமுடிக்கி
எங்கேயனுப்புவது என்தாயே சொல்லுமென்ருர்
மின்னொளியைப்பெற்றதொரு மேகராசன் பட்டணத்தில்
அனுப்பிவிடுங்களென்ரு ளப்படியே நல்லதென்று
விசையைமுடிக்கிவிட்டார் மேகராசர்கொலுவுக்கு
ஆகாயம்பறக்குது அந்தரத்தேரோடிவந்து
எப்படிப்பறக்குதாம் சிட்டுக்குருவியைப்போல்
காற்ருடியைப்போல கனவிசையாய்ப்பறந்துவந்து

மேகராசன்தன்கொலுவில் விசையாய்ப்பறந்துவந்து
சுழன்றுவிழுந்தது துரிதமாயேணியது
திடுக்கிட்டுமேகராசன் சீக்கிரமாயோடிவந்து
கையாலேதானெடுக்கக் கவிழுதுபூமியிலே
ஈதென்னவதிசயம் இயலானஏணியது
பார்மன்னனிவனன்றோ பாரவசிதைத்திருக்க
குடுமிதனிலோலையை கொப்பனவே தான்பிரித்து
வாசித்துப்பார்க்க மனமுங்கொதித்தெழும்பி
ஐவரையுமோட்டிவிட்ட அரும்பாவியிவனலவா
எந்நாளும் ஐவர்பேரி லெடுத்தான்பெருந்துஜங்கள்
பெண்களைச்சிறைபிடிக்கப் பெரும்பாவிவந்ததனுல்

மேகராசன் ஏணியைக் காலாலுதைத்தது.

நாடாளுங்கன்னியவள் நல்லவேலைசெய்தாளே
என்று மனம்பொங்கி யிடதுகாலாலுதைத்தான்
சுழன்றுபறந்தது சூரியமண்டலத்தில்
குய்யோமுறையோவென்று கூச்சலிட்டுவாரானே
அபயமபயமென்று அலறியேவாரானே
தென்மதுரைகொலுவிலே திட்டென்று விழுந்தது
அல்லியுந்தாதியு மனைவருமோடிவந்தார்
கொத்துப்பிரம்பாலே கொம்பனையாள்தானடிக்க
ஆபத்துப்படுத்துகிரு ளரும்பாவியானவனை
தச்சர்களையழைத்துத் தையலுமேதுரைப்பாள்

ஏணியைப் போசராசனுக் கனுப்பியது.

போசராசன் பட்டணத்தில் போகவிடுமேணியென்ருள்
அப்படியேநல்லதென்று அவ்விசைமுடிக்கிவிட்டார்
சிவ்வென்றுபறந்தது சிட்டுப்போலேணியது

காற்ருடிபோற்சுழன்று கடுகப்பறந்தது
வேகமாய்ப்பறந்து போசனிடபட்டணத்தில்
திட்டென்றுவிழுந்தது தியம்புவிழுவதுபோல்
போசராசன்திடுக்கிட்டுப் புதுமையென்ருேடிவந்து
இதேதுவதிசய மேணியைப்போல் தோற்றுது
குத்துயிருடனே குலேகின்ருன் மன்னவனும்
குடுமியிலிருக்குமோலே கொப்பனவேவிழுந்தது
வாசித்துப்பார்க்க வய்ணந்தெரிந்தது
துரோகியிந்தசண்டாளன் துன்மார்க்கனென்றுமே
கபடன்பிறக்கவே கன்முங்குறைந்தது
சந்திரகுலத்தின் தவநெறியழிந்தது
அழிக்கவந்தபாவிக்கு அரிதானகூர்வசி
மாட்டிவிட்ட ஏணியிலே வரவிட்டாளிவ்விடத்தில்

போசராசன் ஏணியைக் காலாலுதைத்தது.

காறியுமிழுங்கள் கண்டவர்தானகைக்க
என்றுசொல்லிக்காலாலே யெட்டியுதைத்தானே
காலாலுதைக்கலுமே காற்ருடிபோல்பறக்க
சகதலங்கள்மெச்சத் தேன்மொழியுஞ்செய்தாள்
சொல்லிக்கொள்ளும்போது இறங்குதேயிவனுயிர்
ஆபத்துப்படுகிருன் அரசன்துரியோதனன்
அந்தச்சமயத்தி லழகானஏணியது
மூர்க்கன்பிறக்கவே முறைமையழிந்தது
அண்ணன்தம்பியானவரை யழும்புகள்செய்யவெண்ணி
பொய்யானவாழ்வைநம்பிப் பெண்களையழிக்கவந்தான்
ஆகாயம்பறந்தது அபயமென்றகுரலுடனே
சுழன்றுபறந்துமே சுழலேணிவருகுது
பாண்டிவளநாட்டாளின் பாதத்தில்விழுந்தது

வந்தானுபாவியென்று மாட்டுகிறுள்சாட்டியினுல்
பல்லைப்பல்லைகெஞ்சுருன் பதைத்துத்துடிக்கிறுன்
சித்திரவதைசெய்யாதே சீவன்பறிபோகுதென்ருன்
உயிர்வருத்தமாகுது ஒருவீச்சாய்வீசிவிடும்
என்னேரமாய்ப்பொறுப்பேன் என்னுயிர்போகவில்லை
அடிபடுதேயென்னுயிர் அங்கம்விட்டுப்போகலையே
அபயமபயமென்று அலறுவான்மன்னவனும்
என்றுசொன்னவார்த்தை ஏந்திழையாள்தான்கேட்டு
பத்துமோரெட்டும் பதினெட்டுஞ்சென்றபின்பு
வெற்றிமதம்படைத்த வீமரிருக்கின்ருர்
உன்னைவெட்டிப்பிளந்து மிருகத்துக்கிரையாக்கிடுவார்
பதறிநான்வெட்டினுல் பாபத்துக்காகுமென்று
ஏணியைத்தூக்கச்சொன்ன ளேந்திழையுமப்போது

ஏணியைச் சேராம்புராசனிட மனுப்பியது.

தச்சர்களையழைத்துத் தாணிபதிநாட்டாளும்
சேராம்புராசன் சீமைக்கனுப்பிடுங்கள்
நல்லதென்றுவிசையை நலமாய்முடுக்கிவிட்டார்
நெட்டிப்பறக்குதுபார் நிசவூர்க்குருவியைப்போல்
பறந்ததேஏணி பம்பரம்போற்சுழன்று
சுழன்றுபறந்ததே சுறுக்காகவந்தஏணி
காற்றுவிசையாலே கடுகெனவேதான்பறந்து
தலைவிரிகோலமாய்த் தானேபறக்கிருனே
பறந்துவிழுந்தானே பவளக்கொடிபட்டணத்தில்
சேராம்புராசன் சிங்காரக்கொலுவின்முன்னே
அதிர்ந்துவிழுகையிலே அரசர்கள்கண்டார்கள்
அங்குவந்தஏணியையு மரசனையுங்கண்டார்கள்
ஆகாயவல்லிடிபோ லதிரவிழுந்ததுவே

கைதனைப்பிடுங்கிக் கவிக்குதுபூமியிலே
ஆடுங்குடுமியிலே அதிகாரியோலைதன்னை
ஓலையைப்பிரித்து ஒதினார்வாசகத்தை
துரியோதனனென்றுஞ் சிரைபிடிக்கவந்ததுவும்
பஞ்சவர்கள்தேவியைப் பாரிசெய்யவந்ததுவும்
ஐவரிடபாரியரை அழும்புபண்ணவந்ததுவும்
ஆதலியத்துக்கேற்ற அல்லியவள்செய்ததென்று
சிரித்தார்களெல்லோரும் சேராம்புராஜாக்கள்
நன்றாகச்செய்தாளே நாடாளுங்கன்னியவள்
முறைதப்பிநடந்தாக்கால் மூவுலகும்பொறுக்காது
கெடுதலைச்செய்தால் விடாதுகருமமென்று
பொறுப்பார்நல்லோர் பொறுத்தவர்க்குக்கோபம்வந்தால்
உயிருக்கேஆணி உலைதேடிவைப்பார்கள்
அனேகநாள்பொறுத்தாரே ஐவரந்தராஜாக்கள்
அவர்கள்மனதிவனுக்கு அக்கினியாய்மூண்டுது
தொல்லுலகமேச துரோகியுடலெடுத்தான்
ஆலோசனைசெய்து அல்லிப்பெருமாளும்
தகுந்ததொருதெண்டனை தையலருஞ்செய்தாளே
என்றுமிகராசர்களும் எடுத்தோலைதான்முடித்து

சேராம்புராசர் வணியைக் காலாலுதைத்தது.

காலாலுதைக்கவே காற்றாய்ப்பறந்தது
மேலேசுழன்று வேகமாய்ப்பறந்தது
அபயமபயமென்று அல்லிகொலுமுகத்தில்
குப்புறவணியுடன் கொற்றவனும்தான்விழுந்தான்
மதுராபுரியாளும் மயிலணையாள் தான்பார்த்து
தீராதகோபமது போராய்முடிந்ததுபோல்
தச்சர்களைத்தானழைத்துத் தையலருமேதுசொல்வாள்
துஷ்டனிந்தபாதகனைத் துவாரகைக்கனுப்பிவிடும்

ஏணியைக் கிருஷ்ணரிடம் அனுப்பியது.

அப்படியேநல்லதென்று ஆணியைமுடுக்கிவிட்டார்
விசையாய்ப்பறந்து மேற்சுழல்காற்றைப்போல்
சுழன்றுபறந்தது துரிதமுடனேணியது.
ஆகாயமேபறந்து ஆயன்பதிதேடி
கிருஷ்ணர்கொலுமுகத்தில் கிறுகிறென்றுசுழன்று
வந்துவிழுந்தது மாதவன்கொலுமுகத்தில்
அறிந்துமறியாதவர்போல் ஆயரவரோடிவந்து
எல்லோருமாகவே யேணியண்டையோடிவந்தார்
இது என்னவதிசயம் இவ்விடத்தில்விழுந்தது
ஏணியுமாளுமா யிவ்விடத்தில்விழுந்ததென்று
கிட்டவந்துகையாலே கிருபையுடனெடுக்கையிலே
குப்புறவிழுந்தது கொடிதானபூமியிலே
குடுமியிலேவோலையுங் கோபாலன் தான்பார்த்து
வாசித்துப்பார்க்கையிலே மாயவனெம்பெருமாள்
தங்கைசுபத்திரையைச் சீர்குலைக்கவந்ததுவும்
ஆதிநாள்முதலாக அவள்மீதிலாசையென்றும்
ஐவரில்லாவேளைதனி லழும்புசெய்யவந்ததுவும்
அணிமதுரைநாட்டாளும் அதிகோபமானதுவும்
இப்பெரியபாதகனை யேணிமேலேற்றினதும்
கண்டவர்கள்பார்த்தவர்கள் காறியுமிழுங்கள்
என்றிருக்குமோலையை யெம்பெருமாள்தான்பார்த்து
இப்படிசெய்வாரோ என்னுடையதங்கையரை
ஆளனில்லாப்பெண்டுகளை யழும்புசெய்யநீதியுண்டோ
கற்புடையமாதரைக் கருதல்மிகச்செய்வாரோ
ஆனபடியினல் அழும்புவந்துநேர்ந்தது
காமந்தெளியவைத்தாள் கனமதுரைநாட்டாளும்
பரிதாபந்தீர்க்காமல் பாரவசியணையவைத்தாள்

ஆசைகள்தீர்க்கவல்லோ ஆணியைத்தைக்கவைத்தாள்
நீர்கூடியணைய கூர்வசிகள்நேர்ந்தது
தொட்டுஅணைவதற்கு துறடுமுள்ளுவைத்தாளே
ஏறியுலாவுதற்கு யேணியென்றுவாகனமும்
காறியுமிழ்ந்தால் கனம்பெறுவான்மன்னவனும்
இவன்கனத்தைத்தானறிந்து இந்தவேலைசெய்தாள்
ஓலைச்சுருளை வுலகளந்தார்தான்முடித்து
சந்தோஷமாச்சுதோ சமர்த்தானமைத்துனனே
பொங்குதேவுடம்பெங்கும் பூரிப்புமைத்துனற்கு
நானென்னவெகுமதி யாலளிப்பேனுன்றனக்கு

ஏணியை கிருஷ்ணர் கால்மண்ணால் தூவினது.

ஓலையிலேயிருக்கும் உற்றவெகுமதிபோல்
ஒருதரங்காறி வுலகத்தோருமிழ்ந்தார்கள்
என்னாலாகாது இருதரம்நான்உமிழ்வேன்
என்னாலிவ்வளவு காரியமாகுமடா
என்றுமிவர்கூறி யெம்பெருமாள்மாயவரும்
இவன்முகத்தில்உமிழ்ந்தால் ஈடேறுவான்பாவி
காறிகாறியுமிழ்ந்தாரே கபடமாய்முகந்தனிலே
சிரித்துச்சிரித்து ஸ்ரீராமர்தான்பார்த்துக்
காலாலுதைத்தால் கடைத்தேறுவானென்று
கால்மண்ணைத்தூவினார் காற்றாய்ப்பறந்தது
சுழன்றுபறந்தது சுழலானவேணியது
ஆகாயமேபறந்து அணிமதுரைத்தேடியது

ஏணியை ஐவரிடத்தி லனுப்பியது.

வந்துவிழுந்தது மயிலணையாள்கோலுதேடி
பார்த்தாளிளங்கொடியாள் பாண்டிவளநாட்டாள்

தாரார்புகழுடைய தர்மருக்கொருவோலை
எழுதுகிருளல்லியுமே யின்பமுடனேலைதன்னைத்
தக்கப்புகழுடைய தர்மருக்குத்தண்டனிட்டு
வீமருக்குமர்ச்சுனர்க்கும் சமர்த்தரனைவருக்கும்
சாஷ்டாங்கதண்டனிட்டேன் தனிமதுரைநாட்டாளும்
படுபாவிதுரியனந்த பாவியங்கேவிழுகையிலே
குடுமியினேலை குறிப்பாகப்பார்த்திடுங்கள்
இந்தவொருஓலையை யெடுத்துமிகவாசித்துக்
காரிழைமாது காந்தாரிநாயகிக்கு
ஏழுமாதங்கெர்ப்பமா யேற்றதொருசீமந்தம்
ஸ்ரீமந்தநாளுஞ் சென்றதுமங்கைக்கு
மசக்கையானபண்டம் மங்கையர்க்குத்தாருமென்றுள்
காட்டில்பழுத்த கனிவர்க்கமத்தனையும்
வேரிற்பழுத்த வெடித்தபலாச்சுளேயும்
கொச்சிதமர்த்தை கொடிமுந்திரிப்பழமும்
மாதுளம்பழமும் பால்பழம் வாழைப்பழம்
காட்டுமாங்காய்தானும் கதலிக்களாக்கனியும்
இத்தனையும்பறித்து யிவன்முதுகில்மூட்டைகட்டி
அனுப்பிவிடுங்களென்று அல்லியருந்தானெழுதி
ஓலைச்சுருளை உத்தமியுந்தானெடுத்து
கொற்றவன்குடுமியிலே கொம்பனையுந்தான்முடித்துத்
தச்சர்களையழைத்துத் தட்டுங்களேணியென்று
எங்களைவரிருக்கும் ஆரண்யமனுப்புமென்றுள்
அப்படியேவிசைமுடுக்க ஆகாயமேபறக்கும்
சுழற்காற்றுபோலே சுழன்றுபறக்குதாம்
சிட்டுக்குருவிபோலே யெட்டிப்பறக்குதாம்
அந்தரத்தைநாடியது ஆரணியந்தான்தேடி
பஞ்சவரிருக்குமந்த பாரவனந்தனிலே
ஐவர்பர்னசாலையிலே அதிரவிழுந்தது.

ஏணியுடனே இவனையுங்கண்டார்கள்
சந்தனவடிவழகர் தருமரவர்பார்த்து
மனதுதிடுக்கிட்டு மதியுமிகக்கலங்கி
பார்த்துத்திடுக்கிட்டுப் பதைக்குதேயவர்மனது
இப்படிச்குச்செய்தவர்க ளெவர்களோநாமறியோம்
ஆதீனத்துக்குடையவனை அநியாயஞ்செய்தார்கள்
பக்கந்துடிக்கப் பாரவசிதானேற
அங்கம்பதைக்க அலறித்தடுமாறி
அரகராஇதுவென்ன அநியாயகாரணங்கள்
சிவாசிவாவென்று திருச்செவியில்கையை வைத்தார்
தம்பிமார்நாலுபேர் தையல்துரோபதையும்
தருமரின்பின்னாகத் தனஞ்சயர்கள்தான்சிரித்தார்
குலுங்கச்சிரித்தாளே குருகுலலட்சுமியும்
எங்கேயோபாவியிவ னிடும்புகள்செய்திருப்பான்
ஆரோபலவான்க ளடக்கினார்கெர்வமதை
என்றுநினைத்து எல்லாருஞ்சிரிக்கையிலே
அப்போதுதருமலிங்க மங்கமிகப்பதறி
உள்ளம்நடுங்கி உடம்பெல்லாம்வேர்வைசிந்தக்
கொற்றவன்குடுமியில் குலுங்குதாஞ்சுருளோலை
தாரார்புகழுடைய தருமரெடுத்துரைப்பார்
தம்பிசகாதேவா தலைகுடுமியோலைரெண்டும்
அவிழ்த்துப்படியென்றார் அவ்விரண்டுவோலையை
அப்படியேவோலையை அவிழ்த்துப்படிக்கையிலே
சுபத்திரைமேலாசைகொண்டு துடுக்காக வந்ததுவும்
எழுநூறு ஒட்டைகள் ஏந்திழைக்குக்கொடுத்து
அழும்புபண்ண வந்தவனை அல்லியவள் செய்ததுவும்
மற்றவயணமெல்லாம் வரிசையுடன் கண்டிருக்கும்
ஓலையைப்படிக்கவே வுதறுதே காலெல்லாம்
தருமர் மனம்போலத் தனஞ்செபனார் நின்றுவிட்டார்

மற்றதொரு நால்வருக்கு மனதிற் கொதியேறி
மதகரி வீமனவன் வண்டுபோல் தீயெறிந்து
வெற்றிமதயானை வீமனுக்குக் கோபம்வந்து
வச்சிரகதையெடுத்து மண்டையை யுடைக்கவந்தான்
அர்ச்சுனற்குக்கோப மடங்காப்பெருந்தணலாய்
அவனுடையஉயிரைநா னம்புக்கிரைகொடுப்பேன்
என்று எழில்விஜய னெழுந்தானே கோபமுடன்
காலாக்கினிபோல காண்டீபனெழுந்திருந்தான்
நகுலசகாதேவர் நாகத்தின் விஷம்போல
சீறியவிஷம்போல சிரசைத்துணிக்கவந்தார்
ஏந்திழையாள் துரோபதையும் எரிந்த தணல்போல
என்னைத்துகிலுரித்த யீடழிவான் படுபாவி
மற்றதொரு பெண்களையும் வலதழிக்க வந்தானே
யென்றுமிவள் கோபிக்க யெல்லாருங் கோபித்தார்
தக்கபுகழுடைய தருமரவர் பார்த்து
பொறுங்களப்பாதம்பி பொறுத்தாற் குறைவருமோ
பெண்களை யழிக்கவந்து பெண்களால் சீர்குலைந்து
கற்புக்குப்பின்னங்கள் கடுகளவும் நேராது
கற்பெநெருப்பாகும் கண்டத்தைச்சுட்டெரிக்கும்
பெண்களே செய்தார்கள் பூலோக மெச்சுதற்கு
புருஷர்பழியைப் போட்டவர்கள் செய்தார்கள்
செத்தாலுமிப்படியே செய்வார்கள் கொலைகளவு
என்றுமிவர் கோபத்தை இங்கிதச்சொல்லாலடக்கி
மறித்துமவ்வோலையை வாசித்துப்பார்க்கையிலே
காரிழை மாதுநல்லாள் காந்தாரி நாயகிக்கு
சீமந்தஞ்செய்யவேணும் தேன்மொழிக்குக் கனிபழங்கள்
பண்டுபலாதிசெய்து பாவி முதுகில்கட்டி
அனுப்பி விடுங்களென்று அல்லி யெழுதியதை
கண்டு சிரித்தார்கள் கன்னியின் செப்பிதன்னை

அவள் கனதின்படியே மதவீமாசெய்யுமென்று
தனியே விசாரமிட்டுத் தருமரவர் வந்துவிட்டார்
மதகரி வீமசேனன் மன்னவனுமேதுசெய்தான்
காட்டிலுள்ள காய்கனிகள் கனமான வரிசையெல்லாம்
செவ்வையாய் மூட்டைகள் துரியோதனன் முதுகில்
சேர்த்திறுக்கிக்கட்டினன் தேகங்கள் தான்முறிய
காறியுமிழ்ந்தார்கள் காளையர்கள் நால்வருமே
கன்னியந்த துரோபதையும் காறியுமிழ்ந்தாளே

வீமசேனன் ஏணியைக் காலாலுதைத்தது.

மதகரி வீமனுக்கு மாளாத கோபம்வந்து
வெற்றி மதயானை வீமனுமப்போது
ஏணியண்டை வீமன் எதிராக வந்துநின்று
எட்டியுதைத்தான் இயலான ஏணியைத்தான்
கோபத்தாலுதைத்தான் கொடிதாக யேணிதன்னை
அந்தவுதையாலே ஆகாயம் பறந்தது
சுழற்காற்றைப்போல சுழன்று பறந்தது
அந்தவிசையாலே அல்லியின் தன்மதுரை
வந்துவிழுந்தது மயிலனையாள் தன்கொலுவில்
பார்த்துவிட்டாளல்லியவள் பல்லைக்கெஞ்சும் பாதகனை
மரியாதைசெய்தாரோ மன்னவர்களைவருந்தான்
காறியுமிழ்ந்தாரோ கபடன் முகததிலே
கொஞ்சத்தில் விடுவேனோ கொலைகற்ற பாதகனை

ஏணியைக் காந்தாரியிட மனுப்பியது.

ஆரடா தச்சர்களே அனுப்பிடுங்கள் பாதகனை
என்று ஒருவோலை யெழுதினளல்லியவள்
காந்தாரி நாயகிக்குக் கடுகவெழுதுகிறாள்
புஷ்பமலரனையாள் பெண்ணாள் மருமகளே

அன்னமே சொர்ணமே அமிர்தமடமானே
சீமந்தஞ்செய்ய செலுத்திவிட்டேன் கனிகளை
ஆள்கள் கிடையாது அணிமதுரை சீமையிலே
அமிஞ்சிக்கிவனை ஆள்பிடித்தனுப்பி வைத்தேன்
ஓலையை நீ படித்து உள்ளதெலாமனுசரித்து
வந்தவழியோட்டிவிடு மருமகளே குணவதியே
காலாலுதைத்துவிடு காற்றாய்ப்பறந்துவிடும்
என்றெழுதி யோலையை இவன் குடுமிதனிற்கட்டி
அப்படியே முடுக்கினள் ஆகாயம் பறந்தது
பறந்துமேலே பறந்து பம்பரம்போற் சுழன்று
காந்தாரிகோட்டையிலே கடுகவிழுந்தது
ஏணியுமவனையும் ஏந்திழையுங்கண்டாளே
இது என்னவேடிக்கை இவர் முதுகில் மூட்டையென்ன
ஓலையுங்குடுமியிலே உத்தமியுந் தானவிழ்த்து
வாசித்துப்பார்த்தாளாம் மாபாவி செய்தவெல்லாம்
எந்நாளும் பாண்டவரை யிடழித்து வருவானே
தனக்குவந்த சீதனத்தைத் தையலருந்தானவிழ்த்துக்
காய்கனியத்தனையும் கன்னியெடுத்துக்கொண்டாள்
மாமாவே தென்மதுரை மாமி சுகந்தானோ
பாரவனம்போனீரோ பாண்டவர்கள் சுகந்தானோ
கஷ்டமேதீர்ந்ததோ காளையவர் வருவாரோ
பக்ஷமுண்டோ என்பேரில் பாண்டவர்களைவர்க்கும்
என்னதான்சொன்னார்க ளெனக்கறியச்சொல்லுமென
வருத்தம்வகையுடனே மண்ணிற்கிடக்கிறவன்
கன்னியிவள் சொன்னவெல்லாம் காதிலே கேட்டானே
பார்க்கையிலிவளுடைய பக்ஷத்தைப் பாண்டவர்மேல்
என்னுடைய வருத்தத்தை யேந்திழையுங்காணமல்
பார்த்துமேயென்னுடைய பரிதாபம் பாராமல்
வளர்த்தவனென்று மனதிலே யெண்ணமல்

ஐவர்மேல் நாட்டம் அறிவுற்றுக்கேட்டாளே
என்று மனங்கொதித்து இருந்தானே பேசாமல்

காந்தாரி ஏணியைக் காலாலுதைத்தது.

மாதுகாந்தாரி மயிலணையுந்தான்பார்த்து
தனக்குவந்த சீதனத்தைத் தையலநுங்கண்டெழுதி
குடுமிதனில் முடிந்து கொற்றவரே மாமாவே
கேட்டது கேட்கிலையோ கேளாதோகாதுமக்கு
வந்துநெடுநேர மாச்சுதோ மாமாவே
என்று உதைத்தாளே ஏணியைத்தன் காலாலே
ஆகாயமே யெழும்பி அந்தரத்திலே சுழன்று
மதுரைக்கொலுச்சபையில் வந்துவிழுந்தது

ஏணியை அஸ்தினபுரத்துக் கனுப்பியது.

மதுரைத்துரைச்சி மயிலணையாள் தான்பார்த்து
ஆரப்பாதச்சர்களே அன்புடனே நீங்களிப்போ
அஸ்தினபுரத்திற் கனுப்பிவிடுமென்றாளே
நல்லது என்றார் நலமுடனே முடுக்கிவிட்டார்
மேலேயெழும்பி விசையுடன் தான்பறந்து
காற்றுப்போலே யெழும்பிக் கடுகெனவே தான்பறந்து
அஸ்தினபுரிப் பட்டணத்தில் அனைவருந்தானிருக்க
சபையில் விழுந்தது சதுரான கொலுமுகததில்
திடுக்கிட்டனைவரும் திடீரென்றோடி வந்தார்
பார்த்தார்களனைவரும் பயந்தார்கள் மன்னனென்று
அரசாளும் மன்னனுக்கு அழும்புவந்து நேர்ந்ததெனப்
பாராளும்மன்னனுக்குப் பாரவசி நேர்ந்ததென்ன

ஆர்செய்த கோலமென்று அனைவரும் பார்த்தார்கள்
காசிவளநாட்டாளும் கர்னர் பெருமாளும்
காங்கையரும் துரோணரும் கபடன் சகுனியரும்
விதுரனஸ்வத்தாமன் வீஷ்மன் அரசுகேது
குருக்களாசாரியரும் கொற்றவரு மன்னவரும்
சயிந்தவன் துற்சாதனன் தையல்பெருந்திருவும்
எல்லோரும்வந்து ஏக்கமிட்டுத் தானழுது
ஓலையைப்பிரித்துமே உத்தமரும் வாசித்தார்
இது என்னகாரண மிவர்செய்த வேலையென்ன
தெரியாத புத்தியைப்போற் சிறையெடுக்கப்போனதும்
போனவர்க்குத்தீங்கு பிழைமோசம் வந்ததே
கற்புடைய பெண்களுக்குக் கணவனே தெய்வமென்று
கணவனே தெய்வமெனக் காத்திருக்கும் பெண்களண்டை
கற்புரிமைதனைக் கண்டவர்களறிந்திடுவார்
தெரியாமறபோனதென்ன சீமையாளு மன்னவற்குப்
பொறுக்குமோ தெய்வம் பிழைமோசம் வந்ததே
தெய்வம் பொறுத்தாலும் ஜகதலம் பொறுக்குமோ
அவள்-அடங்காத நீலியாச்சே அல்லிமலர் நாயகியாள்
அவளாளுமிடத்திலே அரசனவன் போனதென்ன
ஆராலேயாகுமந்த ஆணிகழற்றுதற்கு
உண்டுபண்ண தச்சன் ஒருவனுலாக வேண்டும்
இஃதென்னவென்று எல்லோருமழுகையிலே
சருகுபோலுடல்குன்றித் தரையில் விழுந்திருந்தான்
காசிவளநாடாளுங் கர்னரவர் பார்த்து
பெரிதான தங்கை பெருந்திருவாள் தான்பார்த்து
இருவருமே பார்த்து ஏதுரைப்பாரந்நேரம்
நான்-சொன்ன வசனமெல்லாம் நலமுடனே கேளாமல்
வேண்டியமட்டும் விருப்பமுடன் சொன்னேமே

எங்களாலானதெல்லா மெடுத்துரைத்தோமப்போது
பேச்சுதள்ளிப்போனீரே பெண்களிடத்திலே
போனதினுலல்லவோ பிழைமோசம் வந்தது
என்றுஅழுது இருவருமேதுசெய்தார்
ஆராலுங்கூடாதிந்த ஆபத்தைத்தீர்ப்பதற்கு
எப்படியென்று ஏங்கிப்பெருந்திருவாள்
கர்னரைப்பார்த்து கன்னியவளேதுசொல்வாள்
கேளுமையாகர்னரே கெடியானவார்த்தையொன்று
ஆருக்குமடங்காத அல்லிமலர்நாயகியாள்
பரிதாபப்பட்டாலும் பைங்கிளியாளடங்காள்
கோபந்தணியாது கொம்பிடையாளவட்குத்
தனியாகநீர்போனல் தனிமதுரைப்பட்டணத்தில்
கருணுபிஷேகனென்று கடுத்தமனந்தெளிவாகும்
இன்பமானவார்த்தையா யிரக்கம்வரநீருரைத்தால்
மனமிரங்கியல்லியவள் மாட்டியவசிகள்யாவும்
பூட்டைத்தரித்து பிழைக்கவைப்பாளுபிரதனைச்
சீவனுடனே துறத்திடுவாள் மன்னவனே
உயிருடன் தண்டிகைமே லுத்தமரேநாமேந்திக்
கொண்டுவருவோம் கொற்றவனேசரணமென்ருள்

கர்னர் ஏணியைக் காலாலுதைத்தது.

அவ்வார்த்தைதான்கேட்டு அதிகர்னவீரியரும்
மன்னவரண்டைவந்து மனதுமிகத்தளர்ந்து
காலாலேதட்டினுர் கனத்ததோரேணிதன்னை
ஆகாயம்பறந்து அந்தரத்தைநாடையிலே
கூடத்தொடர்ந்தாரே கொற்றவருங்கர்னரவர்
பல்லக்குமீதேறிப் பயணமானுர்கர்னரவர்
அவ்வேணிபறந்தது ஏந்திழையாள்கொலுமுகத்தில்
வந்துவிழுந்தது மதுரைத்துரைச்சியண்டை

கர்னர் மதுரைக்கு வருவது.

கர்னருங்கூடவே கடுகநடந்துவந்தார்
பாவிசெய்தவேலைக்குப்பைங்கொடியாள்பொறுப்பளோ
என்றுமுகம்வாடி ஏக்கமுடன்வருகிறாராம்
அங்கே-போரறிந்தமன்னன் புலந்திரன்தான்பார்த்து
அம்மா இந்தஅயிராணி யெங்நேரம்பார்க்கிறது
ஆர்சொன்னாலேணியை அவிழ்ப்பாயோவென்றானே
மதுரைத்துரைச்சி வளநாட்டாள்தான்கேட்டு
துவாரகாபுரிவாசர் ஸ்ரீகிருஷ்ணரிங்கேவந்தால்
காசிவளநாடாளுங் கர்னரவரிங்கேவந்தால்
அப்போதவிழ்ப்பே னென்றாளேயல்லியரும்
இப்படியாய்ப்பேசி யிருக்குமந்த வேளையிலே
மதுரைக்கு வந்துவிட்டார் மன்னவர் கர்னருந்தான்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள் நாயகிக்கு
அஞ்சிப்பயந்தார்க ளல்லியும் பெண்களெல்லாம்
வாறதொரு கர்னருக்கு மரியாதை செய்யுமென்று
பொற்பீடம் போடுமென்றாள் புகழானவல்லியரும்
காசிவளநாடாளும் கர்னரைக் கண்டார்கள்
அல்லியுங்கண்டு அன்பாய் வணக்கஞ்செய்தாள்
வணக்கஞ்செய்த கன்னிக்கு மரியாதை செய்தாராம்
எங்கே வந்தீரென்று ஏந்திழையுங் கேட்கையிலே
சொல்லுகிறேனம்மா சோதிவடிவானவளே
கல்விதெரிந்தவளே காரியமறிந்தவளே
கோபங்கள்வையாதே கொடிமதுரை நாட்டாளே
ஆச்சியரேகோப மரிவைநீ வையாதே
நானறியேனிந்த நடத்தைகள் தெரியாது
தெரிந்தாலே யிப்படிக்குச் செய்தி வரப்போறதில்லை
அவனறியச்செய்தபிழை யன்பாய்ப்பொறுப்பாயே
அவனை-பண்ணினகோலம் போதுமம்மா பாக்கியவதி

செய்தவவகோலம் செய்ததுபோதுமம்மா
காரியுமிழவைத்தாய் கண்டார் சிரிக்கவைத்தாய்
சிரிக்கவுடம்பெடுத்தான் ஜகதலமத்தனைக்கும்
இவ்வளவு போதாதோ யேந்திழையே நாயகமே
தருமவான் தேவிகள் தயவுசெய்ய வேணுமம்மா
புண்ணியவான் தெவிகள் பொறுக்கக்கடனல்லவா
உயிர்தப்பவைத்தால் உலகத்தில் கீர்த்தியுண்டு
பிராணன் தப்பிவந்தாலிந்த பேருலகிற் கீர்த்தியுண்டு
பெண்கள்நிலையைப் பெரும்பாவிதானறியான்
மங்கையர்கள் தன்னிலையை மகாபாவிதானறியான்
நிலையை யறியவைத்தாய் நீதியுள்ள ராசாத்தி
கற்புநிலைகாட்டினாய் கனமான மன்னவனும்
எல்லோருமேபுகழ யேற்றினாய் கீர்த்தியைத்தான்
சகலருந்தான்புகழச் சாற்றினாய்க் கீர்த்தியைத்தான்
நல்லதொரு பெயரெடுத்தாய் நாயகமே மங்கையரே
அந்தமட்டும்போதும் அதிகஸ்துதி செய்யவேண்டாம்
என்முகத்தைப்பார்த்து இறங்கவேணுமுன்மனது
இனிமேலவனுயிரை யிறக்கம்தந்து நீயளிப்பாய்
தட்டிவிடுமாணியை தயவுசெய்யுமல்லியரே
இப்படிக்குக்கர்னர் இதுசொல்லும் வேளையிலே

மதுரைக்கு கிருஷ்ணர் வருவது.

வந்துவிட்டார் கிருஷ்ணர் வாய்திறந்து பேசுகையில்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளப்போது
சிங்காதனமெடுத்து சிக்கிரம் போட்டார்கள்
இருவர்க்கு தெண்டனிட்டு ஏந்திழையாள் ஏதுசொல்வாள்
அனலிற் பிறந்ததொரு அல்லிமலர் நாயகியாள்
பூவிலவதரித்த பெண்பெருமாளல்லியவள்
ஐவர்கள்யாவரும் வனவாசம்போனர்கள்

ஆரிழைமாதரெல்லாம் அரைக்காவலாஞரே
வெற்றிலைதின்னுமல் வெறும்பாக்குவாயிலிட்டு
நாங்கள்-சுக்குகடுக்காய் துவர்பாக்குவாயிலிட்டுத்
துக்கங்கள் நோக்கி யிருக்குமந்தவேளையிலே
உன்னையும்பாராம லுன்பிறப்பை யெண்ணுமல்
அல்லியென்னுமல் ஆண்மைகளைப்பாராமல்
தர்மரைச்செய்தபிழை தையலரைச்செய்யவந்தான்
ஏங்கியழுதாளே யிடைதாவடம்புரள
அப்போ-காசிநாடாளும் கர்னரவர் தான் பார்த்து
பெண்பாபஞ் செய்தவர்க்குப் பேரிடிகள் வந்துவிடும்
நீ பொறுத்தால்பாவமில்லை நேரிழையே கட்டவிழும்
அந்த-போரறிந்தமன்னர் புலந்திரனரோடிவந்தார்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள் தான்பார்த்து
அண்ணுவேயென்று அடிபணிந்துதண்டனிடு
என்று சொன்னதாயாரை யேதுகுறிகேட்கின்ருன்
இழிகுலத்தான் பிள்ளைக்கு என்முடிசாய்கிறதோ
தேர்ப்பாகன் பிள்ளைக்கோ சேவித்துக்கொள்கிறது
என்று-புலந்திரன்சொல்லைப் பூவையவள்கேட்டு
உற்றுற்றுக்கேட்டாளே ஒளிபிறந்தகாதாலே
கோபம்பிறந்தது கொம்பேரிடையாட்குப்
பிள்ளையைப்பார்த்துப் பெண்ணழகி சொல்லுவாள்
உன்-பெரியப்பனல்லவா புண்ணியனே குழந்தாய்
அவரை-கும்பிட்டால் குற்றமில்லை கூரறிவின்சீமானே
மாதாசொல் தட்டாமல் மாலைமுடியானும்
மாமாவே யென்றல்லவோ மலர்தூவித்தண்டனிட்டு
அண்ணுவேயென்று அடிபணிந்துதெண்டனிட்டு
வந்துபணிந்ததொரு மைந்தனைத்தான்பார்த்து
கட்டியணைத்துக் கனிவாயை முத்தமிட்டு

உச்சிமுகந்து உள்ளங்கால் முத்தமிட்டு
மைந்தனைத் தன்மடியில் வைத்திருக்கும் வேளையிலே

அல்லியேணியைக் கழற்றினது.

ஆருதகோப மடக்கினளல்லியரும்
கரைந்ததவள்மனது கல்லான குணங்களெல்லாம்
இறங்கிற்றிவள்மனது இரும்பானநெஞ்சமெல்லாம்
கூடாவசிகளத்தனையும் கொப்பெனவே வாங்கிவிட
உத்தரவுசெய்தாளே உத்தமியல்லியரும்
சொன்னவுடன் தச்சர்கள் துரிதமுடனேவந்து
கூர்வசிகளத்தனையுங் குறிப்பாக வாங்கினர்
பிராணனில்லாப் பொம்மைபோல புரண்டு அழுதானே
காயமேபட்டிருந்த கபடன்துரியோதனன்
கர்ணமுத்திகொடுக்கிறாப்போல் கழுத்தை நெறியடாநீ
கட்டியணைப்பதுபோல் கழுத்தைப்பிடியடாநீ
முளையிலேகிள்ளிவிட்டால் விளைவது நின்றுவிடும்
இப்படிச்சொன்னசொல்லை இந்திரனுந்தான்கேட்டு
மாமாவே நீர்சாட்சி மனமாரக்கேட்டிருங்கள்
பெரியண்ணா நீர்சாட்சி பினத்துவதைக்கேட்டிருங்கள்
அல்லிக்குப்போயிதை யறிக்கையிட்டுவாரேனென்றான்
மைந்தனதுகோபத்தை மன்னவர் கர்னருந்தான்
ஆற்றினர்கோபத்தை ஆனந்தமார்பனுக்கு
மரத்தில்பழுத்தபழம் மரத்தடியில் தான்விழுமே
அவனவன்செய்தகுற்ற மவனவனைச்சேருமென்றார்
இப்போதவன் பட்டதை மறந்துவிட்டுச்சொல்லுகிறான்
இந்தச் சொல்லுன்மனதில்வைக்கவேண்டாமித்திரனே
இந்தபாவி சொன்னபேச்சை பாவைக்குச்சொல்லாதே
அன்னையருங்கேட்டாலப்போதே வெட்டிவைப்பாள்

இந்தவொருசெய்தியை யேந்திழையாள் கேட்டாலே
அவனுக்கு வந்தகதி எங்களுக்கு வந்துவிடும்
படுபாவி சொன்னாலும் பார்மைந்தா சொல்லாதே
வேண்டாமடாவென்று மடியிலிருத்திக்கொண்டு
இந்தவொரு செய்தி இளங்கொடிக்குத்தெரியாது

கர்னரும் துரியோதனனும் அஸ்தினாபுரம் வந்தது.

கர்னரவரப்போது கடுகச்செலவுபெற்று
அல்லியரைமெச்சி அதிகர்ன வீரியரும்
மெதுவாகத் தூக்கிவைத்து மேலே யணைகள்வைத்து
பட்டாடையாலே பல்லக்கைத்தான்மூடி
தூக்கினார் பல்லக்கைத் தோள்மேலே தாங்கினார்
அரண்மனையிற் கொண்டுபோய் அவனைப்படுக்க வைக்கக்
காயங்களாறிக் கனமாக வாழ்ந்திருந்தான்
தன்னரசையாண்டு தானாகத்தானிருந்தான்

* ஏணியேற்றம் முற்றிற்று.

---

* இது, சாதாரண ஜனங்களுக்காகப் பாடப்பட்ட நூல் என்பதும், இத்தகைய நூல்கள் பல தமிழில் உண்டென்பதும், அந்நூல்களுள் ஒன்றாமிதை மாணவர்கள் அறிவது நல்ல தென்பதும் கண்டு, இந்நூலினிடையே சேர்க்கப்பட்டது.

அத்தியாயம் - 8.

கிராமக்கவிஞன் வேட்டுவச்சிக் கதை.

கிராமங்களில், சில கூட்டத்தவர் பழந்தமிழ்ப் புலவர்க ளியற்றிய அரிய வீரக்கதைகளை மனப்பாடம் செய்து, அவ ற்றை வீதியினின்று பல ஜனங்களுங் கேட்டுக் களிக்குமாறு

பாடுவர். அவர்கள் பாடுவது, கேட்பவர்க்கு அவர்களே சுயமாகப் பாடியதாகக் காணப்படும். இடையே அவர்கள் தட்டுத்தடையின்றிப் பாடுவதால், கிராம ஜனங்கள் அக்கூட்டத்தினரைக் கவிராயர்கள் என மதிக்கின்றனர். அத்தகைய கூட்டத்தவருள் ஒருவன், ஒருநாள் நமது கேளம்பாக்கத்தில் ஒரு வேட்டுவச் சிறுமியின் கதையைப் பாடியிருந்தனன். அதனை யான் கேட்டபோது அது மிகவும் செவிக்கு ஆனந்தமாக இருந்ததால், அந்தப் பாட்டினை யிப்போது நமது வாசகர் அறிய ஈண்டு எழுதுகின்றேன்.

வேட்டுவச்சிக் கதை.

செல்வ வளந்திகழும் திருஅமரும் பாஞ்சால
நன்னாடு உலகதனில் நாட்டுமுயர் சுவர்க்கமென
ஓங்கிப் புகழ்படைத்த உத்தமர்கள் வாழ்நாடு
பொய்கண் டறியாத புங்கவர்கள் வாழ்நாடு
புண்ணியமே உருக்கொண்ட புகழுடையோர் வாழ்நாடு
கதிர்நெல் கன்னலெனக் கால்நீண்டு விளைநாடு
கமுகு தெங்கெனவே கதித்தோங்கு மெய்ந்நாடு
பொன்முத்து ரத்தனங்கள் போர்போராய் விளைநாடு
மாத மும்மாரி மகிழ்ந்திடவே பெய்வதனால்
முப்போகம் பொங்கி முழுதுலகும் கொண்டாடும்
சீர்படைத்த நன்னாடு சிறப்புடைய பாஞ்சாலம்
பாஞ்சால நாட்டிறைவன் பாவங்க ளறியாதான்
தன்னுயிர்போல் மன்னுயிரைத் தயவாகக்காத்திடுவான்
குடிகளுக்கு வந்த துன்பம் குலத்திற்கே வந்ததென
எண்ணி மிகவருந்தி இடும்பைகளை யொழித்திடுவான்
மன்னவர்கள் மன்னனவன் மாராஜன் தன் வயிற்றில்
அத்தி மலர்ந்ததென அரும்புதல்வ னவதரித்தான்

ஆணு லழகுபெற்ற அப்புதல்வன் சீரோடு
நாளொரு மேனியாய் நன்ருக வளர்ந்திடுநாள்
அயலரசர் கேட்டாலும் அஞ்சும் திறலுடனே
போரஞ்சா மன்னனெனப் புகழ்மிகவும் பெற்ருனே
வீரர் மனங்களிக்கும் வீராதி சிங்கமெனத்
தீரன் பெயர்படைத்தும் தெய்வந்தனை மறவான்
சீவகா ருண்யமதே திரண்டுருண்டு வடிவாகிப்
பூமியில் வந்தன்ன பொற்புடைய னப்புதல்வன்
பாஞ்சால மன்னன் பரிவுடனே தான்பெற்ற
அருமைக் குமாரனுட னரசாளு நாளையிலே
தங்களைப் பெற்றெடுத்த தாய்தந்தை தெய்வமெனத்
தம்மையாள் ராஜாவைத் தன்மையுட னேசிக்கும்
உண்மைக் குடிகளவர் உரிமையெனத் தாம்கொண்ட
மாடு கன்றுகளை வனத்தில்வாழ் பெருவேங்கை
யொன்று துயர்செய்து ஊறுபல செய்திடவே
மாளாத் துயரெய்தி மன்னவனு ரவையடந்து
"அன்பாக எங்களையே யாளு முபர்துரையே!
என்ன எனச்சொல்வோம் எங்களுக்கே யிப்போது
உண்டான துயரமதை உத்தமனே கானகத்தில்
வாழுமொரு வேங்கை மாடுகன்று தமைக்கொன்று
வம்பு பலசெய்து வருகிறதே" என்றமுறை
யிடவு மரசனவன் "என்னரிய நற்குடிகாள் !
சஞ்சலப் படவேண்டாம் சதுருடனே யவ்விலங்கைக்
கொன்றே யெறிந்துங்கள் கொடுந்துயரை நீக்கிடுவேன்
செல்லுங்கள் நீவிர்" எனச் செப்பியந்த கோமானும்
அருமையாய்ப் பெற்றெடுத்த அருமகனை யருகழைத்துப்
"பாலகனே, கேளாய் நம் பக்ஷமுள்ள நற்குடிகள்
கானகம்வாழ் வேங்கையதால் கடுந்துயரங் கொண்டனரே
உன்னினு மக்குடிகள் உயர்ந்தவர்க ளென்றெனக்கே

யானதால் அவர்துயர மருநொடியில் நீக்கிடவே
எண்ணமே கொண்டுநா னிங்கழைத்தே னுன்றன்னை
யிப்போதே வேட்டைசெய என்மகனே நீயுன்றன்
துணையுடனே சென்றந்தத் துஷ்ட விலங்குதனைக்
கொன்று மீண்டிடுவா குவலயத்தார் புகழ்ந்திடவே''
என்று மொழிந்திட்டான் இணையில்லாக் கோமகனும்
வேடுவர் வீரர் விரகர் பலருடனே
கானகமேசென்று கருத்தாக வேங்கையினைத்
தேடி யுழன்று திசைகள் பல நாடித்
தன்னந் தனியவனுய்த் தானேடி யானமட்டும்
காணு தலைந்து கவலைமிகக் கொண்டே
களைத்து மரத்தடியில் கண்ணுறக்கம் கொண்டெழுந்து
''அந்தோ கொடியன்யான் யாருந்துணை யின்றித்
தன்னந் தனியவனுய்த் தவிக்க விதியாச்சே!
துணையாக வந்தஎன் சூழ்குடிகள் எல்லோரும்
அரசிளங் குமரனை யடவியில் விட்டோமே
என்று கதறிடுவர் இதுவோ என்செய்கை!
தந்தைசொற் படியந்தச் சழக்குற்ற வேங்கையதைக்
கொல்லுந் திறமற்றுக் கொடியவனுய்ப் பசியோடு
பட்டினி கிடக்குமிப் பாவிமுன் அம்மிருகம்
வந்து நெருங்கியெனை வாணகங்களாற் கொன்று
போடாதோ!'' என்று புலம்பிடும் வேளையிலே
வில்லம்பு கைக்கொண்ட வேட்டுவப் பெண்ணெருத்தி
அழகிற் கிருப்பிடமாய் அவ்விடமே வந்தடைந்தாள்
கண்டனனே காளையவன் கன்னியவள் பேரழகைப்
பேரும் விசாரித்தான் பெண்ணவளும் ''ராதாவென்ப
தென்பெயராம் பார்த்திபனுர் தன்மகனே
தேனும் தினைமாவும் தின்று பசியாறி
வருவா யென்னுடனே வஞ்சக வேங்கையது

தங்கி நீரருந்தும் தண்ணீர்த் துறையதனைக்
காட்டுகிறேன்'' என்றுசொலிக் கனிவாக அவன் பசியை
ஆற்றி வேங்கையமரத்துறைக்க ணழைத்தேகிப்
பதுங்கி நிற்கையிலே பாவி மிருகமது
தோன்றிடவே மன்மகனுந் தூயவக்கன்னிகையும்
தத்தமது பாணத்தைத் தகும்விரைவிற் செலுத்திவிட்டார்
இருகணையும் பெருவேங்கை யிருந்தேகத் தேதுளைக்க
மாண்டு வீழ்ந்ததை மகிழ்வுடனே கோக்குமரன்
கண்டு களிபொங்கக் கன்னிகையைப் புகழ்ந்து
நீங்கா விடைபெற்று நெறிகண்டு தன்னுட்டைச்
சேர்ந்தான் அவன்வந்த செய்தி தனைக்கேட்டு
மதலை தனைப்பெற்ற மன்னவனு மன்போடு
மைந்தனை யெதிர்கொண்டு மகிழ்வுடனே யருகழைத்துக்,
கண்ணே யருந்தொழிலைக் கனிவுடனே செய்து வந்தாய்,
ஆதலினு னீவேண்டு மரும்பொருளென் னேசொல்வாய்
இன்னே தருகின்றேன் என்று மொழிந்திடலும்,
''ஐயாவே, பொருள் வேண்டேன் அரசுமுதல் வேண்டேன்,
ஆகயான் வேண்டுவதிவ் வவனியினி லொன்றுண்டு,
அன்னதைக் கூறுகிறேன் அளித்திடுவீ ரவ்வொன்றை,
கானகத்தே வேடர்குலக் கன்னியொருத் தியைக்கண்டேன்,
அவளைமனைவி யெனக்கொள்ள ஆவல்மிக யான்கொண்டேன்
ஆதலினுல் விடையளிப்பீர் அன்பாக'' என்றுமே
வேட்டுவச்சி தனக்காக விழைவுடனே செய்த பல
நன்மைகளை விளங்கிட்டவே நவின்ருனே தந்தை முனம்
அப்போது மன்னவனும் அடங்காச் சினங்கொண்டு
''குலத்தைக் கெடுக்கவந்த கோடரியே இனிநீயும்
என்னுட்டில் தங்காம லேகிடுவா யெங்கேனும்
இன்னும் இருந்திட்டால் இடுவேனுன் தண்டனைகள்''
என்றுரைக்க விளங்குமர னேகினனந் நகர்விட்டுச்

சிந்தை கலங்கிடவே செய்வகையொன் றறியாமல்
இப்படியே பலநாட்கள் இருந்திடவே மகனிழந்த
மன்னவன்மேல் வேற்றரசன் வன்சினமே மிகக்கொண்டு
பெருந்தானை சூழ்ந்துவரப் பேரவையை இனிதடைந்து
" மன்னவனே சண்டைக்கு வந்துவிடு வாயேநீ
உன்னாலே பலபேர்கள் உயிர்மாய்ந்து போகாமல்
வில்வீர னொருவனைநீ விட்டுவிடு என்னோடு
விற்சண்டை செய்தபின் வீணாகத் தோற்றபேர்
தோற்றவராக் கொண்டிடலாம் விரைவாகச் சொல்"
என்றான், அப்போது பாஞ்சால அதிபதியு மதிகலங்
கிச், சிந்தை துயருடனே சிந்திக்கும் போதங்கே
புண்ணிய தீர்த்தங்கள் புக்காடி வந்திருவர்
மன்னனவை முன்னம் வழிபாடு செய்திட்டார்
அன்னவர் தம்முள்ளே ஆரழகு வாய்ந்திட்ட
பெண்ணொருத்தி வாய்திறந்து பெருமானே கேட்டிடு
வீர், எதிராளி யானஇவ் விறைவனுடன் யான்சென்று
விற்போர் மிகச்செய்து விறலுடனே திரும்புகிறேன்
விடையளிப்பீ ரிப்போதே வேந்தர்தம் பெருமானே
என்னலும் மன்னனவன் இன்பவிடை தானளித்தான்
தெரிவையும் பகையாகச் சேர்ந்தவனும் எதிர்நின்று
விற்றிறத்தைக் காட்டுங்கால் விட்டனளே மங்கையவள்
கூரான ஓரம்பைக் கொன்றதே அதுசென்று
வீணாகப் போர்க்கெழுந்தான் மேலோடி மார்புருவக்
கண்டானே பாஞ்சாலக் காவலனும் காரிகையை
அருகழைத்து " நீயார் அம்மாவே என்றனக்குச்
சொல்லிடுவாய் எனக்காகத் துயரம்பா ராட்டாது
விற்போர் புரிவதற்கே மேவிய அக்காரணமென்"
என்றுரைக்க ஏந்திழையும் "என்னிறையே இப்போது
கையம்பால் மாண்டவக் கசடனவன் என்தந்தை

உன்னையம் பிரியாத உத்தமனை வஞ்சித்துப்
பலதேசங் கைக்கொண்டு பார்த்திபனை யென்னோடு
கானகத்தே விட்டுத்தான்
களிப்புடனே யாண்டிருந்தான்
அன்னவனைக் கொன்றேயென்
அருஞ்சினத்தை முற்று வித்தேன்
போரஞ்சா மன்னவனே
போந்தெதன் னுடனிருக்கும்
என்துணைவர் யாரோஎன் றெண்ணவே வேண்டாநீர்
தவமா தவமிருந்து தயையுடனீர் ஈன்றெடுத்த
தனையனு ரிவரென்றன் தருங்கணவ ராமிவரை
நாயினுங் கடைபோன நங்கையென் பொருட்டாகத்
தேசத்தில் விட்டொழித்தீர்சிறுஜாதி நானென்றே
யிப்போதேனும் தயையாய் இவ்விறையை மணம்புரிய
இனியவிடை பகர்ந்திடுவீ" ரென்றுமே தன்னெதிராய்
உள்ளமன் மகனவன்றன் உறுவேஷந் தான்மாற்றி
நின்றிடவே மன்னவனுநெஞ்சிற் களி தூங்க
இருவரையும் அருகழைத்தே இனியமொழி பலபேசி
மங்கல நாளொன்றினிலே மணங்கூட்டி வாழ்ந்தானே.

இப்படியே இந்தக் கதை, அந்த அரசிளங் குமரன் தன் இனிய மனைவியுடன் இரண்டு ராஜ்யங்களுக்கு முரியவனாய் வாழ்ந்திருந்த கதையினை விவகரிப்பதாயுளது.

அத்தியாயம்—9.

கழைக்கூத்தாடிகள் - முன்னுரை - கழைக்கூத்தாடிகள் செய்த பலவாய அற்புதச் செய்கைகள்.

கிராமங்களில் வாசம் செய்வோர் ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் மிகவும் சந்தோஷமாகத்தமது பொழு

தைப் போக்குவர். அவர்களுக்கு அந்தக் காலத்தில் ஒரு விதமான வேலையும் இராது. சாதாரணமாகத் தென்னிந்தியாவில் உள்ள கிராமங்களில், ஜூன், ஜூலை மாதங்களிற்றான் உழவுத்தொழில் ஆரம்பிக்கப்படும். அந்த மாதங்களில் மழைபெய்ய, விளை நிலங்கள் உழுவதற்குரிய பக்குவத்துடன் இருப்பதறிந்த குடிகள், தங்கள் தங்கள் மாடுகளுடன் அந்நிலங்களை உழுதற்காகச் செல்வர். அவ்வுழவுத் தொழில் முற்றுப்பெற ஏறக்குறைய பத்துப் பதினைந்து தினங்கள் செல்லும். அதன் பிறகு, அந்நிலங்கள் விதைப்பதற்குரிய பக்குவமுடையன என்பதைப் பலநாள் அனுபவங் கொண்டறிந்த அவ்வேழை ஜனங்கள், நன்னாள் கொண்டு விதைவிதைப்பர். விதை விதைத்து நாற்றுநட்டு முடிந்தபின், அவர்கள் எல்லோரும் மேலும் பயிர்கள் செழித்து வளர்வதற்குக் கருவியான மழையின் பொருட்டு வானத்தை அடிக்கடி அண்ணாந்து நோக்குவர். போதுமான அளவு மழை பெய்யாவிடின் அப்போது அவர்கள் தத்தமது நிலங்களுக்கு அணித்தாகவுள்ள கிணறுகளினின்றும் நீர் இறைத்து, அவ்விளை நிலங்களுக்குப் பாய்ச்சுவர். கிணறுகளில் சுமார் பதினைந்து அல்லது இருபதடி ஆழத்தில் நீர் இருக்கும். அந்த நீரைக் குடிகள் தங்கள் நிலங்களுக்கு இறைப்பது, மிகவும் கஷ்டமான கார்யமாகும். அயல் நாடுகளில், நீர்ப்பாய்ச்சுவதற்காக ஏற்பட்ட திருத்தங்கள் இன்னும் நமது கிராமங்களில் அனுஷ்டிக்கப்படவில்லை. ஆதலால் குடிகள் அதிகாலையில் சுமார் இரண்டு மூன்று மணிக்குக் கிணற்றிற்குச் செல்வர். இருவர் ஏற்றத்தின்மீதேறி ஏற்ற மரத்தை மிதிப்பர். ஒருவன் கிணற்றின் மத்தியில் இடப்பெற்ற மரத்துண்டின்மேனின்று, அவ்விருவர் மிதிப்பால் நிறையும் நீர்ச்சாலை வயலின் கால்வழியாகக்கவிழ்த்துக்கொண்டிருப்பான். இப்படியே ஒவ்வொரு நிலத்துக்கும் மூன்றுபேர் அந்தநேரத்திலிருந்து பகல் பத்து

மணி வரையிலும் நீர்ப்பாய்ச்ச வேண்டும். அங்ஙனம் பாய்ச்சுவது ஒரு நாள், இரண்டு நாட்களுக்கென்றால், சுலபமேயாகும். மழைவளங் குறைந்தால், பயிர் செம்மையாய் வளர்ந்து கதிர்முற்றும் வரையில், அவ்வேழைகள் அத்தகைய பாடுபடவேண்டியதே. அவர்கள் அந்தக் காலங்களில், தினந்தோறும் பத்துமணி வரையில் நீரிறைத்துப் பின், வீட்டிற் சென்று உணவுண்டு, மீட்டும் மூன்றுமணிக்குத் திரும்பிவந்து ஏற்றம் பிடிப்பர். இதனால் கிராம ஜனங்கள் எள்ளளவேனும் தாங்கள் செய்யும் வேலையில் சோம்பல் உடையவர் அல்லர் என்பது நன்கு விளங்கும். அவர்கள் ஏற்றம் இறைக்கும்போது, சிரமம் தோன்றாதிருக்க ஏதேனும் வாய்க்கு வந்த பாட்டைப் பாடுவர். அவர்கள் அங்ஙனம் பாடும்பாட்டே ஏற்றப்பாட்டென்று சொல்லப்படும். அந்தப் பாட்டினை அவ்வழியாக வரும் பெண்கள், ஆவலுடன் வெகுநேரம் வரையில நின்று கேட்பர். அந்த ஏழைகள் வாயினின்றும் வரும்பாடல்கள், சில சமயங்களில் வரும் சம்பவத்தைக் குறிக்கக் கூடியனவாகவும் இருக்கும். ஆதலால், அப்பாடல்களைக் கேட்கும் பெண்கள், தங்களுக்கு நற்குறியல்லது துர்க்குறி உண்டாயதென்பதனை அப்பாட்டினால் அறிந்து கொள்கின்றனர். அங்ஙனமாக அவ்வேழை ஜனங்கள் ஏறக்குறைய ஐந்து மாதம வரையில் நீரிறைப்பதும், நாற்றுநடுவதும், களைபிடுங்குவதுமாய தொழில்களில் தமது முழுக்கருத்தையும் செலுத்தி யுழைப்பர். அவர்கள் அப்போது ஊணுறக்கத்திலும கூடத் தங்கள் கவலையைச் செலுத்தார். நிலங்கள் விளைந்த பிறகு, அவர்கள் இரவுக்கும், பனிக்கும், குளிர் காற்றிற்கும், விஷ ஜந்துக்களுக்கும் சிறிதும் அஞ்சாது, அந்த நிலஙகளில் குடிசை யிட்டுக்கொண்டு, பயிர்கள் பறவையாலும், மாடுகளாலும், கள்வராலும், மற்றும்

பலவழியாலும் கொள்ளை போகாதபடி, அதிற் றங்கிக் காவல் காத்திருப்பர். பின், டிசம்பர் அல்லது ஜனவரி மாதத்தில் அறுவடைகாலம் நெருங்கும். அப்போது அவர்கள் பயிரை அறுவடை செய்து ஒப்படிசெய்து பின், தெய்வம் பரவித் தானியத்தை இடுவார்க்கிட்டு வீட்டிற்கொண்டுவந்து சேர்ப் பர். தங்களுடன் உழைத்த உழவு மாடுகளுக்கு உணவாகத் தங்கள் உழவின் பலனுகக் கிடைத்த வைக்கோலைத் திரித் துப் போராக்கி, அதனைத் தங்கள் புறக்கடையில் சேமித்து வைப்பர். இவ்வளவுமான பிறகு தான், அவர்களுக்கு ஓய் வடையும்காலம் உண்டு. அந்த ஓய்வு காலத்தில், குடிகள் சந்தோஷமாக ஒரு கவலையுமின்றித் தங்கள் தங்கள் வீட் டில் சுபகார்யங்களை நடத்தி மகிழ்வர்; வேடிக்கை விநோ தங்களில் தமது பொழுதைப் போக்குவர்.

அங்ஙனமே ஒரு ஜனவரி மாதத்தி லொருநாள் அதி காலையில், கேளம்பாக்கத்து ஜனங்கள் ஆங்காங்கே வழக்கம் போல் கூட்டம் கூட்டமாகக் கூடிப் பேசிக்கொண்டிருந்த னர். அப்போது சூர்யனுதயமாகவில்லை. மரம் பச்சைகள் எங்குக் காணினும் தளிருடன் கூடிக்குளிர்ந்த காற்றை வீசின. பறவை யினங்கள் குதூகலத்துடன் கூவியும் பாடியும் பறந்து மரங்களிற் குதித்துக் கொண்டாட்டமாக இருந்தன. அப்போது அவ்வூர்த் தலையாரியாகிய முத்துநாய்க்கன் என்ப வன் அந்தக் கூட்டங்களுள் ஒரு கூட்டத்திற் கலந்து பே சிக்கொண்டிருந்த முன்சிப் கோதண்டராம முதலியாரிடம் வந்து, "எஜமானே, நமது கிராமத்துக் கோயிலுக்கு அருகே யுள்ள மாந்தோப்பில் கழைக்கூத்தாடிகள் வந்திருக்கின்றனர்" என்று தெரிவித்தான். அந்த விஷயம் அப்போதே மின் சாரம்போல் அந்தக் கிராம முழுவதிலும் பரவியது. அவ்வி ஷயத்தினைக் கேட்ட இளம்பிள்ளைகளுட் சிலர், தத்தம் பெற்

ரோர்களிடம் ஓடிக் கழைக்கூத்தாடிகள் வரவைத் தெரிவித்தனர். சிலர், மாந்தோப்பில் ஓடிக் கழைக் கூத்தாடிகளைக் களிப்புடன் பார்த்தனர். கிராமப் பெண்கள் அனைவரும், கழைக்கூத்தைப் பார்க்கும் வண்ணம் மத்தியான போஜனத்தை அவசரம் அவசரமாகச் சமைத்தனர்.

அன்றையதினம் நமது கேளம்பாக்கத்தில் வந்த கழைக் கூத்தாடிகள் தொம்பரவர் ஜாதியைச் சேர்ந்தவராவர். தொம்பரவர், ஆங்காங்குள்ள கிராமங்களிற்சென்று தங்கள் வித்தையினைக் குடிகள் மகிழும் வண்ணம் காட்டிப் பரிசுபெற்று அதனால் ஜீவித்து வரும் ஒரு தாழ்ந்த வகுப்பினைச் சேர்ந்த கஷ்டப் பிராணிகள். அங்கு வந்த அந்தக் கழைக் கூத்தாடும் கூட்டத்தின் தலைவனுக்குச் சுமார் நாற்பது வயதிருக்கும். அவன், இருபது வயதுடைய தனது தம்பியுடனும், முப்பது வயதும் நிரம்பப்பெறாத தனது மனைவியுடனும், எழுவயதும் ஒன்பது வயதும் நிரம்பப்பெற்ற இரண்டு புதல்வருடனும் அவ்விடத்தில் வந்து, தனது திறமையைக் காட்டிப் பரிசு பெற நோக்கங் கொண்டனன். அவன் அந்த எண்ணத்துடன், கிராம முன்சீப்பினிடம் வந்து, கிராமத்தில் தன் வித்தையைக் காட்ட உத்தரவு கேட்டான். முன்சீப் அவர்கள் அங்குள்ள பெரியோர்களுடன் அதைப் பற்றிக் கலந்து யோசித்து, அன்று பகல் மூன்றுமணிக்கு ஆட்டம் தொடங்குமாறு உத்தரவளித்தனர். அந்தக் குறித்த நேரத்தில், கிராமத்திலிருந்த ஜனங்கள் எல்லோரும் வந்து குவிந்தனர். ஆட்டம் முன்சீப் அவர்களின் வீட்டுக்கெதிராக உள்ள இடத்தில் வைத்துக் கொள்ளப்பட்டது. முன்சீப்பும், மற்றைய பெரிய மனிதரும் ஆட்டம் ஆடுவோருக்கு முன்பாகப் பாயிட்டு உட்கார்ந்து கொண்டனர். மற்றைய ஜனங்கள் அனைவரும் அவ்விடத்தில் வளையம்போல் சூழ்ந்து நின்றனர்.

இடையே ஆட்டம் ஆடுதற்கென விஸ்தாரமாக இடம் இருந்தது. பெண்கள் அனைவரும் ஒரு பக்கமாகக்கூடி அந்த வேடிக்கையைக் காண நின்றனர். அப்போது கழைக்கூத்தாடிகளின் தலைவன், ஆட்டம் ஆரம்பிப்பதற்கு முன்சிப் அவர்களிடம் விடைபெற்றுத் தன் மேளத்தை முழக்கினன். அந்த முழக்கத்தைக் கேட்ட, வந்தும் வாராது மிருந்த ஜனங்கள் பலரும் மிகவும் விரைவாக வந்து சேர்ந்தனர். பின் அந்தக் கூத்தாடி, "எஜமான்மார்களே! நான் நேற்று முன் தினம் ஜமீன்தார் ரங்காரெட்டியார் முன் என் வித்தையினைக் காட்ட அவர் மகிழ்ந்து, எனக்கொரு சரிகை அங்கவஸ்திரத்தைப் பரிசாக அளித்தனர். ஜமீன்தார் ராமசாமி முதலியார் என் மனைவி கட்டிக்கொண்டிருக்கும் அந்தச் சரிகைப் புடைவையினைத் தந்தனர். இந்தக் கேளம்பாக்கத்தில் இருக்கும் எஜமான்மார்கள், மிகவும் கிருபையுள்ளவர்கள் என்பதை யான் அறிவேன். ஆதலால், இந்த ஏழைகளாகிய நாங்கள் பிழைத்துப்போக எங்கள் அருமையும் ஆச்சர்யமுமான வித்தையினைக்கண்டு, தங்கள் தங்கள் கையில் கிடைத்த பொருளை எங்களுக்குப் பரிசாகக்கொடுங்கள். நாங்கள் ஜாண் வயிற்றிற்காக ஊரூராய்ச் சென்று இந்தப் பாடுபட்டு வருகிறோம்" என்று சொல்லி முடித்துத் தனது இரு சிறுவரையும் தம்பியையும் அழைத்தான். அவன் அழைத்ததும் அம்மூவரும் அந்தக் கூட்டத்தினடுவில் குதித்துக்கொண்டேயோடிவந்து, கரணங்கள், முக்கரணங்கள் போட்டு ஜனங்களை மகிழ்ச்சி செய்தனர். உடனே கழைக்கூத்தாடிகள் தலைவன், கழையின்மீது நின்று, பலரும் பயப்படக்கூடிய விதமான விளையாட்டைச் செய்தான்; மாஞ்செடி முளைக்க வைத்தான்; தனது மனைவியைப் பெட்டியில் கட்டிப்போட்டு அவளை மீட்டும் அப்பெட்டியிற் காணாது, அவள் பெயரிட்டு அவளை அழைத்தான். உடனே, பெட்டியில் அடைபட்டு

மாயமாகச் சென்றவள், வீதியின் கோடியிலிருந்து அவ்விடம் ஓடி வந்தாள். அந்த அற்புத வித்தை அந்தக் கடைசி விளையாட்டோடு முடிவடைந்தது. அவற்றை யெல்லாம் சாவதானமாகவும் சந்தோஷத்தோடும் கண்டிருந்த ஜனங்கள், தங்கள் தங்கள் மனம் வந்தவாறு, அந்தக் கூத்தாடிகளுக்கு வஸ்திரங்களையும் பணங்களையும் வாரி யிறைத்தனர். பிறகு முன்சீப் அவர்கள், அந்தக் கிராமத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டாரும் அந்தக் கூத்தாடிகளுக்கு ஒவ்வொரு மரக்கால் நெல் கொடுக்கவேண்டும் என உத்தரவு செய்தார். பிறகு அந்த ஏழைக்கூத்தாடிகள், குடிகளிடம் தானியங்களைப் பெற்று மகிழ்ச்சியோடு சென்றனர். அவர்கள் சென்றதும், அவ்வூர்க்குடிகள் அவர்கள் ஆட்டத்தின் திறத்தைப் பலநாள் மறவாது தமக்குள் பேசிப் புகழ்ந்து வந்தனர்.

அத்தியாயம்—10.

பாம்பாட்டி - பாம்பினிடத்து இந்தியர் வைத்துள்ள அன்பு - பெருமாள் மாட்டுக்காரனுடன் வரும் பசுவும் எருதும்.

நாகரிகத்திற் குறைவுபட்ட ஜனங்களுட் பெரும்பாலார், தாழ்ந்த ஜந்துக்களை வணங்கும் பொருளென மதிக்கின்றனர். சில பிராணிகள் மனிதருக்குப் பயத்தையும் வெறுப்பையும் விளைவிப்பனவாகவுள்ளன; சில நன்றியறிதலுள்ளவையாய் மனிதரது பக்ஷத்திற்குப் பாத்திரமாகவுமுள்ளன; வேறு சில, தமது அரிய கூரிய புத்தியின் வன்மையால் ஜனங்களுடைய பிரீதியைக் கவரும் தகுதியுடையனவாக இருக்கின்றன. இந்தியாவில் உள்ள ஜனங்களுட் பலர், மிருகங்களுள் சிலவற்றை மிகவும் சிறப்பாகப் பாராட்டுகின்றனர். அவர்கள், விஷப்பற்களால் தமக்கு இடையூறு விளைவிக்கும் பாம்புகளுக்

குப் பயந்து, அவற்றைத் தெய்வமாய் வணங்குகின்றனர். பசுக்களையோ, அவர்கள் தெய்வத்தன்மை பொருந்திய மிருகம் என எண்ணி, அவற்றைப் பக்தியுடன் வழிபாடு செய்து வருகின்றனர். அவர்கள் அம்மிருகங்களிடத்தில் அன்பு செய்வதற்கேற்ப, அவையும் மனிதர்கட்கு எல்லா விதத்தாலும் உபயோகப்படுகின்றன. பாலும், மற்றும் பசுக்களிடத்து உண்டாகும் பலவாய பொருள்களும், ஜனங்களுக்கு மிகவும் இன்றியமையாத பொருளாகவுள்ளன. ஆனதுபற்றி, அவர்கள் தங்களுக்கு எவ்வகையாலும் பேருதவியைச் செய்யும் அம்மிருகத்தை உயிருக்குயிராக நேசித்துப் பூஜைசெய்து போற்றிப் புகழ்கின்றனர். மற்றும், வானரமும் இந்தியர் வணங்கும் மிருகங்களுள் ஒன்றாய் விளங்குகின்றது. அது அத்தகுதியை மேற்கொண்டது அதனது கூரிய அறிவினாலேயாகும். இங்ஙனமாக, இம்மூன்று காரணங்களைக் கொண்டு ஜனங்கள் தாழ்ந்த மிருகங்களை உயர்வென மதிக்கின்றனர்.

அவற்றுள் முதலாவதாகக் கூறப்பட்ட பாம்பைப்பற்றிச் சிறிது சொல்கிறேன். பாம்புகளை இந்தியர் மாத்திரமேயன்றி ஏனைய நாட்டவரும் பெரும்பாலும் வணங்கிவருகின்றனர். அவர்கள் அனைவரும் அங்ஙனம் செய்வது, தாம் அந்த ஜந்துக்களிடத்தில் வைத்த பயத்தினாலேயாகும். பயமே உலகில் முதற் கடவுளை உண்டுபண்ணியது என்று பொருள்படும் ஆங்கிலப் பழமொழியே, இதனை வலியுறுத்தும். பாம்பைப்போல் மிகவும் கொடிய ஜந்து உலகிலேயே இல்லையென்னலாம். அவற்றின் கொடுந்தன்மையைப் பற்றிப் பழங்காவியங்கள் எல்லாம் இன்றும் நமக்குப் பெரும் பயத்தை உண்டாக்கும் விதமாகப் பரக்கத் தெரிவிக்கின்றன. அக்கொடிய ஜந்துக்களின் விஷந்தோயப்பெற்ற அம்புகளால் ஸ்ரீராமனது

சகோதரனுன லக்ஷ்மணன் மரணமூர்ச்சையான விஷபத்தை நாம் ராமாயணத்தில் காண்கிறோம். அரிச்சந்திரனது ஏக புத்திரனுகிய தேவதாசனுயிரைக்கொன்ற பாம்பின் கதையை அரிச்சந்திரபுராணம் நமக்கு விளக்கமாகத் தெரிவிக்கிறது. மிகவும் பிரசித்திபெற்ற நளசரித்திரத்தில், தமயந்தி என்பாள் கானகத்தே கடும்பாம்பின் வாய்ப்பட்டு, வேடன் ஒருவனுல் பிழைத்தனள் என்றும் சொல்லப்பட்டுள்ளது. அன்றியும், சாஸ்திர நம்பிக்கையுடைய ஒவ்வொரு இந்தியனும், ஆயிரம் தலையையுடைய ஆதிசேஷன் என்னும் பெயருடைய பாம்பே இப்பூமியைச் சுமந்து கொண்டிருக்கிறது என்னும் கொள்கையுடையவனுக இருக்கிறுன். இங்ஙனமாக இந்தியர் பாம்பைப் பூஜிப்பதற்கு மற்றும் பல காரணங்கள் உள்ளன. ரக்ஷகதெய்வமாம் ஸ்ரீ விஷ்ணுமூர்த்தி அந்தப்பாம்பின் மீது பள்ளிகொள்வதாயும், சம்ஹார கர்த்தாவாகிய ருத்திரமூர்த்தி, அப்பாம்பையே ஆபரணமாகக் கொண்டிருப்பதாகவும், புராணங்களும் மற்றும் பல நூல்களும் நமக்குத் தெரிவிக்கின்றன. மேலும், சூர்ய கிரஹணமும் சந்திர கிரஹணமும், ராகு, கேது என்னும் பாம்புகளினுலேயே உண்டாகின்றன என்றும் சிலர் நம்பியிருக்கின்றனர். இவை நிற்க, இந்தப் பயங்கரமாய ஜந்து, ஜனங்களுக்குள் பெரும்பீதியை உண்டுபண்ணுவதால், அதைப்பற்றிப் பலவாய் பழமொழிகளும் வெளிவந்துள்ளன. அவை "பாம்பென்முல் படையும் நடுங்கும்" "பத்துப்பேரில் வீழ்ந்த பாம்பு சாவாது." என்றன் முதலியவையேயாகும். பார்த்தீர்களா பாம்பின் மகத்துவத்தை? துஷ்டன் ஒருவன் எல்லோரையும் வருத்தி வருவானுயின், அவனை அவ்வெல்லோரும் பணிந்து போற்றுது வேறு என்ன செய்வர்? அங்ஙனமே பார்த்த அக்கணத்திலேயே நமக்குப் பயத்தையும் மூர்ச்சையையும் உண்டுபண்ணும் பாம்பினங்களை ஜனங்கள் பூஜிக்கின்றனர். இந்தியன்

ஒரு பாம்பைக் கொன்றால் அவன் அதனைப் புதைத்து மனித ருக்குச் செய்வதுபோலவே ஈமக்கிரியைகளைச் செய்கிறான். சிலர் பாம்புகள் வாசம்செய்யும் புற்றுக்கள் இருக்கும் இடத் திற்சென்று, அங்குள்ள பாம்புகளுக்கு உணவாக முட்டை யும் பாலும் தருகின்றனர். ஆட்டம் ஆடவல்ல தாசியான வள், பாம்பினை மாலையாகத் தரித்துப் பயமின்றிச் சபை நடு வில் நர்த்தனம் செய்வாளாயின், அவளை ஆட்டத்தில் மிகவும் வல்லவள் என ஜனங்கள் மதிக்கின்றனர்.

இங்ஙனம் யாம் கூறியவற்றால், அந்த ஜந்துக்களிடத் தில் இந்தியர் பலவாறாய காரணங்களைக் கொண்டு மிகவும் பக்ஷமும் பயமும் பாராட்டுகின்றனர் என்பது இனிது விளங் கும். அத்தகைய கொடூரமான ஜந்துக்களை வசப்படுத்தி, தான் கருதியவண்ணம் அவற்றை ஒருவன் ஆட்டுவது, எவ ரும் அதிசயிக்கத்தக்க காட்சியே யன்றோ? இந்தியாவில், மஹா அலக்சாண்டர் படையெடுத்து வந்த காலத்திலேயே, பாம்புகளைப் பழக்கியாட்டும் வித்தை யிருந்ததென நமக்குச் சரித்திரங்கள் சான்று பகர்கின்றன. அவ்வித்தை இந்தக் காலத்திலும் இல்லாமற் போகவில்லை. அது இந்தக்காலத்தில், தென்னிந்தியாவின் எல்லாப்பாகத்திலும் சர்வ சாதாரணமாக இருந்து வருகிறது.

ஒருநாள் நமது கேளம்பாக்கத்தில் ஒரு பாம்புப்பிடாரன் வந்து சேர்ந்தான். அவன் தனது தலையில் ஒருபெரிய தலைக் குட்டை தரித்திருந்தான். அவனுடைய கையில் குலிசம் இடப்பெற்றசெப்புக்கவசம் ஒன்றுவிளங்கியது. அந்தக்கவசத் தின் மகிமையாற்றான், அந்தப் பிடாரன் விஷப்பாம்புகளைத் தன் மனம்போனபடி எல்லாம் ஆட்டும் ஆற்றலுடையவனாய் இருந்தான். அவனிடத்தில் அக்கவசம் உள்ளவரையில், பாம் பின் விஷம் அவனை யொன்றும் செய்யாது. அவனது மற்

ஞெரு கையில், மகுதி (மோடி) என்னும் இசைக்கருவி துலங்கியது. காய்ந்த சிறு சுரைக்குடுக்கையின் இடையே உட்டொளையுடன் பலசிறு துவாரங்களையுடைய மெல்லிய இருமூங்கில்கள் இணைக்கப்பெற்ற அந்த மகுதி என்னும் இசைக்கருவியின் ஓசை, பாம்புகளை வசப்படுத்தும் ஆற்றல் அமைந்தது. மகுதியோசையைக் கேட்டதும் பாம்புகள் தமது தீயச்செயலை மறந்து, செயலற்று அந்த ஓசையிலேயே தமது கருத்தைச்செலுத்திவிடும். அந்தப்பிடாரன், தன் தொழிலுக்கு அனுகூலமான மேற்கூறிய பொருள்களுடன், அந்தக் கிராமத்தில் வந்ததும் கிராமாதிகாரியான கோதண்டராம முதலியார் வீட்டின் எதிராகவந்து நின்று தன்மகுதியை வாசித்தான். வாசித்ததும் உடனே கோதண்டராமமுதலியாரும் அவர் வீட்டினுள் இருந்த வேறு சிலரும், அக்கம்பக்கத்து வீட்டுக்காரரும் அவ்விடம் வந்து சேர்ந்தனர். அப்போது அந்தப்பிடாரன், "தருமவான்களான எஜமான்மார்களே, நான் இந்தப் பெட்டியில் நான்கு பெரிய நல்ல சர்ப்பங்களை வைத்திருக்கிறேன். அவற்றில் ஒன்று கருநாகமாகும். அது மற்றைய மூன்றினும் மிகவும் குரூரமும் பயங்கரமுமானது. இந்த நான்கு பாம்புகளும், இதோ என்து கையிற் கட்டப்பட்ட இக்கவசம் இல்லாவிடின், என்னை எப்போதோ கொன்றிருக்கும். இந்தக் கவசம் என் கையை விட்டு நழுவி விடுமாயின், நான் இந்தப் பாம்புகளை ஒன்றும் செய்யமுடியாது. அவை இப்போதென்னைக் கடித்தபோதிலும் அவற்றின் விஷம் எனக்கு ஒரு தீமையையும் செய்யாது. அன்றியும் இக்கொடிய பாம்புகளின் விஷத்தைப்போக்க என்னிடத்தில் மருந்தொன்றும் இருக்கிறது. அந்த மருந்து எத்தகைய விஷத்தையும் ஒருநொடியில் போக்கிவிடும். அதனைக்கடி வாயில் இழைத்துத் தடவவேண்டியதுதான் தாமதம்; உடனே விஷம் இருந்தஇடமே தெரியாது. இப்போது இந்த நான்கு பாம்புகளும் எப்படி

என் மோடி யோசையைக்கேட்டுச் சந்தோஷப்படுகின்றன என்பதையும், கருநாகம் எப்படி எனக்கு முத்தம் அளிப்பதென் பதையும் உங்களுக்குக் காட்டுகிறேன்'' என்று சொல்லி மறு படியும் தனது மோடியை வாசித்துக்கொண்டே அதிக சாக் கிரதையுடன், பாம்புப் பெட்டியைத் திறந்தான். திறந்ததும், நான்கு பெரிய நாகங்கள் அந்தப் பெட்டியினின்றும் நலிந்து கொண்டே வெளிவந்தன. அவை வெளிவந்ததும், பிடாரன் மேலும் தனது மோடியை இன்னோசையுடன் ஊதினன். அப்போது அந்தப்பாம்புகள் நான்கும் படமெடுத்து, பிடார னது கவசமணிந்தகை அசையும் பக்கமாக அசைந்து ஆடத் தலைப்பட்டன. பிறகு அவன், கருநாகந் தவிர மற்றைய பாம்புகளைப் பேழையில் அடைத்து, முன்னிலும் அதிக பயத்துடனும் இன்னோசையோடும் மோடியை வாசிக்கலா னன். அப்போது அந்தக் கருநாகம் வரவர மேலுக்குப்பட மெடுத்துயர்ந்து பிடாரனுக்கு அருகே வந்தது. அதைக் கண்டதும் பிடாரன்தான் ஊதுவதை நிறுத்தினன். உடனே அந்தப் பாம்பு, வெறுப்புற்றதுபோல உஸ்ஸ் என்ற சப்தத்து டன் தனது தலையைப் பூமியில் வீழ்த்தியது. அப்படி அது விழும்போது மெதுவாகப் பிடாரன் இதழைத் தொட்டது பார்த்திருந்த ஜனங்களுக்கு அது அவனை முத்தமிட்டதாகத் தெரிந்தது. இந்த அரிய விளையாட்டை ஜனங்கள் கண்ட தும் அவர்கள் அதிக சந்தோஷமும் திருப்தியும் அடைந்தவ ராய், அந்தப் பிடாரனைப் பலப்பல கேள்விகளைக் கேட்டனர். பிடாரன், அவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் தக்க வாறு விடைகூறித் தன்னிடத்தில் இருந்த மருந்தை அவர் களுக்குக் காட்டி விலை கூறினன். அப்போது அந்தக் கிரா மத்தில் இருந்த குடிகள் அனைவரும் தங்கள் தங்கள் வீட்டி ற்குக் காப்பாக மருந்தை வாங்கிச் சேமித்துக்கொண்டனர். அவர்களுக்கு அந்தப் பிடாரன்விற்ற மருந்தின்மேல் அதிக

நம்பிக்கையுண்டு. அதனுல் அவர்கள் அம்மருந்திற்குப் பிடாரன்கேட்ட விலையைக்கொடுத்துவாங்கினர்; கொடுத்தனர். அவன் சில சமயங்களில், உற்சவ காலங்களிலும் சந்தையிலும் தன் மருந்தை யெடுத்துக்கொண்டு வருவான். அப்போதும் அவனது மருந்தின் மகத்துவத்தை யறிந்த ஜனங்கள், அவன் கேட்ட விலையைக்கொடுத்து மருந்தைப்பெறும் வழக்கம் உடையவராய் இருந்தனர்.

தென்னிந்தியாவில் பெருமாள் மாட்டுக்காரர் என்னும் சாதியார் சிலர் இருக்கின்றனர். அவர்கள் பசுக்களையும் எருதுகளையும் தாங்கள் சொல்லியபடி எல்லாம் செய்யப் பழக்கி வைத்துள்ளனர். அவர்கள் அம்மிருகங்களைப் பழக்கிய செயலை ஐரோப்பிய நாட்டில் மிருகங்களைப் பழக்கும் தொழிலாளரும் காண்பாராயின், தங்கள் தொழிலின் சிறுமையை வெறுத்துத் தங்கள் புகழ் கெட்டதே என்று நாணுறுவர். இந்தப் பெருமாள் மாட்டுக்காரரைப்போல், அந்த ஐரோப்பியர் மிருகங்களைப் பழக்கி ஆட்டங்காட்டும் திறமற்றவர் என்பதை, அவர்கள் அந்தப் பெருமாள் மாட்டுக்காரர் செய்கையைக் காணும்போது அதிசயத்துடன் பார்ப்பதினுலேயே நாம் அறிந்து கொள்ளலாம். இந்தப் பெருமாள் மாட்டுக்காரர் வகுப்பைச்சேர்ந்த ஒருவர், ஒருநாள் நமது கேளம்பாக்கத்திற்கு வந்தனர். அவர்களுள் ஒருவன் ராமன் என்னும் பெயருடைய ஒரு பெரிய அழகிய எருதைப்பற்றியிருந்தனன். மற்றொருவன் சீதை என்னும் பெரிய ஒரு நல்லசாதிப் பசுவைத்தன் சுவாதீனத்தில் வைத்திருந்தான். கழுத்தில் மணியும் வேறு சில ஆபரணங்களுடனும் விளங்கப்பெற்ற அந்த எருதை, அதைப்பற்றி யிருந்தவன் முதலில் ஜனங்கள் முன்பாகவிட்டான். பின்னர், அவன் அந்த எருதைப் பலப்பல கேள்விகளைக் கேட்டான். அந்தக்

கேள்விகளுக்கு ஆம் என்று சொல்லவேண்டிய விடைகளுக்கெல்லாம் அந்த்எருது தன்தலையை அசைத்தது; அல்ல என்ற விடைக்கெல்லாம் தன் கழுத்தை அசைக்காது வாளா இருந்தது. பிறகு அந்த எருதுக்கு உடையவன் "நாம் இப்போது தயாளசிந்தையும் தருமகுணமும் நிறைந்து, நமக்கு இஷ்டப்படி வெகுமானம் அளிக்கவல்ல அறிஞர்கள் நிறைந்த கிராமத்திலேயோ வந்திருக்கிறோம்?" என்று கேட்டனன். அதற்கு அந்த ரிஷபம் ஆம் எனச் சொல்வதுபோல் தன் தலையை அசைத்தது. அதனைக்கண்ட ஜனங்கள், அந்த ரிஷபம் ஆம் எனப் பதில் கூறியது என்று தெரிந்துகொண்டனர். பிறகு அந்த எருதுக்குரியவன், "யாருடைய புகழ் இந்தக்கிராமத்தில் ஒவ்வொருவருடைய வாயிலும் நிறைந்துள்ளதோ, யார் இந்தக் கிராமத்தின் அதிகாரியோ, அந்தப் புண்யவானை இப்போது காட்டுவாய்?" என்றுகூறி, கோதண்டராம முதலியார் உட்கார்ந்திருந்த இடத்தை நோக்கி நடந்து சென்றான். எருதும், அவனோடு பின்தொடர்ந்து சென்று, முதலியார் முன்பாக நின்று அவரை வணங்குதல்போல முன்காலை மடக்கி எழுந்தது. கிராம ஜனங்கள் அந்த அரிய செயலைக் கண்டு மிகவும் அதிசயித்தவராய், அந்த ரிஷபத்தின் புத்திகூர்மையைப் புகழ்ந்து பேசினர். அதன் பிறகு, ஒரு அதிவினோதமான காட்சி நடந்தேறியது. அந்தக் காட்சியை விவரித்துக்கூறின், எல்லோரும் ஆனந்திப்பாராதலால் அதனையும் ஈண்டுக் கூறுகிறேன். சீதை என்னும் பசுவை உடையவன் அவ்விடத்திற் வேடிக்கை பார்க்கும் ஜனங்களுக்கிடையில் தன் பசுவைக் கொண்டுவந்து நிறுத்தி "அம்மா உன் புருஷன் உன்னை அக்னிசாக்ஷியாக மணந்ததை மறந்து மற்றோர் பெண்ணின்மேல் தன் காதலை வைத்துள்ளான்" என்றனன். அப்போது சீதை என்னும் அந்தப்பசு, அவன் வார்த்தையைக் கேட்டதும், தனது நாயகனெனக் குறித்த

அந்த ராமன் என்னும் எருதின் சமீபத்திலும் போக மறுத்துவிட்டது. அதன் பின்னர், அந்தப் பசுவிற்குரியவன், அதனைப் பலவாறும் தேற்றி, அவ்வெருதுடன் போமாறு கூறினன். பசு அவனுடைய வார்த்தை யொன்றையும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனைக்கண்ட எருதுக்குரியவன், தனது எருதைப் பசுவின் கோபத்தை நீக்குமாறு வேண்டினன். ராமன் என்னும் அந்த எருது பசுவைப்போல் கோபத்துடன் நின்றது. கடைசியாகப் பசுவின் சொந்தக்காரன், பசுவை நெருங்கி "சீதையம்மா, நீ மிகவும் நல்லவள் ஆயிற்றே. நீ இப்படி ஒரே பிடிவாதமாக இருக்கலாமா? கணவன் வந்து உன்னை வேண்டுதல் நியாயமாகுமா? நமது தர்ம சாஸ்திரத்தில் அப்படியான நியதியில்லை என்பதை நீ நன்றாய் அறிவாயே. அறிந்தும் கணவனைக் கலங்கவிட்டு நீ தனியாக இருப்பது நல்லதா? போ, போய் உன் புருஷனைச் சமாதானம் செய்துகொள்" என்றனன். அதனைக் கேட்டதும் அந்தப்பசு மிகவும் கோபங்கொண்டு, அங்ஙனம் உரைத்த அந்த மாட்டுக்காரனைத் தன் கொம்பினால் குத்தப்போயது. பசுவிற்குரியான் அப்போது அந்தப் பசுவிற்குப் பயந்தவன்போல் ஓடினான். பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் அந்தப்பசுவே தன் கோபம் தணிந்து, ராமன் என்னும் எருதின் முன்பாக வந்து வணங்கியது. உடனே, ராமன் என்னும் எருது தன் கோபமும் தணியப்பெற்று, தன் மனைவியை நாவினால் நக்கியது. பிறகு அவ்விரண்டு பிராணியும் சேர்ந்து சந்தோஷமாக அந்தக் கூட்டத்தின் நடுவில் நடந்துசென்றன. அவை சந்தோஷத்துடன் கூடிய கூட்டத்தைக்கண்ட பெருமாள் மாட்டுக்காரர் தங்கள் சந்தோஷத்தைத் தெரிவிக்கும் விதமாகத் தங்கள் இடையில் கட்டி இருந்த மேளத்தை அதிக சப்தமுண்டாக முழக்கினர். சூழ்ந்திருந்த ஜனங்கள் அனைவரும் அதிக சந்தோஷம் பொங்கியவராய், அந்த எருதுக்

கும் பசுவிற்கும் புண்ணாக்கு முதலிய உணவையும், பெருமாள் மாட்டுக்காரருக்குப் பழைய வஸ்திரங்களையும் தானியங்களையும் கொடுத்தனர்.

அத்தியாயம்—II.

பிரசங்கி—அந்தப் பிரசங்கி பிரசங்கித்த மஹாப்பாரதத்தில் உள்ள சைந்தவன் மரணம் என்னும் கதை.

இந்தியாவில், பாரதம் ராமாயணம் என்னும் இரண்டு கதைகளுக்கும் இருக்கும் பெருமை வேறெதற்கும் இல்லை என்னலாம். அவை யிரண்டும் இதிகாசங்கள் என்று சொல்லப்படும். அவற்றைக் கேட்க இந்தியருக்குள்ள ஆவலுக்கு அளவே இல்லை. அவற்றில், இந்தியரது பூர்வீக ஒழுக்கவழக்கங்கள் அனைத்தும் பொதிந்துள்ளன. அவை இரண்டும் பாரததேசத்திற் பிறந்து மஹா மேதாவிளாகவும், ஞானசிரேஷ்டர்களாகவும், வித்வத் சிம்ஹங்களாகவும் விளங்கிய இரண்டு கவீச்சுவரர்களால் இயற்றப்பட்டவை ஆதலால், அவை ஜனங்களுடைய மனதைக் கவர்ந்துகொள்ளும் தகுதியுடையனவாய் உள்ளன. ஆனதுபற்றி இந்தியர் அனைவரும் அவற்றைத் தெய்வக்கதைகள் எனப்பாராட்டிப் பூசையும் செய்கின்றனர். மதப்பற்று உடைய மதிவல்லாரும் இந்தக்கதைகளைப் படிப்பது அல்லது படிக்கக்கேட்பது, சுவர்க்கத்திற்குச் செல்லும் மார்க்கங்களில் ஒன்றும் என்பதை நம்புகின்றனர். ஹிந்து சாஸ்திரங்களும், மேற்கூறிய கதைகள் இரண்டும் மோக்ஷத்திற்கேதுவானவை எனமொழிகின்றன. அதனல், எத்தகைய ஜனங்களும் இந்த இரு பெருங்கதைகளிடத்தில், மற்றைய நூல்களில் அவர்கள் வைத்திருக்கும் பக்தியினும்

அதிகமாகப் பக்தி செலுத்துகின்றனர். அவர்கள் அக்கதைகள் எவ்வளவு தூரத்தில் பிரசங்கிக்கப்படினும், தூரத்தையும் சிரமத்தையும் பொருட்படுத்தாது, அவற்றைக்கேட்க ஆவலுடன் செல்வர்; அக்கதைகள் முடிய எவ்வளவு நேரமாயினும், அவ்வளவு நேரமும் அவற்றைப் பக்தியுடன் கேட்பர். மேற்கூறிய கதைகளை அவர்கள் ஆயிரம்முறை கேட்டிருப்பினும், அவற்றை எவரேனும் சொல்வதாய் இருந்தால், மீட்டும் கேட்க ஆவல் கொள்வார்களேயன்றி, நாம் கேட்ட கதைகளே என உபேக்ஷையாக இரார். அக்கதைகளும் அவர்களுக்கேற்பக் கேட்கக் கேட்கப் புதிய புதிய ஆனந்தத்தை யுண்டுபண்ணும் தகுதியுடையனவாக உள்ளன. இந்த ராமாயண பாரதக்கதைகளை ஜனங்கள் பலவழியானும் அறிகின்றனர். அவை நாடக மேடையில் நாடகமாகவும் நடிக்கப்படுகின்றன; வீதிகளில் நங்கைப் பாட்டாகவும் பாடப்படுகின்றன; வசன வடிவிலும் உபந்நியசிக்கப்படுகின்றன. ஆதலால் அந்தக் கதைகளைப் பிரசங்கிப்பதே தமது தொழிலாகக் கொண்டோர், இந்தியாவில் மூலை முடுக்குகளிலும் கூட நிறைந்திருக்கின்றனர் என யாம்சொல்வது வாசகருக்கு அதிசயமாகாது. அந்தப் பிரசங்கிகள் ஜனங்களின் உயர் மதிப்பைப் பெற்றவராய், ஜனங்கள் அளிக்கும் விசேஷ பொருள்கொண்டு சுகஜீவிகளாய் இன்றும் தங்கள் வாணாளைக் கழித்து வருகின்றனர்.

கேளம்பாக்கத்தில், மேற்கூறிய கதைகளைப் பிரசங்கித்து ஜனங்களைச் சந்தோஷப்படுத்துபவர் உபாத்தியாயர் நல்லாப்பிள்ளை அவர்களே. அவர் தமது மூதாதையாகிய நல்லாப்பிள்ளை யவர்கள் இயற்றிய பாரதத்தின் பதினாலாயிரம் பாட்டையும் அதிக சாக்கிரதையுடன் படித்து மனப்பாடமும் செய்திருந்தனர். அவர், வேனிற்காலத்தில் கிராமங்களில் உள்ளவர் தமது வேலையை முடித்துண்டு ஓய்வ

டைந்து இருக்கும் இரவுப்போதில், பாரதப்பிரசங்கம் செய்வர். அதனால் அவருடைய புகழ் அந்தக் கிராமத்திலும், அதனை யடுத்துள்ள மற்றைய கிராமங்களிலும் பரவியதால், ஆங்காங்குள்ள ஜனங்கள் அவரது பிரசங்கத்தைக் கேட்கத் தவறாது வந்து சேர்வர். யானும் இந்தக் கேளம்பாக்கத்துப் பிரசங்கியாரது பிரசங்கத்தைக்கேட்க ஒருநாள் அங்குச் சென்றிருந்தேன். அப்போது அவர் பிரசங்கித்த விஷயத்தை விடாமற் சொல்கிறேன்; கேளுங்கள். ஜனங்கள் கேளம்பாக்கத்தினின்றும், அதை அடுத்த கிராமங்களினின்றும் கூட்டம் கூட்டமாக வந்து பிரசங்கமேடைக்கருகே அமர்ந்தனர். பிரசங்க மேடை, கிராமாதிகாரியின் வீட்டுத்திண்ணையேயாகும். அந்தத் திண்ணையின்மேல் பிரசங்கியார் உட்கார்ந்திருந்தார். அவருக்கு எதிராக, புல்லாங்குழல் வாசிக்கும் கோபாலகிருஷ்ணனுடைய படம், புஷ்பம் முதலான அலங்காரத்துடன் வைக்கப்பட்டிருந்தது. அந்தப் படத்தின் எதிராக ஒரு செப்புத் தட்டும் ஒரு கிண்ணமும் இருந்தன. தட்டில் கர்ப்பூரம், சாம்பிராணி, பழவகைகள் தேங்காய் முதலானவையும், கிண்ணத்தில் தண்ணீரும் இருந்தன. பிரசங்கம் ஆரம்பிக்கப் படுவதற்குமுன், ஜனங்கள் ஈக்களைப்போல் அவ்விடம் மொய்த்துக் கொண்டனர். அவர்களுள் சிலர் வெட்ட வெளியான நடுவீதியில் உட்கார்ந்து கொண்டனர்; சிலர் பிரசங்கியார் உட்கார்ந்திருந்த திண்ணையிலும், அதன் பக்கமாகவுள்ள திண்ணையிலும் உட்கார்ந்தனர்; வேறு சிலர், அந்த வீட்டிற்கு அடுத்த வீடுகளின் திண்ணைகளிலும், எதிராக உள்ள வீடுகளின் திண்ணைகளிலும் உட்கார்ந்து கொண்டனர். ஏறக்குறைய இரவு எட்டு மணிக்குப் பிரசங்கம் ஆரம்பமாயது. சந்திரன் தன் பால் போன்ற கிரணங்களை ஜனங்களின் தலைமீது வீசி விளங்கி நின்றான். பிரசங்கம் ஆரம்பமாகும்போது அவ்விடம் நிசப்

தமாக இருந்தது. முதலில் பிரசங்கியார் தேங்காயுடைத்துக் கற்பூர தீபாராதனை செய்தார். பின்னர், அவர் படத்தின் எதிராக வீழ்ந்து நமஸ்கரித்தெழுந்து, தமது ஆசனத்தில் அமர்ந்து, சைந்தவன் கதையைச் சொல்லத்தொடங்கினர். அவர் கூறிய அந்தச்சைந்தவன் கதையை யாம் அவர் கூறியபடியே இங்கு எழுதுகிறோம்:—

"பக்தசிரேஷ்டர்களே! யாம் நேற்றிரவு, பாண்டவர்களுள் ஒருவனும் மஹா வில் வீரனுமாகிய அருச்சுனனது அருந்தவப் புதல்வனாய், அடங்காத சிங்கமாய் விளங்கிய அபிமன்யு என்பவனது வீர பராக்ரமங்களை விளக்கமாக உரைத்தேன். நீங்கள் இந்த அபிமன்யு என்னும் பாண்டவரது இளஞ்சிங்கம், கிருஷ்ணமூர்த்தியின் சகோதரியான சுபத்திரா தேவியின் வயிற்றிற் பிறந்தவன் என்பதை அறிவீர்கள். அவன், கொடிய பராக்கிரமம் அமைந்த ஆயிரக்கணக்கான பகைவர்களைத் தன் கூரிய அம்பினால் ஹதம் செய்த விதத்தை முன்னரே கூறியுள்ளேன். அவனுக்குப் போரே பெரிய விளையாட்டாக இருந்தது. எவ்வளவுக்கெவ்வளவு போர் அதிக மும்முரமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அவனுக்கு அடங்கா வீரமும் பலமும் ஆனந்தமும் பெருகி யிருந்தன. அவன், துரோணர் கட்டிய தாமரை வியூகத்தை உடைத்துக்கொண்டு ஆயிரக்கணக்கான வீரர்களையும் யானை தேர் முதலானவற்றையும் அழித்துக்கொண்டே அந்த வியூகத்தின் உட்சென்றான். எதிர்த்த பகைவர்கள் அனைவரும், அவனைக் காணவும் அஞ்சினர். அந்தப் போர்க்களம் முழுவதும் பிணக்குவியலின் மயமாக விளங்கியது. எங்குக் காணினும் ரத்தவெள்ளம் பெருகியது. அபிமன்யு அந்தத் தாமரை வியூகத்தை உடைத்துக்கொண்டு உட்சென்றதும் தந்திர மிக்க துரியோதனனுடைய படைகள் மறுபடியும் அவனைச் சூழ்ந்து வளைத்துக்கொண்டன. சண்டை

உக்ரமாக நடந்தது. அபிமன்யு அப்போதும் பயப்படாமல் பகைவர்களை எதிர்த்தான். அந்தச் சமையத்தில், அவனுடைய பகைவரிற்சிலர், அவன் ஏறியிருந்த ரதத்தை உடைத்தனர். தன் ரதம் பழுதானதைக் கண்ட அபிமன்யு, அஞ்சாதவனாய்க் கீழ் இரங்கித் தன் காலையே உயர் ரதம் என எண்ணிப் போர்புரிந்து பகைவரை ஹதம்செய்து கொண்டிருந்தான். பகைவர், அவனை நேரில் போரிட்டு வெல்ல முடியாதென உணர்ந்தனர். அபிமன்யு, பகைவர் அஞ்சி விலகியதையும் கண்டான். ஆனால், அவன் மீட்டும் அந்த வியூகத்தைவிட்டு வெளியே வரமுடியாமல் திகைத்தான். அந்தப் பதும வியூகத்தின் உட்செல்ல அறிந்த அந்த மஹாவீரன் மீட்டும் அதைவிட்டு மீண்டுவர ஏன் திகைத்தான் எனச் சிலர் சந்தேகிப்பர். அதன் காரணம் இதுவாகும்:—அவனுடைய தாயாகிய சுபத்திரை பூரண கர்ப்பிணியாக இருந்தபோது, அந்தச் சுபத்திரையின் தமைபனாகிய ஸ்ரீகிருஷ்ணன் அவளது சிரமம் தணியப்போர்த் திறமைகளை விவரமாக எடுத்துச்சொல்லி வரும்போது, பதுமவியூகம் கட்டும் விதத்தையும், அந்தப் பதுமவியூகத்தை உடைத்துச் செல்லவேண்டிய விஷயத்தையும் சொல்லினன். அங்ஙனம் அவன் சொல்லும்போது, சுபத்திரை நித்திரை போயினள். அப்போது, அவள்வயிற்றிலிருந்த சிசு, கிருஷ்ணன் கூறுவதை அதிககவனத்துடன்கேட்டு, அவன் கூறும்போதெல்லாம் தாய்க்குப் பதிலாக உம், உம், என்றும் சொல்லியது. அதனை உற்றுக் கேட்டகிருஷ்ணன், ''ஓஹோ! நாம்கூறும் விஷயங்களைத் தங் கைவயற்றினுள் இருக்கும் சிசு தெரிந்துகொள்கிறதே!'' என்று உடனே சொல்வதை நிறுத்திக் கொண்டான். அதனல் அந்தச் சிசு பத்மவியூகத்தினுட் பிரவேசிக்கமாத்திரம் தெரிந்து கொண்டதே யன்றி, அதனைக் கடந்து வரும் மார்க்கத்தை அறிந்து கொள்ளவில்லை. ஆதலால், அக்கால் சிசுவா

யிருந்த அபிமன்யு பாரத யுத்தத்தில் பகைவர் கட்டிய பத்ம வியூகத்தினுள் அனாயாசமாய்ப் பிரவேசித்துப் பகைவர்களை எல்லாம் ஹதம் செய்தான். என்றாலும், அவன் மீட்டும் அந்த வியூகத்தைக் கடந்துவர வழிதெரியாது மயங்கவே, அதனைக்கண்ட பகைவர்களுள் ஒருவனான சைந்தவன் என்பான், அவனுடன் எதிர் நின்று போர்புரிய அஞ்சிப்பின்புறமாய் மறைந்து நின்று அவனை வஞ்சகமாய்க் கொன்றான்.

அபிமன்யு வீராவேசத்துடன் போர் புரிந்து வெற்றியுடன் மீண்டு வருங்கால் கொல்லப்பட்டான் என்னும் செய்தி உடனே பாண்டவருக் கெட்டியது. அப்போது பாண்டவர் பட்ட வருத்தத்திற்கு என்ன அளவு யாம் கூறுவது! அவர்கள் அச்செய்தி கேட்டதும் வீழ்ந்தனர்! அலறினர்! கதறினர்! அந்த வெற்றிமைந்தனைப் பெற்ற தனஞ்செயன் தரையில் வீழ்ந்து வீழ்ந்து அழுதான்; பெருமூச்சுவிட்டான்; மூர்ச்சையானான். தெளிந்து எழுந்து தேம்பித் தேம்பி "மகனே!" மகனே! என்றழுதனன். அப்போது கிருஷ்ணன் அவனைத் தேற்றி, "அர்ச்சுனா! நீ ஒரு குழந்தையைப்போல் அழலாமா? சண்டையில் அஞ்சாது நின்று பகைவரை வென்று உன் மைந்தன் மாண்டனன். போரில் பின்னடையாது மாண்டவர் வீர சுவர்க்கத்தை யன்றோ அடைகின்றனர்? ஆகவே, உன் மைந்தனும் எவரும் அடைதற்கரிய வீர சுவர்க்கத்தை அடைந்தான். நீ அவனுடைய போர்ச்செயலையும் தீரத்தையும் கேட்டுமகிழாமல் வருந்துகிறாயே" என்றனன். கிருஷ்ணன் என்ன சொல்லியும், அவற்றை அருச்சுனன் ஏற்றுக்கொள்ளவில்லை. அவன் அழுது கொண்டே தன் பக்கத்திருந்தாரை, "என் மைந்தனைக் கொன்றவன் யார்?" என்று கேட்டனன். அதற்கு அவனருகில் இருந்த வீரரும் பிறரும், "துரியோதனனுடைய மைத்துனனும்,

சிந்து தேசாதிபதியுமாகிய சைந்தவனே அபிமன்யுவைக் கொன்றவன்'' என்றனர். அதைக் கேட்ட உடனே, அர்ச்சுனன் வெகுண்டு, "ஆஹா! அற்பனும் சைந்தவனோ என் மைந்தனைக் கொன்றவன்—வீரர்களே! இங்குச் சூழ்ந்துள்ள மற்றோரே!—என்னுயிரைக் காத்து எனக்கு நீங்காப் புகழைக் கொடுத்து என் கரத்தே இருக்கும் ஏ காண்டீபமே! ஆகாயவாணியே! பூமிதேவியே! நீங்கள் எல்லோரும் அறிய யான் சபதம் செய்கிறேன். நான் நாளை சூர்ய அஸ்தமனத்திற்குள் அந்தச் சைந்தவனைக் கொல்லேனாயின், தீயிற்பாய்ந்து என்னுயிரை விடுகிறேன். இது சத்தியம். இந்தச் சபதத்தை நீங்கள் அனைவரும் அறியுங்கள்'' என்று உரைத்து, தன் துணைவனான ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியைத் துணைகொண்டு தன் சபதம் நிறைவேற, பார்வதி பங்காளனான பரமேச்சுவரனிடம் பாசுபதாஸ்திரம் என்னும் அரிய ஆயுதத்தைப் பெறக் கைலையை நோக்கிச் சென்றான். அப்போது வழியில் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அருச்சுனனை நோக்கி, "அர்ச்சுனா, நான் போர்த் தொடக்கத்தில் உனக்கு உபதேசித்தவற்றை நீ மறந்து விட்டனையே. என் சொரூபம் இன்னது என்பதை நான் உனக்கு முன்னரே சொல்ல வில்லையா? அந்த அரன் என்னைவிட வேறல்லவே. அயன், அரி, அரன் என்னும் மும்மூர்த்திகளும் நானே. நானே அம்மூர்த்திகளாக விளங்குபவன். சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம் என்னும் முத்தொழிலும் நடைபெற அந்த அந்தக் காலத்தில் அந்த அந்தப் பெயருடன் விளங்குகிறேன். ஆதலால், நீ பாசுபதம் பெறக் கைலையை அடையவேண்டு மென்ற எண்ணத்தைவிட்டு, என்னையே அந்த அரன் என மதித்து வணங்கு. உன் கோரிக்கை நிறைவேறும்'' என்றனன். அர்ச்சுனன், அவ்வார்த்தைகளை அன்புடன் கேட்டு, அப்படியே ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியைப் பரமசிவ னெனப் பாவித்து வணங்க, அவனுக்குப் பாசுபதா

ஸ்திரம் கிடைத்தது. அதனை அவன் உவகையுடன் கொண்டு, ஸ்ரீ கிருஷ்ணனுடன் புறப்பட்டு சைந்தவனைக் கொல்லுமாறு வந்தனன்.

அர்ச்சுனன் விஷயம் அவ்வாறு நிற்க, நாம் அவனது பகைவரது படைவீட்டில் என்ன நடந்தது என்பதைச் சிறிது கவனிப்போம். அர்ச்சுனன் சபதம் செய்துகொண்ட விஷயம் பகைவரது படை வீட்டிற்கு எட்டியது. அவ்விடத்திருந்தார் பலரும் பெரிதும் பயங் கொண்டனர். எப்படியும் அர்ச்சுனன் தன் சபதத்தை நிறைவேற்றி விடுவானெனச் சிலர் ஏங்கினர். அப்போது, வில் லாசிரியராய்த் துரியோதனனுக்குத் துணையாயும், சேனாதிபதியாயும் விளங்கிய துரோணர் என்பவர், போர்வீரருள் சிறந்தவனாய்விளங்கிய சைந்தவனது கதி நாளை என்னாகுமோ என்று கலங்கி நின்ற துரியோதனனை நோக்கி, "அப்பா, நீ கலங்காதே. நாம் நாளை மாலை வரையில் சைந்தவனைக் காக்கும் பக்ஷத்தில் எப்படியும் அர்ச்சுனன் தன் சபதத்தை நிறைவேற்றாது தீயில் வீழ்ந்திறப்பான். அதனால் பாண்டவர் பலமும் குறைந்து போகும். அதற்காக நான் தக்க வழியைத் தேடிவிட்டேன்" என்று சொல்லி, மறுநாட் காலையில், அர்ச்சுனன் போர்க்கெழுவதன் முன், தன் படையை முதலில் சக்கர வியூகமாக ஏற்பாடு செய்து, அந்த வியூகத்திற் கப்பால் மச்சவியூகம்வகுத்து, அதற்கப்பால் பத்மவியூகம் வகுத்து, அதன் மத்தியில் சைந்தவனை நிற்கவைத்தார். பிறகு, அவரே முதல் வியூகமாகிய சக்கர வியூகத்தின் தலைமை வகித்தார். "அர்ச்சுனன் முதலில் சக்கர வியூகத்தைப் பிளந்து கொண்டு தானே மற்றைய வியூகத்தினுட் பிரவேசிக்க வேண்டும். அவனை முதல் வியூகத்திலேயே பிரவேசிக்காதபடிச் செய்தால் மற்றைய வியூகங்களுள் அவன் செல்லான்" என்பது அவரெண்

ணம். அந்த எண்ணத்துடன் அவரிருக்க, போர்க்களத்தில் பகைவரது ஏற்பாட்டை அறியாதவனாகிய அர்ச்சுனன், யுத்தகளம் வந்ததும், அந்த ஏற்பாட்டைக் கண்டு சிறிதும் அஞ்சாதவனாய்ப் போர் செய்து அதிக சிரமத்துடன் சக்கரவியூகத்தின் மத்தியிற் சென்றான். அப்போது பகலாய்விட்டது. இன்னும் அவன் சக்கர வியூகத்தைக் கடந்து, மச்ச வியூகத்தைப் பிளந்து, பத்ம வியூகத்தை அடையச் சிறிதுபொழுதே உள்ளது. என் செய்வான்! அவன் சபதப்படி அன்று மாலைப்பொழுதுக்குள் சைந்தவனை அவன்வெல்வது மிகவும் அரிதான காரியமாயிற்று. அந்த நிலைமையை அர்ச்சுனனது உயிர்க்காவலனாய் விளங்கிய, ஸ்ரீ கிருஷ்ணபகவான் அறிந்தார். சிறிது நேரத்திற்குப் பின் தமது சக்ராயுதத்தை ஏவிச் சூரியனை மறைக்கச் செய்தார். உடனே, எங்குக்காணினும் இருள் சூழ்ந்தது. எவரும் மாலையம்போது வந்துவிட்டதென மதித்தனர். அர்ச்சுனனும், தன் சபதம் நிறைவேறவில்லை என்று பகைவர் கூட்டத்தினின்றும் வெளிவந்து தன் ஆட்களைக்கொண்டு தீக்குழி ஏற்பாடு செய்தான். தீ மூண்டெறிகிறது! அவனது சகோதரரும் பிறரும் அவனைத் தீயில் விழாதபடிப் பலவாறும் வேண்டினர். அவ்வேண்டுகோள் அனைத்தும் செவிடன் காதிற்பட்ட சங்கநாதமாயின. பகைவர் கூட்டத்தார் அர்ச்சுனன் தீப்பாயப் போவதை ஆனந்தத்துடன் பார்க்க வந்தனர். அவர்களுடன் சைந்தவனும் வந்திருந்தான். அப்போது கிருஷ்ணமூர்த்தி அர்ச்சுனனை நோக்கி "அர்ச்சுனா, நீ இத்தகைய கார்யம் செய்வதால், குருகுலத்திற்கே கேடு தேடியவனாகிறாய் நீ கூறியதுபோல் இன்று சைந்தவனைக் கொல்லாவிட்டாலும், நாளை அல்லது மறுநாளையில் அவனைக் கொன்று உன் வஞ்சினத்தை முடித்து, அதனால் உன்தமையனுக்கு வெற்றி மாலை சூட்டுவாயென்பது திண்ணம். அவ

சரப்படாதே'' என்றனர். அதற்கு அர்ச்சுனன், "மைத்துனு, நான் என் வாக்குறுதியிற் சிறிதும் பிறழுமாட்டேன். அர்ச்சுனன் உயிருக்குப் பயந்து தன் சபதத்தை நிறைவேற்ருமற் போனுன் என என்னை எவரும் பழிக்க இடந்தரமாட்டேன்" என்று தீக்குழியை வலம் வந்தான். அக்கால் ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி அவனெதிராகச் சென்று "அப்பா! இப்போது மீட்டும் நீ சூர்யனைக் காண்பாயாயின் என்செய்வாய்?'' என்று கேட்டனர். அர்ச்சுனன், "சுவாமி, சூர்யனையாவது நான் மீட்டும் இன்று காண்பதாவது! மாலைப்போது வந்துவிட்டதே! நீர் கேட்பது எனக்கு அதிசயமாக அன்ருே இருக்கிறது? நீர் சொல்வதுபோல், அப்படி யான் அப்பரிதியங் கடவுளைக் காண்பேனுயின், இப்போதே அந்தச் சைந்தவனைக் கொன்று என் சபதத்தை முடிப்பேன்'' என்ருன். உடனே கிருஷ்ணமூர்த்தி, "அப்படியானுல், அர்ச்சுனு அதோ சூர்யன் விளங்குகிருன் பார்'' எனக் கூறித் தமது சக்ராயுதத்தைத் தம்மிடம் மீட்டுக்கொண்டார். உடனே சூர்யன் விளங்கலானுன். ஜனங்கள் அனைவரும் மறைந்து தோன்றிய பகலைக் கண்டு அதிசயித்தனர். அப்போது அர்ச்சுனன், பகைவர் கூட்டத்தே இருந்து வேடிக்கை பார்த்திருந்த சைந்தவனைத் தான் பெற்ற பாசுபதாஸ்திரத்தாற் கொன்று தன் சபதத்தை முடித்துக்கொண்டனன்.

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அர்ச்சுனனுக்கு அந்தச் சமயத்தில் அவ்வித உதவியைச் செய்திராவிட்டால், அந்த அர்ச்சுனன் சைந்தனைக்கொல்லாது தீயில் இறந்திருப்பான். ஆனுல், பரமாத்மாவாய் விளங்கும் அந்தப் பகவான் அருளால் அவன் வெற்றி கொண்டவனுய் விளங்கினன். ஆகவே, அத்தகைய அரும்பெருஞ் செயலைச்செய்து அர்ச்சுனனுக்குத் துணையாய் நின்ற அந்தப் பரந்தாமனை நாம் அனைவரும் இன்று போற்று

வோமாக" என்று அந்தப் பிரசங்கியார் கூறி, எழுந்து தமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள படத்திற்குக் கற்பூர தீபா ராதனைகள் செய்தார். ஜனங்கள் அனைவரும் "கோவிந்தா, கோபாலா" என்று சொல்லிக் கடவுளைத் துதி செய்தனர்.

அத்தியாயம்—12.

தெருக்கூத்து:—அரிச்சந்திரன் கதை.—தெருக்கூத்தைப் பற்றிய சில குறிப்புகள்.

மே மாதத்தில் ஒருநாள் மாலைப்போதில், கேளம்பாக் கத்துத் தலையாரியாகிய முத்து நாயக்கன் என்பவன், அடுத்த கிராமத்தில் வசிக்கும் எனது உறவின் முறையார் வீட்டிற்கு வந்தான். அப்போது யான், எனது விடுமுறை நாட்களை உல்லாசமாகக் கழிக்க அவ்விடம் சென்றிருந்தேன். முத்து நாய்க்கன் கையில் ஒரு ஓலைச்சுருளை வைத்திருந்தான். அதனை அவன் நான் தங்கியிருந்த வீட்டின் சொந்தக்காரரிடம் தர, அவர் அதனைப் பிரித்து வாசித்தார். அவர் வாசிக்கையில் அவ்வோலை முனிசிப் கோதண்டராம முதலியார் எழுதி, அன்று அவர் ஊரில் நடக்கப்போகும் தெருக்கூத்தைக்காண வருமாறு விடுத்த அழைப்புப் பத்திரம் எனத் தெரியவந்தது. நாங்கள் அந்தப் பத்திரத்தைப் படித்ததும், அன்றிரவு நடக் கப்போகும் கூத்தைக்காண வருவதாக முத்துநாய்க்கனிடம் கூறினோம். நான் உடனே இராப்போஜன முண்டு எனது சினேகிதர்களுடன் சுமார் ஒன்பது மணிக்குப் புறப்பட் டேன். நாங்கள் போகும் வழி லேசானதல்ல. கரடு முர டான காட்டையும், கரம்பு நிலங்களையும், அறுவடையாய் நின்ற வயல்களையும் நாங்கள் கடந்து செல்லவேண்டும். நாங் கள் புறப்பட்ட கிராமத்தி லிருந்து கேளம்பாக்கத்திற்கு

ஏறக்குறைய நான்கு மைல் தூரமிருக்கும். சந்திரனே எங்கள்மேல் தன் பால்போன்ற நிலவை வீசிப் பிரகாசித்திருந்தான். வழியில் உள்ள கிராம ஜனங்கள் எல்லோரும், கிராமத்தில் ஒருவரும் இல்லாதபடி கூத்தைக் காணக் கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருந்தனர். சிலர் தாம் நடந்து போம்போது, அன்று நடக்கப்போகும் சரித்திர வரலாற்றை விவகரித்துக்கொண்டே சென்றனர். சிலர் நாடகம் நடிக்கப் போகுபவரின் திறமையைப் பேசிச் சென்றனர். நாங்கள் கேளம்பாக்கத்தின் எல்லையை மிதித்ததும், அந்தக் கிராமத்தின் நாலா திசைகளிலும் உள்ள கிராமங்களிலிருந்து ஜனங்கள் கூட்டம் கூட்டமாக வந்துகொண் டிருந்ததை அதிசயத்துடன் கண்டோம். நாங்கள் அன்று கண்ட ஜனத்திரளின் காட்சியைப்போல் வேறு எங்கும் கண்டதேயில்லை. கிராமத்தினுட் பிரவேசித்ததும் ஜனங்களின் கூட்டத்தால் உண்டான கலப்போசை, கடலின் ஓசையையும் தோற்கச் செய்தது. நாங்கள் குறித்தநேரத்தில், கூத்தாடப் போகும் இடத்தே குறுகினேம். அவ்விடத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வட்ட வடிவமாகச் சூழ்ந்து உட்கார்ந்திருந்தனர். இடையே ஆட்டமாட விசாலமான இடம் இருந்தது. அங்கு உயர்த்தப்பட்ட நாடக மேடையாவது, திரைகளாவது இல்லை. வண்ணர் இருவர் தீப்பந்தம் ஏந்தி இருந்தனர். நாங்கள் கூட்டத்தினுட் புகுந்து, பெரிய மனுஷர்களுக்கென அவ்விடத்தில் ஏற்பாடு செய்திருந்த பாயின்மீது அமர்ந்தோம்.

அன்று நாடகம் நடித்துக்காட்ட வந்தவர் அயலூரில் வசிப்பவராவர். அவர்கள் தெருக்கூத்தாடுவதில் மிகவும் கீர்த்தி பெற்றவர்கள். அவர்களைக் கேளம்பாக்கத்து ஜனங்கள் நாடகம் நடித்துக்காட்டக் கேட்டுக்கொண்டதால், அவர்

கள் அன்று நாடகம் நடித்துக்காட்ட ஒப்புக்கொண்டனர். ஒருநாள் இரவு முழுவதும் அவர்கள் நடித்தால், அவர்களுக்கு ஒரு வராகனே கூலி கிடைக்கும். அந்தக் கட்டளையேயன்றி அவர்களுக்குப் பொது ஜனங்கள் கொண்டாடும்படித் தரும் பொருளும் பழைய வஸ்திரங்களும் உடன் கிடைக்கும். அன்று சுமார் பத்து மணிக்குக் கூத்து ஆரம்பம் ஆகியது. கூத்தாடிகள் மிகவும் பிரசித்தி பெற்றதான அரிச்சந்திர விலாசத்தை அதி விமரிசையாய் நடித்துக்காட்ட முற்பட்டனர். அந்த அரிச்சந்திரன் கதையை இந்த இந்து தேசத்தில் அறியாதார் ஒருவரும் இல்லை. அது எல்லோரும் அறிந்த கதையாதலால், அதனை நடித்துக் காட்டும்போது, அங்கிருந்த ஜனங்கள் மகிழ்ந்த மகிழ்ச்சிக்கு அளவே யில்லை.

அன்று அந்த அரிச்சந்திரனுடைய கதை முழுதும் நடித்துக் காட்டப்படவில்லை. அந்தக் கதை ஆறு பாகமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அந்தப் பாகங்களுள் ஆறுவது பாகமாகிய மயான காண்டமே அன்று நடித்துக் காட்டப்பட்டது. அந்தக் கூத்தைப் பார்ப்பதற்கு வரும் ஜனங்கள் ஒரு காசும் பிரவேச கட்டணமாகக் கொடுப்பது கிடையாது. அங்குச் செல்வவான்கள், ஏழைகள், உயர்ந்த சாதியர், தாழ்ந்த சாதியர் என்னும் பகுப்பின்றி எல்லோரும் கூட்டமாகவே கூடி யிருந்தனர். ஆனால், மரியாதையாயுள்ள கூட்டத்தினர் மாத்திரம் ஆட்டக்காரருக்கருகே அமர்ந்திருந்தனர். ஆட்டம் எல்லாம் வெட்ட வெளியிலேயே நடந்தது. அதற்கெனப் பந்தல்முதலான ஏற்பாடுகள் இல்லை; மேடை இல்லை; திரைகளுமில்லை. என்றாலும், ஆட்டக்காரர் ஒவ்வொருவரும் பிரவேசமாகும்போதுமாத்திரம் ஒரு வெள்ளிய துப்பட்டி திரையாக உபயோகப்பட்டது. சுமார் பத்து மணிக்கு ஆட்டம் ஆரம்பமாயது என யாம் முன்னர் கூறினோம். மணி

பத்தானதும், வெள்ளிய துப்பட்டியைத் தள்ளிக் கொண்டு, அலங்கார உடையும், ஆபரணங்களு மணிந்த ஆட்டக்காரர் வெளி வந்து கூத்தாடினர். இடையே கட்டியக்காரன் வந்து கதை சம்பந்த மில்லாத வேடிக்கைச் சிறு கதைகளைக் கூறி, ஜனங்களை மகிழச்செய்தான். பிறகு ஜனங்களுள் சிலர் அந்தக் கட்டியக்காரனிடம் வெகுமதியாகப் பணங்கள் தந்தனர். அநேகமாக அவர்கள் ஒவ்வொருவரும் கொடுத்த பணம் இரண்டணுவுக்கு மேற்படவில்லை. கட்டியக்காரன், அங்ஙனம் ஒவ்வொருவரும் கொடுக்கும் பணத்தைப் பெற்று, "ஓ ஓ" என்று தன் சந்தோஷத்தைக் காட்டிப் பணம் கொடுத்தவர் பெயரைக் கூறி அவர்களைக் கொண்டாடினுன். இப்படியே அந்த அரிச்சந்திரன் கதை இடையே அத்தகைய பல பிரதி பந்தங்களுடன் முடிந்தது. உடனே ஜனங்கள் தங்கள் தங்கள் வீடு நோக்கிச் செல்வா ராயினர். அவர்களுட் சிலர் போகும்போது அந்த அரிச்சந்திரனுடைய சத்திய வன்மையைப் புகழ்வா ராயினர். சிலர் விஸ்வாமித்திரனைப் பலவாறு இழித்துப் பேசினர்.

அத்தகைய கூத்தாடிகள் பலர் நமது தென்னிந்தியாவில் இருப்பினும், அவர்கள் அநேகமாக ஜனங்களால் நன்கு மதிக்கப் படாதவர்களாகவே இருக்கின்றனர். அவர்கள் தொழிலாகிய அந்தத் தெருக்கூத்து மிகவும் தாழ்மையான தொழிலென்று ஜனங்களால் மதிக்கப்படுவதால், அவர்களும் தாழ்ந்தவர்களாக எண்ணப்படுகின்றனர்.

அத்தியாயம்—13.

பண்டிகையும் உற்சவங்களும்:—பொங்கற் பண்டிகை:—
ஒரு கோயிலில் நடந்த உற்சவம்:—
உடன் கட்டை யேறிய ஒரு பெண்ணின் கதை:—

ஜனவரி மாதத்து ஒரு நாட்காலையில் கேளம்பாக்கத்து ஜனங்கள் அனைவரும் என்றுமில்லாத சந்தோஷத்துடன் இருந்தனர். இந்தியரின் விசேஷ பண்டிகையாகிய பொங்கற் பண்டிகை அன்றைய தினத்தில்தான் வந்தது. அத்தினத்திற்கு முன் சில தினங்களாக அந்தக் கிராமத்தின்கண் ணிருந்த ஆடவரும் பெண்டிரும், அந்தப் பண்டிகையைச் சிறப்புறச் செய்ய வேண்டிய ஏற்பாடுகள் பலவற்றையும் செய்திருந்தனர். கடந்த மாரிக்காலத்தில் பழுதான களிமண் வீடுகளை எல்லாம் ஆடவர் செம்மைப்படுத்தினர். பெண்களோ, பண்டிகைக்கு வேண்டிய அளவு புதிய தானியத்தைச் சுத்தி செய்து வைத்தனர். அந்தப் பண்டிகை யன்று கிராமத்தில் புதிய முகங்கள் பல காணப்பட்டன. கேளம்பாக்கத்தில் உள்ள பெண்களை மணங் கொண்ட மாப்பிள்ளைகள், தங்கள் தங்கள் மாமனார் வீடு வந்து சேர்ந்தனர். அன்று காலை கிராமத்தின் கண்ணிருந்த பெண்கள் அனைவரும் பொழுது விடியு முன்னர் எழுந்து பலப்பல வேலைகளைப் பரபரப்புடன் செய்வாராயினர். சிலர், தங்கள் தங்கள் வீடுகளைச் சாணமிட்டு மெழுகிக் கோலந்தீட்டினர். சிலர், பழங்கலங்களைக் கழுவியும், சிலர் வாசற்கால்களுக்கும், சுவர்களுக்கும் மஞ்சள் குங்குமமிட்டு, வீட்டு வாயிலில் மாவிலைத் தோரணங்களைக் கட்டினர். வீதிகளில் சின்னஞ்சிறு பெண்கள் சாணியைப் பல வடிவமாக உருட்டி வைத்து, அதன் மேல் பூசுணைப் பூவை அழகுற வைத்தனர். அந்தக் கிராமத்தின்கண் ணிரு

ந்த எல்லோரையும்விட குயவனுக்குத் தான் அன்று வேலையதிகம். அன்றையதினம் அவனுடைய வீட்டிலிருந்து பல வடிவமுள்ள பாத்திரங்களைக் கிராமப் பெண்கள் விலை கொடுத்து வாங்கிச் சென்றனர். கேளம்பாக்கத்து ஜனங்களும் அயல் கிராமத்தவரும் காய் கறி பதார்த்தங்களைப் பண்டமாற்று செய்து கொண்டனர். கிராமப் புரோஹிதராகிய ராமாநுஜாசாரியார் வழக்கப்படியன்றி முன்னதாகவே எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு ஒவ்வொரு வீட்டிலும் நுழைந்து, அடுப்பின் மேல் பானையை ஏற்றுவதற்கான நல்ல நேரத்தைச் சொல்லிச் சென்றனர். அவர் சொல்லும் சொற்களை அந்தக் கிராமத்து ஜனங்கள் ஆர்வமுடன் கேட்டதற்கு ஒரளவேயில்லை என்னலாம். இங்ஙனமாக, அந்தக் கிராம முழுவதும் அன்று ஆனந்தசாகரத்தில் மூழ்கியிருந்தது. எங்குக் காணினும் சந்தோஷப் பேச்சும் பூரித்தமுகமுமே விளங்கின.

ஒவ்வொரு வருஷமும் இரண்டு சமப் பிரிவாகப் பிரிபட்டுள்ளதென்பது நமது சாஸ்திரங்களின் கொள்கையாகும். அவ்விரண்டு பிரிவுகளுள் முதற் பிரிவு ஜனவரி மாதத்தில் ஆரம்பமாகிறது. இரண்டாவது பிரிவு ஜுலை மாதத்தில் ஆரம்பமாய் டிசம்பர் மாதத்துடன் முடிகிறது. அஃதாவது முதற்பிரிவாகிய உத்தராயனம் தை மாதம் ஆரம்பமாகிறது; இரண்டாவது பிரிவாகிய தக்ஷிணாயனம் ஆடி மாதத்தில் ஆரம்பமாய் மார்கழிமாதத்துடன் முடிகிறது என்பதாம். பிற்பகுதியாம் தக்ஷிணாயனம், அசுரர்களுக்கு உகந்ததாய் இருப்பதால், அது மனிதர்கட்கு ஆகாத காலம் எனச்சொல்லப்படுகிறது. அந்தக் காலத்தில் ஜனங்கள் அனைவரும் பலவிதமான கஷ்டங்களுக்குள்ளாகின்றனர். அவர்கள் அந்தக் காலத்திற்றான் மழை பெய்ய, விளை நிலங்களைச் சீர்செய்து சிறப்புறச் செய்யும்

வேலையிற் பிரவேசிக்கின்றனர். முற்பகுதியாம் உத்தராயனம், தேவர்கட்குகந்த நாளாதலால், அந்தக் காலத்தை மாந்தர் சந்தோஷ காலம் என எண்ணிப் பண்டிகைகள் பலவற்றைக்கொண்டாடி, விவாக முதலிய சந்தோஷச் சடங்குகளைச் செய்ய முற்படுகின்றனர். அந்த உத்தராயன ஆரம்ப தினத்திற்றான் பொங்கற் பண்டிகை கொண்டாடப்படுகிறது. அந்த நாளில் ஜனங்கள் அப்பண்டிகையைக் கொண்டாடுவது, தங்கள் உழவுத் தொழிலுக்குத்துணையாய் மழையைக்கொடுத்த மழைத் தெய்வமாகும் இந்திரனையும் சூர்யனையும் பூசித்துத் திருப்தி செய்வதற்கேயாகும். இது ஜனங்களுக்குள் தொன்று தொட்டு நடந்து வருவதாய் இருப்பதால், இந்தப் பண்டிகைக் கொண்டாட்டம் முதலில் இந்தக் காலத்திற்றான் உண்டாகியது என்பது சொல்வதரிதாகும். எனினும், இந்தப் பண்டிகை ஆரம்பத்திற்குக் காரணம் சிலர் ஒருவாறு கூறுகின்றனர். அது பின் வருவதாம்:—

ஒரு காலத்தில் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஆயருடன் கூடி விளையாடியிருந்த இளம்பருவத்தே, இந்திரனை வழக்கமாக வணங்கி வரும் ஆயரைக் கண்டு "நீங்கள் இந்திரனை வணங்காது, நமக்கு உயிர்த்துணையாய் இருக்கும் ஆவினங்களை வணங்கி அவற்றைப் பூசிப்பதுடன் அப்பசுக்கூட்டங்களுக்கு மேய்ச்சல் நிலமாய் விளங்கும் மலையையும் பூசியுங்கள்; மழையினால் நமக்கு என்ன பயன் உண்டு? நாம் பசுக்கூட்டங்களால் அன்றோ உயிர் வாழ்கிறோம்?" என்று கூறினர். அதற்கு இடையரும் சம்மதித்து, துவாரகையின்கண்ணுள்ள கோவர்த்தன பர்வதத்தை அடைந்து, ஆங்குக் கிருஷ்ணமூர்த்தி கூறியபடிப் பசுக்களைப்பூசித்தனர். அவர்கள் செய்கையை வானுலகில் இருந்து கண்ட இந்திரன் கோபம் கொண்டவனாய் ஸப்த மேகங்களையும் புவியில் ஏவினன்.

மேகங்கள் கருக்கொண்டு புவியில் வந்து பெருமழையைப் பலநாள் பொழிந்தன. விடாமழையால் புவியின்கண் தங்கியமாந்தர் அனைவரும் பெரிதும் வருந்தினர். இடையரோ கிருஷ்ணனுடைய துணையால், அவ்வருத்த மிலராய் விளங்கியிருந்தும், இந்திரன் தங்களைத் தண்டிக்கப் போகிறான் என்னும் விஷயத்தினை அறிந்து, கிருஷ்ணனிடம் அவ்விஷயத்தினை ஓடோடியும் வந்து முறையிட்டனர். கிருஷ்ணன் அந்த இடையரின் முறைப்பாட்டைக் கேட்டு, கோவர்த்தன கிரியைக் குடையாக எடுத்து, அதன்கீழ் அந்த ஆயர்களைத் தங்கச் செய்து அவர்களைக் காத்தனன். ஆயரொழிந்த மற்றவரோ பேராமழையால் பெரிதும் வருந்திச் செய்வகை அறியாராய்த் திகைத்துப் பின் தேவேந்திரனிடம் ஓடி "தேவர்கள் தலைவனே, ஒரு குற்றமும் அறியாத எங்களை நீ வருத்துகின்றனையே! உன்னை அவமதித்த ஆயர் அனைவரும் அந்தக் கிருஷ்ணமூர்த்தியின் கருணையால் சுகமாய் இருக்க, ஒரு குற்றமும் அறியாத நாங்கள் ஏங்கி வாடுவதை நீ அறிதல் ஆகாதா!" என்று முறையிட்டனர். அதனைக் கேட்ட இந்திரன் தன் குற்றத்தை உணர்ந்து, உடனே மழையை நிறுத்தி, ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியினிடம் சென்று, அவரை வணங்கி நின்றனன். அப்போது பரந்தாமன் இந்திரனை நோக்கி, "இந்திரா, கவலைப்படாதே! நான் உன் உரிமையைக் கெடுக்க இங்ஙனம் செய்யவில்லை. ஆனால், உன் செருக்கையடக்க எண்ணம் கொண்டே இப்படிச்செய்தேன். இனி வழக்கம் போல் உலகத்தவர் முதல் நாளில் உன்னை வணங்கி உனக்குச் சிறப்புகள் பல செய்வர். மறுநாளில் அவர்கள் தங்கள் ஆவினங்களை வணங்குவாராக" என்று கூறி அவனை அனுப்பினர். ஆகவே, அன்று தொட்டு இந்தப் பொங்கற் பண்டிகை பெரும் பொங்கல் என்றும், அதற்கு அடுத்த நாள் பண்டிகை மாட்டுப் பொங்கல் என்றும் வழங்கப்படுகிறது.

அஃதேபோல், இந்தப் பொங்கற் பண்டிகை யன்று கேளம்பாக்கத்தில் உள்ளார் அனைவரும் தங்கள் தங்கள் வீடுகளில் உள்ள வாசலில் பெரிய அடுப்பமைத்து, அதில் அவரவர் வழக்கப்படி ஐந்து அல்லது மூன்று பானைகளை வரிசையாய் வைத்துப் பொங்கல் இடுவாராயினர். அந்தப் பானைகள் அனைத்தும் அந்தப் பண்டிகையைக் கொண்டாட வென்றே புதிதாகச் செய்யப் பெற்றவை. அவற்றை ஜனங்கள் வாங்கி வந்து சுத்தம்செய்து, சாம்பிராணி தூபமிட்டு விபூதி குங்குமம் பூசிய பின்னரே அடுப்பில் ஏற்றினர். அடுப்பில் ஏற்றி நீர் வார்த்து அரிசியிட்டுக் கொதி கிளம்புவதை ஜனங்கள் அதிக ஆவலுடன் எதிர்பார்த்தனர். கொதி கிளம்பி மேலே ஜலம் பொங்கி வழியுங்கால், ஜனங்கள் அனைவரும் குதூகலத்துடன் "பொங்கலோ பொங்கல்" என்று மும்முறை கூவினர். அந்தச் சத்தம் அனேகமாக அந்தக் கேளம்பாக்கத்துக் குடிகளின் ஒவ்வோர் வீட்டிலும் சேர்ந்து உண்டாயின. ஏனெனின், அந்தக்குடிகள் எல்லோரும், தங்களுடைய புரோகிதர் ராமானுஜாசாரியார் குறிப்பிட்ட ஒரே நேரத்தில் அடுப்பமைத்து, பொங்கல் வைக்கத் தொடங்கினராதலால், எல்லோர் வீட்டிலிருந்தும் ஒரே சமயத்தில் அந்தச் சந்தோஷக் கூச்சல் உண்டாயிற்றென்று சொல்லலாம். பின்னர். அரிசி முழுதும் நன்றாய் வெந்து பதமானதும், அந்தப் பாண்டங்களைப் பெண்டிரும் ஆடவரும் அடுப்பினின்றும் எடுத்து நல்லதோரிடத்தில் வைத்து அவற்றினின்றும் ஒவ்வோர் அகப்பை சாதத்தைப் பூசுணை இலையில் வைத்து, அதைச்சுற்றிக் காய் கறிபதார்த்தங்களையும் வாழைப்பழங்களையும் வைத்துத் தேங்காய் உடைத்து நிவேதித்து சூர்ய பகவானுக்குத் தீபாராதனை செய்தனர். அப்போது ஒவ்வொரு வீட்டிலும் உள்ள ஜனங்கள் சூர்யனைப் பணிந்தெழுந்து ஸ்துதி செய்தனர். அதன் பின்னர், அவரவர்கள் தங்

கள் தங்கள் வீட்டுக்கூடத்தில் இரண்டுவரிசையாகப் போஜனம் கொள்ளலாயினர். போஜனம் முடிந்ததும் அவரவர் கைகால்களைச் சுத்தம் செய்துகொண்டு தாம்பூல மணிந்துகொண்டனர். அஃதுடன் அன்றைய பண்டிகை முடிவு பெற்றது.

மறுநாள் பொழுது விடிந்ததும், மாட்டுப் பொங்கல் வந்தது. அப்போது ஜனங்கள் அன்று முன்நாள் போல் பெரிய பெரிய பானைகளில் பொங்கல் வைக்காவிடினும், சிறிய பானைகளில் முன்தினம்போல் பொங்கல் வைத்தனர். அவரவர் தங்கள் மாடுகளைக் குளத்திற் கொண்டுபோய்க் கழுவி வீடு சேர்ந்து அந்த ஆவினங்களுக்கு மஞ்சள் குங்குமம் பூசி, புஷ்பம் சூட்டியும், காளைகளுக்குக் கொம்பில் வர்ணந் தீட்டி அலங்கரித்தும், நகர்வலம் கொண்டுவந்து, முன் தயார் செய்த பொங்கலை அவற்றிற்கு உணவாக இட்டனர். பிறகு, அவரவர் தங்கள் நட்பினரையும் உறவினரையும், ஆங்காங்குச்சென்று கண்டு "பால் பொங்கியதா? க்ஷேமமா?" எனப் பல்வகையானும் க்ஷேம லாபங்களை விசாரிப்பாராயினர். பறையர் முதலானோர் தங்கள் எஜமான்மாரைக் கண்டுகொண்டு, அவர்கள் தந்தவெகுமானங்களைப் பெற்றுப் போயினர். கோயில் தாசிகளும் குடிகளது வீட்டிற்கு வந்து, அவர்களைக்கண்டு, வெகுமானம் பெற்றுப்போயினர். பறைச்சிறுமிகள் கூட்டமாக ஒவ்வொரு வீட்டின் எதிராக நின்று கும்மி தட்டி, குடியானவர் தரும் தானியவகைகளைக் கொண்டு சென்றனர். விவாகமான புதுமாப்பிள்ளைகள் தமது மனைவிமாருடன் விருந்துண்டு மாமிவீடு தந்த புத்தாடைகளை அணிந்து, தங்கள் தங்கள் மாமி மாமன்மார் காலில் வீழ்ந்து, அவர்கள் தந்த ஆசீர்வாதத்தை அன்புடன் ஏற்றனர். சிறுவர்களும், அன்றைப்போதில் பெரியோர்களைக் கண்டு, அவர்பாதத்தே வீழ்ந்து, அப்பெரியோர் தந்த ஆசியையும் காசையும் அகமகிழப் பெற்றனர்.

ஜனங்கள், தங்கள் தங்கள் வீட்டிற் பொங்கல் பண்டிகையை விசேஷமாகக் கொண்டாடியதுபோல, அப்பண்டிகை சம்பந்தமாகக் கோயிலிலும் விசேஷ உற்சவம் கொண்டாட மறந்துவிடவில்லை. இந்தப்பண்டிகையை அடுத்த ஓர் தினத்தில் அவர்கள் உற்சவம் நடத்த நாள் குறித்திருந்தனர். அஃதேபோல் அந்தத்தினம் அதிகாலையில் கோயிலில் அதிர் வெடி சப்தம் கிளம்பியது. அந்தச் சப்தத்தைக் கேட்டதும் கேளம்பாக்கத்து ஜனங்கள் எழுந்து தங்கள் தங்கள் காலைக்கடனை முடித்துக் கொண்டு, தட்டில் கற்பூரம், தேங்காய், பழம், வெற்றிலைப்பாக்குடன் தங்கள் தங்கள் வீட்டின் வாயிலில் நின்றுகொண்டிருந்தனர். அப்போது வாத்திய கோஷத்துடன் கோயிலி லிருந்து சுவாமி ரதாரூடராய்த் திருவீதி வலம் வந்தனர். ரதம் ஒவ்வொரு வீட்டின் வாயிலில் நிற்க, அவரவர் தங்கள் தட்டைத் தாங்கிச் சென்று தீபாராதனை செய்து, சுவாமி பிரசாதம் பட்டாச்சாரி தரப்பெற்றனர். கடைசியாக, ஸ்வாமி ரதத்தினின்றும் இறங்கி, அந்தக்கிராமத்திற்கு இரண்டு மைலுக்கு அப்பால் உள்ள பாலாற்றங்கரையில், சுமார் 500 அடி உயர்ந்துள்ள குன்றின் மேல் கட்டப்பட்ட மண்டபத்தே புறப்பாடாயினர். அந்தக் காட்சியைக் காணத் திரளான ஜனங்கள் அவ்விடத்தே கூடினர். சுவாமி சென்று தங்கிய மண்டபம், ஒரு மாதரசியின் ஞாபகார்த்தமாகக் குடிகளால் கட்டப்பட்டதாதலின், அந்த மாதரசியின் சரிதத்தை ஈண்டு நாம் சுருக்கிச் சொல்லி, மேலே செல்வோம். இந்தக் குன்றைச் சூழ்ந்த இடத்தை ஆதியில் ஓர் சிற்றரசன் ஆட்சி செய்து வந்தனன். அவன் வேற்றரசனுடன் போர் செய்யச் சென்றபோது, அவனுடைய நாட்டை அவனுடைய மனைவி ஆண்டு வந்தனள். அவளோ அழகிலும் அருங்குணத்திலும் சிறந்திருந்ததுடன், வீரத்திலும் மேம்பட்டிருந்தனள். அவள் பல நாட்களாகத்

தனித்து, அந்த ராஜ்யத்தைப் பகைவர் வசமாகாதபடிக் காத்து வந்தும், அவளுடைய கணவன் திரும்பி வரவில்லை. அதனால் அவள் மனக்கலக்கம் கொண்டிருக்கும்போது, ஒரு நாள் மன்னன் நீண்டநாளாகக் காணாத தன் மனைவியைக் காணும் ஆவலுடையவனாய் அதிவிரைவாக அந்தக் குன்றை நோக்கி வந்தனன். அந்தக்குன்றை யடுத்த ஓர் இடத்திலே யே அவனுடைய அரண்மனை இருந்தது. அந்த அரண்மனை யண்டை ஓர் சிருங்காரக் குளமும் இருந்தது. மன்னவன் அந்தக் குளத்தைச் சமீபித்ததும், ஆங்கு ஓர் பெண் தன் மனைவியைப் போன்ற உருவத்துடன் அந்தக் குளத்தில் நீராடி ஆடையாபரண அலங்காரத்துடன் வெளிவரக் கண்டனன். கண்டதும் அவளை மனையாட்டியெனக் கருதிப் பிடிக்கச்சென்றான். அப்போது அந்தப் பெண் தன் கற்பைக் காத்துக்கொள்ளு நிமித்தம் மன்னனை "நீ நாசமாய்ப் போக" என்று சபித்துத் தண்ணீரில் மூழ்கி இறந்தனள். மன்னனும் அம்மாதின் சாபத்தால் மதி மருண்டு, தண்ணீரில் மூழ்கிய மாதைப் பிடிக்கச் சென்று, அவனும் மூழ்கி இறந்தனன். கடைசியாக அவன் மனைவி, தன் நாதனும் தனது பதினாறு வயதுள்ள மகளும் இறந்துள்ள விஷயத்தைக் கேட்டு மன மடங்காத் துயருடன் அவ்விருவரையும் அக்கினிக் குழியில் போட்டுத் தானும் அதில் வீழ்ந்து சாம்பலாய்ப் போயினள். அத்தகைய மாதரசி வீழ்ந்திறந்த இடத்திலேயே ஜனங்கள் அவள் ஞாபகார்த்தமாக மண்டபம் கட்டினர். அந்த மண்டபத்திற்றான், கோதண்டராமஸ்வாமி வந்து தங்கினர். அவர் அந்த மண்டபம் சேர்ந்ததும், அவருக்கு நெய், பால், பழம் முதலியவற்றால் அபிஷேகம் சிறப்புடன் நடந்தது. பின்னர் ஆபரண புஷ்ப அலங்காரத்துடனும் பாண வேடிக்கைகளுடனும் ஸ்வாமி விமானத்தில் புறப்பட்டு வந்தனர். அந்த விமானத்தைச் சுற்றி ஆயிரக்கணக்கான பக்த கோடிகள் சூழ்ந்

திருந்தனர். சிலர் மலையடி வாரத்திலிருந்து, மேலே நடக்கும் அற்புதக் காட்சியைக் கருத்துடன் காண்பாராயினர். ஸ்வாமி புறப்பாடாய் வரும்போது, அவர் முன்பாகப் பிராமணர்கள் வேதமோதியும், தமிழர் அவர் பின்னர் இருந்து தமிழ் வேதம் பாடியும் வந்தனர். தமிழ் வேதம் பாடி வந்தவர், நமது கேளம்பாக்கத்தில் உள்ள பஜனை கூடத்து அங்கத்தினர்கள். அவர்கள் இத்தகைய விசேஷ தினத்தில் தமிழ்வேத பாராயணம் செய்யு நிமித்தமே, அந்தக் கூடத்தை ஏற்படுத்தி அதில் இசையுடன் தமிழ் வேதம் ஓதத் தினம் பயின்றுவந்தனர். அவர்கள் பாடிய இன்னிசை எங்கும்பரவ, மற்றும் பல வைபவத்துடன் ஸ்வாமி மலையினின்றும் இழிந்து திருக்கோயில் வந்தருளினர். அஃதுடன் அந்த உற்சவம் இனிது முடிந்தது.

அத்தியாயம். 14.

முடிவுரை.

யான் இதுவரை எனது வாசகர்கள் அறிய கிராமவாழ்க்கையைப்பற்றி விவரித்தாயது என்றாலும், அது சம்பந்தமாய் இன்னும் எவ்வளவோ விஷயம் எழுதலாம். தினசரியாக கிராமங்களில் நடந்தேறிவரும் விவாகத்தைப்பற்றியும், ஈமக் கிரியைகளைப்பற்றியும், சிறுவர்களது விளையாட்டைப்பற்றியும் எழுதலாம். என்றாலும், அவை எவ்விடத்தும் சர்வ சாதாரணமாய் இருப்பதால் வியப்பாவனவில்லை என்று விட்டனன். அநேகமாக நமது வாசகர்களறிந்துள்ள கிராம பஞ்சாயத்தைப்பற்றியும் சிறிது சொல்லலாம். முற்காலத்தில் பொருள் சம்பந்தமான எவ்வகை வியவகாரங்களும், கொடுக்

கல் வாங்கல் வியவகாரங்களும், அடிபிடிச் சண்டை வியவகாரங்களும், ஒவ்வொரு கிராமத்திலும் பெருந்தன்மையுள்ள ஐந்துபேர் நிறைந்த பஞ்சாயத்து சபையாராலேயே தீர்ப்புச் செய்யப்பட்டன. ஆனால் இப்பொழுதோ அந்தப் பஞ்சாயத்துச் சபைகள் சிற்சில இடங்களில் பெயரளவாக மாத்திரம் உள்ளன. ஆகவே, யான் இதுவரை முக்கியமான விஷயங்களை எடுத்துக்கூறி முடித்தேனென நம்புகின்றேன். எனினும் இந்நூலை முடித்தற்கு முன்பு கிராம வாழ்க்கையில் சம்மந்தப்பட்ட சில விஷயங்களைச் சொல்லி விடுகிறேன்.

இந்தியர் எல்லாவற்றிலும் அதிகமாக மதிப்புச் செலுத்துவது தங்கள்தங்கள் மதக்கோட்பாட்டின் கண்ணேயாகும். இந்தியன் ஒவ்வொருவனுக்கும் தன் மதமே உயிர், தன் மதமே பொருள், தன் மதமே எல்லாம். இம்மானிடப் பிறவியை ஒழித்து, என்றும் அழியாத மோக்ஷ சாம்ராஜ்பத்தை அடைய வேண்டுமென்னும் ஒரே எண்ணத்தை உறுதியாகக் கொண்டு, இந்தியர் அனைவரும் தத்தம் மதத்தில் அழுத்தமுடையவர்களா யிருக்கின்றனர். ஆகவே, அவர்களுக்கு மதமே அஸ்திவாரமா யிருக்கிறது. இந்தியர் வாழும் ஒவ்வொரு சிறு கிராமத்தைப் பார்க்கினும், அதுவே நாம் இப்போது கூறிய விஷயத்தை உண்மைப்படுத்தும். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு தேவாலயம் உண்டு. அந்தத் தேவாலயத்தைச் சுற்றித்தான் வீடு கட்டிக்கொண்டு இந்தியர் வாழ்வர். மதப்பற்றுள்ள இந்தியன் எவனும் கோயிலில்லா ஊரில் குடியிருக்கவே மாட்டான். அறிவற்ற சாமான்ய ஜனங்களாகிய தாழ்ந்த ஜாதியாரும், தங்கள் தங்கள் கிராமங்களில் திருக்கோயில் கொண்டருளியிருக்கும் அங்காளம்மன் முதலிய கிராம தேவதைகளை வணங்குகின்றனர் என்றால், இந்தியரின் மதத்தைப்பற்றி யாம் வேறு என்ன விசேஷமா

கக் கூறவேண்டும்? முற்காலத்தில் அரசர்கள் புதிதாகக் கிராமங்களை ஏற்பாடு செய்வதாக விருந்தால், முதலில் திருக்கோயிலையே ஏற்படுத்துவார்கள். அன்றியும், தேவாலய பூஜை செய்யும் குருக்கள், பட்டாச்சாரி முதலானவர்களுக்குக் கிராமங்களில் அவர்களுடைய உபயோகத்தின் நிமித்தம் இந்தியர் தனித்தனியாக விளை நிலங்களை இனமாகக் கொடுப்பதனாலேயே அவர்களின் மத அழுத்தம் தெளிவாகும்.

இந்தியரின் இரண்டாவது விசேஷம் என்னவென்றால், அவர்கள் ஜல சௌக்கியமுள்ள இடங்களிலேயே குடியிருப்பர். அவர்கள் தண்ணீரையே அமுதமெனப் பாராட்டுபவர். தினந்தோறும் காலையில் எழுந்து ஸ்நானம் செய்து கடவுளைத் துதிப்பவர்களாதலால், முக்கியமாகத் தங்கள் மதக்கோட்பாடு அதனால் கெடலாகாதென நீர் வசதியான இடத்திலேயே வாசஞ்செய்ய விரும்புவர். மேலும், மற்றைய நாட்டினர்க்கு எவ்விதத்தால் விவசாயம் முதலியவற்றிற்குத் தண்ணீர் உபயோகமாகிறதோ, அவ்விதமே விவசாயமே தங்கள் பெருந்தொழில் எனக் கொண்டொழுகும் இந்தியருக்கும் தண்ணீர் இன்றியமையாதபொருளன்றோ?

மூன்றாவதாக யாம் குறிப்பது, ஒவ்வொரு கிராமமும் வரைவுபட்ட ஒருசிறு ராஜ்யமென்றே சொல்வதாகும். அதன் உண்மை யாம் முன்னர்க் கூறிய கிராமாதிகாரி, கிராமக் கணக்கன் முதலானோருடைய தொழில்களைக் கவனிப்பதினாலேயே விளங்கும்.

ஆகவே, யான் இம்முடிவுரையை இதனுடன் முடித்துக்கொண்டு நமது வாசகர்களிடத்தில் விடைபெற்றுக்கொள்கிறேன்.

கிராம வாழ்க்கை முற்றிற்று.